# உதயன்



23

www.onlineuthayan.com

32: பக்கங்கள் சுடர் 27 கதிர் 319 வள்ளுவர் ஆண்டு 2043 புரட்டாதி 24 புதன்கிழமை (10/10/2012) UTHAYAN - A Lively National Tamil Daily விலை ரூபா 20.00


# பெருந்தொகையான ஆயுதங்கள் அரியாலையில் வீட்டு கிணற்றில் மீட்பு



யாழ்ப்பாணம், ஒக். 10

யாழ்ப்பாணம், அரியாலை, மணியம்தோட்டம் பகுதியில் உள்ள கிணறு ஒன்றிலிருந்து பெருந்தொகையான ஆயுதங்களை யாழ். பொலிஸார் மீட்டுள்ளனர்.

இந்த ஆயுதங்கள் மீட்கும் பணி நேற்றுமுன்தினம் ஆரம்பிக்கப்பட்டு நேற்று மதியம் முழுவதும் நடைபெற்றதாக யாழ். பொலிஸ் நிலையத் தலைமைப்பொறுப்பதிகாரி சமன் சிகேரா தெரிவித்தார்.

பொலிஸாருக்குக் கிடைக்கப்பெற்ற தகவலின் அடிப்படையில் சம்பவ இடத்துக்குச்சென்ற பொலிஸாரும், இராணுவத்தினரும் குண்டு செயலிழக்கும் பிரிவினருடன் இணைந்து இவற்றை மீட்டெடுத்தனர்.

பொலித்தீன் பைகளில் வைத்து சுற்றப்பட்டும், சில வகைக் குண்டுகள் இரும்புப் பெட்டியில் அடைக்கப்பட்ட நிலையில் மிகவும் பாதுகாப்பாக கிணற்றுக்குள் வைக்கப்பட்டிருந்தமை தெரிய வந்துள்ளது.

மோட்டார் குண்டுகள் -240, கிளைமோர் குண்டுகள் -2, 40 மில்லி மீற்றர் மோட்டார் குண்டுகள் - 8,

பார்க்க பக்கம் 4

**5** அதிகாரிகளின் தலையீடு வடமாகாணத்தின் கல்வியை அழிக்கும் செயலாகும் -இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கம்.

**8** குஜராத் மாநிலத்தில் என்னை எதிர்த்துப் போட்டியிடத் தயாரா? பிரதமர் மன்மோகன் சிங்குக்கு முதல்வர் நரேந்திர மோடி சவால்

**9** உலகின் அதிக வயதான ஜோர்ஜியா நாட்டைச் சேர்ந்த, 132 வயதுப் பெண் நேற்று முன்தினம் காலமானார்.

**17** பொலிஸ் திணைக்களத்தின் குதிரைப்படைப் பிரிவுக்கு 18 குதிரைகளைக் கொள்வனவு செய்ய குறித்த திணைக்களம் தீர்மானித்துள்ளது.

# அரசமைப்பை ஒருபோதுமே உயர்நீதிமன்று மீறக்கூடாது

## நாடாளுமன்றில் சபாநாயகர் தெரிவிப்பு



கொழும்பு, ஒக்.10

'திவிநெகும' சட்டவரைவு தொடர்பான தனது அபிப்பிராயத்தை நாடாளுமன்றச் செயலாளர் நாயகத்திடம் அறிவித்ததன் மூலம் உயர்நீதிமன்றம் அரசமைப்புக்கு முரணாக நடந்துகொண்டுள்ளது என சபாநாயகர் சமல் ராஜபக்ஷ நேற்று குற்றஞ்சாட்டினார்.

'திவிநெகும' சட்டவரைவு நேற்று நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டபோது விசேட அறிக்கையொன்றை விடுத்த சபாநாயகர் சமல் ராஜபக்ஷ, நாடாளுமன்ற சபாநாயகரின் சிறப்புரிமைகள் குறித்து நீண்ட விளக்கமொன்றையும் அளித்தார்.

'அபிப்பிராயமொன்றைக் கோரி உயர்நீதிமன்றத்துக்கு சட்டவரைவொன்று அனுப்பப்படும் ஒரு சந்தர்ப்பத்தில் அது தொடர்பான உயர்நீதிமன்றத்தின் தீர்ப்பு சபாநாயகருக்கே அறிவிக்கப்பட வேண்டுமேயொழிய நாடாளுமன்றப் பொதுச்செயலாளருக்கல்ல

பார்க்க பக்கம் 4

## வடமாகாணத்தில் கண்ணிவெடி அகற்ற ஜப்பான் நிதியுதவி

கொழும்பு,ஒக் 10

ஜப்பான் அரசு 'கண்ணி வெடிகளற்ற இலங்கை' என்ற இலக்கை அடைவதற்கான இலங்கை அரசின் முயற்சிகளை துரிதப்படுத்துவதற்காக வடக்கில் மனிதாபிமான கண்ணி வெடி அகற்றலுக்குச் சுமார் 67 மில்லியன் ரூபாவை நன்கொடையாக

பார்க்க பக்கம் 4

## 'திவிநெகும' சட்டவரைவு சபையில் நேற்று சமர்ப்பிப்பு

கொழும்பு, ஒக்.10

'திவிநெகும' சட்டவரைவு பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் பஸில் ராஜபக்ஷவால் நேற்று நாடாளுமன்றில் சமர்ப்பிக்கப்பட்டது.

சமுர்த்தி அதிகாரசபை, தெற்கு அபிவிருத்திச் சபை மற்றும் மலையக அபிவிருத்திச் சபை ஆகிய மூன்றையும் உள்ளடக்கியதாக 'திவிநெகும' அமைந்துள்ளது என்று சபாபீடம் நேற்று அறிவித்தது.

இந்தச் சட்டமூலத்திற்கு எட்டு மாகாண சபைகளின் அங்கீகாரம் கிடைக்கப்பெற்றுள்ளது என அந்தந்த மாகாணங்களுக்குப் பொறுப்பான ஆளுநர்கள் அறிவித்துள்ளனர் என்றும் சபாபீடம் அறிவித்தது. (த)

## கூட்டமைப்பு இன்று புதுடில்லி பயணம்

கொழும்பு, ஒக்.10

இந்திய மத்திய அரசின் அழைப்பை ஏற்று, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்றத் தூதுக்குழுவினர் இன்று இந்தியாவுக்கான பயணத்தை மேற்கொள்ளவுள்ளனர் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கூட்டமைப்பின் தலைவரும் திருகோணமலை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான இரா. சம்பந்தன் தலைமையில் நாடாளுமன்ற உறுப்பினர்களான மாவை

பார்க்க பக்கம் 4

## இலங்கை இராணுவத் தளபதியை கண்டித்து புதுச்சேரியில் மறியல்

### தமிழ் அமைப்பினர் 30 பேர் கைது





கொழும்பு, ஒக்.10

தமிழக அரசியல் தலைவர்களையும், தமிழ் உணர்வாளர்களையும் இழிவுபடுத்திப் பேசிய இலங்கை இராணுவத் தளபதி ஜெகத் ஜெயசூரியாவைக் கண்டித்து புதுச்சேரி காமராஜர் சிலை அருகே நேற்று முன்தினம் மறியல் போராட்டத்தில் ஈடுபட்ட தமிழ் அமைப்பினர் 30 பேர் கைது செய்யப்பட்டனர்.

இலங்கையில் நடைபெற்ற போரில் இலங்கை அரசால் குழந்தைகள், பெண்கள் உட்பட 1.5 இலட்சம்

பார்க்க பக்கம் 4

## மஞ்சுள மீதான தாக்குதல்: முழு நீதித்துறைக்குமான அடி

### சபையில் ஜே.வி.பி. ஆவேசம்

கொழும்பு, ஒக்.10

நீதிச்சேவைகள் ஆணைக்குழுவின் செயலாளர் மஞ்சுள திலகரட்ண மீதான தாக்குதலானது முழு நீதித்துறைக்கும் விழுந்த அடியாகும். எனவே, இதைத் தனியானதொரு சம்பவமாகக் கருதிவிட முடியாது என்று ஜே.வி.பியின் நாடாளுமன்றக் குழுத் தலைவர் அநுரகுமார திஸாநாயக்க நேற்று நாடாளுமன்றில் தெரிவித்தார். நீதிச்சேவைகள் ஆணைக்குழுவின் செயலாளர் மீதான தாக்குதல் சம்பவம் தொடர்பில் நாடாளுமன்றில் நேற்று விசேட கூற்றொன்றை விடுத்து உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் கூறியவை வருமாறு:-

நீதிச்சேவையில் பாதகம் ஏற்பட்டால் அதன் மீது மக்கள் நம்பிக்கையிழப்பர். இது நம்பிக்கையை சிதைக்கும் செயலாகும். சட்டமும் ஒழுங்கும் பாதுகாக்கப்படவேண்டும். அதுதான் ஜனநாயகமாகும்.

கடந்த 7ஆம் திகதி நீதிச்சேவை ஆணைக்குழுவின் செயலாளர் மீது தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது. இதை நாம் வன்மையாகக் கண்டிக்

பார்க்க பக்கம் 4

## தமிழக பயண எச்சரிக்கையை விலக்கியது இலங்கை அரசு

கொழும்பு,ஒக் 10

தமிழகத்துக்குச் சென்ற இலங்கைச் சுற்றுலாப் பயணிகள் சிலர் தாக்கப்பட்ட சம்பவங்களை அடுத்து இலங்கைப் பிரஜைகள் தமிழகத்துக்குச் செல்வதைத் தவிர்க்குமாறு விடுத்த அறிவுறுத்தலை, இலங்கை அரசு விலக்கிக் கொண்டிருக்கிறது.

இந்த அறிவுறுத்தல் செப்

பார்க்க பக்கம் 4

# மொத்தச் செலவு ரூ.133,500 கோடி பாதுகாப்புக்கு ரூபா 28,950 கோடி

## 2013இற்கான ஒதுக்கீட்டில் மீள்குடியமர்வுக்கு 43 கோடி மட்டுமே

கொழும்பு, ஒக்.10

அடுத்த வருடம் நாட்டின் செலவுக்காக ஒரு இலட்சத்து 33 ஆயிரத்து 500 கோடி ரூபா தேவையென மதிப்பிடப்பட்டுள்ளது.

நாடாளுமன்றில் நேற்று அரசால் சமர்ப்பிக்கப்பட்ட அடுத்த வருடத்திற்கான நிதி ஒதுக்கீட்டுச் சட்டமூலத்திலேயே இவ்வாறு குறிப்பிடப்பட்டுள்ளது.

இதில் பாதுகாப்புக்கு 28 ஆயிரத்து 950 கோடியே 25 இலட்சத்து 34 ஆயிரம் ரூபா செலவாகுமென மதிப்பிடப்பட்டுள்ளது.

2012ஆம் ஆண்டின் பாதுகாப்பு செலவினத்துக்கு அரசு 23 ஆயிரத்து 124 கோடியே 30 இலட்சம் ரூபாவை ஒதுக்கியிருந்தது. ஆனால், 2013ஆம் ஆண்டுக்கு

பார்க்க பக்கம் 4

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இரண்டு நாள்களில் மட்டும் 18 பேருக்கு டெங்கு தாக்கம்

**நல்லூர் சுகாதார வைத்திய அதிகாரி பிரிவுக்கு உட்பட்ட பகுதியிலேயே அநேகமானோர் டெங்கு நோய்க்கு உள்ளாகியுள்ளமை இனங்காணப் பட்டுள்ளது**

யாழ்ப்பாணம், ஒக். 10

யாழ். குடாநாட்டில் டெங்கு நோய் பரவல் அதிகரித்துள்ள நிலையில், கடந்த ஞாயிறு மற்றும் திங்கள் ஆகிய இரண்டு நாள்களில் மட்டும் டெங்கு நோய்க்குள்ளான நிலையில் 18 பேர் யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

நல்லூர் சுகாதார வைத்திய அதிகாரி பிரிவுக்கு உட்பட்ட பகுதியிலேயே அநேகமானோர் டெங்கு நோய்க்கு உள்ளாகியுள்ளமை இனங்காணப் பட்டுள்ளது என வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவிக்கின்றன. இந்தப் பகுதியில் கடந்த சில வாரங்களில் மாத்திரம் 34 பேர் டெங்கு நோயால் பீடிக்கப்பட்டுள்ளனர். சுகாதார வைத்திய அதிகாரி மற்றும் பொதுச் சுகாதார பரிசோதகர்களில் கவனவீனத்தாலேயே இப்படி அதிகஎண்ணிக்கையானோர் டெங்கு நோயால் பீடிக்கப்பட்டனர் என்றும் இது தவிர பொது மக்கள் அக்கறையுடன் செயற்பட்டிருத்தல் வேண்டும் என்றும் குற்றம் சாட்டப்பட்டுள்ளது.

யாழ். மாநாகர சபை சுகாதார வைத்திய அதிகாரி பிரிவுக்கு உட்பட்ட குருநகர், கொழும்புத்துறை பகுதிகளில் இதுவரை 5 பேர் டெங்கு நோயினால் பாதிக்கப்பட்டுள்ளனர். இவர்கள் வைத்தியசாலையில் தங்கிச் சிகிச்சை பெற்று வருகின்றனர். வேலணையில் பணியாற்றும் கடற்படைச் சிப்பாய் ஒருவரும் டெங்கினால் பாதிக்கப்பட்டு வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

நல்லூர் சுகாதார வைத்திய அதிகாரி பிரிவுக்கு உட்பட்ட கொக்குவில் சம்பியன் ஒழுங்கையில் வசித்த 17 வயதுச் சிறுவன் டெங்கினால் பீடிக்கப்பட்டு சில நாள்களுக்கு முன்னர் உயிரிழந்தார். இதற்குப் பின்னரான ஞாயிறு திங்கள் ஆகிய இரு நாள்களில் மட்டும் இந்த வைத்திய அதிகாரி பிரிவில் மாத்திரம் 15 பேர் டெங்கினால் பாதிக்கப்பட்டுள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது.

எனினும் டெங்கு கட்டுப்பாட்டு வாரம் பிரகடனப்படுத்தப்பட்டு டெங்கு ஒழிப்பு நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றமையும் குறிப்பிடத்தக்கது. (த-4)

## நீதித்துறை நேற்றும் பணிப் புறக்கணிப்பில்

**இன்று பணிகள் வழமைக்கு வரும்**

யாழ்ப்பாணம், ஒக்.10

நீதிச்சேவை ஆணைக்குழு செயலாளர் இனந்தெரியாத ஆயுததாரிகளால் தாக்கப்பட்டதைக்கண்டித்து நாடெங்கிலுமுள்ள அனைத்து நீதிமன்றங்களினது நீதிபதிகளும், நீதிவான்களும் நேற்று இரண்டாவது நாளாகவும் பணிப் புறக்கணிப்பில் ஈடுபட்டனர்.

நீதிச்சேவை ஆணைக்குழு செயலாளர் மஞ்சுள திலகரட்ண மீது கடந்த ஞாயிற்றுக் கிழமை நடத்தப்பட்ட தாக்குதல் சம்பவத்தை அடுத்து நாடளாவிய ரீதியில் நீதித்துறையினர்இரண்டுநாள்களாகப்பணிப் புறக்கணிப்பில் ஈடுபட்டனர்.

இதற்கு ஆதரவு தெரிவித்து நாடெங்கிலுமுள்ள சட்டத்தரணிகளும் பகிஷ்கரிப்பில் ஈடுபட்டனர். சில இடங்களில் சட்டத்தரணிகள் இரண்டு நாள்களும் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டு தமது கண்டனத்தைத் தெரிவித்தனர்.

வடமாகாணத்தில் யாழ்ப்பாணம், கிளிநொச்சி, முல்லைத்தீவு, வவுனியா மற்றும் மன்னார் மாவட்டங்களிலும் நீதித்துறையினர் இரண்டு நாள்களும் தொடர் பணிப் புறக்கணிப்பில் ஈடுபட்டனர். வடமாகாண சட்டத்தரணிகளும் இதற்கு ஆதரவாக பணிப்புறக்கணிப்பில் ஈடுபட்டனர்.

இதனால் அனைத்து நீதிமன்றங்களும் இரண்டு நாள்களும் வெறிச்சோடின. பல்வேறு வழக்குகளுக்காகவும் நீதிமன்றங்களுக்குச் சென்றிருந்த மக்கள் தமது வழக்குகள் பிற்போடப்பட்ட திகதியை கேட்டறிந்து சென்றனர்.

இந்த நிலையிலேயே இன்று புதன்கிழமை தொடக்கம் அனைத்து நீதிமன்றங்களினது நீதிபதிகளும், நீதிவான்களும் பணிக்குத் திரும்புகின்றனர். இன்று புதன்கிழமை தொடக்கம் வழமை போன்று நீதிமன்றச் செயற்பாடுகள் அனைத்தும் இடம் பெறும். (த-4)

## ஆறு வயதுச் சிறுவனின் வயிற்றில் 90 புழுக்கள்

அம்பாறை,ஒக் 10

அம்பாறை மாவட்டத்தின் அக்கரைப்பற்று ஆதார வைத்தியசாலையில் 6 வயதுச் சிறுவனொருவனின் வயிற்றுக்குள் காணப்பட்ட 90 புழுக்களும் கடந்த ஞாயிற்றுக்கிழமை மேற்கொள்ளப்பட்ட அறுவைச் சிகிச்சை மூலம் அகற்றப்பட்டன.

இது பற்றி தெரியவருவதாவது,

வயிற்றுவலியால் அக்கரைப்பற்று ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட இந்தச் சிறுவனின் வயிற்றை சோதித்தபோது வயிற்றின் பெருங்குடலில் புழுக்கள் இருப்பது கண்டுபிடிப்பட்டது. இதனையடுத்து உடனடியாக சிறுவனைச் சத்திரசிகிச்சைக்குட்படுத்தி வயிற்றுக்குள் காணப்பட்ட புழுக்களை வெளியில் எடுத்து சிறுவனின் உயிரை வைத்திய நிபுணர் ஜெமில் காப்பாற்றியுள்ளார்.

இந்தப் புழுக்கள் ஒவ்வொன்றும் ஒரு அடி இரண்டு சென்ரிமீற்றர் நீளமுடையதெனத் தெரிவித்த வைத்தியர், தக்கநேரத்தில் சிறுவனை வைத்தியசாலைக்கு அழைத்துவந்ததால் சிறுவனின் உயிர் காப்பாற்றப்பட்டதாகவும் வைத்தியர் குறிப்பிட்டார். இந்த்சிறுவன் பல வருடங்களாகப் பூச்சிகளை அகற்றுவதற்கான மருந்துகளை பாவிக்காத நிலையில் புழுக்கள் வயிற்றில் விளைந்துள்ளதாகவும் வைத்தியர் தெரிவித்தார்.(த)

## 5 ரோந்துக் கப்பல்களை வாங்குகிறது கடற்படை

கொழும்பு,ஒக் 10

இலங்கைக் கடற்படையின் கண்காணிப்புத் திறனை வலுப்படுத்தும் நோக்கில், ஐந்து ஆழ்கடல் ரோந்துக் கப்பல்கள் வாங்கப்படவுள்ளதாக,கடற்படைத் தளபதி வைஸ் அட்மிரல் ஜெயந்த கொலம்பகே தெரிவித்துள்ளார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

ஐந்து ஆழ்கடல் ரோந்துக் கப்பல்களை வாங்குவது தொடர்பாக, சம்பந்தப்பட்ட தரப்புகளுடன் பேச்சுக்களை நடத்தி வருகிறோம்.இவற்றில் இரண்டு ரோந்துக் கப்பல்கள் ஒரு தரப்பிடம் இருந்து வாங்கப்படவுள்ளன. ஏனைய மூன்றும் வேறுவேறு தரப்புகளிடம் இருந்து வாங்கப்படவுள்ளன.

இரண்டு ரோந்துக் கப்பல்களை வாங்குவதற்காக உடன்பாடு விரைவில் இறுதி செய்யப்பட்டு விடும்.

ஆழ்கடல் ரோந்துக் கப்பல்களின் ஆற்றலைப் பலப்படுத்திக் கொள்வது போருக்குப் பிந்திய கால முன்னுரிமையாக இருக்கும்.போருக்குப் பிந்திய காலத்தில் கடற்படையைப் புறக்கணிப்பது மிகப் பெரிய தவறாக அமையும்.

ஆழ்கடல் ரோந்துக் கப்பல்கள் என்ற வகைக்குள் தற்போது, இந்தியாவிடம் வாங்கப்பட்ட சயுர, சாகர, அமெரிக்காவிடம இருந்து பெறப்பட்ட சமுத்ர, இஸ்ரேலிடம் வாங்கப்பட்ட நந்திமித்ர, சுரணிமல மற்றும் கொழும்பு டொக்யார்ட்டில் கட்டப்பட்ட ஜெயசாகர ஆகிய ஆறு கப்பல்கள் உள்ளன.இவற்றில் ஜெயசாகர தவிர்ந்த ஏனைய கப்பல்கள் விடுதலைப் புலிகளின் ஆயுதக்கப்பல்களை மூழ்கடிக்கும் நடவடிக்கையில் ஈடுபட்டவை.

இலங்கையின் கடல் எல்லை மற்றும் பொருளாதாரக் கடல் எல்லையில் சவால்களை எதிர்கொள்வதற்கு மேலதிக கலங்கள் எமக்குத் தேவைப்படுகின்றன.புதிய கப்பல்கள் கிடைத்ததும், பழையவை கழித்து ஒதுக்கப்பட்டு விடாது. அவை பழையவை என்றாலும் பயன்படுத்தப்படும்.சில கப்பல்களை 30, 40 ஆண்டுகளுக்குக் கூட பயன்படுத்த முடியும்.


இலங்கைக் கடற்படை, ஆழ்கடல் ரோந்துக் கப்பல்களில் உலங்குவானூர்திகளைப் பயன்படுத்துவதற்குச் சாத்தியம் உள்ளது. மூன்று கப்பல்களில் அதற்கான வசதிகள் உள்ளன. எமது கப்பல்களில் உலங்குவானூர்திகளை இறக்குவது குறித்து இலங்கை விமானப் படையுடன் பேசமுடியும். அதைவிட ஆளில்லா வேவு விமானங்களையும் இதில் வைத்து பயன்படுத்த முடியும். -என்றார்.(த)

## வேவல்தெனிய விபத்தில் மூவர் சாவு

கொழும்பு,ஒக் 10

கொழும்பு கண்டி பிரதான வீதி, வேவல்தெனிய பிரதேசத்தில் இடம்பெற்ற வாகன விபத்துச் சம்பவமொன்றில் மூவர் உயிரிழந்துள்ளனர். குறித்த பிரதேசத்தினூடாகப் பயணித்துக் கொண்டிருந்த ஓட்டோ ஒன்றும் லொறியொன்றும் மோதியே விபத்து இடம் பெற்றுள்ளது.

இதன்போது, ஓட்டோவில் பயணித்த வாஸ்து நிபுணர்கள் மூவரும் உயிரிழந்துள்ளனர். இவர்கள் மாலபே, பிலியந்தல மற்றும் ராகம பகுதிகளைச் சேர்ந்தவர்கள் எனத் தெரிவிக்கப்படுகின்றது. விபத்து தொடர்பானமேலதிக விசாணைகளை வேவல்தெனிய பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (த)



முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினரும் ஜனாதிபதியின் ஆலோசகருமான பாரத லக்ஷ்மன் பிரேமச்சந்திர உயிரிழந்து ஒரு வருடம் பூர்த்தியாகியதை முன்னிட்டு அவரது இல்லத்தில் புண்ணிய தான நிகழ்வொன்று இடம்பெற்றது. இதில் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ கலந்துகொண்டார். (த)

## 5 வயதுச் சிறுவன், குடும்பஸ்தர் சடலங்கள் வைத்தியசாலையில்

யாழ்ப்பாணம்,ஒக் 10

5 வயதுச் சிறுவன் மற்றும் குடும்பஸ்தர் ஒருவரினதும் சடலங்கள் யாழ். போதனா வைத்தியசாலையில் நேற்று ஒப்படைக்கப்பட்டுள்ளன. இருவரினதும் உயிரிழப்புக்கான காரணம் இதுவரை கண்டறியப்படவில்லை.

ஆனைக்கோட்டையைச் சேர்ந்த சின்னத்தம்பி ஜேசுதாஸ் (வயது-53) என்பவர் சடலமாக யாழ். போதனா வைத்தியசாலையில் நேற்றுக்காலை ஒப்படைக்கப்பட்டார்.

கோப்பாய் மந்திகையைச் சேர்ந்த ஜே.ஜெகன் (வயது-5) என்ற சிறுவனின் சடலமும் நேற்று மதியம் யாழ். போதனா வைத்தியசாலையில் ஒப்படைக்கப் பட்டுள்ளது.

பாடசாலைக்குச் சென்று சக மாணவர்களுடன் பாட்டியாரின் துணையுடன் வீடு திரும்பிக் கொண்டிருந்த பிரஸ்தாப சிறுவன் வீட்டு வாயிலை அடைந்தவுடன் மயங்கி விழுந்தான். உடனடியாக கோப்பாய் வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்டு யாழ். போதனா வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்டபோது சிறுவன் உயிரிழந்து விட்டமை தெரியவந்தது. உயிரிழப்புக்கான காரணம் கண்டறியப்படவில்லை. (த-4)

## 'பைக்கோ' தடம்புரண்டு சாரதி சாவு

வவுனியா, ஒக். 10

வவுனியா மடுக்குளம் புனரமைப்புப் பணியில் ஈடுபட்டிருந்த வேளை 'பைக்கோ' வாகனம் தடம் புரண்டதில் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

இந்தச் சம்பவம் நேற்று வெள்ளிக்கிழமை மாலை 5 மணியளவில் இடம்பெற்றுள்ளது.

இதில் அனுராதபுரத்தைச் சேர்ந்த மூன்று பிள்ளைகளின் தந்தையான எஸ்.பெரேரா (வயது-47) என்பவரே உயிரிழந்தார்.

இவரது சடலம் வவுனியா பொது மருத்துவமனைக்கு கொண்டு செல்லப்பட்டதுடன் விசாரணைகளைப் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (10-400)

## கொரெக்ஸ் இருமல் மருந்துக்குத் தடை

கொரெக்ஸ்-டி என்ற விநியோக நாமத்தினைக் கொண்ட இருமல் மருந்தை உடனடியாகத் தடைசெய்வதாக சுகாதார அமைச்சு அறிவித்துள்ளது.

இவ்வகை மருந்தினை அதிகளவில் உட்கொண்ட அறுவர் உயிரிழந்தமை தெரியவந்ததையடுத்தே இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளதாக சுகாதார அமைச்சு மேலும் தெரிவித்துள்ளது.

## மஞ்சுள திலகரட்ண மீதான தாக்குதல்; சி.ஐ.டியினர் விசாரணை நடத்துவர்

கொழும்பு,ஒக்.10

நீதிச்சேவை ஆணைக் குழுவின் செயலாளர் மஞ்சுள திலகரட்ண மீது மேற்கொள்ளப்பட்ட தாக்குதல் தொடர் பான விசாரணைகளை கொழும்பு குற்றத்தடுப்புப் பிரிவு பொலிஸார் மேற்கொள்ளவுள்ளனர்.

கல்கிஸைப் பொலிஸாரி னால் சேகரிக்கப்பட்ட கை விரல் அடையாளம் மற் றும் ஐந்து பேரின் வாக்கு மூலங் கள் உட்பட அனைத்துத் தடயங்களும் கொழும்பு குற்றத்தடுப்புப் பிரிவுபொலிஸாரிடம்ஒப்படைக்கப்பட்டுள்ளன.

கடந்த ஞாயிற்றுக் கிழமை கல்கிஸை புனித தோமஸ் கல்லூரிக்கு அருகில் நீதிச் சேவை ஆணைக்குழுவின் செயலாளர் மஞ்சுள திலகரட்ண மீது இனம்தெரியாத சிலர் தாக்குதலை மேற்கொண் டமை குறிப்பிடத்தக்கது.(ச)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தொழிற்பயிற்சி நிறைவு விழாவும் சான்றிதழ் வழங்கலும்

முல்லைத்தீவு, ஒக்.10

முல்லைத்தீவு திருமுறிகண்டியில் தென்னிந்தியத் திருச்சபையால் நடத்தப்பட்டு வந்த தொழில்சார் பயிற்சி நிறைவு விழாவும், சான்றிதழ் வழங்கும் நிகழ்வும், கண்காட்சி நிகழ்வும் நடைபெற்றுள்ளன.

முல்லைத்தீவு ஒட்டுசுட்டான் பிரதேசத்துக்கு உட்பட்ட திருமுறிகண்டியில் அமைந்துள்ள தென்னிந்திய திருச்சபையின் பரிசுத்த பவுல் ஆலயத்தில் நடத்தப்பட்டு வந்த தையல் பயிற்சி மற்றும் அழகுக் கலை போன்ற தொழில்சார் பயிற்சி நிறைவு விழாவும் சான்றிதழ் வழங்கும் நிகழ்வும், கண்காட்சி நிகழ்வும் கடந்த இரண்டாம் திகதி நடைபெற்றுள்ளது. கடந்த ஒரு வருட காலமாக இந்தப் பயிற்சி நெறி இடம்பெற்றது.

இந்தப் பயிற்சி நிறைவு விழாவில் தென்னிந்திய திருச்சபையின் மாதர் அமைப்பின் தலைவியான மருத்துவர் தயாளினி தியாகராசா மற்றும் தென்னிந்திய திருச்சபையின் மதகுருமாரும், கிராம மட்ட அமைப்புக்களின் பிரதிநிதிகளும் மாணவர்கள், ஆசிரியர்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர். (க-6)

## பாடசாலைக்கு பெருமை சேர்த்த மாணவி

கிளிநொச்சி, ஒக்.10

வடக்கு மாகாண மட்ட ஆங்கில தினப் போட்டியில் கிளிநொச்சி மத்திய ஆரம்ப வித்தியாலய தரம் -4 மாணவி கனகராசா ஷதுசாயினி உறுப்பெழுத்துப் போட்டியில் இரண்டாம் இடத்தைப் பெற்று பாடசாலைக்குப் பெருமை சேர்த்துள்ளார்.

இவர் நடைபெறவுள்ள தேசிய மட்ட ஆங்கில தினப் போட்டியில் பங்கு கொள்ளவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (க-405)

# நிவாரணம் போதுமானதாக இல்லை மீளக்குடியமர்ந்த மக்கள் கவலை

கிளிநொச்சி, ஒக்.10

**முல்லைத்தீவு மாவட்டத்தில் புதிதாக மீளக் குடியமர்த்தப்பட்ட மக்கள் அடிப்படை வசதிகள் சரியாகக் கிடைக்கப்பெறாததால் பல்வேறு சிரமங்களை எதிர்கொண்டு வருவதாகத் தெரிவிக்கின்றனர். உணவு, வீட்டு வசதி சீராக இன்மையால் குழந்தைகள், பெண்கள் உட்பட அனைவரும் பெரும் நெருக்கடிக்கு உள்ளாகியுள்ளதாக அவர்கள் பெரும் கவலை வெளியிட்டுள்ளனர்.**

அத்துடன் சுயதொழில் செய்வதற்கும் தொழில் இட அனுமதி மற்றும் தொழில் உபகரணங்கள் இன்மையால் தாம் பல்வேறு சிரமங்களை எதிர்கொண்டு வருவதாகவும் தமக்கு வழங்கப்படும் நிவாரண உதவிகள் போதுமானதாக இல்லை எனவும் அந்த மக்கள் கவலை தெரிவித்துள்ளனர்.

அண்மையில் முல்லைத்தீவு மாவட்டத்தில் குடியமர்த்தப்பட்டுள்ள குடும்பங்களுக்கு ஒரு தறப்பாழ் மற்றும் ஐந்து தடிகள் மட்டுமே வழங்கப்பட்டுள்ளன. இதனைக் கொண்டே தாம் குடிசை அமைத்து வாழ்ந்து வருவதாகவும் இதனால் பெண்கள், குழந்தைகள் பல்வேறு சிரமங்களை எதிர்கொண்டு வருவதாகவும், மழைகாலம் தொடங்கவுள்ளதால் வீட்டு வசதியற்ற நிலையில் தொடர்ந்து குடிசையில் வாழமுடியாது என்றும் அந்த மக்கள் தெரிவித்துள்ளனர். அத்துடன் தற்போது உணவு நிவாரணத்தில் ஒரு நபருக்கு ஒரு மாதத்துக்கு பத்தரை கிலோ அரிசியும், 2.400 கிலோ கிராம் பருப்பும், 600 கிராம் தேங்காய் எண்ணெயும், 600 கிராம் சீனியுமே வழங்கப்படுவதாகவும், இது தமக்கு போதுமானதாக இல்லை எனவும் அவர்கள் தெரிவிக்கின்றனர்.

நிவாரணம் போதாத நிலையில் தாம் தொழில் செய்து வருமானம் ஈட்டுவதற்கும் தொழில் உபகரணங்கள் இல்லை எனவும் இது குறித்து அதிகாரிகள் அக்கறை செலுத்தவில்லை எனவும் அவர்கள் கவலை வெளியிட்டுள்ளனர்.

அத்துடன் எம்யூ/100 கிராம அலுவலர் பிரிவில் 380 குடும்பங்கள் மீளக் குடியமர்ந்துள்ள நிலையில் அவர்களுக்கான வீட்டு வசதிகள் இதுவரை செய்து கொடுக்கப்படவில்லை.

செம்மன்குன்று, புதுமாத்தளன், இடைக்காடு, அம்பலவன் பொக்கணை, வலைஞர்மடம் ஆகிய இடங்கள் போரால் முழுமையாகப் பாதிக்கப்பட்ட நிலையில் அங்கு 300 புதிய வீடுகள் மக்களுக்குக் கட்டிக்கொடுக்க வேண்டுமென அந்தப் பகுதி பொது அமைப்புகள் கோரிக்கை விடுத்துள்ளன. (10-6)

## நடமாடும் சேவை

கிளிநொச்சி, ஒக்.10

கிளிநொச்சி கரைச்சி பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் எதிர்வரும் 13 ஆம் திகதி சனிக்கிழமை முற்பகல் 9 மணிக்கு காணி தொடர்பான நடமாடும் சேவையொன்று இடம்பெறவுள்ளது.

காணி அபிவிருத்தி அமைச்சு மற்றும் காணி ஆணையாளர் நாயகத்தின் திணைக்களத்தால் இந்த நடமாடும் சேவை நடத்தப்படவுள்ளது.

இந்த நடமாடும் சேவையை வாய்ப்பாகக் பயன்படுத்தி காணிப் பிரச்சினைகள் தொடர்பாக உள்ள பிரச்சினைகளைத் தீர்த்துக் கொள்ளுமாறு பிரதேச மக்களை கரைச்சி பிரதேச செயலர் கோ.நாகேஸ்வரன் கேட்டுக் கொண்டுள்ளார். (க-405)

## இரு சக்கர உழவு இயந்திரத்தை பதம் பார்த்தது மரக்கொப்பு

கிளிநொச்சி, ஒக்.10

கிளிநொச்சியிலிருந்து வட்டக்கச்சி செல்லும் பிரதான வீதி ஓரமாக நடைபெற்று வரும் ஸ்ரீலங்கா ரெலிக்கொம் இணைப்பு வேலைக்கென வெட்டப்பட்ட மரக் கொப்பொன்று வீதியால் சென்ற இருசக்கர உழவு இயந்திரத்தையும் அதன் சாரதியையும் பதம் பார்த்தது.

வட்டக்கச்சி பாமடிப் பிள்ளையார் ஆலய வளாகத்தில் வீதியோரமாக நின்ற மாமரக் கொப்பை மரத்திலிருந்தவாறு ஒருவர் வெட்டி வீழ்த்த வீதியின் இரு புறமும் ஒவ்வொருவர் வீதியால் செல்வோரை மறிப்பதற்காக நின்றனர். எனினும் குறித்த மரக்கொப்பு விழும்போது வட்டக்கச்சியில் இருந்து கிளிநொச்சிக்கு இரு சக்கர உழவு இயந்திரத்தில் பொருள்களை ஏற்றியவாறு வந்தவர் அக்கொப்பால் தாக்கப்பட்டார். இதனால் அவரது தலையில் சிறு காயங்கள் ஏற்பட்டதுடன் உழவு இயந்திரமும் சேதத்துக்குள்ளானது. வேலை செய்தவர்களது கவனக்குறைவால் இவ்வாறு ஏற்பட்டதாகக் கூறி வீதியால் சென்றவர்கள் குறித்த பணியாளர்களுடன் வாய்த்தர்க்கத்தில் ஈடுபட்டனர். கடந்த ஞாயிற்றுக்கிழமை மாலை.4.30 மணியளவில் இந்தச் சம்பவம் இடம்பெற்றமை குறிப்பிடத்தக்கது. (க-405)

## வீடு கட்டுவதற்கு காணி வழங்குக புதுக்குடியிருப்பு மக்கள் கோரிக்கை

### விண்ணப்பங்கள் பரிசீலனையில்

வலி.தென்மேற்கு, ஒக்.10

புதுக்குடியிருப்பு பிரதேசத்தில் மீள்குடியமர்த்தப்பட்ட குடும்பங்களில் இதுவரை காணியில்லாத ஆயிரத்து 111 குடும்பத்தினர் வீடு கட்டுவதற்குக் காணி வழங்குமாறு புதுக்குடியிருப்புப் பிரதேச செயலரிடம் விண்ணப்பித்துள்ளனர்.

போர் காரணமாக புதுக்குடியிருப்புப் பிரதேசத்திலிருந்து இடம்பெயர்ந்து அகதி முகாம்களிலும் நண்பர், உறவினர் வீடுகளிலும் வாழ்ந்து வந்த குடும்பங்களில் முகாம்களில் வாழ்ந்து வந்தவர்கள் முழுமையாக சொந்த இடங்களில் மீள் குடியமர்த்தப்பட்டுள்ளார்கள். இதையடுத்து இவர்கள் தங்கியிருந்த முகாம்களும் மூடப்பட்டன.

நண்பர், உறவினர் வீடுகளில் வசித்து வந்தவர்கள் தற்பொழுது படிப்படியாகக் கிராம உத்தியோகத்தர் பிரிவு ரீதியாக மீள் குடியமர்த்தப்பட்டு வருகிறார்கள். மேலும் பல குடும்பத்தினர் மீள்குடியமர்த்தப்படவுள்ளனர்.

புதுக்குடியிருப்புப் பிரதேசத்திலுள்ள 19 கிராம உத்தியோகத்தர் பிரிவுகளிலும் மீள் குடியமர்த்தப்பட்ட குடும்பங்களில் ஆயிரத்து 111 குடும்பங்கள் வீடு கட்டுவதற்குச் சொந்தக் காணி இல்லாமல் நண்பர், உறவினர் வீடுகளில் வாழ்ந்து வருகிறார்கள். இந்தக் குடும்பங்களில் போர்க் காலச் சூழலில் இரவல் காணிகளில் வாழ்ந்து வந்தவர்களும் இடப்பெயர்வின் போது திருமணம் செய்தவர்களும் அடங்குகிறார்கள்.

இவர்கள் வீடு கட்டித் தனிக்குடித்தனம் நடத்துவதற்குக் காணி வழங்குமாறு பிரதேச செயலரிடம் விண்ணப்பித்துள்ளனர். இவர்களின் விண்ணப்பங்களைப் பரிசீலித்து வரும் சம்பந்தப்பட்ட அதிகாரிகள் இவர்களுக்குப் பொருத்தமான காணிகளை வழங்குவதற்கான ஒழுங்குகளை மேற்கொண்டு வருகிறார்கள். (க-115)

## இராசேந்திரம்குளம் தமிழ் வித்தி.

## வளப் பற்றாக்குறை காரணமாக மாணவர்களின் கல்வி பாதிப்பு

வவுனியா, ஒக்.10

வவுனியா இராசேந்திரம் குளம் தமிழ் வித்தியாலயத்தின் ஆளணி மற்றும் பௌதிகவளங்கள் இதுவரை சீர் செய்யப்படாமையால் மிகவும் பின் தங்கிய மாணவர்களின் கல்வி தொடர்ந்தும் பாதிக்கப்பட்டு வருவதாக மாணவர்களின் பெற்றோர்கள் மற்றும் நலன் விரும்பிகளால் விசனம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

வவுனியா கல்வி வலயத்துக்கு உட்பட்ட இராசேந்திரம்குளம் தமிழ் வித்தியாலயம் வவுனியா நகரை அண்மித்த ஒரு கிராமப் புறப் பாடசாலையாகக் காணப்படுகின்றது. இந்தப் பாடசாலையை அண்டிய தம்பனைப்புளியங்குளம், பாரதிபுரம், விநாயகபுரம், பொன்னாவரசன் குளம் ஆகிய கிராமங்களைச் சேர்ந்த தரம் 1 முதல் 5 வரையான வகுப்புக்களில் சுமார் 100 மாணவர்கள் கல்வி கற்று வருகின்றனர்.

இந்த நிலையில் போதிய ஆசிரியர் வளம் மற்றும் ஏனைய பௌதிக வளங்கள் நிவர்த்தி செய்யப்படாத நிலை காணப்படுகின்றது. ஓரளவு வசதிபடைத்தவர்கள் தமது பிள்ளைகளின் கல்வியை கருத்தில் கொண்டு நகரை அண்டிய நெளுக்குளம் ம.வி., சூடுவெந்த புலவு முஸ்லிம் வித்தியாலயம் போன்ற பாடசாலைகளில் இணைத்து வருகின்றனர்.

**சுமார் 100 மாணவர்கள் கல்வி கற்று வருகின்றனர்.**

இந்த நிலையில் பாதிக்கப்பட்ட பின் தங்கிய மாணவர்கள் இந்தப் பாடசாலையிலேயே தமது கல்வியைத் தொடர வேண்டிய நிலையிலுள்ளனர். வளப்பற்றாக்குறை காரணமாக இவர்களின் கல்வி நடவடிக்கைகள் பாதிக்கப்பட்டு வருவதாகப் பெற்றோர்களாலும் நலன்விரும்பிகளாலும் கவலை தெரிவிக்கப்பட்டுள்ளது. (க-6)

## ரெக்னோ வேல்ட் நிறுவனத்தின் சிறுவர் தின நிகழ்வுகள்




வவுனியா, ஒக்.10

வவுனியா ரெக்னோ வேல்ட் கணினிக் கல்வி நிலையம் நடத்திய சிறுவர் தின நிகழ்வுகள் ரயில் நிலைய வீதியில் அமைந்துள்ள கோல் சிற்றி மண்டபத்தில் இடம்பெற்றது.

கணினிக் கல்வி நிலையத்தின் பொது முகாமையாளர் எஸ். நரேந்திரன் தலைமையில் இடம்பெற்ற இந்த நிகழ்வில் மங்கல விளக்கை வவுனியா நகர சபையின் உபதலைவர் [illegible] நிறுவன உதவி இயக்குநர் றொனால் சுஜீபன் ஆகியோர் ஏற்றிவைத்தனர்.

கல்வி நிலையத்தால் நடத்தப்பட்ட சர்வதேச கணினிக் கற்கை நெறிக்கான பரீட்சையில் சித்தியடைந்த மாணவர்களுக்கான பரிசில்களை வரோட் நிறுவன உதவி இயக்குநர், கணினிக் கல்வி நிலைய சந்தைப்படுத்தல் முகாமையாளர் எஸ்.பராபரன், ஆசிரியர் சி.வசந்தகுமார் மற்றும் நகர சபை பதில் தலைவர் ஆகியோர் வழங்கிக் கௌரவித்தனர். இறுதியில் மாணவர்களின் கலை நிகழ்வுகளும் இடம்பெற்றன. (க-400)

## கிளிநொச்சி கல்வி வலயத்தில் உளநல நாள் விழா இன்று

கிளிநொச்சி, ஒக்.10

கிளிநொச்சி வல யக் கல்வி அலுவலகத்தில் ''விரும்பத்தக்க மனிதராய் நம்மை நாமே செதுக்குவோம்'' எனும் தொனிப் பொருளில் உளநல நாள் விழா இன்று நடைபெறவுள்ளது. உலக உளநல நாளை முன்னிட்டு மாகாணக் கல்வித் திணைக்கள ஏற்பாட்டில் இவ்விழா நடைபெறும்.

இவ்விழாவில் விழிப்புணர்வுச் செயற்பாடுகள், கண்காட்சி மற்றும் சஞ்சிகை வெளியீடு என்பனவும் சிறப்புரைகளும் இடம்பெறவுள்ளன. அத்துடன் இவ்விழாவை முன்னிட்டு குறும்படத் தயாரிப்பும் யுனிசெவ் நிறுவன நிதி உதவியும் இடம்பெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

இதேவேளை கிளிநொச்சி வலயத்துக்குட்பட்ட அனைத்துப் பாடசாலைகளிலும் மாணவர்களுக்கான உள சமூக வழிகாட்டல் ஆலோசனை நிகழ்ச்சித் திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றது.

இந்தத் திட்டத்தின் கீழ் க.பொ.த.உயர்தர மாணவர்களுக்கான சகபாடி ஆதரவுக் குழுக் கலந்துரையாடல் மற்றும் மாணவர்களுக்கான உணர்வுகளைக் கையாள்வதற்கான திறன் விருத்திப் பயிற்சி, நேர் மனப்பாங்கான நடத்தைகளுக்கான முகாமைப் பயிற்சி காலை ஒன்றுகூடலில் உளநலம் தொடர்பான ஒரு சிந்தனை மற்றும் யோகா அல்லது அக அமைதிச் செயற்பாடுகளை வழங்குதல், மாணவர் பெற்றோர் மற்றும் சமூகத்துக்கான விழிப்புணர்வு தொடர்பான கலை நிகழ்வு,கண்காட்சி, சஞ்சிகை ஆக்கம் ஆகிய செயற்பாடுகள் முன்னெடுக்கப்படுகின்றன.

இவற்றைப் பாடசாலைகளில் மேற்பார்வை செய்வதற்கென வலயக் கல்வி அலுவலக கல்விசார் உத்தியோகத்தர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர்.

இந்தச் செயற்பாடுகள் இன்றுவரை பாடசாலைகளில் நடைபெறவுள்ளன. இதற்காக வடமாகாணக் கல்வித் திணைக்களத்தின் ஏற்பாட்டில் யுனிசெவ் நிதியிலிருந்து ஒவ்வொரு பாடசாலைக்கும் 10 ஆயிரம் ரூபா நிதி ஒதுக்கப்பட்டுள்ளது. (க-405)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பெருந்...

தொடர்ச்சி
முன்பக்கத்திலிருந்து...

கைக்குண்டுகள்-42 குண்டுகளைச் செயலிழக்க வைக்கும் கருவிகள், துப்பாக்கி ரவைகள் ஆயிரத்து 615 ஆகியவையே இவ்வாறு மீட்கப்பட்டன.

இவற்றை மீட்கும் பணி நேற்று முன்தினம் ஆரம்பிக்கப்பட்டது என்றும் நேற்றுமதியம் அனைத்தும் மீட்கப்பட்டுவிட்டன என்றும் அவற்றைச் செயலிழக்க வைக்கவுள்ளதாகப் பொலிஸார் தெரிவித்தனர்.

பொதுவாக வன்னியில் அநேகமான ஆயுதங்கள் மீட்கப்பட்டுவரும் நிலையில் யாழ்ப்பாணத்திலும் பெருமளவு குண்டுகள் மீட்கப்பட்டிருக்கின்றமை குறிப்பிடத்தக்கது. (த-4)

## வடமாகாண...

தொடர்ச்சி
முன்பக்கத்திலிருந்து...

வழங்குகிறது.

இலங்கையில் கண்ணிவெடி அகற்றல் நடவடிக்கைகளில் ஈடுபடும் 'டாஷ்' நிறுவனத்தினூடாக இந்த நிதி வழங்கப்படுகிறது.

இந்த நன்கொடை தொடர்பான ஒப்பந்தம் இலங்கைக்கான ஜப்பானிய தூதுவர் நொபுஹிதொ ஹொபொ மற்றும் 'டாஷ்' நிறுவனத்தின் கண்ணிவெடி அகற்றல் திட்ட முகாமையாளர் ஆனந்த சந்திரசிறி ஆகியோருக்கிடையே ஜப்பானிய தூதரகத்தில் நேற்றுக் கைச்சாத்திடப்பட்டது.

2003 ஆம் ஆண்டிலிருந்து ஜப்பானிய அரசு; கண்ணிவெடி அகற்றல் நடவடிக்கைகளுக்கு சுமார் 2400 மில்லியன் ரூபாவை அடி மட்ட மனித பாதுகாப்புக்கான நன்கொடைத்திட்டத்தின் கீழ் வழங்கியிருக்கிறது. (த)

## மொத்த...

தொடர்ச்சி
முன்பக்கத்திலிருந்து...

5 ஆயிரத்து 825 கோடியே 95 லட்சத்து 34 ஆயிரம் ரூபா மேலதிகமாக ஒதுக்கப்பட்டுள்ளது.

அத்துடன், மீள்குடியேற்றத்துக்கு 43 கோடியே 73 இலட்சத்து 22 ஆயிரம் ரூபாவும், புனர்வாழ்வளிப்பு, சிறைச்சாலைகள் மறுசீரமைப்புக்கு 532 கோடியே 18 லட்சத்து 30 ஆயிரம் ரூபாவும் ஒதுக்கப்பட்டுள்ளது.

# ஏகாதிபத்திய ஆட்சியை நிலைநிறுத்த நீதித்துறையினர் மீது அரசு தாக்குதல்

## சாடுகிறது ஐ.தே.க.

கொழும்பு, ஒக்.10

நீதிச்சேவைகள் ஆணைக்குழுவின் செயலாளர் மஞ்சுள திலகரத்ன தாக்கப்பட்ட சம்பவத்தின் பின்னணியில் சர்வதேச சூழ்ச்சி அரங்கேற்றப்பட்டுள்ளது என்று ஆளுந்தரப்புக் கூறும் கதையை நம்புவதற்கும் - ஏற்றுக்கொள்வதற்கும் நாட்டு மக்கள் ஒன்றும் கொண்டை கட்டிய சீனர்கள் அல்லர் எனத் தெரிவித்த ஐக்கிய தேசியக் கட்சி, தமது ஏகாதிபத்திய கனவிற்கு முட்டுக்கட்டையாக இருக்கும் நீதித்துறையை முடக்குவதற்கு அரசால் திட்டமிட்டு மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கையே இது என்றும், ஆளுந்தரப்பின் உயர்மட்டப் பிரமுகர்களே இந்தச் சம்பவத்தின் பின்னணியில் இருக்கின்றனர் என்றும் குற்றஞ்சாட்டியது.

அரச உயர்மட்ட அழுத்தங்களுக்கு அடிபணிந்து தமது மனச்சாட்சிக்கு எதிராக செயற்படாமல் மேற்படி சம்பவம் தொடர்பில் சுயாதீனமான விசாரணை நடத்தி உண்மையான குற்றவாளியைக் கைது செய்வதற்குபொலிஸ் மா அதிபர் நடவடிக்கை எடுக்கவேண்டும் என வேண்டுகோள் விடுத்த அக்கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் மங்கள சமரவீர, பாதுகாப்புச் செயலாளர் மற்றும் பொலிஸ் மா அதிபருடன் தொடர்புகொண்டால் மட்டுமே இது தொடர்பான உண்மையை அறிந்துகொள்ள முடியும் என்றும் தெரிவித்தார்.

எதிர்க்கட்சித் தலைவரின் உத்தியோகபூர்வ இல்லத்தில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இதன்போது அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

நீதிச்சேவைகள் ஆணைக்குழுவின் செயலாளர் மஞ்சுள திலகரத்ன மீது மேற்கொள்ளப்பட்ட மிலேச்சத்தனமான தாக்குதல், நீதித்துறைக்கு விடுக்கப்பட்ட அச்சுறுத்தல் ஆகியவற்றைக் கண்டித்து நாடுமுழுவதிலுமுள்ள நீதிபதிகள், சட்டத்தரணிகள் நேற்று(நேற்றுமுன்தினம்) ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர். இதன்போது சவப்பெட்டியை எரித்தும் தமது எதிர்ப்பை அவர்கள் வெளிப்படுத்தினர்.

2009ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்ட மஹிந்த ராஜபக்ஷ அரசின் ஏகாதிபத்தியக் கனவுக்குத் தற்போது முட்டுக்கட்டையாக இருப்பது சுயாதீன நீதித்துறை மட்டுமே. எனவே, இந்த முட்டுக்கட்டையைத் தகர்த்து தமது ஏகாதிபத்திய ஆட்சியை நிலைநிறுத்த அரசு மிகவும் திட்டமிட்ட முறையில் மேற்கொண்ட நடவடிக்கையே இது. தமது ஏகாதிபத்திய ஒழுங்குப் பத்திரத்தின் நடவடிக்கைகளுக்கு முட்டுக்கட்டை போடுபவர்களை முடக்கிவிடுவதே மஹிந்த அரசின் செயலாகும். இதனடிப்படையிலேயே நீதிச்சேவைகள் ஆணைக்குழுவின் செயலாளர் மஞ்சுள திலகரத்ன தாக்கப்பட்டார்.

இனந்தெரியாத ஆயுதக்குழுவினர் தம்மைத் தாக்கியபோது மஞ்சுள திலகரத்ன சத்தமின்றி இருந்திருந்தாரேயானால் அவரை அந்த ஆயுதக் குழுவினர் கடத்திச் சென்று கொலை செய்திருப்பார்கள். அரசின் இந்த ஏகாதிபத்தியக் கனவுக்கு கடந்த மூன்றரை வருடங்களுக்கு முன்னர் முட்டுக்கட்டையாக இருந்த ஊடகவியலாளர் லசந்த விக்கிரமசிங்கவையும் இதுபோன்றே தாக்கினர்.

ஊடகவியலாளர்களை அச்சுறுத்தி தமது சதி நடவடிக்கைகளை மேற்கொண்டுவந்த அரசுக்கு சுயாதீன நீதித்துறை மட்டுமே தற்போது அச்சுறுத்தலாகவும், முட்டுக்கட்டையாகவும் இருக்கிறது. இதனைக் கட்டுப்படுத்தவே அரசு நீதித்துறை மீது பனிப்போரைத் தொடுத்துள்ளது.

எமது கட்சியிலுள்ள உறுப்பினர்களை விலைக்கு வாங்கி நாடாளுமன்றத்தில் மூன்றில் இரண்டு பெரும்பான்மையையும் பெற்றுக்கொண்டது. இதனூடாக 18ஆவது அரசியல் திருத்தத்தைக் கொண்டுவந்து சுயாதீன அரச நிறுவனங்களைத் தமது கட்டுப்பாட்டில் கொண்டுவந்தது மட்டுமல்லாமல், அரச ஊழியர்களைத் தமது கூலியாட்களாகவும் மாற்றிக்கொண்டது.

தற்போது நாடாளுமன்றத்திலுள்ள அனைத்து அரசதரப்பு உறுப்பினர்களும் அரசால் மேற்கொள்ளப்படுகின்ற அனைத்து நடவடிக்கைகளுக்கும் சமிக்ஞை காட்டும் சமிக்ஞைக் குறியீடுகளாகவும் அரச தரப்பின் உத்தியோகபூர்வ இறப்பர் முத்திரைகளாகவுமே இருக்கின்றனர். இவர்கள் ஆளுந்தரப்பின் கட்டளைகளுக்கு அடிபணிந்து தமது மனச்சாட்சிக்கு எதிராகச் செயற்படுகின்றனர்.

கடந்த மாதம் 18ஆம் திகதி நீதிச்சேவைகள் ஆணைக்குழுவின் செயலாளர் மஞ்சுள திலகரத்ன தனது உயிருக்கு அச்சுறுத்தல் விடுக்கப்படுவதாகத் தெரிவித்திருந்தார். போதைப்பொருள் கடத்தல்காரர்களுக்கும், கொலையாளிகளுக்கும் பாதுகாப்பு வழங்கும் இந்த அரசு, மஞ்சுள திலகரத்னவுக்குப் பாதுகாப்பு வழங்கவில்லை. மாறாக, அரச ஊடகங்களைப் பாவித்து அவர்கள் மீது சேறு பூசியது. அத்துடன், தம்மிடமும் மஞ்சுள திலகரத்ன தொடர்பில் முறைப்பாடுகள் வந்துள்ளன என ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவும் கூறியுள்ளார்.

மஞ்சுள திலகரத்ன இனந்தெரியாத குழுவினரால் தாக்கப்பட்டது மட்டுமல்லாமல், அவரது கைத்தொலைபேசியும் பறித்துச் செல்லப்பட்டுள்ளது. இவர் தாக்கப்பட்ட சம்பவத்தை மூடி மறைப்பதற்காக அவரது கைத்தொலைபேசி பறித்துச் செல்லப்பட்டது. இன்னும் சில நாட்களில் அவரது கைத்தொலைபேசி போதைப்பொருள் கடத்தல்காரரிடமிருந்து மீட்கப்படும். உண்மையான குற்றவாளியை மறைத்து வைத்துவிட்டு, போதைப்பொருள் பாவிப்போர் முதலான குற்றவாளிகளைப் பொலிஸார் கைதுசெய்வர். இதனைக் கருத்திற்கொண்டே திலகரத்னவின் கைத்தொலைபேசியை அந்த இனந்தெரியாத குழுவினர் பறித்துச் சென்றுள்ளனர்.

எனவே, பொலிஸ் மா அதிபர் அரச உயர்மட்டத்திலிருந்துவரும் அழுத்தங்களுக்கு அடிபணிந்து செயற்பட்டு பொய்யான குற்றவாளிகளைச் சட்டத்தின் முன் நிறுத்தாது உண்மையான குற்றவாளிகளைக் கண்டுபிடிப்பதற்கான நீதியான விசாரணையை நடத்தி அவர்களைக் கைதுசெய்யவேண்டும். - என்றார்.

## மஞ்சுள...

தொடர்ச்சி
முன்பக்கத்திலிருந்து...

கின்றோம். நீதிச்சேவைகள் ஆணைக்குழுவின் செயலர் மீதான தாக்குதல் நீதித்துறைக்கே ஏற்பட்ட தாக்குதலாகும்.

நீதிச்சேவைக்குப் பொறுப்பானவராக நீதிச்சேவைகள் ஆணைக்குழுவின் செயலாளரே இருக்கின்றார். அவருக்குத் துப்பாக்கி முனையில் அச்சுறுத்தல் விடுக்கப்பட்டு தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது. அத்துடன், அவரின் கையடக்கத் தொலைபேசியும் பறிக்கப்பட்டுள்ளது. வரலாற்றில் முதன்முறையாக நீதிச்சேவைச் செயலாளரொருவர் அச்சுறுத்தப்பட்டுள்ளார்.

இதற்கு எதிராக 8ஆம் திகதி நீதித்துறையினர் போராட்டம் நடத்தினர். இந்தத் தாக்குதல் சம்பவத்தைத் தனியானதொரு சம்பவமாகக் கருதமுடியாது.

நீதிச்சேவைகள் ஆணைக்குழுவின் செயலாளர் தாக்கப்பட்ட சம்பவம் தொடர்பில் விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளனவா? சந்தேகநபர்கள் எவரேனும் கைதுசெய்யப்பட்டுள்ளனரா? ஆகிய இரண்டு கேள்விகளுக்கும் நான் பதிலை எதிர்பார்க்கின்றேன் - என்றார்.

## இலங்கை...

தொடர்ச்சி
முன்பக்கத்திலிருந்து...

ஈழத்தமிழர்கள், உலக அளவில் தடை செய்யப்பட்ட குண்டுகளை வீசி படுகொலை செய்யப்பட்டனர். இதனால் இந்தியாவில் இலங்கை இராணுவத்துக்கு பயிற்சி அளிக்கக் கூடாது என்று தமிழக மக்கள் மற்றும் அரசியல் தலைவர்கள் மத்திய அரசுக்கு எதிர்ப்புத் தெரிவித்து வருகின்றனர்.

இந்த நிலையில் இலங்கை இராணுவத் தளபதி ஜகத் ஜயசூர்யா இலங்கை இராணுவத்தைச் சேர்ந்த 45 உயர் அதிகாரிகள் பயிற்சிக்காக இந்தியா செல்ல உள்ளனர். முடிந்தால் அவர்களை தடுத்துக் கொள்ளட்டும் என்று ஆணவமாகப் பேசியுள்ளார்.

இந்தநிலையில் இவரது பேச்சைக் கண்டித்து தமிழ் அமைப்புகளைச் சேர்ந்த வர்கள் புதுச்சேரி காமராஜர் சிலை அருகே திரண்டனர். அவர்கள் ஜகத் ஜயசூர்யாவை கண்டித்தும், இலங்கை அரசைக் கண்டித்தும் கோஷங்களை எழுப்பினர். இந்தப் போராட்டத்துக்கு தமிழர் தேசிய இயக்கத் தலைவர் ரா.அழகிரி தலைமை தாங்கினார்.

மக்கள் உரிமை கூட்டமைப்புச் செயலர் கோ.சுகுமாரன், செந்தமிழர் இயக்க அமைப்பாளர் நா.மு. தமிழ்மணி, இந்திய ஜனநாயக கட்சித் தலைவர் சக்திவேல், முற்போக்கு ஜனசக்தி இயக்கத் தலைவர் புரட்சி வேந்தன், மனித உரிமைகள் மற் றும் நுகர்வோர் பாதுகாப்புக் கழக பொதுச்செயலர் ஆர்.முருகானந்தம் உட்பட பலர் பங்கேற்றனர். இதன் போது 30 பேரைப் பெரிய கடை பொலிஸார் கைது செய்தனர்.

## கூட்டமைப்பு...

தொடர்ச்சி
முன்பக்கத்திலிருந்து...

சேனாதிராசா, சுரேஷ் பிரேமச்சந்திரன், செல்வம் அடைக்கலநாதன், அப்பாத்துரை விநாயகமூர்த்தி, பொன் செல்வராசா, சுமந்திரன் ஆகியோர் அடங்கிய 7 பேர் கொண்ட குழுவே இன்று புதுடில்லி செல்லவுள்ளனர் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்திய மத்திய அரசாங்கத்தின் அழைப்பையேற்று புதுடில்லி செல்லும் இக் குழுவினர் இந்திய அமைச்சர்களான நாராயணசாமி, எஸ்.எம். கிருஷ்ணா, பாதுகாப்பு ஆலோசகர் சிவ்சங்கர் மேனன் ஆகியோரைச் சந்தித்துப் பேசுவதுடன், பிரதமர் மன்மோகன் சிங்கையும் சந்திக்கவுள்ளனர் எனவும், அத்துடன் இந்திய நாடாளுமன்ற எதிர்க்கட்சித் தலைவி சுஷ்மா சுவராஜையும் இக் குழு சந்தித்துப் பேசும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

புதுடில்லிக்கான விஜயத்தை முடித்துக்கொண்டு தமிழகம் திரும்பும் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் குழு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெயலலிதாவையும் சந்தித்துப் பேசவுள்ளது.

இனப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வு காண்பதில் இலங்கை அரசு மேற்கொண்டு வரும் இழுத்தடிப்புகள், வடக்கு மற்றும் கிழக்கில் இடம்பெறும் காணி சுவீகரிப்பு மற்றும் இராணுவ மயமாக்கல் உட்பட தமிழர்களின் சமகால அரசியல் பிரச்சினைகள் குறித்தும் இந்தியப் பிரதமர் மன்மோகன் சிங்குடனான சந்திப்பின்போது கூட்டமைப்பினர் எடுத்துக்கூறவுள்ளனர் என அக்கட்சி வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

அதேவேளை, இனப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வு காணும் வகையில் அரசின் நாடாளுமன்ற தெரிவுக்குழுவில் கூட்டமைப்பு இடம்பெற வேண்டும் என்ற அழுத்தத்தை கூட்டமைப்பின் நாடாளுமன்றத் தூதுக்குழுவிடம் இந்தியா விடுக்கலாம் எனவும், இவ்வாறான கருத்தை இந்தியா, முன்வைத்தால் தெரிவுக்குழுவில் பங்கேற்பதற்கு தமக்குள்ள பாதகமான நிலைகள் குறித்து கூட்டமைப்பினர் எடுத்துரைப்பார்களெனவும் எதிர்பார்க்கப்படுகிறது.

## தமிழக...

தொடர்ச்சி
முன்பக்கத்திலிருந்து...

ரெம்பர் மாதம் முன்னதாக தமிழகத்தில் இலங்கைப் பயணிகள் தொல்லைகளுக்குள்ளான சில சம்பவங்கள், குறிப்பாக பூண்டி மாதா தேவாலயத்தில் வழிபடச் சென்ற இலங்கை யாத்திரிகர்கள் சென்ற வாகனங்கள் கல்லெறிச் சம்பவங்களுக்கு இலக்கானதை அடுத்து விடுக்கப்பட்டது.

இந்தச் சம்பவங்கள் ஒரு நடைமுறைக்கு மாறான பிறழ் சம்பவங்கள் என்று கூறியிருக்கும் இலங்கை அரசு, இலங்கையிலிருந்து இந்தியாவுக்கு ஆண்டுதோறும், சுமார் இரண்டு லட்சம் இலங்கைப் பிரஜைகள் சுற்றுலா செல்கிறார்கள், இவர்கள் அனைவரும் தமிழகம் உள்ளிட்ட இந்தியாவின் எல்லாப் பகுதிகளிலும் உளப்பூர்வமாக வரவேற்கப்படுகிறார்கள் என்று கூறியது.

இந்திய அரசு, இந்திய மாநிலங்களின் ஒருங்கிணைப்போடு, தமிழகம் உள்ளிட்ட இந்தியாவின் அனைத்து மாநிலங்களுக்கு வரும் இலங்கையரின் பாதுகாப்பை உறுதி செய்யத் தேவையான அனைத்து நடவடிக்கைகளையும் எடுத்திருப்பதாக இலங்கை அரசு கூறுகிறது.

இந்தியாவுக்கும் இலங்கைக்கும் இடையேயான மக்கள் தொடர்புகள் காலம் காலமாக இருந்து வந்தவை. இந்த தொடர்புகள் பேணப்படவேண்டும் என்று கூறியிருக்கும் இலங்கை அரசு, இது தொடர்பாக தமிழக முதலமைச்சர் தெரிவித்த கருத்துக்களையும் வரவேற்றுள்ளது.

முன்பு வெளியிடப்பட்ட பயண அறிவுறுத்தலை விலக்கிக்கொள்ளுமாறு ஏராளமான வேண்டுகோள்கள் தமக்கு விடப்பட்டிருப்பதாகக் கூறும் இலங்கை வெளியுறவு அமைச்சகம், எனவே இந்த அறிவுறுத்தல் இனித் தேவையற்றது என விலக்கிகொள்ளப்படுவதாக அறிவித்திருக்கிறது. (த)

## அரசமைப்பை...

தொடர்ச்சி
முன்பக்கத்திலிருந்து...

என்று 'சுட்டிக்காட்டிய சபாநாயகர் சமல் ராஜபக்ஷ, இவ்வாறான சந்தர்ப்பங்களில் உயர்நீதிமன்றம் மிகவும் பொறுப்புடன் செயற்பட வேண்டியதன் அவசியத்தையும் வலியுறுத்தினார்.

வழக்கின் மனுவில் பிரதி தமக்கு அனுப்பப்படாமல் செயலாளர் நாயகத்துக்கு அனுப்பப்படுமானால் அது நாட்டின் அரசமைப்பின் 121 (1) விதிக்கு அமைவாக எடுக்கப்பட்ட நடவடிக்கையாக நாடாளுமன்றம் கருதமாட்டாது என்றும் சபாநாயகர் கூறினார்.

தமது இந்த முடிவின் பிரதிகளை ஜனாதிபதிக்கும் உயர் நீதிமன்றின் நீதியரசருக்கும் அனுப்பி வைக்கும்படி நாடாளுமன்ற செயலாளர் நாயகத்துக்கு சபாநாயகர் பணிப்புரை விடுத்தார். சபாநாயகரின் இந்த முடிவு பொதுமக்களும் அறிந்திருக்கும் விதத்தில் நாடாளுமன்றக் குறிப்பேட்டிலும் (ஹன்சாட்) வெளியிடப்படவேண்டும் என்று அவர் அறிவித்தார். நாடாளுமன்ற இணையப்பக்கமான (www.parliament.lk) இலும் வெளியிடப்பட வேண்டும் என்று சபாநாயகர் குறிப்பிட்டார்.

குறிப்பிட்ட தரப்பினர் [illegible]கவோ அல்லது தமது முகவர் மூலமாகவோ மனு ஒன்றை உயர் மன்றத்தில் தாக்கல் செய்பவரானால் அந்த மனுவின் பிரதி ஒன்றை அதே காலத்தில் அல்லது ஏறத்தாழ அல்லது அதே காலத்தில் சபாநாயகருக்கு வழங்குவது என்பதில் நடைமுறைப் பிரச்சினை எதுவும் இருக்க முடியாது.

அவ்வாறு வழங்கப்படும் பட்சத்திலேயே அவசியமானால் சபை நடவடிக்கைகளை. நிறுத்துவது குறித்து சபா நாயகர் தீர்மானிக்க முடியும் என்றும் சபாநாயகர் நேற்று [illegible] (ப)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

## காணி அபகரிப்புக் குறித்த நிலை இன்னும் இருபத்தொரு நாள்களில்...?

யாழ்ப்பாண மாவட்டச் செயலகத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற மாவட்ட ஒருங்கிணைப்புக்குழுக் கூட்டம், என்றும் இல்லாதவாறு கலகலப்பாகவும், காரசாரமான விவாதங்களுடனும் நடைபெற்ற அதேவேளை-

வடக்கு மக்களை ஆகப்பிந்தி வந்து துளைக்கும் அரசின் காணி அபகரிப்புக்கு, அமைச்சர் உட்பட மாவட்ட நாடாளுமன்ற பிரதிநிதிகள் அனைவரும் ஒரே குரலில் எதிர்ப்புத் தெரிவித்த சாதனைக்கும் வழிசெய்தது.

குடாநாட்டில் படையினரின் தேவைகளுக்கு மக்களின் காணிகள் எதனையும் வழங்குவதில்லை. காணிகளைக் கையகப்படுத்தும் முயற்சிகள் உடன் நிறுத்தப்பட வேண்டும். பொது மக்களின் காணிகளைச் சுவீகரிக்கும் உரிமை யாருக்கும் இல்லை. ஆகையால் காணி சுவீகரிப்பு முற்றாக நிறுத்தப்பட வேண்டும் -என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் உறுப்பினர்கள் அனைவரும் ஒரே குரலில் ஓங்கி ஒலித்தனர்.

அதனை ஆதரித்து அரசதரப்பு ( ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சி) நாடாளுமன்ற உறுப்பினரும் நாடாளுமன்றின் குழுக்களின் பிரதித் தலைவருமான முருகேசு சந்திரகுமார்-

காணிச் சுவீகரிப்பை நாங்களும் விரும்பவில்லை. அது அரச காணிகளாக இருக்கட்டும், தனியார் காணிகளாக இருக்கட்டும் ஓர் இணக்கத்தின் அடிப்படையில் அதனைத் தடுப்போம்-என்று உறுதியளித்தார்.

யாழ்ப்பாண (தேர்தல்) மாவட்டத்தின் மக்கள் பிரதிநிதிகள் அனைவரும் அரசின் காணிகள் கபளீகரத்துக்கு எதிராக, மக்களின் இன்றைய முதன்மைப் பிரச்சினை தொடர்பாக ஒத்தகருத்துடையவர்களாக, ஒரே குரலில் ஒலித்தமை, கருத்து வெளியிட்டமை அரசாங்கத்துக்கு திகைப்பையும், அதிர்ச்சியையும் கொடுக்கும் என்பதில் எள்ளளவும் சந்தேகம் இல்லை.

எப்படியோ, சூட்டோடு சூடாக படையினரின் காணி-நில-அபகரிப்புக்கு எதிரான தீர்மானம் ஒன்றை யாழ். மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக்கூட்டத்தில் நிறைவேற்றியிருக்க வேண்டும். சாதக பாதகங்கள் ஆராயப்பட்ட பின்னரே தீர்மானமாக மேற்கொள்ள முடியும் என்ற நிலைப்பாடு ஒரு சறுக்கலாகி விடுமோ என்ற சந்தேகத்தை இயல்பாகவே உண்டாக்குகிறது!

மக்கள் எந்த நிலத்தில் இருந்து வெளியேற்றப்பட்டார்களோ அதே நிலத்தில் மீளக்குடியமர்த்தப்பட வேண்டும். அதற்கு வடக்கு மாகாண ஆளுநர் தமது பதவிசார் வகையில் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று மக்கள் பிரதிநிதிகள்-நாடாளுமன்ற உறுப்பினர்கள்-வெளியிட்ட விருப்பத்தை (வேண்டுகோளை என்றும் கொள்ளலாம்) தூக்கி வீசுவது போன்று அமைந்துள்ளது ஆளுநரின் பதில்!

தேசியப் பாதுகாப்புக்கே முதலிடம் கொடுக்கப்படும். இராணுவத்தினருக்குத் தேவையான காணிகள் தேசிய பாதுகாப்புக் கருதி சுவீகரிக்கப்படும். அதன் பொருட்டு அரச காணிகள் கையகப்படுத்தப்படும். அதன் பின்னரே மக்களின் மீள்குடியமர்வு தொடர்பாக ஆராயப்படும் -என்று அரசாங்கத்தின் நிலைப்பாட்டை, வாய்ப்பாட்டை அட்சரம் பிறழாது, தவறாது ஒப்புவித்திருக்கிறார் ஆளுநர்.

மக்களுக்குப் பாதுகாப்பு அளிப்பதற்காக என்ற பெயரில் அல்லது போர்வையில், அவர்களின் குடியிருப்பு நிலங்களையும் விவசாய நிலங்களையும், அவசரகாலச் சட்ட விதிகளின் கீழ் கையகப்படுத்தி ருசி கண்ட படைத்தரப்பு-அரசதரப்பு-

போர் முடிவுற்று முழு அளவிலான சமாதானமும், பெரு அமைதியும் நிலவும் இவ்வேளையிலும்-

பாதுகாப்பைப் பலப்படுத்துவது என்ற கேடயத்தை தனது கையில் எடுத்துக்கொண்டு, குறிப்பாக வடக்கிலும், கிழக்கிலும் பொதுமக்களின் காணிகளை கபளீகரம் செய்கிறது.

தேசிய பாதுகாப்புக் கருதி இராணுவத்தினருக்குத் தேவையான காணிகள் சுவீகரிக்கப்பட்ட பின்னரே, ஒரு பிரதேசத்தில் எஞ்சியிருக்கும் காணிகள் மட்டுமே அவற்றின் நீண்ட கால சொந்தக்காரரான மக்களின் பாவனைக்கு கையளிக்கப்படும் என்பது அரசின் மாற்றமுடியாத நிரந்தர நிலைப்பாடு. மக்கள் இதனைத் தெரிந்துகொள்ள வேண்டும்; சகித்துக் கொள்ளவும் வேண்டும் என்றாகி விட்டது.

அடுத்த ஆண்டுக்கான அரசின் வரவு -செலவுத் திட்டத்தில்-அடுத்த மாதம் நாடாளுமன்றில் சமர்ப்பிக்கப்படவுள்ள வரவு செலவுத் திட்டத்தில் - பாதுகாப்புச் செலவினத்துக்கென 28, 950 கோடி ரூபா பணம் ஒதுக்கப்பட்டுள்ளது. மக்களை அவர்களின் சொந்த-பூர்வீக- நிலங்களில் இருந்து துரத்திவிட்டு யாருக்கு அரசாங்கம் பாதுகாப்பு வழங்கப் போகிறது?

மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில், நாடாளுமன்ற உறுப்பினர் பிரேமச்சந்திரன் கேள்வி எழுப்பியது போன்று இந்தியாவும் சீனாவும் இலங்கை மீது( குறிப்பாகச் சொன்னால் வடக்கு, கிழக்குப் பிரதேசங்கள் மீது) படையெடுத்து வரக்கூடும் என்று அரசாங்கம் அஞ்சுகிறதா? மேற்சொன்ன இரண்டு நாடுகளுக்கும் மாறி மாறி, தலையையும் வாலையும் காட்டும் விலாங்குப் போக்கு, காலப்போக்கில் தனக்கு அச்சுறுத்தலாக மாறும் என்று அரசு எண்ணுகிறதோ, என்னவோ?!

எதற்கும் வடக்கு மக்களின் குடியிருப்பு நிலங்களும், பயிர்ச் செய்கை நிலங்களும், பாதுகாப்பு என்ற பெயரில் கபளீகரம் செய்யப்படுவதற்கு காற்புள்ளி, அரைப்புள்ளியாவது வைத்துத் தரிக்கப்படுமா என்பதனை அறிந்துகொள்வதற்கு இன்னும் இருபத்தொரு நாள்கள் பொறுத்திருக்க வேண்டும் எமது யாழ்.தேர்தல் மாவட்டத்தைச் சேர்ந்த மக்கள். இந்த ஜனநாயகக் குடியரசு நாட்டில் இத்தகைய கையறு நிலை தமிழ் மக்களுக்கு!

# வடமாகாண கல்வி அமைச்சின் தன்னிச்சையான செயற்பாடுகள்

## இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கம் குற்ற சாட்டு

யாழ்ப்பாணம்,ஒக். 10

அதிகாரத்தில் யார் பெரியவரோ அவர்களின் சொல்லுக்குக் கட்டுப்பட்டும், பய உணர்வுடனும் பொருத்தமில்லாத செயற்பாடுகளை வடமாகாண கல்வி அமைச்சு முன்னெடுக்க முயற்சிப்பது ஒட்டு மொத்த வடமாகாணத்தின் கல்வியை அழிக்கும் செயலாகும் என்று இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கம் சுட்டிக் காட்டியுள்ளது.

வடமாகாணத்தின் கல்வியில் ஏற்பட்டுள்ள பல்வேறு விதமான நெருக்கடிகள் குறித்து இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கத்தின் அவசர ஒன்றுகூடல் கடந்த 5 ஆம் திகதி இடம்பெற்றது.

இதன் போதே மேற்படி விடயம் தொடர்பில் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது.

இதில் மேலும் தெரிவிக்கப்பட்டவை வருமாறு:-

வடமாகாண கல்வி அமைச்சு துறைசார்ந்த எவருடனும் கலந்து ஆலோசிக்காமல் எடுக்கின்ற முடிவுகளால் மாகாணத்தினுடைய கல்வி மேலும் வீழ்ச்சியடையும். ஏற்கனவே கல்வியில் வடமாகாணம் இலங்கையின் கடைசி இடத்தில் உள்ளது.

இதனை உணர்வு பூர்வமாக உணர்ந்து கொள்ளாத அதிகாரிகள், பய உணர்வோடு யார் அதிகாரத்தில் பெரியவரோ அவரின் சொல்லுக்குக் கட்டுப்பட்டுப் பொருத்தமில்லாத செயற்பாடுகளை முன்னெடுக்க முயற்சிப்பது ஒட்டுமொத்தமாக வடமாகாணத்தின் கல்வியை அழிக்கும் செயலாகும்.

இலங்கையிலேயே முன்னிலை வகித்த வடமாகாணம் சமாதான-சாதகமான சூழ்நிலைக்குப் பின்னர் பின்தள்ளப்படுவது வேதனையான விடயம் என்பதை விட எல்லோரும் விழிப்படைய வேண்டிய விடயம்.

மாணவர்களின் துர்நடத்தைகள், அவர்களின் நிறைவேற்றப்படாத பல அத்தியாவசிய தேவைகள், கல்வி அதிகாரிகள் மீதான காழ்ப்புணர்வுகள், அதிபர்கள் தமது ஆசிரியர்கள் மீது செலுத்துகின்ற அதிகார துஷ்பிரயோகம், குற்றவாளிகள் என்று இனங்காண முன்னர் தண்டனை வழங்குதல், தண்டனை வழங்க வேண்டியவர்களுக்குப் பதவி உயர்வு வழங்குதல், அதிபர், ஆசிரியர்களின் பதவி உயர்வுகளைத் தாமதப்படுத்தல், தமக்கு வேண்டிய வகையில் பாடசாலையை வகைப்படுத்தல் என்பன வடக்கு மாகாணக் கல்வி நிர்வாகத்தில் பெரும் சிக்கல்களை ஏற்படுத்தியுள்ளன.

மேற்படி குறைபாடுகள் வடமாகாண கல்வி அமைச்சின் குறைபாடுகளா? அல்லது திட்டமிடப்பட்ட செயல்களா? என இலங்கை தமிழர் ஆசிரியர் சங்கத்தின் பிரதேச, பிராந்திய செயலாளர்கள் கேள்வி எழுப்பி உள்ளனர்.

இதன் காரணமாக எதிர்வரும் காலங்களில் வடமாகாண கல்வி பாரதூரமான பின் விளைவுகளைச் சந்திக்கப் போகின்றது எனவும் அவர்கள் எச்சரித்தனர்.

இந்த விடயங்கள் தொடர்பில் இலங்கை தமிழர் ஆசிரியர் சங்கம் இனிமேலும் கரிசனை கொள்ளாதிருக்க முடியாதென்று ஏகமனதாகத் தீர்மானித்து வடமாகாண கல்வி அமைச்சுக்கு எதிராகத் தொழிற் சங்க ரீதியிலான செயற்பாடுகளை முன்னெடுக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளது. (த-5)

## டெங்கு பரவும் சூழல்; சிக்கினார்கள் இருவர்

தென்மராட்சி,ஒக். 10

சாவகச்சேரி சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில் நேற்று முன் தினம் ஆரம்பிக்கப்பட்ட டெங்கு நுளம்பு ஒழிப்பு வார ஆரம்ப தினத்தன்று டெங்கு நுளம்பு உற்பத்திக்கு ஏதுவான நிலையில் குப்பைகள் மற்றும் கொள்கலன்கள் வைத்திருந்த இருவர் பரிசோதனையாளர்களிடம் வசமாக மாட்டிக் கொண்டனர்.

சாவகச்சேரி நகர்ப்பகுதியில் சுகாதாரப் பகுதியினருடன் பொலிஸார் மற்றும் தொண்டர்கள் வீடு வீடாகப் பரிசோதனைகளை மேற்கொண்ட போது இவர்கள் சிக்கினர் என்று தெரிவிக்கப்பட்டது.

இந்த இருவருக்கும் எதிராக நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்யப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது. (த-9)

## சுகாதாரப் பரிசோதகர் இடமாற்றம்

தென்மராட்சி,ஒக். 10

சாவகச்சேரி சுகாதார வைத்திய அதிகாரி பணிமனையில் மேற்பார்வை பொது சுகாதாரப் பரிசோதகராக (SPAI) கடமையாற்றிய க.கர்ணன் பதவியுயர்வுடன் கண்டாவளை சுகாதார வைத்திய அதிகாரி பணிமனைக்கு இடமாற்றம் செய்யப்பட்டுள்ளார்.

இவரது இடத்துக்கு கரவெட்டி சுகாதார வைத்திய அதிகாரி பணிமனையில் கடமையாற்றிய மு.இரவிச்சந்திரன் நியமிக்கப்பட்டு கடமைகளைப் பொறுப்பேற்றுள்ளார்.

சுகாதார அமைச்சின் செயலாளரினால் கடந்த முதலாம் திகதி தொடக்கம் நடைமுறைக்கு வரும் வகையில் இடமாற்றம் செய்யப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது. (த-9)

## இந்திய வீடமைப்புத் திட்டம் குறித்து வவுனியாவில் கூட்டம்

தென்மராட்சி,ஒக். 10

இந்திய அரசின் நிதி உதவியுடன் வடமாகாணத்தில் மேற்கொள்ளப்பட்டு வரும் வீடமைப்புத் திட்டம் தொடர்பான கூட்டம் நாளை வியாழக் கிழமை மு.ப 10.30 மணிக்கு வவுனியா மாவட்டச் செயலக கேட்போர் கூடத்தில் இடம்பெறும். இந்த கூட்டத்தில் யாழ்.மாவட்டத்தைச் சேர்ந்த நெடுந்தீவு, வேலணை, ஊர்காவற்றுறை, காரைநகர், யாழ்ப்பாணம், நல்லூர், சண்டிலிப்பாய் சங்கானை, உடுவில், தெல்லிப்பழை, கோப்பாய், சாவகச்சேரி, பருத்தித்துறை, கரவெட்டி, மருதங்கேணி ஆகிய பிரதேச செயலகங்களின் பிரதேசசெயலர்களை கலந்து கொள்ளுமாறு யாழ். மாவட்ட அரசஅதிபர் சுந்தரம் அருமைநாயகம் அறிவித்துள்ளார். (த-9)

## சர்வதேச அஞ்சல் தினம் 27 ஆம் திகதி மன்னாரில்

யாழ்ப்பாணம்,ஒக். 10

சர்வதேச அஞ்சல் தினத்தை எதிர்வரும் 27 ஆம் திகதி வடமாகாணத்தில் கொண்டாடுவதற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

இதுவரை காலமும் யாழ்ப்பாணத்தில் கொண்டாடப்பட்ட இந்த அஞ்சல் தினத்தை இந்த முறை மன்னாரில் கொண்டாடுவதற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

கடந்த செப்ரெம்பர் மாதம் 30 ஆம் திகதி இந்த சர்வதேச அஞ்சல் தினத்தை நடத்துவதற்கு முன்னர் ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டிருந்தன. எனினும் பின்னர் அந்த நிகழ்வு ஒத்திவைக்கப்பட்டது.

வடமாகாணத்தில் உள்ள சகல அஞ்சல் நிலையங்களும் இணைந்து எதிர்வரும் 27 ஆம் திகதி மன்னார் பிரதம தபாலகத்தில் இந்தத் தினத்தை கொண்டாடவுள்ளன.

மத்திய தபால்மா அதிபதி இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராகக் கலந்து கொள்வார். (த-17)

## தபாலகப் பணியாளரின் இரத்ததான நிகழ்வு

யாழ்ப்பாணம், ஒக்.10

சர்வதேச அஞ்சல் தினத்தை முன்னிட்டு யாழ். பிரதம தபாலகப் பணியாளர்கள் இரத்ததானம் செய்யவுள்ளனர்.

தபாலகப் பணியாளர்களின் இந்த இரத்ததான நிகழ்வு நாளை மறுதினம் வெள்ளிக்கிழமை காலை நடைபெறவுள்ளது.

யாழ்.பிரதம தபாலகத்தில் இடம்பெறும் இந்த நிகழ்வை வடமாகாண பிரதி அஞ்சல் மா அதிபர் என்.இரட்ணசிங்கம் ஆரம்பித்து வைப்பார். (த-17)

## யாழ்.,தென்கிழக்குப் பல்கலைக் கழகங்களில் புதிய பொறியியல் பீடங்கள் அமைக்க முடிவு

யாழ்ப்பாணம், ஒக்.10

யாழ்ப்பாணம் மற்றும் தென்கிழக்குப் பல்கலைக் கழகங்களில் புதிதாக இரு பொறியியல் பீடங்களை அமைக்கவுள்ளதாகப் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

யாழ். பல்கலைக் கழகத்தின் புதிய பொறியியல் பீடத்தை கிளிநொச்சியிலும் தென்கிழக்கு பல்கலைக்கழகத்தின் பொறியியல் பீடத்தை அம்பாறையிலும் அமைக்க ஆலோசிக்கப்பட்டு வருவதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

உயர்நீதிமன்ற தீர்ப்புக்கு அமைய இந்த முறை பல்கலைக் கழகங்களுக்கு மேலதிகமாக மாணவர்கள் அனுமதிக்கப்படவுள்ளதாக ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

இவ்வாறு மேலதிகமாக அனுமதிக்கப்படும் மாணவர்களில் 200 பேர் புதிய பொறியியல் பீடங்களில் அனுமதிக்கப்படவுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கிளிநொச்சியில் புதிய பொறியியல் பீடத்தை அமைப்பதற்காக 100 கோடி ரூபா செலவிடப்படவுள்ளது. அம்பாறையில் அமைக்கப்படவுள்ள பொறியியல் பீடத்திற்கு 100 கோடி ரூபா நிதியை குவைத் அரசு வழங்கியுள்ளது என்றும் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது. (ம)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொலிஸாரின் இறுதிச் சடங்கு நிதியை மோசடி செய்த எழுதுநருக்குகடூழியச் சிறை

## 87 மாத கடூழியம்; தண்டம் ரூபா 57 ஆயிரம்

வவுனியா, ஒக்.10

போர்க் காலத்தில் வவுனியா மாவட்டத்திலுள்ள பொலிஸ் நிலையங்களில் கடமையாற்றி உயிரிழந்த பொலிஸாருக்கு வழங்கப்பட வேண்டிய, இறுதிச் சடங்கு களுக்கான கொடுப்பனவுகளை, மோசடியான முறையில் கையாடல் செய்த பெண் எழுதுநர் ஒருவருக்கு 84 மாத கால கடூழியச் சிறைத்தண்டனையும் 57 ஆயிரம் ரூபா தண்டமும் விதிக்கப்பட்டுள்ளது.

வவுனியா மேல் நீதிமன்றத்தில் மேல் நீதிமன்ற நீதிபதி சந்திரமணி விஸ்வலிங்கம் இந்தத் தீர்ப்பை வழங்கியுள்ளார்.

வவுனியா பொலிஸ் தலைமையக நிர்வாகப் பிரிவில் கடமையாற்றும் பண்டாகே ஜயந்தி என்னும் பெண் எழுதுநருக்கு எதிராகத் தொடரப்பட்டிருந்த 14 மோசடி வழக்குகளின் பேரிலேயே மேற்படி தீர்ப்பு வழங்கப்பட்டது.

பொலிஸாருக்கான இறப்பு நலன்புரி நிதியத்திலிருந்து, பொலிஸாரின் இறுதிச் சடங்குச் செலவுக்கென அவரது குடும்பத்தினருக்கு உதவு தொகை வழங்கப்பட்டு வந்தது.

இவ்வாறு போர் காலத்தில் உயிரிழந்த வவுனியா மாவட்டத்தில் கடமையாற்றிய பொலிஸாரின் குடும்பங்களுக்கு வழங்கப்பட வேண்டிய குறித்த நிதி காசோலைகளை கையாடல் செய்து, மோசடியான முறையில் மாற்றியெடுத்து குற்றம் புரிந்ததார் என குறித்த பெண் மீது வவுனியா மேல் நீதிமன்றத்தில் வழக்குத் தொடரப்பட்டிருந்தது.

அரச சொத்தை கையாடல் செய்தாரென்ற அடிப்படையாகக் கொண்ட இந்த வழக்குகள் 14 இற்குமான விசாரணைகள் வவுனியா மேல் நீதிமன்ற நீதிபதி சந்திரமணி விஸ்வலிங்கம் முன்னிலையில் நடைபெற்று வந்தது.

கடந்த வாரம் இந்த வழக்கு விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்ட போது எதிரி மீதான குற்றச்சாட்டுக்கள் நிரூபிக்கப்பட்டதன் பேரில் தீர்ப்பு வழங்கப்பட்டது.

இதன்படி பண்டாகே ஜயந்தி என்னும் மேற்படி பெண்ணுக்கு 84 மாதங்கள் கடூழியச் சிறைத் தண்டனையும், 57 ஆயிரம் ரூபா தண்டமும் விதித்து மேல் நீதிமன்ற நீதிபதி சந்திரமணி விஸ்வலிங்கம் தீர்ப்பு வழங்கினார்.

தண்டப் பணம் செலுத்தத் தவறினால் குறித்த 14 வழக்குகள் தொடர்பிலும் மேலதிகமாக 42 மாத கால கடூழியச் சிறைத்தண்டனை அனுபவிக்க வேண்டும் எனவும் தீர்ப்பு வழங்கப்பட்டது. (க-30)

## இராணுவத்தினால் அச்சுறுத்தப்படும் கேப்பாபிலவு கிராம மக்கள்

*முல்லைத்தீவு, ஒக்.10*

*முல்லைத்தீவு கேப்பாபிலவு மக்கள் தாம் இராணுவத்தினராலும் இராணுவ புலனாய்வாளர்களாலும் தொடர்ந்தும் அச்சுறுத்தப்பட்டு வருவதாகத் தெரிவித்துள்ளனர்.*

*முல்லைத்தீவு கேப்பாபிலவு புதுக்குடியிருப்பு, சூரியபுரம், சீனியாமோட்டை ஆகிய பகுதிகளைச் சேர்ந்த சுமார் 165 குடும்பங்கள் அவர்களுடைய சொந்தக் காணிகளில் மீள்குடியமர்வு செய்யப்படாமல் சீனியாமோட்டைப் பகுதியிலுள்ள இஞ்ஜினியர் தோட்டம், லோயர் தோட்டம் ஆகிய தனியாருக்குச் சொந்தமான சுமார் 45 வருடங்களுக்கு மேலான காணி ஆவணங்களுள்ள நூறு ஏக்கர் காணியில் குடியமர்த்தப்பட்டுள்ளனர்.*

*இந்த நிலையில் இவர்களுக்கு உதவிகளை மேற்கொள்ளும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர்கள், ஊடகவியலாளர்கள், புலம்பெயர் உறவுகள் அங்கு சென்று திரும்பியதும் அவர்களிடம் தமது குறைகளைக் கூறும் மக்களை இராணுவத்தினரும், இராணுவப் புலனாய்வாளர்களும் அச்சுறுத்தி வருவதுடன் அவர்கள் பற்றிய விவரங்களையும் சேகரித்து வருகின்றனர்.*

*அத்துடன் இராணுவத்தினரின் ஆக்கிரமிப்பிலுள்ள காணிகளுக்குரிய ஆவணங்களின் பிரதிகளை யாருக்கும் வழங்கக் கூடாது என்றும், மீறுபவர்கள் மீது கடுமையான நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் அச்சுறுத்தல் விடுக்கப்படுவதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (க-6)*

## ஒலுமடு ஆயுள்வேத வைத்தியசாலை நூலகம் ராணுவத்தின் கட்டுப்பாட்டில்

### இவை இயங்காததால் மக்கள் சிரமம்

முல்லைத்தீவு, ஒக்.10

இராணுவத்தினரின் கட்டுப்பாட்டிலுள்ள ஒட்டுசுட்டான் ஒலுமடு ஆயுள்வேத வைத்தியசாலை, பொது நூலகம் என்பவற்றை இயங்க வைக்க அதிகாரிகள் நடவடிக்கை எடுக்க வேண்டுமென பிரதேச மக்கள் பொது அமைப்புக்கள் மற்றும் சமூக ஆர்வலர்கள் கேட்டுள்ளனர்.

முல்லைத்தீவு மாவட்டத்தின் புதுக்குடியிருப்பு பிரதேச சபையின் ஒட்டுசுட்டான் உப பணிமனையின் கீழ் உள்ள ஒலுமடு ஆயுள்வேத வைத்தியசாலை மற்றும் பொது நூலகம் என்பன இதுவரை மீள ஆரம்பிக்கப்படவில்லை. இந்தப் பகுதியில் மக்கள் மீளக்குடியமர்ந்து மூன்று ஆண்டுகளாகியும் இந்தப் பணிகள் ஆரம்பிக்கப்படவில்லை.

குறித்த நூலகம் மற்றும் ஆயுள்வேத வைத்தியசாலை என்பவற்றுக்குச் சொந்தமான காணியையும் அதன் கட்டடங்களையும் இராணுவம் இது வரை விடுவிக்கவில்லை எனவும் இதனால் இவை இரண்டும் இன்னமும் ஆரம்பிக்கப்படவில்லை எனவும் தெரிவிக்கப்படுகின்றது.

குறித்த அலுவலகங்கள் இயங்காத நிலையில் ஒலுமடு கரிப்பட்டமுறிப்பு, அம்பகாமம்,பழைய குடியிருப்பு போன்ற பகுதி மக்கள் பல்வேறு சிரமங்களை எதிர்கொண்டு வருகின்றனர் என்றும் சம்பந்தப்பட்ட அதிகாரிகள் இவற்றை இயக்குவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் பிரதேச மக்கள் தெரிவித்துள்ளனர். (க-6)

## நுண்கலைக் கல்லூரியின் 18 ஆம் ஆண்டு விழா

வவுனியா, ஒக்.10

வவுனியா நிருத்திய நிகேதன நுண்கலைக் கல்லூரியின் 18 ஆவது ஆண்டு நிறைவு விழா வவுனியா நகரசபை மண்டபத்தில் சிறப்பாக இடம்பெற்றது.

யாழ்.பல்கலைக்கழக ஆங்கிலத்துறை விரிவுரையாளர் கலாநிதி கந்தையா ஸ்ரீகணேசன் தலைமையில் இடம்பெற்ற இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக வடமாகாண கல்வி பண்பாட்டலுவல்கள் அமைச்சின் செயலாளர் எஸ்.சத்தியசீலன் கலந்து கொண்டார்.

முதலில் விருந்தினர்களை மண்டபவாயிலிலிருந்து நிருத்திக நிகேதன மாணவிகள் மாலை இட்டு வரவேற்றனர். தொடர்ந்து மங்கல விளக்கை எஸ். சத்தியசீலன் தம்பதியினரும், வடமாகாண தமிழ்ப் பாட உதவிக் கல்விப் பணிப்பாளர் எஸ். தர்மலிங்கம், வவுனியா தெற்கு வலயக் கல்விப் பணிப்பாளர் திருமதி அன்ரன் சோமராஜா, வவுனியா கல்வி வலய அழகியற் பாட பிரதிக் கல்விப் பணிப்பாளர் செல்வி கந்தையா, வவுனியா மாவட்ட கலாசார உத்தியோகத்தர் இ.நித்தியானந்தன் உட்படப் பலரும் ஏற்றிவைத்தனர்.

தொடர்ந்து நுண்கலைக் கல்லூரி மாணவ மாணவிகளின் பரத நாட்டிய நிகழ்வுகளும், சொற்பொழிவுகளும் இடம்பெற்றன. இந்த நிகழ்வில் பெருமளவானோர் கலந்து கொண்டு சிறப்பித்தனர். (க-400)



*'வலியின் பிம்பங்கள்' என்ற கவிதை நூலை எழுதிய மாற்றுத் திறனாளியான 'மன்னார் பெனிலை' மன்னார் ஆயர் தோமஸ் சௌந்தரநாயகம் பொன்னாடை போர்த்திக் கௌரவிக்கின்றார். (க-12)*

## உயர்தர பிரிவுக்கு ஆசிரியர் இன்மையால் மாணவர்களின் கல்வியில் பாதிப்பு

கிளிநொச்சி இந்துக் கல்லூரியின் உயர்தர கணிதப் பிரிவுக்கு ஆசிரியர் எவரும் நியமிக்கப்படாத நிலையில் மாணவர்களின் கல்வி நிலை பாதிக்கப்படுவதாக பெற்றோர்கள் கவலை தெரிவித்துள்ளனர்.

கிளிநொச்சி இந்துக் கல்லூரி கிளிநொச்சி நகரின் பின்தங்கிய பகுதியிலுள்ள பாடசாலையாகக் கருதப்படுகின்றது. இந்த பாடசாலையில் ஆசிரியர் பற்றாக்குறை மிகவும் மோசமான நிலையில் காணப்படுகின்றது.

குறிப்பாக உயர்தரக் கணிதப் பிரிவில் கணித பாட ஆசிரியர்கள் எவரும் இதுவரை நியமிக்கப்படவில்லை. இதனால் பின்தங்கிய நிலையில் காணப்படும் தமது மாணவர்களின் கல்வி நடவடிக்கைகள் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளதாகவும் உரிய ஆசிரியர் வளத்தை குறித்த பாடசாலைக்கு வழங்குமாறும் பல தடவை சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்குக் கோரியும் இது வரை எந்தவித நடவடிக்கைகளும் எடுக்கப்படவில்லை எனவும் பெற்றோர் விசனம் தெரிவித்துள்ளனர். (க-6)

### அம்பலவன் பொக்கணையில்

## அத்தியாவசிய வசதிகள் இல்லாது சிரமப்படும் மீள்குடியமர்ந்த மக்கள்

முல்லைத்தீவு, ஒக்.10

முல்லைத்தீவு அம்பலவன்பொக்கணை, புதுமாத்தளன் பகுதி மக்கள் மருத்துவ வசதி, குடிதண்ணீர் வசதி, போக்குவரத்து வசதிகள் இன்றிப் பெரும் சிரமங்களை எதிர்கொண்டு வருகின்றனர்.

இறுதிப் போர் இடம்பெற்ற பகுதிகளான புதுமாத்தளன், அம்பலவன்பொக்கணை, செம்மண்குன்று போன்ற பகுதிகளில் மக்கள் மீளக்குடியமர்ந்து ஒரு மாதம் கடந்துள்ள நிலையிலும் இந்தப் பகுதிக்கான குடிதண்ணீர் விநியோகம் எதுவும் மேற்கொள்ளப்படவில்லை. இதனால் இந்தப் பகுதி மக்கள் தமக்கான குடிதண்ணீரைப் பெறுவதில் என்றுமில்லாதவாறு சிரமங்களை எதிர்கொண்டு வருகின்றனர். இவர்கள் குடிதண்ணீரைப் பெற்றுக் கொள்வதற்குச் சுமார் ஐந்து கிலோ மீற்றர் தூரம் செல்ல வேண்டிய நிலையிலுள்ளனர்.

அத்துடன் இந்தப் பகுதியில் மருத்துவ வசதிகள் எவையும் இல்லாத நிலையில் இங்குள்ள சுமார் 350க்கும் மேற்பட்ட குடும்பங்கள், தமது மருத்துவ தேவைகளுக்காக கைவேலி அல்லது முல்லைத்தீவு பொது வைத்தியசாலைக்குச் செல்ல வேண்டும். ஆனால் போக்குவரத்து வசதிகள் எவையும் இல்லை. இந்த நிலையில் இந்தப் பகுதி மக்கள் மாத்தளன் சந்தியில் இருந்து புதுக்குடியிருப்புச் சந்தி வரையான ஐந்து கிலோ மீற்றர் தூரம் சென்று அதன் பின்னர் கைவேலி வைத்தியசாலைக்கு அல்லது முல்லைத்தீவு பொது வைத்திய சாலைக்குச் செல்ல வேண்டி உள்ளது.

இவ்வாறு செல்வதற்கு சுமார் நான்கு பஸ்களில் பயணித்துத் தமது மருத்துவ தேவையை நிறைவு செய்து கொள்ள வேண்டிய நிலையில் இவர்கள் உள்ளனர். எனவே மாத்தளன் பகுதியில் உள்ள மருத்துவமனையை மீள ஆரம்பிக்குமாறு இந்த மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (க-6)

## வீதிகளின் புனரமைப்பு சீர் இல்லை

கிளிநொச்சி, ஒக்.10

கிளிநொச்சி கண்டாவளைப் பிரதேசத்தின் கிராமிய வீதிகளின் புனரமைப்புப் பணிகள் சீராக இல்லை எனப் பிரதேச மக்கள் விசனம் தெரிவித்துள்ளனர்.

கிளிநொச்சி கண்டாவளைப் பிரதேச செயலர் பிரிவின் கீழ் உள்ள கண்டாவளைக் கிராமத்தின் கண்டாவளை, ஊரியான் ஆகிய பகுதிகளில் பிரதேச சபைக்குச் சொந்தமான கிராமிய வீதிகள் சிலவற்றை அரச சார்பற்ற நிறுவனங்களில் ஒன்றான 'டனிஸ்' அகதிகள் பேரவை என்ற நிறுவனம் பொறுப்பேற்றுப் புனரமைப்புப் பணிகளை மேற்கொண்ட போதும் அது உரியமுறையில் புனரமைக்கப்படவில்லை எனத் தெரிவிக்கப்படுகின்றது. தரமற்ற கிரவல் கொண்டு புனரமைப்புப் பணிகள் மேற்கொள்ளப்பட்டதால் இந்த நிலை தோன்றியுள்ளதாகவும் தெரிய வருகின்றது. (க-6)

# சாவு சமுர்த்திச் சங்கம்

வவுனியா,ஒக்.10

துணுக்காய் பிரதேச செயலர் சபைக்குட்பட்ட வறிய குடும்பங்களின் நலன் கருதி சாவு சமுர்த்திச் சங்கம் ஒன்று ஆரம்பித்து வைக்கப்பட்டுள்ளது.

வசதி குறைந்த குடும்பங்களில் இடம்பெறும் சாவுச் சடங்குகளுக்கு வேண்டிய நிதியுதவியை வழங்குதல், அவர்களுக்கு வேண்டிய இதர உதவிகளை வழங்குதல் என்பன இந்த அமைப்பின் மூலமாக மேற்கொள்ளப் படுகின்றன.

யுனிசெப் நிறுவனத்தின் மூலம் கிடைக்கும் வேலைத் திட்டங்களில் பெறப்படும் இலாபம் மூலம் இதற்கு வேண்டிய நிதி பெறப்படுகின்றது.

இதனைக் கொண்டு இறுதிக்கிரியை அந்தியேட்டிக் கிரியை வரையுள்ள செலவுகள் செய்வதற்கு வேண்டிய நிதி உதவி என்பன சம்பந்தப்பட்ட குடும்பங்களுக்கு வழங்கப்படுவதாக துணுக்காய் பிரதேச செயலரும் இந்த அமைப்பின் போஷகருமான எஸ்.குணபாலன் தெரிவித்தார். (க-400)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வறுமையான முன்னாள் போராளிகளுக்கு விரைவில் சமுர்த்தி உதவிகள் கிடைக்கும்

## புனர்வாழ்வு நலன்புரி மீளாய்வுக்குழு நடவடிக்கை

யாழ்ப்பாணம், ஒக்.10

புனர்வாழ்வு பெற்று விடுதலையான பின்னர் தொழில்கள் எதுவும் இன்மையால் வறுமைக் கோட்டின் கீழ் வாழும் முன்னாள் போராளிகளுக்கு சமுர்த்தி நிவாரணம் வழங்குவதற்கான நடவடிக்கையை புனர்வாழ்வு நலன்புரி மீளாய்வுக்குழு மேற்கொண்டுள்ளது.

இதுதொடர்பான விவரங்களைப் பிரதேச செயலர் பிரிவுகள் ரீதியாகக் கிராம அலுவலர்கள் மூலம் திரட்டுவதற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

இறுதிப் போரின் போது படையினரிடம் சரணடைந்த போராளிகளில் ஒரு பகுதியினர் புனர்வாழ்வு அளிக்கப்பட்டு விடுதலை செய்யப்பட்டுள்ளனர்.

இவர்களில் பெருமளவானோர் தொழில்கள் எதுவும் இன்மையால் பெரும் பொருளாதாரப் பின்னடைவை எதிர்நோக்கி யுள்ளனர். பலர் கை, கால் களை இழந்துள்ளதுடன் கடும்

**முன்னாள் போராளிகள் பலர் அவயவங்களை இழந்துள்ளதுடன் கடும் காயங்களுக்கும் உள்ளாகிப் பாதிக்கப்பட்டுள்ளனர். இவர்கள் எந்தவிதமான தொழில்களையும் செய்யமுடியாத நிலையில் உள்ளனர்.**

காயங்களுக்கும் உள்ளாகிப் பாதிக்கப்பட் டுள்ளனர். இவர்கள் எந்த விதமான தொழில்களையும் செய்யமுடியாத நிலையில் உள்ளனர்.

இதன்காரணமாக இவர்கள் தமது வாழ்க்கையைக் கொண்டு நடத்துவதில் பெரும் சிரமங்களை எதிர் கொண்டுள்ளனர்.

இதனைக் கருத்தில் கொண்டு இவ்வாறு மிகவும் வறுமையான நிலையில் உள்ளவர்களை இனங்கண்டு அவர்களுக்கு சமுர்த்தி உதவிகளைப் பெற்றுக் கொடுப்பதற்கான நடவடிக்கையை புனர்வாழ்வு நலன்புரி மீளாய்வுக்குழு மேற்கொண்டுள்ளது.

இதற்காக இவர்களின் விவரங்களைப் பிரதேச செயலர் பிரிவு ரீதியாகத் திரட்டும் நடவடிக்கைகளை கிராம அலுவலர்கள் மூலம் மேற்கொள்வதற்கு நட வடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. (த-86)

## பாம்பினால் கடியுண்டார் குடும்பப் பெண்

தென்மராட்சி,ஒக்.10

வளவு துப்புரவுப் பணியில் ஈடுபட்ட குடும்பப் பெண் புடையன் பாம்பினால் கடியுண்டார்.

இந்தச் சம்பவம் நேற்று முன்தினம் காலை மிருசுவில் வடக்கில் இடம்பெற்றது.

அதே இடத்தைச் சேர்ந்த சிவயோகநாதன் அன்னலட்சுமி (வயது-55) என்பவர் பாம்பினால் கடியுண்ட நிலையில் சாவகச்சேரி வைத்திய சாலை அவசர சிகிச்சைப் பிரிவில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

துப்புரவுப் பணியில் ஈடுபட்ட காணியில் காணப்பட்ட பனை ஓலையை எடுத்த போது அதனுள் பதுங்கியிருந்த பாம்பு கடித்ததாகத் தெரிவிக்கப்பட்டது. (த-9)

## குடிதண்ணீர் விநியோகத்துக்கு பொக்கணையில் குழாய்க் கிணறு

யாழ்ப்பாணம், ஒக்.10

பொக்கணையில் உள்ள வற்றாத நன்னீர்க் கிணற்றுக்கு அருகில் மேலும் ஒரு குழாய்க் கிணறு அமைக்கப்பட்டுள்ளது.

தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்பு சபையினால் இந்தக் கிணறு அமைக்கப்பட்டுள்ளது.

பொக்கணை நன்னீர் கிணற்றின் நீர் கலங்கிய நிலையில் உள்ளதை அடுத்தே இந்தக் குழாய்க் கிணறு அமைக்கப்பட்டுள்ளது.

தற்போது புதிதாக அமைக்கப்பட்ட இந்தக் குழாய்க் கிணற்றின் நீர் ஆய்வுக்கு உட்படுத்தப்பட்ட பின்னரே மக்களுக்கான குடிதண்ணீர் விநியோகம் ஆரம்பிக்கப்படும் என்று நீர் வழங்கல் வடிகாலமைப்புச் சபையின் வட்டாரங்கள் தெரிவித்தன.

பொக்கணை நன்னீர் கிணற்றில் இருந்தே சங்குவேலி, நவாலி, கட்டுடை போன்ற பிரதேசங்களுக்கு நிலத்தடி குழாய் மூலம் குடிதண்ணீர் விநியோகிக்கப்பட்டு வருகிறது.

கடந்த நில நாள்களாக அது கலங்கிய நிலையில் உள்ளமையால் தற்போது புதிதாக அமைக்கப்பட்ட குழாய்க் கிணறு மூலம் குடிதண்ணீர் விநியோகம் மேற்கொள்ளப் படவுள்ளது. (த-17)

## நீர்வேலியில் மருத்துவ முகாம்



சர்வதேச முதியோர் தினத்தை முன்னிட்டு நீர்வேலியில் இடம்பெற்ற இலவச மருத்துவ முகாமில் நூற்றுக்கு மேற்பட்ட முதியவர்கள் பயனடைந்துள்ளதாக நீர்வேலி தெற்கு முதியோர் சங்கத்தின் தலைவர் ந.சிவசுப்பிர மணியம் தெரிவித்தார்.

கடந்த ஞாயிற்றுக்கிழமை நீர்வேலி தெற்கு திருமுருகன் மண்டபத்தில் இலவச மருத்துவ முகாமும் மருந்துகள் வழங்கலும் இடம்பெற்றன.

கோப்பாய்ப் பிரதேச சுகாதார வைத்திய அதிகாரி ரி.ஜெயசீலன், உதவி வைத்திய அதிகாரி சுரனுதா, பிரதேச சுகாதாரப் பரிசோதகர் பி.சதீஸ்குமார், பிரதேச கிராம உத்தியோகஸ்தர், சி.தயாபரன் ஆகியோரும் இந்த மருத்துவ முகாமில் கலந்துகொண்டனர். (ம-17)

## உயிர்க்கொல்லி டெங்கை கட்டுப்படுத்த நடவடிக்கை

வலி. தென்மேற்கு, ஒக்.10

வலி. தென்மேற்குப் பிரதேசத்தில் டெங்கு ஒழிப்பு வாரம் மிக இறுக்கமாகக் கடைப்பிடிக்கப்பட்டு வருகிறது.

தற்போது மழைகாலம் ஆரம்பமாகியுள்ள வேளையில் டெங்கு நோய்த்தாக்கமும் அதிகளவில் இனங் காணப்பட்டு வருகிறது.

எனவே உயிர்கொல்லி நோயான டெங்கு நோயிலிருந்து பொது மக்களைக் பாதுகாக்கும் முயற்சியில் சுகாதாரத் துறையினர் ஈடுபட்டு வருகின்றனர்.

இதன் பிரகாரம் வலி. தென்மேற்கு பிரதேசத்தில் டெங்கு நோய்க்காவி நுளம்புகள் பெருகும் சூழலைக் கண்டறிந்து அவற்றை அழிக்கும் நடவடிக்கைகளில் சுகாதாரப் பகுதியினர் ஈடுபட்டுள்ளதுடன் ஒவ்வொரு வீடு வீடாகச்சென்று மக்கள் மத்தியில் விழிப்புணர்வை ஏற்படுத்தும் நடவடிக்கைகளிலும் அவர்கள் ஈடுபட்டுள்ளனர்.

இதன்பிரகாரம் சண்டிலிப்பாய் சுகாதார வைத்திய அதிகாரி பிரிவிலுள்ள 28 கிராம உத்தியோகத்தர்கள் பிரிவுகள் தோறும் ஒலிபெருக்கிமூலம் டெங்கு நோய் தொடர்பான விழிப்புணர்வுப் பிரசாரங்கள் மேற்கொள்ளப்படுவதுடன் விளக்கமளிக்கப்பட்ட விதிமுறைகளைக் கடைப்பிடிக்காதவர்கள் மீது கடும் சட்ட நடவடிக்கை எடுக்கப்படவுள்ளதாகவும் அறிவித்துள்ளனர்.

இந்த நடவடிக்கைகளில் பொலிஸாரும் இணைந்து மேற்கொள்கின்றமை குறிப்பிடத்தக்கது. (16)

## வரணி வீதி மோசமாக சேதம்

தென்மராட்சி, ஒக்.10

தென்மராட்சிப் பிரதேசத்தின் வடக்குப் பகுதிக்குச் செல்லும் பிரதான வீதிகளில் ஒன்றான மீசாலை வடக்கு வேம்பிராய்-வரணி வீதி மிக மோசமாக சேதமடைந்து காணப்படுவதாக அந்தப் பகுதி மக்கள் தெரிவித்தனர்.

வரணி மகா வித்தியாலயம் உள்ளிட்ட பாடசாலைகளுக்குச் செல்லும் மாணவர்களும் பொதுமக்களும் வீதி சீரின்மையால் தினமும் சிரமங்களை எதிர்கொள்வதாகவும் குன்றும் குழியுமாகக் காணப்படும் வீதியை மழைகாலம் ஆரம்பிப்பதற்கு முன்னர் புனரமைத்து வழங்குமாறும் உரிய அதிகாரிகளை மக்கள் கோரியுள்ளனர். (த-9)

## யாழ். குடாநாட்டில் நேற்று அஞ்சல் தின விழிப்புணர்வு

யாழ்ப்பாணம், ஒக்.10

சர்வதேச அஞ்சல் தினத்தை முன்னிட்டு யாழ்.குடாநாட்டில் உள்ள அஞ்சல் நிலையங்களில் நேற்று செவ்வாய்க்கிழமை விசேட விழிப்புணர்வு நடவடிக்கைகள் இடம்பெற்றன.

சகல அஞ்சலகங்களிலும் காலை அஞ்சல் கொடி மற்றும் தேசியக் கொடி என்பன ஏற்றப்பட்டு விழிப்புணர்வு நிகழ்வுகள் ஆரம்பித்து வைக்கப்பட்டன.

அநேகமான அஞ்சல் நிலையங்களின் பணியாளர்கள் சிரமதான நடவடிக்கைகளில் ஈடுபட்டனர்.

சில இடங்களில் அஞ்சல் பெட்டிகள் துப்புரவு செய்யப்பட்டு வர்ணம் பூசப்பட்டன.

இதனைவிட அஞ்சலகங்களில் மரநடுகை மற்றும் பொதுப்பணிகள் என்பனவும் இடம்பெற்றன. (த-17)

## வாசிப்பு மாதத்தை முன்னிட்டு பொது அறிவுப் போட்டி

சாவகச்சேரி நகர சபையின் மீசாலை, நுணாவில், சாவகச்சேரி ஆகிய பொது நூலகங்கள் இணைந்து தேசிய வாசிப்பு மாதத்தையொட்டி வாசகர்களுக்கிடையிலான திறந்த பொது அறிவுப் போட்டிகளை நடத்தவுள்ளது. போட்டிக்கான வினாத்தாள்களை சம்பந்தப்பட்ட பொது நூலகங்களில் எதிர்வரும் 20 ஆம் திகதிக்கு முன்னர் பெற்றுக் கொள்ளுமாறு நகர சபைத் தவிசாளர் அறிவித்துள்ளார்.(த-9)

## இனம்தெரியாதோர் தாக்கியதில் இளைஞர் காயம்

வீதியில் சென்றவரை இனம்தெரியாத குழு மோசமாகத் தாக்கியது. இந்தச் சம்பவம் நேற்றுமுன்தினம் திங்கட்கிழமை இரவு சரசாலையில் இடம்பெற்றது. சரசாலை வடக்கைச் சேர்ந்த வ.இன்பதாஸ் (வயது-30) என்பவரே தாக்குதலுக்கு உள்ளான நிலையில் சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.(த-9)

## கோப்பாயில் இரு பாடசாலைகளுக்கு வழங்கப்பட்ட சலுகைகள் ரத்து

அச்சுவேலி, ஒக்.10

கோப்பாய்க் கல்விக் கோட்டத்தில் இரண்டு பாடசாலைகளுக்கு வழங்கப்பட்டு வந்த அதிகஷ்டப் பிரதேச சலுகைகள் இரத்துச் செய்யப்பட்டுள்ளன.

கோப்பாய் கல்விக் கோட்டத்தில் உள்ள இருபலை கிழக்கு சீ.சீ.த.க. பாடசாலை அதிகஷ்டப் பிரதேச பாடசாலையாகவும், புத்த கலட்டி ஸ்ரீ விஷ்ணு வித்தியாலயம் கஷ்டப்பிரதேச பாடசாலையாகவும் கணிக்கப்பட்டு கல்வி ஊக்குவிப்பு சலுகைகள் வழங்கப்பட்டு வந்தன. இவை இரண்டுக்கும் இந்த வருடம் ஜனவரி முதலாம் திகதியில் இருந்து சலுகைகள் ரத்துச் செய்யப்பட்டு அது தொடர்பாக வழங்கப்பட்டு வந்த ஊக்குவிப்புக் கொடுப்பனவு நிறுத்தப்பட்டிருப்பதாக வடக்கு

**இந்த வருடம் ஜனவரி முதலாம் திகதியில் இருந்து சலுகைகள் ரத்துச் செய்யப்பட்டு அது தொடர்பாக வழங் கப்பட்டு வந்த ஊக்கு விப்புக் கொடுப்பனவு நிறுத்தப்பட்டுள்ளது.**

மாகாண கல்வித் திணைக்களத்தினால் பாடசாலை அதிபர்களுக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

இலங்கையில் கல்வி தொடர்பான அபிவிருத்தியில் இயல்பு நிலையான வசதியீனம் பாதிப்பை ஏற்படுத்துவதைக் கருத்தில் [illegible] பாடசாலைகளை அபிவிருத்தி செய்வதற்கு வசதியாக அதிகஷ்டப்பிரதேசம், கஷ்டப் பிரதேசம் என வகைப்படுத்தப்பட்டிருந்தது.

கோப்பாய் கல்விக் கோட்டத்தில் இருபாலை சீ.சீ.த.க பாடசாலையை அதிகஷ்டப் பிரதேச அமைப்பில் இருந்து நீக்கியதை ஆட்சேபித்து பாடசாலைச் சமூகம் பல்வேறு விதமான மேன்முறையீடுகளை செய்துள்ளதாக அறியப்படுகின்றது.

அதிகஷ்டப் பிரதேசப் பாடசாலைகளில் கல்வி கற்பிக்கும் ஆசிரியர்களுக்கு 2500 ரூபா ஊக்குவிப்புக் கொடுப்பனவும் கஷ்டப் பிரதேச பாடசாலைகளில் கற்பிக்கும் ஆசிரியர்களுக்கு 1500 ரூபா கொடுப்பனவும் [illegible] மேல [illegible] கப்படுவது குறிப் பிடத்தக்கது. (த-11)

## குப்பைகளால் மூடப்பட்டுள்ள நந்தாவில் வெள்ள வாய்க்கால்

### பொதுமக்கள் கடும் விசனம்

வலி.வடக்கு,ஒக்.10

நந்தாவில் வெள்ளவாய்க் காலில் கொட்டப்பட்டுள்ள கழிவுகளினால் பொதுமக்கள் விசனம் அடைந்துள்ளனர்.

காங்கேசன்துறை வீதியில் நந்தாவில் குளத்துக்கு வெள்ளம் வழிந்தோடும் வாய்க் காலில் வீதியில் இருந்து தறிக்கப்பட்ட மரங்களின் குற்றிகள் போடப்பட்டுள்ளன.

தற்போது இந்த வீதியில் டெங்குத் தாக்கத்தினால் மாணவன் ஒருவர் இறந்துள்ளதுடன் பலர் டெங்குத் தாக்கத்துக்கு இலக்காகியுள்ளனர்.

இந்த நிலையில் வெள்ளம் வடிந்தோடும் வாய்க்காலில் குப்பைகள் உட்பட மரக்குற்றிகள் மற்றும் வீதியில் இருந்து அகற்றப்பட்ட மண் என்பன கொட்டப்பட்டு வாய்க்கால் தடைசெய்யப் பட்டுள்ளது.

இது குறித்து பொது மக்கள் பிரதேச சபை, பிர தேச செயலக அதிகாரிகள் எனப் பலரிடம் முறை யிட்டுள்ள போதிலும் இதுவரை எந்தவித நட வடிக்கைகளும் மேற்கொள்ளப்படவில்லை என விசனம் வெளியிடப்பட்டுள்ளது. (த-86)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
10/10/2012

## பிரியங்கா கட்டி வரும் பங்களா; காங்கிரஸுக்கு நெருக்கடி!



ஹிமாச்சலப் பிரதேச மாநிலத்தில் சோனியா காந்தியின் மகள் பிரியங்கா கட்டி வரும் பிரமாண்டமான பங்களா குறித்து தற்போது சர்ச்சைகள் எழுந்துள்ளன.

சிம்லாவிலிருந்து 12 கிலோ மீற்றர் தொலைவில் உள்ள சாப்ரா என்ற மலைப் பகுதியில் சோனியா காந்தியின் மகள் பிரியங்கா மிகப் பெரிய நவீன வசதிகளுடன் பங்களா ஒன்றைக் கட்டி வருகிறார்.

கடந்த சில ஆண்டுகளாக பல கோடி ரூபா மதிப்பில் கட்டப்பட்டு வரும் குறித்த வீடு, தற் போது சர்ச்சைகளை ஏற்படுத்தியுள்ளது.

பொதுவாக ஹிமாச் சல பிரதேசத்தில் வெளி மாநிலத்தைச் சேர்ந்தவர்கள் எளிதில் நிலம் வாங்க முடியாது. அதாவது, வெளி மாநிலத்தைச் சேர்ந்த ஒருவர் அங்கு நிலம் வாங்க வேண்டுமானால், மாநில அரசின் அனுமதி பெற வேண்டும். இந்த அனுமதியை 2007 ஆம் ஆண்டு நடைபெற்ற காங்கிரஸ் ஆட்சியில் பிரியங்கா மிக எளிதாகப் பெற்றார்.

இதுதவிர சாப்ரா பகுதியில் பிரமாண்ட பங்களா கட்ட அவருக்கு அரசின் பல்வேறு துறைகளும் விதிகளை மீறி சலுகைகள் கொடுத்திருப்பது தெரிய வந்துள்ளது.

பிரியங்காவின் கணவர் ஹாபேர்ட் வதேரா மீது அரவிந்த் கெஜ்ரிவால் பல்வேறு முறைப்பாடுகள் கூறியுள்ள நிலையில், வீடு கட்டியதில் தற்போது பிரியங்காவும் சட்ட விதிகளை மீறியதாக முறைப் பாடுகள் எழுந்துள்ளமை காங்கிரஸுக்கு மேலும் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

தற்போது பிரியங்கா கட்டி வரும் பங்களா பற்றி தகவல்களைத் திரட்ட ஹிமாச் சலபிரதேச அரசு உத்தர விட்டுள்ளது. (வ)

## இனி மக்களுடன்தான் கூட்டணி கட்சிகளுடன் கூட்டே இல்லை

### அடித்துக் கூறுகிறார் விஜயகாந்

இனிமேல் யாருடனும் கூட்டணி சேரப்போவதில்லை என்றும் எதிர்வரும் 2014 ஆம் ஆண்டு நடைபெறவுள்ள நாடாளுமன்றத் தேர்தலில் தனித்தே போட்டியிடப் போகிறோம்என்றும் தே.மு.தி.க.தலைவர் விஜயகாந் தெரிவித்தார்.

அ.தி.மு.கவுடன் கூட்டணி வைத்தது போதும், இனி 2014 ஆம் ஆண்டு நாடாளுமன்றத் தேர்தலில் தனித்துப் போட்டியிடுவது என்று தீர்க்கமான முடிவு செய்து விட்டேன் என்று விஜயகாந் கூறினார்.

கடலூர் மாவட்டம், ரிஷிவந்தியம் தொகுதியில் பொதுக் கூட்டம் நடைபெற்றது. இதில் கலந்து கொண்டு அவர் பேசு கையிலேயே மேற்கண்டவாறு குறிப்பிட்டார். அங்கு அவர் தொடர்ந்து பேசுகையில் மேலும் தெரிவித்ததாவது:-

இனி வரப்போகும் 2014 ஆம் ஆண்டு தேர்தலில் தே.மு. தி.க. தனித்துப் போட்டியி டும். இதில் யாரோடும் கூட்டணி கிடையாது.

கூட்டணிக்காக எந்தக் கட்சியுடனும் பேச்சுக்கு இடமில்லை. மக்களோடு தான் இனி கூட்டணி. கூடங்குளம் விவகாரத்தில் , மக்களின் அச்சத்தை அரசு போக்க வேண்டும்-என்றார். (வ)

## குஜராத்தில் என்னுடன் போட்டியிடத் தயாரா?

### மன்மோகனுக்கு மோடி சவால்



குஜராத் மாநிலத்தில் தன்னை எதிர்த்துப் போட்டியிடத் தயாரா என்று பிரதமர் மன்மோகன் சிங்குக்கு முதல்வர் நரேந்திர மோடி சவால் விடுத்துள்ளார்.

குஜராத் சட்டமன்றத்துக்கு எதிர்வரும் டிசெம்பர் மாதம் 13,17 ஆகிய திகதிகளில் இரண்டு கட்டமாக தேர்தல் நடைபெற உள்ளது. முதல்வர் நரேந்திர மோடி தீவிர தேர்தல் பிரசாரத்தில் ஈடுபட்டு வருகிறார். உள்ளூர் தலைவர்களைக் குறி வைக்காமல் மன்மோகன் சிங், சோனியா போன்ற தேசிய தலைவர்களையே அவர் குறி வைத்து தேர்தல் பிரசாரத்தில் பேசி வருகிறார். கடந்தவாரம் சோனி யாவின் வெளிநாட்டுப் பயணச் செலவு குறித்து அவர் கேள்வி எழுப்பினார். இதற்கு சோனியா பதில் அளிக்கவில்லை.

இந்தநிலையில், நேற்று முன்தினம் நடைபெற்ற பல்வேறு பிரசாரக் கூட்டங்களில் பிரதமர் மன்மோகன் சிங்கை கடுமையாக விமர்சித்தார். குஜராத்தில் போட்டியிடத் தயாரா என்று சவால் விட்டார். இதுதொடர்பாக மோடி தெரிவித்ததாவது:-

நீங்களும் (மன்மோகன் சிங்) வீதி அமைத்துள்ளீர்கள். நானும் வீதிகள் அமைத்துள்ளேன். நீங்களும் கால்வாய் அமைத்துள்ளீர்கள். நானும் அமைத்துள்ளேன். மருத்துவமனைகளை நீங்களும் கட்டியுள்ளீர்கள். நானும் கட்டியுள்ளேன்.

குஜராத்துக்கு வாருங்கள். யாருடைய பணி மக்களுக்குப் பிடித்துள்ளது என்பதைப் பார்ப்போம். யார் சிறந்த சேவை செய்திருக்கிறோம் என்பதை மக்கள் தீர்மானிக் கட்டும். குஜராத் மக்களை ஏமாற்ற முடியாது-என்றார். (வ)

## காவிரியிலிருந்து தண்ணீர் திறப்பு உடன் மீள்பரிசீலனை செய்யுங்கள்

### இரவோடு இரவாக தண்ணீரை நிறுத்தி விட்டு பிரதமர் மன்மோகனுக்கு கர்நாடகா மனு

டில்லி, ஒக்.10

பிரதமரின் உத்தரவு, உச்சநீதிமன்றத்தின் உத்தரவு ஆகியவற்றைக் கருத்தில் எடுக்காது, நேற்று முன்தினம் இரவோடு இரவாக காவிரியிலிருந்து தமிழகத்துக்குத் திறந்து விடப்பட்ட தண்ணீரை நிறுத்தி விட்ட கர்நாடக அரசு, நேற்று காவிரியிலிருந்து தண்ணீர் திறப்பு உத்தரவை பிரதமர் மன்மோகன் சிங் மறுபரிசீலனை செய்ய வேண்டும் என்று கோரி புதிய மனுவை தாக்கல் செய்துள்ளது.

கர்நாடக முதல்வர் ஜெகதீஷ் ஷெட்டர் தலைமையிலான கர்நாடகக் குழு இந்த மனுவை நேற்று அளித்துள்ளது.

எஸ்.எம்.கிருஷ்ணா தலைமையில் டில்லியில் பிரதமரை முற்றுகையிட்டு கடுமையான அழுத்தம் கொடுத்து இறுதியில், நேற்றுமுன்தினம் இரவோடு இரவாக தமிழகத்துக்குத் திறந்துவிடப்பட்ட காவிரி நீரை நிறுத்தி விட்டது கர்நாடக அரசு.

இந்த நிலையில்தான் பிரதமர் தலைமையிலான காவிரி நீர் ஆணையத்திடம் தமிழகத்துக்குத் தண்ணீர் திறந்து விடுவதை மறு பரிசீலனை செய்ய வேண்டும் என்று மறுபடியும் மனு செய்துள்ளது கர்நாடகா.

தண்ணீர் திறப்பு முடிவை மறு பரிசீலனை செய்ய பிரதமர் தலைமையிலான காவிரி நீர் ஆணையத்தால் மட்டுமே முடியும் என்று உச்சநீதிமன்றம் நேற்று முன்தினம் கூறிய தன் அடிப்படையில் இந்த புதிய மனுவைத் தாக்கல் செய்துள்ளது கர்நாடகா.

இதுகுறித்து கர்நாடக முதல்வர் ஜெகதீஷ் ஷெட்டர் நேற்றுமுன்தினம் கருத்துத் தெரிவித்ததாவது:-

நாளை -அதாவது இன்று - காவிரி நீர் ஆணையத்தில் கர்நாடக அரசின் மனு சமர்ப்பிக்கப்படும். பிரதமர் தனது முடிவை மறு பரிசீலனைசெய்ய வேண்டும் என்று அதில் கோரியுள்ளோம். எங்களிடம் தண்ணீர் இல்லை. இதுதான் எங்களது நிலை. பிரதமரை இன்று நேரில் சந்தித்து முடிவைத் தெரிவிப் போம் என்று கூறியிருந்தார்.

அதன்படி முதல்வர் ஷெட்டர் தலைமையில் கர்நாடகக் குழுவினர் நேற்று பிரதமரை நேரில் சந்தித்து இந்தப் புதிய மனுவைக் கையளித்தனர்.




அக்கவுண்டண்ட்ஸ் ஜெனரல்களின் மாநாடு, ஜனாதிபதி பிரணாப் முகர்ஜி தலைமையில் டில்லியில் நேற்று ஆரம்பமாகியது. பொதுக்கணக்குக் குழுத் தலைவர் முரளி மனோகர் ஜோஷி மற்றும் சி.ஏ.ஜி. தலைவர் வினோத் ராய் ஆகியோர் மாநாட்டில் கலந்து கொண்டனர். (வ)

### ரூ.525 கோடி ரூபா மதிப்புள்ள ஹெரோயின் பஞ்சாப்பில் பறிமுதல்

பாகிஸ்தானிலிருந்து இந்தியாவுக்குக் கடத்தி வரப்பட்ட சுமார் ரூ.525 கோடி மதிப்பிலான ஹெரோ யின் போதைப் பொருள் பஞ்சாப் மாநிலத்தில் கைப்பற்றப் பட்டுள்ளது.

பாகிஸ்தானிலிருந்து இந்தியாவுக்கு வந்த சரக்கு ரயிலில் கொண்டு வரப்பட்ட சிமெந்து மூடைகளுக்கு இடையில் 105 கிலோ எடைகொண்ட ஹெரோயின் போதைப் பொருள் மறைத்து வைக்கப் பட்டிருந்தமை கண்டுபிடிக் கப்பட்டது.

ஹெரோயின் போதைப் பொருளுடன் 500 தோட்டாக்களையும் சுங்கத்துறை அதிகாரிகள் பறிமுதல் செய் தனர். (வ)

## இறந்ததாக நினைத்து மனைவிக்கு இறுதிச்சடங்கு செய்தார் கணவர்

### சேலத்தில் இப்படி ஒரு சம்பவம்

இறந்ததாக நினைத்து மனைவிக்கு கணவர் இறுதிச் சடங்கு செய்த விசித்திரமான சம்பவம் ஒன்று தமிழகத்தில் இடம்பெற்றுள்ளது.

தமிழ்நாட்டில், சேலம் மாவட்டத்தைச் சேர்ந்த நடேசனும் அவரது மனைவி புஷ்பாவும் மோட்டார் சைக்கிளில் பயணித்துக் கொண்டிருந்தனர். அப்போது வாகனம் ஒன்றுடன் மோதி விபத்துக்குள்ளாகினர்.

சிறிய காயத்துடன் தப்பிய கணவர் நடேசன், படுகாயமடைந்த மனைவி புஷ்பாவை தனியார் மருத்துவமனையில் சேர்த்தார்.

ஒருநாள் தீவிர சிகிச்சை பெற்ற புஷ்பா உயிர் பிழைக்க வாய்ப்பில்லை என்று வைத்தியர்கள் கூறியதால் அவரை வீட்டுக்கு அழைத்துச் சென்றனர். பின்னர் அவர் உயிரிழந்ததாக கருதி உறவினர்களுக்குத் தகவல் கொடுத்து விட்டு வீட்டில் மாலை போட்டு படுக்க வைத்துள்ளனர்.

இந்தநிலையில் புஷ்பா வீட்டுக்கு அருகில் குடியிருக்கும் சமையல்காரர் சரவணன், மாலை போட வந்தபோது புஷ்பாவின் கால் விரல்கள் அசைவதைக் கண்டார். இதுகுறித்து புஷ்பாவின் உறவினர்களுக்குத் தகவல் தெரிவிக்கப்பட்டது. உறவினர்கள் புஷ்பாவை, மீண்டும் அரசு மருத்துமனையில் சிகிச்சைக்குச் சேர்த்தனர்.

இறுதிக்கிரியைக்காக வந்த உறவினர்கள் அதிர்ச்சியோடு திரும்பிச் சென்ற போதிலும் இந்தச்சம்பவம் அப்பகுதியில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது. (வ)

## காங்கிரஸ் அலுவலகம் இன்று முற்றுகை அணு உலை எதிர்ப்புக் கட்சிகள் அறிவிப்பு

நெல்லை மாவட்டத்திலுள்ள காங்கிரஸ் அலுவலகத்தை இன்று முற்று கையிடப்போவதாக அணு உலை எதிர்ப்பு இயக்க ஆதரவுக் கட்சிகள் அறிவித்துள்ளன.

இதுகுறித்து நெல்லை மாவட்ட சி.பி.ஐ. மாவட்டத் துணைச் செயலாளர் சேவியர், மா.லெனிஸ்ட் மாநில குழு உறுப்பினர் ரமேஷ், மே 17 இயக்க ஒருங்கிணைப்பாளர் ... குமார், தமு.மு.க. மாவட்ட தலைவர் மைதீன் பாரூக், பா.ம.க. மாவட்டச் செயலாளர் ரசூல் மைதீன், மாவட்ட அமைப்பாளர் ரவி தெய்வேந்திரன், நாம் தமிழர் கட்சி மாவட்டச் செயலாளர் செந்தில் உள்ளிட்டோர் செய்தியாளர்களைச் சந்தித்துப் பேசினர்.

இதன்போது அவர்கள் தெரிவித்ததாவது:-

கூடங்குளம் அணு உலை எதிர்ப்புப் போராட்டம் 400 தினங்களுக்கும் மேலாக நடைபெற்று வருகிறது. இதை வழி நடத்த மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்டவர் உதயகுமார். இவரது வீடு, பாடசாலை மீது தொடர்ந்து தாக்குதல் நடத்தப்பட்டு வருகிறது. இந்த நிலையில் இன்று இவரது வீட்டை முற்றுகையிடப் போவதாக குமரி காங்கிரஸ் கட்சியினர் அறிவித்துள்ளனர்.

இதுவரை உதயகுமார் மீது நடத்தப்பட்ட தனிப்பட்ட தாக்குதலுக்கும், இந்த அறிவிப்புக்கும் தொடர்பு இருப்பதாகத் தெரிகிறது. உதயகுமார் வீட்டை, பாடசாலையை இடித்தவர்களைப் பொலிஸார் இது வரை கைது செய்யவில்லை.

அவரது வீட்டை முற்றுகையிடப் போகும் காங்கிரஸார் மீது கொலை முயற்சி வழக்குப் பதிவு செய்ய வேண்டும். இன்று காலை நெல்லை மாவட்ட காங்கிரஸ் அலுவலகத்தை நாம் முற்றுகையிடுவோம்- என்றார். (வ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## எகிப்தில் வீதி விபத்து; 19 படையினர் சாவு

எகிப்திய சினாய் குடாவில் இடம்பெற்ற வீதி விபத்தொன்றில் 19 எகிப்திய படையினர் உயிரிழந்தனர்.

இதுதவிர, மேலும் 10 இராணுவத்தினர் காயமடைந்த நிலையில் மருத்துவமனையில் அனுமதிக் கப்பட்டுள்ளனர்.

இஸ்ரேல் மற்றும் சினாய் குடா எல்லைப் பிராந்தியத்தில் எகிப்திய இராணுவம் தற்போது இஸ்லாமிய போராளிகளுக்கு எதிரான இராணுவ நடவடிக்கைகளைமேற்கொண்டுள்ளநிலையிலேயே இந்த விபத்து இடம்பெற்றுள்ளது.

இராணுவ நடவடிக்கை இடம்பெற்ற பிரதேசத்திலேயே குறித்த விபத்து இடம்பெற்றமை குறிப்பிடத்தக்கது. (வ)

## உலகின் அதிக வயதுடைய பெண் காலமானார்



உலகின் அதிக வயதான ஜோர்ஜியா நாட்டைச் சேர்ந்த, 132 வயதுப் பெண் நேற்று முன்தினம் காலமானார்.

முன்னாள் சோவியத் யூனியனில் இருந்து உடைந்த நாடு ஜோர்ஜியா. இந்த நாட்டைச் சேர்ந்தவர் அன்டிசாக் விசாவா. 132 வயதான அன்டிசா, உலகின் மிக அதிக வயதான பெண்ணாகக் கருதப்பட்டார்.

இரண்டு உலகப் போர்களையும் கண்ட அன்டிசா, 1880 ஆம் ஆண்டு, ஜூலை 8 ஆம் திகதி பிறந்தவர். 1965 ஆம் ஆண்டு வரை, இவர், தேயிலை பறிக்கும் வேலையைச் செய்து வந்துள்ளார். இவரது 60 ஆவது வயதில் பிறந்த மகன் மைக்கேலுக்கு தற்போது 72 வயதாகிறது. 12 பேரக்குழந்தைகளும், 18 கொள்ளுப் பேரக் குழந்தைகளும் இவருக்கு உள்ளனர். (வ)



தென் ஆபிரிக்க நாட்டின் முய்ஜென்பெர்க் கடற்கரையில், இறந்த நிலையில் ஒதுங்கிய நீலத் திமிங்கலம்.

# நேட்டோ விலகினால் அமைதி சீர்குலையும்

## ஆப்கன் நிலைமை குறித்து சர்வதேச பிரச்சினைகளை ஆராயும் குழு அறிக்கை

காபூல், ஒக்.10

நேட்டோ படையணியினர் எதிர்வரும் 2014 ஆம் ஆண்டு ஆப்கனை விட்டு வெளியேறியதன் பின்னர் அரச நிர்வாகம் சீர்குலைவதுடன் உள்நாட்டுப்போர் உக்கிரமான நிலையை அடையும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

சர்வதேச பிரச்சினைகளை ஆராயும்குழுஒன்றினால்விடுக்கப்பட்டுள்ள அறிக்கையிலேயே இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

தற்போதுள்ள நிலையில், ஆப்கன் பொலிஸார் மற்றும் பாதுகாப்புப் படையினர் நாட்டின் பாதுகாப்பைக் கையாளக் கூடிய திறனைக் கொண்டிருக்கவில்லை என்று அந்த அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

இதற்கு, ஏற்ற வகையில் மாற்று நடவடிக்கைகளை எடுக்க வேண்டியதன் அவசியம் குறித்தும் ஆப்கன் அரசுக்கு இந்த அறிக்கையில் ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது.



இதேவேளை, வெளியாகியுள்ள இந்த அறிக்கை குறித்து ஆப்கன் அரசு வெளியிட்ட அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்கள் அபத்தமானதும் அர்த்தமற்றதும் ஆகும்.

ஆப்கன் 2002 ஆம் ஆண்டில் பிறக்கவில்லை. எமது நாடு ஐந்தாயிரம் வருடங்கள் இறைமை மற்றும் வரலாற்றைக் கொண்டுள்ளது.

எமது பொலிஸாரும் இராணுவத்தினரும் நாட்டின் இறைமை மற்றும் கௌரவம் என்பனவற்றை எதிர்கொள்ளக் கூடிய நிலையில் உறுதியாகவுள்ளனர்.

இந்தநிலையில், திட்டமிட்டப்படி 2014 ஆம் ஆண்டு ஆப்கனிலிருந்து நேட்டோ படையணியினர் வெளியேறுவது எந்த வகையிலும் ஆப்கன் அரச நிர்வாகத்தை பாதிக்கப்போவதில்லை- என்றுள்ளது. (வ)

## கனேடியப் படைக்கு உதவிய ஆப்கனியருக்கு குடியுரிமை

### கனேடிய அரசு தீர்மானம்

றொறன்டோ, ஒக்.10

ஆப்கானிஸ்தானில் முகாமிட்டிருந்த கனடா படையினருக்கு உதவியவர்களுக்கு தனது நாட்டில் குடியுரிமை வழங்கி பாதுகாக்க கனேடிய அரசு தீர்மானித்துள்ளது.

இதற்காக கடந்த 2009 ஆம் ஆண்டில் சிறப்பு புலம்பெயர்வுத் திட்டமொன்று ஆரம்பிக்கப்பட்டது.

இந்தத் திட்டத்தின் அடிப்படையில் உதவி கேட்டு 6 ஆயிரம் பேர் விண்ணப்பித்தனர். ஆனால் இவர்களில் எத்தனை பேர் உண்மையிலேயே போரின்போது, கனேடியப் படையினருக்கு உதவினர் என்பதைக் கண்டறிய முடியவில்லை.

ஆரம்பத்தில் விண்ணப்பங்களைத் தாராளமாக ஏற்றுக் கொண்ட அரசு விண்ணப்பங்களின் எண்ணிக்கை அதிகமானதும், சற்று ஆலோசிக்கத் தொடங்கியது.

அந்த விண்ணப்பங்களில் தாங்கள் கனடா இராணுவத்துக்காக ஏற்றுக் கொண்ட துன்பங்களை மிகைப்படுத்தி விளக்கியிருப்பதாகத் தோன்றியது.

இதனால் அதிகமான விண்ணப்பங்கள் நிராகரிக் கப்பட்டன. 348 பேர் மட்டும் குடும்பத்தோடு வந்து தங்க அனுமதிக்கப்பட்டனர்.

2006- 2011ஆம் ஆண்டு வரையிலான காலகட்டத்தில் ஆறு பேர் கொல்லப்பட்டனர். மேலும் பலர் பல்வேறு சித்திரவதைகளுக்கும், கொடுமைகளுக்கும் ஆளானதாக தெரிவித்துள்ளனர். (வ)

## மருத்துவத்துக்கான நோபல் பரிசு: கோடன் மற்றும் யமனாக்காவுக்கு



மருத்துவம் அல்லது உடலியலுக்கான நோபல் பரிசுக்கு பிரிட்டன் மற்றும் ஜப்பான் ஆகிய நாடுகளைச் சேர்ந்த விஞ்ஞானிகளான கோடன், யமனாக்கா தெரிவு செய்யப்பட் டுள்ளனர். கலங்கள் தொடர்பாக முக்கிய திருப்பு முனைகளை ஏற்படுத்தியமைக்காக இருவருக்கும் இந்த விருது வழங்கப்படவுள்ளது.

எந்தவொரு இழைய மாகவும் மாற்றமடையக் கூடிய காம்புக் கலங்கள், சேதமடைந்த உறுப்புக்களை சீர் செய்ய உதவி புரியும் என சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

ஜோன் கோடன் என்ற 79 வயதான பிரிட்டன் விஞ் ஞானியும், ஷின்யா யமனாக்கா என்ற 50 வயதான ஜப் பானிய விஞ்ஞானியும் இந்த விருதுக்கென தெரிவுசெய்யப்பட்டுள்ளனர். இதன்பிரகாரம் 1.2 மில்லியன் அமெரிக்க டொலர் பெறுமதியான பரிசு இருவருக்கும் சமமாகப் பகிர்ந்தளிக்கப்படவுள்ளது. (வ)

## ஜனாதிபதியாகி மக்களுக்கு சேவை செய்யவே விருப்பம்

### ஆங் சாங் சூகி தெரிவிப்பு



மியன்மாரின் ஜனாதிபதியாகி மக்களுக்குச் சேவை செய்ய விரும்பு வதாக அந்த நாட்டு எதிர்க் கட்சித் தலைவரும், ஜனநாயகம் மலர போராடியவருமான ஆங் சாங் சூகி விருப்பம் தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து அவர் மேலும் தெரிவிக்கையில்,

தேசிய ஜனநாயக லீக் கட்சியின் தலைவராக உள்ள நான், ஜனாதிபதியாகி சேவை செய்ய வேண்டும் என்று மக்கள் நினைப்பதால் நானும் அதையே விரும்புகிறேன். இதற்கு நான் சார்ந்துள்ள கட்சி அனுமதி தருவது அவசியம் - என்றார்.

இராணுவ ஆட்சியாளர்களின் பிடியில் இருந்த மியன்மாரில் சுமார் 15 ஆண்டுகளுக்கும் மேலாக வீட்டுக் காவலில் சூகி அடைக் கப்பட்டிருந்தார். அங்கு ஜனநாயகம் மலர அமைதி வழியில் போராடினார். முன்னாள் இராணுவ அதிகாரியாக இருந்த தியான் சீன் தற்போது ஜனாதிபதியாக உள்ளார்.

மியன்மாரில் 2015ஆம் ஆண்டு தேர்தல் நடைபெற உள்ள நிலையில், ஜனாதிபதியாக சூகி விருப்பம் தெரிவித்திருப்பது குறிப்பிடத்தக்கது. (வ)

## விண்வெளி வீராங்கனை சுனிதாவுக்கு றொக்கெட் மூலம் வனிலா ஐஸ்கிறீம்

### அனுப்பி வைத்தது நாசா

விண்வெளி வீராங்கனை சுனிதா வில்லியம்ஸுக்கு நாசா அமைப்பு, றொக்கெட் மூலம் அவருக்கு விருப்பமான வனிலா ஐஸ் கிறீமை அனுப்பி வைத்துள்ளது.

விண்ணில் அமைக்கப்பட்டுள்ள சர்வதேச விண்வெளி நிலையத்துக்குத் தேவையான அறிவியல் சாதனங்களுடன் ஃபால்கன்-9 என்ற றொக்கெட் கடந்த ஞாயிற்றுக் கிழமை ஏவப்பட்டது.

இதில், சுனிதா வில்லியம்ஸ் உட்பட மூன்று விண்வெளி வீரர்களுக்கான பொருள்களும், அவர்கள் சாப்பிடுவதற்காக குளிர் சாதனப் பெட்டியில் வனிலா ஐஸ்கிறீம் உள்ளிட்ட உணவுப் பொருள்களும் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன. இந்த றொக்கெட்டில் அறிவியல் சாதனங்கள் உட்பட 450 கிலோ எடை கொண்ட பொருள்கள் ஏற்றப்பட்டதாக விஞ்ஞானிகள் தெரிவித்தனர்.

ஃபால்கன்-9 றொக்கெட் இன்று புதன்கிழமை சர்வதேச விண்வெளி நிலையத்தை அடையும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

இந்த றொக்கெட் விண்ணில் செலுத்தப்பட்டதை சுனிதா உட்பட மூன்று விண்வெளி வீரர்களும் நேரடியாகக் [illegible] ஏற்[illegible]ருந்தன. (வ)



## இந்தோனேஷியாவில் கடும் நிலநடுக்கம்

இந்தோனேஷியாவின் கிழக்குப் பகுதியில் உள்ள தீவுகளில் நேற்று முன்தினம் கடுமையான நிலநடுக்கம் ஏற்பட்டது. ரிச்டர் அளவு கோலில் 6.3 ஆக பதிவான இந் நில நடுக்கத்தினால் கடலோர கிராமங்களில் கடும் பீதி ஏற் பட்டது.

அம்பான் நகரிலிருந்து தென்கிழக்கில் 100 மைல் தொலைவில், கடல் மட்டத்தில் இருந்து 21.6 மைல் ஆழத்தில் இந்த நில நடுக்கம் மையம் கொண்டுள்ளதாக அமெரிக்க புவியியல் ஆய்வு மையம் தெரிவித்துள்ளது. எனினும் சுனாமி ஏற்படாது என்று இந்தோனேசிய வானிலை நிலையம் தெரிவித்துள்ளது. இந்நிலையில் கலிபோர்னியா வளைகுடா [illegible] முன்தினம் காலையில் 6.0 ரிச்டர் அளவில் நிலநடுக்கம் ஏற்பட்டது குறிப்பிடத்தக்கது. (வ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அகதிகள் வலயமாக பப்புவா, நியூகினியாவை பிரகடனப்படுத்தியது ஆஸி.குடிவரவு அமைச்சு

ஆஸ்திரேலிய குடிவரவு சட்டத்தின் பிரகாரம் பப்புவா, நியூகினியா ஆகிய பிராந்தியத்தை அகதிகளுக்கான வலயமாக அந்தநாட்டு குடிவரவு அமைச்சர் கிறிஸ் போவன் பிரகடனப்படுத்தியுள்ளார்.

இதுகுறித்து அவர் மேலும் தெரிவித்ததாவது:-

அத்துடன், பப்புவா நியூகினியாவிலுள்ள மானுஸ் தீவுகளை புகலிடக் கோரிக்கையாளர்களுக்கான முகாமாக அங்கீகரிப்பது தொடர்பான பிரேரணை ஒன்றும் ஆஸ்திரேலிய நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படவுள்ளது. மானுஸ் தீவுகளில் சுமார் 600 புகலிட கோரிக்கையாளர்களைத் தங்க வைக்க முடியும் என்றும் இந்த வாரம் முதலாவது குழுவினர் அங்கு அனுப்பி வைக்கப்படவுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது.

புகலிடக் கோரிக்கையாளர்களை நவ்றூ மற்றும் பப்புவா நியூகினியாவுக்கு அனுப்பிவைக்கும் நடவடிக்கைகள் ஏற்கனவே ஆஸ்திரேலிய அரசால் முன்னெடுக்கப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

இந்த நடவடிக்கையைத் தொடர்ந்து பல புகலிடக் கோரிக்கையாளர்கள் தமது சொந்த இடங்களுக்குத் திரும்புவதற்கு விருப்பம் தெரிவித்துள்ளனர்-என்றார். எவ்வாறாயினும், ஆஸ்திரேலியாவுக்குத் தொடர்ந்தும் சட்ட விரோதமாக புகலிடக் கோரிக்கையாளர்கள் பயணிப்பதாக கிறிஸ் போவன் குறிப்பிட்டுள்ளதாக சர்வதேச தகவல்கள் தெரிவிக்கின்றன. (வ)

## உணவில் விஷம் வைத்து கொல்ல முயன்ற சிறுமி

*கான்பரா, ஒக்.10*

*சிறுவர்கள் இருவரை உணவில் விஷம் வைத்து கொல்ல முயன்ற 14 வயதுச் சிறுமி ஆஸ்திரேலியாவில் கைதானார்.*

*இந்தச் சம்பவமானது ஆஸ்திரேலியா, ரிச்லேண்டின் புறநகர்ப் பகுதியில் இடம்பெற்றுள்ளதாகப் பொலிஸார் தெரிவித்துள்ளனர். 12 மற்றும் 13 வயது சிறுவர்களே மேற்படி சிறுமியினால் பாதிக்கப்பட்டுள்ளனர். குறித்த சிறுவர்கள், சகோதரர்களாக இருக்கலாம் என்று நம்பப்படுவதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.*

*இதேவேளை, இவர்கள் விஷம் கலந்த உணவை அதிகளவில் உட்கொள்ளாததால் பாதிப்பிலிருந்து மீண்டுள்ளனர் என்று மருத்துவ அறிக்கைகள் தெரிவித்துள்ளன.*

*குறித்த சிறுமியின் வீட்டை நன்கு சோதனை செய்தால் இந்தச் சம்பவத்துக்கு ஆதாரமாக ஏதாவது ஒரு பொருளை கண்டெடுக்க முடியும் என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர். இளைஞர் நீதிச் சட்டம் 1992 இன் கீழ் மேற்படி சிறுமி மீது விசாரணை மேற்கொள்ளப்பட்டுள்ளது. (வ)*

## பிரான்ஸில் தீவிரவாதிகளுக்கு எதிரான நடவடிக்கை தொடரும்

### அந்த நாட்டு அரசு தெரிவிப்பு

பிரான்ஸில் தீவிரவாதிகளுக்கு எதிரான நடவடிக்கையில் ஒருவர் சுட்டுக் கொலை செய்யப்பட்டார். இந்தநிலையில் தீவிரவாதிகளுக்கான நடவடிக்கை தொடரும் என்று அந்த அரசு அறிவித்துள்ளது.

கடந்த மாதம் பிரான் ஸில் யூதர் ஒருவருக்குச் சொந்தமான கடையொன்று தாக்கப்பட்டதைத் தொடர்ந்தே இந்தநடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது.

இந்தநிலையில் பரிஸில் உள்ள யூத அமைப்புக்களை பற்றி பொலிஸார் பட்டியலொன்றைத் தயாரித்துள்ளனர். இவர்களை இஸ்லாமியத் தீவிரவாதிகள் தாக்க கூடும் என்பதால் மிகவும் எச்சரிக்கையுடன் பொலிஸார் அடுத்தகட்ட நடவடிக்கைகளை எடுத்து வருகின்றனர்.

கடந்த 6 ஆம் திகதி பொலிஸார் நடத்திய தீவிர வேட்டையில் தீவிரவாதி சிட்னி கொலை செய்யப்பட்டார். இவரது முன்னாள் காதலியிடம் நடத்திய விசாரணையில், சிட்னி மிகவும் நல்லவன் என்றும், அவனது தீவிரவாத நடவடிக்கை குறித்துத் தனக்கு தெரியாது என்றும் தெரிவித்தார்.

இதுகுறித்து பிரதமர் ஜீன் மார்க் அய்ரால்ட் கூறுகையில், அனைத்து சமூகத்தினரும் இணைந்து வாழ அரசு தக்க பாதுகாப்பு வழங்கும்-என்றார். (வ)

## இஸ்ரேல் மீது தாக்குதல் நடத்தியது ஹமாஸ் அமைப்பினரே

இஸ்ரேல் நாட்டின் மீது ரொக்கெட் தாக்குதல் நடத்தினோம் என்று ஹமாஸ் மற்றும் இஸ்லாமிய ஜிகாத் குழுவினர் பகிரங்கமாக அறிவித்துள்ளனர்.

இஸ்ரேல் இராணுவம் கடந்த ஞாயிற்றுக் கிழமை நடத்திய விமானத் தாக்குதலில் பலஸ்தீனத்தைச் சேர்ந்த 10 பேர் படுகாயமடைந்தனர்.

இதற்குப் பதிலடியாக இஸ்ரேல் மீது தாக்குதல் நடத்தியதாக அவர்கள் அறிவித்துள்ளனர்.

இதுகுறித்து ஹமாஸ் இஸி டைன் அல் குவாஸம் என்ற படைப் பிரிவு வெளியிட்டுள்ள அறிக்கையில், காஸா பகுதிக்கு உட்பட்ட ராபா பகுதியில் இஸ் ரேல் நடத்திய தாக்குதலில் பலர் காய மடைந்தனர். இதற்குப் பதிலடியாக குவாஸம் மற்றும் அல் குயூஸ் படைப்பிரிவினர் எதிரி நாட்டின் மீது ரொக்கெட் வீசி தாக்குதலை நடத்தி உள்ளனர் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (வ)

## உபயோகித்த போத்தல்களை மீண்டும் பாவிப்பதற்கு தடை

### பிரிட்டனில் வருகிறது புதிய சட்டம்

பிரிட்டனில் ஏற்கனவே உபயோகப்படுத்திய போத்தல்களை மீண்டும் பயன்படுத்தவோ, பரிசாகக் கொடுக்கவோ அந்த நாட்டில் தடைவிதிக்கப்பட்டுள்ளது.

இதுகுறித்து பிரிட்டன் தேவாலயங்களுக்கான சட்ட ஆலோசனைத்துறை அறிக்கை வெளியிட்டுள்ளது.

அண்மையில் மிடில்டன் ஜாம் தயாரிப்பதைப் பத்திரிகைகள் செய்தியாக வெளியிட்டன. இதனையடுத்து பிரிட்டனில் அண்மைக் காலமாக வீட்டிலேயே ஜாம் தயாரிப்பது அதிகரித்துள்ளது.

அதுமட்டுமல்லாது ஏற்கனவே பயன்படுத்தப்பட்ட போத்தல்களில் இந்தப் பொருள்கள் அடைத்து வழங்கப்படுகின்றன.

இது குறித்து பிரிட்டன் உணவுத்தர நிர்ணய கழகம் வெளியிட்டுள்ள அறிக்கையில் குறிப்பிட்டுள்ளதாவது:-

பழைய போத்தல்களை மீண்டும் பயன்படுத்தும் போது, அந்த போத்தல்களிலுள்ள இரசாயனம் உணவில் கலக்க வாய்ப்புள்ளது. இதனைத் தடுக்கவே இந்தச் சட்டம் நடைமுறைப் படுத்தப்பட்டது. இந்த விதியை மீறுபவர்களுக்கு அதிகபட்சமாக 4.5 லட்சம் ரூபா வரை அபராதம் விதிக்கப்படும் - என்றுள்ளது.(வ)


**தேவை**

வீட்டில் இருந்து வேலை செய்யக்கூடிய பெண் தேவை. கவர்ச்சிகரமான சம்பளம் வழங்கப்படும்

தொடர்புகளுக்கு: 077 3086894

(23923)(7-8)

**அறை வாடகைக்கு**

யாழ். வைத்தியசாலை வீதியில் (கச்சேரிக்கு அண்மையில்) Room வாடகைக்குண்டு. (பெண்கள் விரும்பத்தக்கது)

தொடர்புகளுக்கு:- 0779238376

(23925)(2-7)

**தவறிவிட்டது**

இல. 203, செங்குந்த வீதி, திருநெல்வேலி கிழக்கு, யாழ்ப்பாணம் என்ற முகவரியுடைய புவனேந்திரன் உமேஸ்வரன் என்பவரின் தேசிய அடையாள அட்டை [950931698V] 2012.10.03 அன்று பணப்பை (பேர்ஸ்) உடன் கட்டப்பிராய் வீதிக்கும் முடமாவடி வீதிக்கும் (பூங்கனிச்சோலையடி) இடைப்பட்ட பிரதேசத்தில் தவறவிடப்பட்டுள்ளது. இதனைக் கண்டெடுத்தவர்கள் தயவு செய்து மேற் குறித்த முகவரியோ OR J/112 கிராம சேவகர் அலுவலகத்திலோ அல்லது 077 5630777 தொலைபேசி எண்ணுடன் தொடர்பு கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

(23897)(7,8)

**வேலை வாய்ப்பு**

மலேசியா, ஆஸ்திரேலியாவில் ஆண், பெண் இருபாலாருக்குமான உடனடி வேலை வாய்ப்பு

மேலதிக தொடர்புகளுக்கு.

Subra2525@yahoo.com

T.P.: 072 391 4486

தொழில் புரிய விரும்புவோர் எட்டு புகைப்படங்களுடனும், கடவுச் சீட்டுடனும் வருகை தரவும்.

முடிவுத் திகதி- 2012.10.11

(20916)(5-6-7)

**அக மகிழ்ந்து பாராட்டி வாழ்த்துகின்றோம்**





யா/ சித்தன்கேணி ஸ்ரீ கணேச வித்தியாலய அதிபராகக் கடமையாற்றிக் கொண்டிருக்கும்

செல்வி ஜெயராணி நாகலிங்கம்

BA (Hons) Dip in Edu., M.Phil in Edu.

அவர்கள் 02.10.2012 அன்று கொழும்பு அலரிமாளிகையில் நடைபெற்ற வைபவத்தில் அதிமேதகு ஜனாதிபதி அவர்களிடமிருந்து இலங்கை அதிபர் சேவை தரம் 2-II இற்கு உரிய பதவி உயர்வு நியமனத்தைப் பெற்றுக் கொண்ட பெருமை மிகுநிகழ்வைப் பாராட்டி வாழ்த்துவதோடு அவர் மேன்மேலும் பதவி உயர்வுகளைப் பெற்றுச் சிறப்புற்று வாழ எல்லாம் வல்ல ஸ்ரீ கணேசப் பெருமானைப் பிரார்த்திக்கின்றோம்.

Best Wishes

வாழ்த்துவோர்:

திரு.திருமதி தனேஸ்வரலிங்கம் குடும்பம்

(23899)(2.7.6)

**வேப்ப மரம் விற்பனைக்கு**

யாழ் நகர எல்லைக்குள் தறிப்பதற்கு அனுமதி பெறப்பட்ட வேப்பமரம் விற்பனைக்கு உண்டு.

தொடர்பு: 071 8474685

(23915)(5-6-7)

**பாராட்டி வாழ்த்துகின்றோம்**

கிளி/முருகானந்தா ஆரம்ப வித்தியாலய ஆசிரியை

திருமதி ரவிதமணி கருணானந்தன்

அவர்கள் நல்லாசிரியர் விருதான "பிரதிபா பிரபா" விருதினை ஜனாதிபதி அவர்களிடம் பெற்றுக்கொண்டதையிட்டு பெருமகிழ்வுடன் பாராட்டி மேன்மேலும் பல விருதுகளைப் பெற வாழ்த்துகின்றோம்.

"உவகை கொண்டோம் உமது உயர்வு கண்டு"

திரு.திருமதி அருளானந்தம் குடும்பம்.

253/2, முரசுமோட்டை,பரந்தன்.

**பாராட்டி வாழ்த்துகின்றோம்**

மகேந்திரன் கேமதுசன்

யா/பரியோவான் கல்லூரி (St.John's College)



திரு.திருமதி மகேந்திரன்– விஜிதா தம்பதியரின் புதல்வன் கேமதுசன் 2012 ஐந்தாம் தர புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடைந்துள்ளார். அவரை மேன்மேலும் பல பட்டங்களையும் பெற பாராட்டி வாழ்த்துகின்றோம்.

வாழ்த்துவோர்:

அம்மப்பா,அம்மம்மா - அகிலேஸ்வரன்,லோகேஸ்வரி

அப்பம்மா - திருமதி சோ. லலிதாபூசனிதேவி

சித்தி,சித்தப்பா - தா.பாலசிவராம் குடும்பம் (வட்டக்கச்சி)

சின்னமாமா - அ.இரா... குடும்பம்

ஆசைமாமா - அ.சௌந்தர் குடும்பம் (வவுனியா)

குட்டிமாமா - அ.கஜேந்திரகுமார் குடும்பம் (லண்டன்)

((20919)(5-6-7)

**காணி விற்பனைக்கு**

ஏ-9 வீதிக்கும் கொடிகாமம் சந்தைக்கும் அண்மையில் 12½ பரப்பு உறுதிக் காணி உடனடியாக விற்பனைக்குண்டு.

தொடர்பு: 024 222 1178 021 321 8220

(23887)(3-6-7)

**இதயபூர்வ வாழ்த்துக்கள்**

இ.பாலச்சந்திரன்



அமைதியான புலமையினால் அதிபதியாய் சேவை புரிந்து 02.10.2012 இல் அதிபர் சேவை தரம் 2-II இற்கு தர உயர்வு பெற்ற எமது வித்தியாலய முதல்வர்

இ. பாலச்சந்திரன் அவர்கள்

பட்டங்கள் பல பெற்று பதவியுயர்வுடன் சேவை நல்கி பார்போற்ற வாழ்ந்திட மனம் மகிழ வாழ்த்துகின்றோம்.

ஆசிரியர்கள்

கிளி/பூநகரி மகா வித்தியாலயம்

(23917)(5-6-7)


Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# அனைவரையும் கவர்வதற்கு அற்புத வழிகள்

(6)

காரில் பழுது ஏற்பட்டால் அப்படியே சாலையில் நின்று விடுமே, அப்படியா விமானம்? அது வேகமாக கீழே விழுந்து நொறுங்கிவிடும். ஏன், எதற்காக விமானம் இப்படிக் காலை வாரிவிட்டது என்று விமானிக்குக் கொஞ்சமும் புரியவில்லை. கீழே விழுந்து நொருங்கி அனைவரும் இறப்பது உறுதி என்றும் எண்ணினார். ஆனாலும் ஓர் ஆசை. இறப்பதுதான் இறக்கப் போகிறோம். கடைசிவரையில் முயற்சி செய்து பார்த்துவிடுவோம் என்று எண்ணி விமானத்தைக் காற்றோடு பறக்கவிட்டு மெல்ல, மெல்ல அப்படியே இறக்க முயன்றார். விமான நிலையத்தில், பாதுகாப்பான ஓர் இடத்தில் பொத்தென்று விமானம் இறங்கியபோது, கொஞ்சம் சேதமாகி விட்டது. விமானத்தில் சென்றவர்கள் அனைவரும் தப்பிவிட்டார்கள். விமானியின் திறமையை மற்றவர்கள் மிகமிகப் பாராட்டினார்கள்.




விமானத்தில் என்ன கோளாறு என்று ஆராய்ந்து பார்த்தார் பைலட். அவர் மிகவும் கெட்டிக்காரர். அனுபவம் மிக்கவர். எஞ்சினில் ஒன்றும் கோளாறு இல்லை. பெட்ரோலை எடுத்து முகர்ந்து பார்த்தார். ஆஹா! இதோ கோளாறு!

சாதாரண பெட்ரோலுக்குப் பதில், விமானத்தைப் பழுது பார்க்கும் மெக்கானிக் விலை மிகுந்த, ஜெட் விமானங்களுக்கு மட்டுமே பயன்படுத்தும் வெள்ளைப் பெட்ரோலைப் பயன்படுத்தியிருக்கிறான் என்பது தெரிந்தது.

சாதாரண பெட்ரோலில் ஓடும் எஞ்சின், ஜெட் விமானத்துக்குப் போடும் சக்தி வாய்ந்த பெட்ரோலில் ஓடுவதில்லை.

வேகமாக இந்த விஷயம் பரவியது.

விமானத்தைப் பழுதுபார்த்த மெக்கானிக், உண்மையை உணர்ந்ததும் நடுங்கினான், அஞ்சினான். தனக்கு வேலை போய்விடுமோ என்று வெலவெலத்துப் போனான்.

அவனைப் பைலட் நெருங்கிய போது, அவன் முகம் வெளிறிப் போய்விட்டது. உடல் நடுங்கியது. பைலட் அவன் அருகில் போய் அவனைக் கட்டியணைத்து, 'தெரியாமல் செய்து விட்டாய் பரவாயில்லை. மறுபடியும் இப்படிப்பட்ட தவறைச் செய்யாதே. விமானத்தைப் பழுது பார்த்து, சரியான பெட்ரோலை நிரப்பு' என்று சொன்னார்.

பைலட்டைப்பற்றி மெக்கானிக் வாழ்நாள் முழுவதும் புகழ்ந்தான். அத்துடன் அவன் வேலையில் மிகவும் எச்சரிக்கையுடன் நடந்து கொண்டான்.

எரிந்து விழுந்திருந்தாலோ, அவனை அடித்திருந்தாலோ அல்லது வேலையிலிருந்து நீக்கி இருந்தாலோ, பைலட்டின் செல்வாக்கும் நட்பும் குறைந்திருக்குமே தவிர, அவருக்குப் புகழை உண்டாக்கியிருக்காது.

எந்த விஷயத்திலும் நமது அணுகுமுறை வித்தியாசமாக, மற்றவர்கள் பாராட்டும்படி அமைந்து விட்டாலே போதும். நாம் மற்றவர்களை எளிதில் கவர்ந்து நல்ல பெயரைச் சம்பாதிக்க முடியும்.

தவறு செய்தவர்கள் கோணத்திலிருந்து நாம் சிந்தித்துப் பார்த்தாலே பல உண்மைகள் புரியும்.

**மற்றவர்களுக்கு உதவும் போது மகிழ்ச்சி ஏற்படுகிறது**

நாம் வேலைக்குப் போகிறோம், சம்பாதிக்கிறோம், குடும்பத்தைக் காப்பாற்றுகிறோம். இது கடமை.

''நான் வேலைக்குப் போய் வந்தவுடன் என் கடமை முடிந்துவிட்டது. இதற்குமேல் என்ன செய்ய வேண்டும்? வீட்டில் பேசாமல் படுத்துக் கிடப்பதுதான் சுகம்'' என்று எண்ணுபவர்கள் மற்றவர்களால் மதிக்கப்படமாட்டார்கள்.

ஏறக்குறைய இவர்கள் சுயநலவாதிகள்.

சொந்த வேலைகளைத் தவிர, மற்றவர்களுக்கு உதவும் ஒரு கடமையும் நமக்கு இருக்கிறது. சம்பளம் இல்லாத வேலை இது. ஆனால், இந்த சம்பளமில்லாத வேலையினால் நமக்குக் கிடைக்கும் பெருமையும் மகிழ்ச்சியும் அளவில்லாதவை.

கொஞ்சம் நினைத்துப் பாருங்கள். நம்மால் மற்றவர்களுக்கு என்னென்ன செய்ய முடியும்? கற்பனை செய்து பாருங்கள்.

1.ஊருக்குப் புதிய மனிதர் ஒருவர் உங்களைச் சந்திக்கிறார். அவர் போய்ச் சேர வேண்டிய முகவரியைக் கேட்கிறார். அவர் போக வேண்டிய இடம் உங்களுக்குத் தெரியும். பக்கத்தில்தான். அடையாளம் சொன்னால் போதும். ''ஆனாலும், கவலைப்படாதீர்கள். நான் உங்களுடன் வருகிறேன். உங்களை விட்டுவிட்டுப் போகிறேன்'' என்கிறீர்கள்.

(தொடரும்)

-தமிழ்வாணன்-

# சிறுவர்களிடம் புதிய சிந்தனைகளை ஏற்படுத்துவதற்கு சமூகத்தின் அனைத்து மக்களும் முன்வர வேண்டும்

## நல்லூர் பிரதேச செயலர் தெரிவிப்பு

யாழ்ப்பாணம்,ஒக்.10

சிறுவர்கள் மத்தியில் சிறந்த சிந்தனைகளை ஏற்படுத்துவதன் மூலம் எதிர்கால உலகின் சிற்பிகளாக அவர்களை வழிநடத்த சமூகத்தின் அனைத்து மக்களும் முன்வர வேண்டும். முதியவர்களின் அனுபவங்கள் அறிவுகளூடாக நல்ல அனுபவங்களைப் பகிர்ந்து கொள்ளவும் இளந்தலைமுறையினர் முன்வர வேண்டும் என நல்லூர் பிரதேச செயலர் பா.செந்தில் நந்தனன் தெரிவித்தார்.

நல்லூர்பிரதேசசெயலகப் பிரிவின் சர்வதேச சிறுவர் முதியோர் தின விழா கடந்த வியாழக்கிழமை பிரதேச செயலக மண்டபத்தில் நடைபெற்றது. யாழ்.பல்கலைக் கழக மக்கள் வங்கிக்கிளை, தாயக சிறுவர் இல்லம், கருணாலயம் சிறுவர் இல்லம், தியாகிகள் அறக்கொடை நிறுவனம், அகதிகள் புனர்வாழ்வுக் கழக அனுசரணையுடன் நடைபெற்ற இந்த நிகழ்வில் தலைமையுரையாற்றும் போதே செந்தில்நந்தனன் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் தெரிவித்ததாவது:-

சர்வதேசமட்டத்தில் சிறுவர்கள், முதியவர்கள் போற்றப்பட வேண்டும், பாதுகாக்கப்பட வேண்டும் என்ற குறிக்கோளுடன் ஐ.நா. அமைப்பு இதற்கான முன்முயற்சிகளை மேற்கொண்டுள்ளது.

இன்று எமது சிறுவர்களில் பெரும்பாலானவர்கள் பெற்றோர்களை இழந்து, பாதுகாவலர்களின் பராமரிப்பில் உள்ளனர். அதேபோன்று முதியவர்கள் தனிமையில் முதியோர் இல்லங்களில் வாழ்கின்றனர்.

நாட்டின் எதிர்காலத்தை முன்னெடுக்க வேண்டிய சிறுவர்கள், தங்கள் அறிவு , அனுபவம், ஆற்றல்களை நாட்டின் நலனுக்கு அர்ப்பணித்து இரு சாராரினதும் நலன்களில் ஒவ்வொருவரும் அக்கறைகாட்ட வேண்டும்.

சுதந்திரம் பெற்றபின் காலம் மாறியிருக்கலாம். எமது சமுதாயத்தில் சிறுவர் துஷ்பிரயோகம் கூடுதலாக இடம்பெறுவதாக செய்திகள் வெளிவருகின்றன. பெற்றோர்கள் சிறுவர்கள் விடயத்தில் முழுக்கவனம் செலுத்துவது அவசியம். ஆசிரியர்களால் மட்டும் அவர்களைக் கட்டுப்படுத்த முடியாது. அவர்களது கல்வியிலும் பெற்றோர்களின் கண்காணிப்பு தேவை.

நல்லூர் பிரதேச செயலகம் சிறுவர்களின் கல்விக்காக உதவுகின்றது. இலங்கை செஞ்சிலுவைச் சங்கத்தின் யாழ்.கிளையும், பத்துப் பிள்ளைகளின் கல்விக்காக உதவித் தொகையை வழங்குகின்றது. பெற்றோர்களின் கைகளிலேயே பிள்ளைகளின் எதிர்காலம் தங்கியுள்ளது-என்றார். (எ-7)



ஆங்கிலதின மாகாண மட்டப் போட்டியில் யாழ்.புனித ஜோன் பொஸ்கோ வித்தியாலயத்தைச் சேர்ந்த 5 மாணவர்கள் வெற்றியீட்டியுள்ளனர். வாசிப்புப் போட்டியில் அருள்மொழி ஹர்சன் (தரம்-5) முதலாம் இடத்தையும், சூரியகுமார் காயத்திரி (தரம்-4) முதலாம் இடத்தையும்,தவபாக்கியராஜா சாயகி (தரம்-3) 2 ஆம் இடத்தையும், சிவகுமாரன் மதுமிதா (தரம்-4) 3 ஆம் இடத்தையும், உறுப்பெழுத்துப் போட்டியில் ஜெகதீஸ்வரன் ஜவனிகா (தரம்-5) முதலாம் இடத்தையும் பெற்றனர். (த-17)

## சிறுவர் தின போட்டி முடிவுகள்

கரவெட்டி பிரதேச செயலகத்தினால் பாடசாலை மாணவர்களுக்கு இடையே நடத்தப்பட்ட சர்வதேச சிறுவர்தினப் போட்டி முடிவுகள் பின்வருமாறு:

ஆரம்பப் பிரிவு

1 ஆம் இடம்-ரா.சரண்யா-கட்டைவேலி மெ.மி.த.க.பாடசாலை, 2 ஆம் இடம்-உ.சாளினி-வதிரி திரு இருதயக் கல்லூரி, 3 ஆம் இடம்- சு.அபிநயா-கரவெட்டி மாணிக்கவாசகர் வித்தியாலயம்.

கீழ்ப் பிரிவு

1 ஆம் இடம்-வ.ஜெயானி-வதிரி திரு இருதயக் கல்லூரி, 2 ஆம் இடம்- ஆ.நிருத்திகா-கரணவாய் பொன்னம்பல வித்தி, 3 ஆம் இடம்-ஜெ.சூரியகாந்- தேவரையாளி இந்துக் கல்லூரி. (எ)

(தொடரும்)

# ஜேர்மனியில் கருத்தரங்கு: இரு தமிழருக்கு அழைப்பு

ஜேர்மனியின் தலைநகரான பேர்லினில்,பேச்சுவார்த்தைகளுக்கு முன்னரும்,பேச்சு வார்த்தைகளின் பொழுதும்,அதற்குப் பின்னருமான பாதுகாப்பு ஏற்பாடுகள் தொடர்பாக நடைபெறும் கருத்தரங்கில் கலந்து கொள்வதற்காக இலங்கையின் பிரதிநிதிகளாக கிழக்குப் பல்கலைக்கழக வருகை விரிவுரையாளரும், வல்வெட்டித்துறையின் நகர சபைத் தலைவருமான ந.அனந்தராஜ், கொழும்பு பல்கலைக்கழக வருகை விரிவுரையாளர் கலாநிதி. க.சர்வேஸ்வரன் ஆகியோர் ஜேர்மனியின் பேர்கொப் நிறுவனத்தினரால் அழைக்கப்பட்டு இன்று ஜேர்மனிக்குப் பயணமாகின்றனர்.

நாளை தொடக்கம் 14 ஆம் திகதி வரை பேர்லினின் ஸ்கூவா னென்வேர்டர் நகரில் இடம்பெறவுள்ள 4 ஆவது கூட்டத் தொடரில் முரண்பாடுகள் நிலவும் நாடுகளைச் சேர்ந்த பிரதிநிதிகள் அழைக்கப்பட்டு கருத்துக்கள் பரிமாறப்படவுள்ளதாக சமாதானத்திற்கான பணிப்பாளர் ஒலிவர் வில்ஸ் தெரிவித்துள்ளார். இதற்கான அனுசரணையை சுவிஸ் சமஷ்டி அரசின் வெளிவிவகாரத் திணைக்களம் வழங்கியுள்ளது. (எ)

# தொழில்நுட்ப வளர்ச்சியால் மனிதனும் இயந்திரமாகவே மாறவேண்டியுள்ளது

## தேசிய தொழில் வங்கி திறப்புவிழாவில் உரை

யாழ்ப்பாணம், ஒக்.10

தொழில்நுட்ப வளர்ச்சியினால் மனிதவலு குறைக்கப்பட்டு இயந்திரங்களின் செல்வாக்கு அதிகரித்துள்ளமையால், அதற்கேற்ப மனிதனும் இயந்திரமாக மாற வேண்டியுள்ளது. இந்த நிலையில் பொருளாதார ரீதியான மேம்பாட்டைக் காண்பதன் மூலம் மனிதனின் தேவைகள் நிறைவேற்றப்படுவதுடன், அபிவிருத்திகளும் முன்னேற்றம் அடையும் என்று தேசிய தொழில் வங்கியின் பொது முகாமையாளர் திருமதி எஸ்.நாகராசா தெரிவித்தார்.

தேசிய தொழில் வங்கியின் யாழ்.கிளைத்திறப்புவிழா அண்மையில் யாழ். [illegible] நடைபெற்றது. இந்த நிகழ்வில் தலைமையுரை நிகழ்த்தும் போதே திருமதிநாகராசா இவ்வாறு தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் தெரிவித்ததாவது:-

இந்த பரந்துபட்ட உலகில் தொழில்நுட்ப வளர்ச்சியால் மனிதவலு குறைக்கப்பட்டு இயந்திரங்களின் செல்வாக்கு அதிகரிக்கப்பட்டுள்ளது. மறுபக்கத்தில் இயந்திரத்தின் வேகத்துக்கு ஏற்ப மனிதன் இயந்திரமாக செயற்பட வேண்டிய தேவைக்கும் இசைவாக்கப்பட வேண்டிய தன்மைக்கும் தள்ளப்பட்டுள்ளான்.

கைப்பைக்குள் வைத்து கருமங்களை ஆற்றுகின்ற இலத்திரனியல் உலக நடைமுறைக்குள் இலங்கையின் வடகிழக்குப் பகுதி படிப்படியாக தற்போது உள்வாங்கப்படுகின்றது. அந்த வகையில் உலக தரம் வாய்ந்த பொருள்களைத் தயாரிப்பதற்கும், அதனைச் சந்தைப்படுத்துவதற்கும் பெரிய சவால்களை எதிர்கொள்ள நேரிட்டுள்ளது.

அத்துடன் அபிவிருத்தி பற்றி சிந்திக்கும் பொழுது சமூக மேம்பாட்டில் பங்குதாரர்கள் ஆவதன் மூலம் ஆரோக்கியமான சமுதாயத்தைக் கட்டியெழுப்ப முடியும். இதற்கு முன்னுதாரணமான சேவையை தேசிய தொழில் வங்கி வழங்கியுள்ளது.

இந்த வங்கியூடாக சிறிய நடுத்தர நிறுவனங்களும், வடக்கு கிழக்கில் புதிதாக உருவாக்கப்படவுள்ள பெரிய முதலீட்டு நிறுவனங்களும் பொருளாதார வியாபார ஆலோசனைகளை வழங்குவதற்கு முன்வந்துள்ளன. எனவே தற்போதைய காலத்தின் தேவை உணர்ந்து செயற்படவுள்ள வங்கியின் பணிகளுக்கு முயற்சியாளர்கள் ஒத்துழைப்பு வழங்க வேண்டும்-என்றார். (எ-14)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**உதயன்** தொடர்புகளுக்கு

**தலைமையகம்:**
361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி:021–222 9933, 222 9944, 5679933, 5679944
விளம்பரம்:021–5671111
விநியோகம்: 021–5677222
**தொலைநகல்**
செய்தி: 021–5678844,
விளம்பரம்: 021–2229731
**மின் அஞ்சல்**
செய்தி : news@uthayan.com
கருத்து: comments@uthayan.com
விளம்பரம்: advt@uthayan.com

**வன்னிப் பணிமனை:**
ஏ–9 வீதி, கரடிப்போக்கு,
கிளிநொச்சி (புனித திரேசா வித்தி. முன்பாக)
தொலைபேசி: 021 228 0065
தொலைநகல்: 021 228 0066
**நெல்லியடிக் கிளை:**
பிரதான வீதி, நெல்லியடி (HNB அருகே)
தொலைபேசி : 021–2262789, 021 226 2395
**சாவகச்சேரிக் கிளை:**
நவீன சந்தை மேல்மாடி,
சாவகச்சேரி
தொலைபேசி: 021 227 0323

விளம்பர முகவர்கள்: 'சதா பொன்ஸ்' –மாலு சந்தி, அல்வாய் : 021 226 3206, 'நெல்லியடி மொடேன் ஸ்ரோர்ஸ்' – பஸ் நிலையம், நெல்லியடி : 021 490 1519, 'மீசாலை கஜானன்' – கண்டி வீதி, மீசாலை தெற்கு : 021 227 0399, 'மன்னார் சிவசாந்தி' – தாழ்வுபாடு வீதி, மன்னார் : 0752824478, 'கொடிகாமம் அருள் நாயகி' – பஸ் நிலையம், கொடிகாமம் : 0774937585, 'மல்லாவி புவனேஸ்வரி புத்தகசாலை' – மத்திய சந்தையடி, மல்லாவி : 0778175116, 'கோபி எலைக்சிற்றி' – முல்லைத்தீவு நகர் : 0779598917, 'அன்பரசன்' – சிவன் கோயிலடி, ஒட்டுசுட்டான் : 0775035571, 'சுஹறா ரவல்ஸ்' – 98, பிரதான வீதி, மன்னார் : 023 222 3311

# தொடர வேண்டும்

**யாழ்.** மாவட்ட ஒருங்கிணைப்புக்குழுக் கூட்டம் நேற்றுமுன்தினம் என்றுமில்லாத காரசாரமாக நடந்து முடிந்துள்ளது. மஹிந்த அரசு பதவியேற்ற பின்னர் நடந்திருக்கக்கூடிய ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டங்கள் அனைத்திலும் பார்க்க இந்தக் கூட்டமே விறுவிறுப்பாக நடைபெற்றது என்பது அங்கிருந்த அனைவராலும் ஏற்றுக்கொள்ளப்பட்ட விடயம்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கும் அமைச்சரும் அவர் சார்ந்த நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கும் இடையே அரசியல் சார்ந்த வாய்த் தர்க்கங்கள் பல சமயங்கள் இடம்பெற்றபோதும் ஆக்கபூர்வமான விடயங்களும் எடுத்து அலசப்பட்டன.

வெறும் குதர்க்க வாதங்களாக மட்டுமன்றி, கூட்டமைப்பினர் குடாநாட்டின் அபிவிருத்தித் திட்டங்கள் தொடர்பிலும் அவற்றை நடைமுறைப்படுத்துவது தொடர்பிலும் நியாயமான கேள்விகளை முன்வைத்தனர். இந்தமுறை கூட்டத்தில் அவற்றுக்குச் சரியான பதிலைச் சொல்ல முடியாமல் சில அதிகாரிகளும் அரச சார்பு நாடாளுமன்ற உறுப்பினர்களும் திணறினர். அதற்கும் காரணம் ஒன்றுண்டு. இத்தனை நாள்களாக அவர்களை இப்படித் துருவித் துருவிக் கேள்வி கேட்பதற்கு அந்த மண்டபத்தில் யாரும் இருந்ததில்லை. எனவே இனிவரும் காலங்களில் இத்தகைய கேள்விகளுக்கு நெத்தியடியாகப் பதில்களை வழங்க அதிகாரிகள் தயாராக இருப்பார்கள் என்பதை எதிர்பார்க்கலாம்.

கூட்டமைப்பினர் ஆரம்பம் முதலே ஒழுங்கு விதிகளில் ஆரம்பித்து பல்வேறு விடயங்களில் விதி மீறல்களைச் சுட்டிக்காட்டியும் அறிக்கைகளின் அடிப்படையிலும் கேள்விகளைக் கேட்டுக் கொண்டே இருந்தனர். இதனால் பொதுத் திட்டங்கள் மற்றும் அபிவிருத்தித் திட்டங்கள் குறித்த பல்வேறு விடயங்களும் அலசப்பட்டு சில தவறுகளும் வெளிச்சத்துக்கு வந்தன.

ஒரு கட்டத்தில் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர்களின் கேள்விக்கணைகளுக்குப் பதிலளிக்கத் திணறிய வடக்கு மாகாண ஆளுநர் மேஜர் ஜெனரல் சந்திரசிறிகூட, திருநெல்வேலி காணிப் பிரச்சினை பற்றித் தனக்கு எதுவுமே தெரியாது என்று கைவிரித்தார். அதாவது நல்லூர் பிரதேச சபைக்குச் சொந்தமான காணியை இராணுவத்தினர் அடாத்தாகக் கைப்பற்றி வைத்திருப்பது குறித்து அவருக்கு எதுவும் தெரியாதாம்.

யாழ்ப்பாணத்தின் முன்னாள் இராணுவத் தளபதி, இப்போதைய வடமாகாண ஆளுநர் என்ற அவரது பதவிகளுக்குத் தெரிவிக்கப்படாமலேயே காணி விவகாரம் நடந்துவிட்டது என்பதாகச் சமாளிக்க வேண்டிய தேவையை கூட்டமைப்பினரின் பிரசன்னம் அங்கு ஏற்படுத்திவிட்டது. இரண்டு வாரங்களில் அது பற்றி ஆராய்ந்து கூறுவதாகவும் ஆளுநர் பதிலளித்திருக்கிறார்.

தேசிய பாதுகாப்புக்கே முன்னுரிமை என்றபோதும் தனியார் காணிகளையோ வேறு அபிவிருத்தித் தேவைகளுக்குப் பயன்படுத்தப்படும் காணிகளையோ இராணுவம் எடுத்துக் கொள்ளாது என்று அவர் தெரிவித்திருந்தார். எதிர்வரும் முதலாம் திகதி மீண்டும் ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம் கூடும்போது அவர் இது பற்றிய பதிலைத் தான் கூறுவார் என்று நிச்சயம் எதிர்பார்க்கலாம்.

அப்போதும் அங்கு, இம்முறை போன்றே கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர்கள் அனைவரும் இருந்து கேள்விகளைக் கேட்டும், நியாயத்தை விளக்கியும் போராடத் தயாராக இருக்க வேண்டும். ஒரு நாள் கூட்டத்தில் சலசலப்பை ஏற்படுத்துவதால் மட்டும் எந்த நன்மைகளும் விளைந்துவிடா. அது தொடரவேண்டும்; நிலைக்க வேண்டும். அப்போதுதான் ஏதாவது பயன் கிடைக்கும்.

# விழி கிழிக்கும் விரல்கள்

■ செந்தூரி

*"இந்தியாவின் மிகச் சிறந்த பிரதமர் ஜவஹர்லால் நேரு. மிக மோசமான பிரதமர் அவருடைய மகள் இந்திராகாந்தி. தன் வளர்ச்சிக்கு உதவிய லால்பகதூர் சாஸ்திரி, காமராஜர் போன்ற மூத்த தலைவர்களைக் கூட மதிக்காமல், எமர்ஜென்ஸி காலத்து இந்திரா காந்தியின் அட்டூழியங்களை எவராலும் மறக்க முடியாது! பிரதமர் பதவி பலமுறை தேடி வந்த போது மறுத்தவர் காமராஜர், எத்தனை பெரிய தியாகம்? "எமர்ஜென்ஸி காலத்தில் சிறையில் இருந்து விட்டு வந்து காமராஜரை சென்னையில் சந்தித்தேன். அப்போது இந்திரா காந்தியை பிரதமர் பதவிக்கு தேர்ந்தெடுத்த தவறான முடிவுக்காக மிகவும் வருத்தப்பட்டு, என் எதிரிலேயே நான்கு முறை தலையில் கைகளால் அடித்துக் கொண்டார். அந்தக் குற்றவுணர்வு அவருயிரை சீக்கிரமே பறித்துக் கொண்டது"- பேசியவர் 'குல்தீப் நய்யார்'. 70 ஆண்டு கால ஊடகப்பணித்துறை அனுபவம் கொண்ட 92 வயதான இன்னமும் எழுதுமை நிரவல் மட்டம் குறையாத முதிர் பேனா. "மகாத்மா காந்தியின் ஆங்கிலேய நட்புகள்", "நேருவின் காதல் கடிதங்கள்" ,"லால்பகதூரின் மர்ம சாவு", இந்திராவின் எமர்ஜென்ஸி ரகசியங்கள்..." சுதந்திரத்துக்கு முன், பின் இந்தியாவைத்தன் "ஸ்கூப்"களால் பரபரக்க வைத்த பத்திரிகையாளனின் சமீபத்திய பேட்டியொன்றில் சுட்டது கீழ்வருவது!*

*"2009ஆம் ஆண்டு மே மாதம் இலங்கையில் லட்சக்கணக்கான அப்பாவித் தமிழர்கள் கொல்லப்பட்டபோது இந்திய அரசும், வட இந்திய ஊடகங்களும் மௌனித்தது சரிதானா?"*

*"இலங்கைப் போர் இந்த நூற்றாண்டில் மாபெரும் சோகம், என்று இங்கிலாந்து ஊடகங்கள் சொல்லுகின்றன. ஆனால் , 'பக்கத்து நாடான இந்திய மீடியாக்கள் மௌனித்தது ஏன்?' என சனல்-4 என்னிடம் கேட்ட கேள்விக்கு இன்று வரை சரியான பதிலைக்கண்டுபிடிக்க முடியவில்லை. 'நம்முடைய மௌனமும், மறுதலிப்பும்தான் லட்சக்கணக்கான அப்பாவி மக்களை, கர்ப்பிணிப் பெண்களை, பிஞ்சுக் குழந்தைகளை கொன்றிருக்கின்றது' என்கின்ற உறுத்தல், மனச்சாட்சி கொண்ட ஒவ்வொரு பத்திரிகையாசிரியனையும், ஆட்சியாளனையும் காலம் முழுக்க உறுத்திக் கொண்டேயிருக்கும். போரின் போது தமிழர்களிடையே எழுந்த எழுச்சியை இந்தியா முழுக்க பரப்ப தமிழக அரசியல் வாதிகள் தவறிவிட்டதாகவே நினைக்கின்றேன்.*

*"இலங்கையின் குடிமக்களாகிய தமிழர்களுக்கு அந்த நாட்டில் சுயமரியாதையுடன் வாழும் உரிமையும் சுதந்திரமும் மறுக்கப்படுகின்றது. அதைத் தமிழர்கள் கேட்கும்போது காலங்காலமாக காட்டுமிராண்டித்தனமான வன்முறைக்கு ஆளாகின்றார்கள். அதனால்தான் விடுதலைப்புலிகள் ஆயுதம் ஏந்திப் போராடினார்கள். மண்ணுக்காகவும், மக்களுக்காகவும் உண்மையில் பல்வேறு தியாகங்களை செய்த புலிகள் தோற்றுப் போனதில் தனிப்பட்ட முறையில் எனக்கும் வருத்தம்தான். (குரல் கம்முகின்றது) ஏனென்றால், அவர்கள் நம் மக்கள்!"*

இன்றைய தனது 92 ஆவது வயதிலும், 14 மொழிகளில் கிட்டத்தட்ட 80 பத்திரிகைகளில் இடைவிடாத கட்டுரையாளனான, சாதாரணமான நாளொன்றில் 27 செய்தித்தாள்களின் வாசகனான, பகலில் இரண்டு மணி நேரமும், இரவில் மூன்று மணி நேரமும் மட்டுமே தூங்குகின்ற 'குல்தீப் நய்யார்' என்கின்ற பக்கத்து வீட்டுப் பழுத்த அவதானியின் பதிவுகள், அழிவுளுக்கான காரணத்தொகுதியில் தானும் ஓர் அங்கமாகி விட்டதற்காக ஆழ வருந்துகின்ற இதயமொன்றின் கழிவிரக்கமாகவே தெரிகின்றன.

[illegible] பற்றிய புறப்பார்வையின் இறுதிக் கட்டம் என்ற ஒன்று என்றைக்குமே இழந்து விடாதவாறு, அந்த "முன்னாள் புரட்சியாளர்கள்" பற்றிய களத்தை பரபரப்பாகவே வைத்திருக்க விரும்புகின்றது அடக்கு முறையின் இழிபுத்தி.

"தடுப்புக் காவலில் உள்ள 60 மூத்த புலிப் போராளிகள் மீதான போர்க் குற்றச்சாட்டுக்கள்" என்பது வெறுமனே வாசித்த பின்னர், சாப்பாட்டுப் பொதிக்கு பாவிக்கின்ற தாளில் கட்டம் கட்டப்பட்ட செய்தியல்ல! பாதிக்கப்பட்ட தேசிய இனமொன்றின் பகை மறப்புக்கு எக்காலத்திலும் இடம்கொடுத்து விடாத தரித்திரப் பழிவாங்கல்! ஐ.நா. மீதான நம்பிக்கை குறைந்து வருவதாக தெரிவித்து வருந்துகின்ற இலங்கையின் வெளிவிவகாரத்துறை அமைச்சகத்தின், மோசமான அழுகுணி அளாப்பல் விளையாட்டு யுக்திகளில் ஒன்றே இந்த புதுவகைக்குரிய போர்க் குற்றச்சாட்டுக்கள். 'அரசியல் தீர்வு', 'மீள் குடியேற்றம்', 'புணர்வாழ்வு', 'ஆணைக் குழுவின் பரிந்துரைகள்' என்று சிறுபான்மையினருக்கான தேவைகளை பெற்றுக் கொடுப்பதற்கான துந்திரோபாய நெருக்கடிகளைத் தவிர வேறெதனையும் உருப்படியாக சாதித்து விடாதவை தான் இலங்கை அரசுக்கெதிரான போர்க்குற்றச்சாட்டுக்கள். காயப்பட்ட இனமொன்றின் முழுமையான பிரதிபலிப்பான , "அவலத்தை மீளளிக்கும்" தண்டனையொன்றினையோ, உயிரிழப்புக்களுக்கு பிரதியீடான உச்சபட்ச நீதியொன்றையோ என்றைக்கும் சர்வதேச நாடுகள் தமிழனுக்கான தீர்வாக தந்துவிடப்போவதில்லை என்பது விரும்பியோ விரும்பாமலோ பதினாறரைக் கோடி உலகத் தமிழனும், சுய இன மதிப்பீட்டின் மூலம் ஆய்ந்துணர வேண்டிய உண்மை. மறுதலையாக, "ஐயகோ! அநீதி இழைத்து விட்டோமே! அவலச்சாவுகளுக்கு காரணமாகி விட்டோமே!" யென்று புலம்பிச் சித்தங்கலங்கி செத்துப்போகும் கவரிமான்களும் இல்லை, "ராஜபக்ஷே அண்ட் கோ"வினர்.

வெளித்தெரிகின்ற இன்றைய தமிழினத்தின் பாதிப்புகளுக்கு சற்றேனும் ஆறுதல் தருகின்ற நட்ட ஈடுகளை மீளளித்து, தீர்வுக்குள்ளான தமிழர்களின் 'வாழ்வாதாரம்' , 'கல்வி', 'சுகாதாரம்' , 'குறைந்தபட்ச சுதந்திரம்', 'கொஞ்சமாவது அரசியல் உரிமை' போன்றவற்றை தயங்கித் தயங்கியாவது பெற்றுக் கொடுக்க முடியும் என்கின்ற வாசகங்களையே தத்தமது தற்போதைய இலங்கையுடனான வெளிவிவகாரக் கொள்கையாக திருத்தி எழுதியுள்ளன ஐ.நா. வின் சார்பில் தமிழினத்துக்காக பரிந்து பார்க்கின்ற நாடுகள்!

போர்க் குற்றச்சாட்டுகள் தொடர்பான விவாதங்களின்போது பூதமாக கிளம்பக் கூடும் என எதிர்வு கூறப்பட்ட முன்னாள் இராணுவத் தளபதியை வாக்குரிமை பிடுங்கப்பட்ட "டம்மிப் பீஸாக" வெளியே விட்ட ஆட்சியாளர்கள், எந்தப் பொல்லாத உலகமும் தமக்கெதிராக பாய்ந்து கடித்து விடப்போவதில்லை, குரைப்பதோடு மட்டும் நின்று விடுவார்கள் என இன்னமும் தீர்க்கமாக நம்புகின்றவர்களே! இங்கே பரிதாபம் தமிழனுடையது என்னவென்றால், அவர்களின் நம்பிக்கை, துளியும் பொய்த்து விடப் போவதில்லை என்பதால்!! சனல் - 4 உள்ளிட்ட பல்லூடகங்களிலும் போர்க் குற்றச்சாட்டுக்களின் களக் கருவிகளாக காட்டப்பட்ட ஓர் இராணுவத்தினையேனும் இலங்கை அரசின் அனுமதி கிடைத்தாலும்கூட சர்வதேச நீதிமன்றத்தின் முன்னால் கொண்டு வந்து பேச வைத்துவிட முடியாது. அப்படியே யாரோவொரு உண்மை விளம்பியை புலத்துமிழர்களின் பெருமுயற்சியின் பயனாக உலக சபைகளில் சாட்சிப்படுத்துகின்ற பொழுதும் கூட குறித்த நபர் "மழைக்குக் கூட" இலங்கை இராணுவ முகாம்களுக்குள் ஒதுங்கியவரல்ல என்று அழிச்சாட்டியம் செய்து பிரமாஸ்திரங்களையும் முறித்துப் போடும் ஆதிக்க [illegible]மை "இலங்கை அரசு" என்கின்ற [illegible]ட்டமைப்புக்கு உண்டு. ஆனால், போரில் பங்கெடுத்துள்ள இரண்டு தரப்புகளுமே, மனித உரிமை மீறல்களை செய்துள்ளமைக்கான போதிய ஊகங்கள் உள்ளன" என அறிக்கையிடப்பட்டுள்ள ஐக்கியநாடுகளின் மனித உரிமைகள் சபையின் ஒரேயொரு வசனத்திலுள்ள சந்தேகத்தின் பயனை, ஆதாயமாகக் கொண்டு புலிப் போராளிகள் மீது சுமத்தப்படப் போகின்ற போர்க் குற்றச்சாட்டுகள் என்ன வகை விளைவுகளை தரப் போகின்றன?

"தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தில் இணைந்து கொண்ட திகதி", "பயிற்சி பெற்ற காலம்", "பயிற்சி பெற்ற இடங்கள்", "பங்கெடுத்துள்ள சண்டைக் களங்களும், காலங்களும்", "கட்டளையிட்ட, வழி நடத்திய தளபதிகளின் பெயர்கள்", "இறுதிப் போருக்கு முன்னதாக பங்கெடுத்த தாக்குதல்கள்", "இறுதிப் போரில் பங்கெடுத்த விதம்", "பாவித்த ஆயுதங்களின் விவரங்கள்" போன்ற உதாரண விடயங்கள் தொகுக்கப்பட்ட ஒப்புதல் எழுத்துருவ வாக்குமூல ஆவணங்களுடன் நேரில் அழைக்கப்பட்டு விசாரிக்கப்படும் அபாயத்துடன் தயார் செய்யப்படும் முன்னால் போராளிகளின் மீது சுமத்தப்படுகின்ற குற்றச்சாட்டுகள், காணொலிகளிலும், புகைப்படங்களிலும் இடைக்கிடை முகம் காட்டுகின்ற இராணுவச் சிப்பாய்களுக்கு எதிராக வைக்கப்பட்ட உரிமை மீறல் குற்றச்சாட்டுகளிலும் பார்க்க எத்தனை மடங்கு பலமானவை? குடும்பத்தினர் மீதான உயிர் அச்சுறுத்தல்களுக்காவோ, பேசப்பட்ட பேரங்களுக்காகவோ 2009 இன் இறுதி மூன்று மாதங்களில் அகதிகளாக எத்தி விளையாடப்பட்ட தமிழர்களை மனித கேடயங்களாக பயன்படுத்தியமைக்கான ஒப்புதல் வாக்குமூலங்களை மனப் பாடம் செய்வதற்கான ஆயத்தங்களுக்குள் தள்ளப்பட்டுள்ள இந்த இளைஞர்களின் மீதான புற அழுத்தங்கள் எவரால் கண்காணிக்கப்பட முடியும்?

இன்றைய பொழுதில் மீதித் தமிழர்கள் மானசீகமாக நன்றி சொல்ல வேண்டுமாயின், அது போர்க் களத்திலேயே தம் உயிரை இழந்த அல்லது இழக்கச் செய்யப்பட்ட போராளிகளுக்கு மட்டுமே! அவலம் நிறைந்த சாவினையும் கூட, அவதானம் நிறைந்த முன்னேற்பாட்டுடன் எதிர்கொண்டு மௌனித்துப் போன மற ஆத்மாக்களுக்கு என்ன கைமாறு செய்துவிடப் போகின்றோம்.

குறைந்த பட்ச உரிமைகளுக்கான வரிப்பாக உலக நாடுகளினால் கடிவாளமாகப் பயன்படுத்தப்படுகின்ற போர்க் குற்றச்சாட்டுகளை முறியடிப்பதற்கான புதைமணற்குழிகளாக இலங்கை ஆட்சியாளர்களினால் முன் நிறுத்தப்படுகின்ற ஒவ்வொரு தமிழ் இளைஞனின் வீட்டில் மட்டுமல்லாது எல்லா தேசிய தமிழ் உள்ளங்களிலும் அவர்கள் என்றைக்கும் கதாநாயகர்களே! ஏற்கனவே காட்டிக் கொடுத்து, "எல்லாமும்" பெற்றுப் பெரியவர்களாகி விட்டவர்களின் தற்குறித்தனத்தின் முன்னால், 'இயலாமை'யின் இறுதிப் பிடிக்குள் நெருங்கிப் பலியாகும் உங்களின் நினைவுகளை நெஞ்சழுந்தச் சுமப்போம் என்றும்! பொல்லாத் தமிழர்களே அவர்களின் புண்ணான மேனிகளை தினவெடுத்த சொல்லம்புகளால் சுட்டுவிடாதீர் மீளவும்.

*"வெகுநேரம் ஒரே இடத்தில்*
*பறந்து கொண்டிருக்கின்றாயே*
*சிறகுகள் வலிக்கவில்லையா?'*
*என விசாரித்தபடி கடந்து சென்ற*
*ஒரு பெரும் பறவையை*
*விநோதமாக பார்த்தபடி*
*காற்றில் மிதந்து கொண்டிருந்தது*
*பட்டம்"*

காற்றின் வல்லமை யாவர்க்கும், சமாந்தரமாகின்ற போதிலும், "நூலின்" ஆதிக்கம் பட்டங்களை, பறவைகளுக்கு நிகராக எல்லை உடைக்க விடுவதில்லை என்கின்ற 'கவிஞர் மகா' எண்ணங்களால் எம்முடன் நெருங்கி நிற்கின்றார். அறுந்து தீரட்டும், அதிகாரத் தளைகள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



ஒக்.10
உலக உளநல
தினம்

# பொறுப்புக்கூற யாருளர்....?

பீ.ஏ.அந்தோனிமார்க்

நீ ஒக்ரோபர் 10. சர்வதேச உளநல தினம் வருடா வருடம் ஒக் ரோபர் மாதம் 10 ஆம் திகதி உலகளாவிய ரீதியில் அனுஷ்டிக்கப்பட்டு வருகின்றது. இலங்கையில் மன அழுத்தத்தைக் குறைப்போம் என்ற தொனிப் பொருளில் மனநலதினம் இன்று கொண்டாடப்படுகின்றது. உலக சுகாதார ஸ்தாபனத்தின் ஆய்வறிக் கையின்படி மன அழுத் தத்தால் உலகம் முழுவதும் 350 மில்லியன் மக்கள் பாதிக்கப் பட்டுள்ளதாக வும் ஆண்களை விடப் பெண்களே இரு மடங்கு அதிகமாக மன அழுத் தத்துக்கு உள்ளாகி வருவதாகவும் கூறப்படுகின்றது.

இலங்கையிலும் கடந்த போரால் பல ஆயிரக் கணக்கான பெண்க ளும் சிறுவர்களும் மனநோயால் பாதிக்கப்பட்டுள்ளார்கள். ஒரு மனிதன் ஆரோக்கியமாக வாழ வேண்டுமாயின் அவரது உடல், மனம், சமூகம், ஆத்மீகம் என்பன நல்ல நிலையில் இருக்க வேண் டும். இவை அனைத்தும் அவனு டைய தனி வாழ்வில் பிளவுபடா மல் ஒன்றோடு ஒன்று தங்கி பின் னிப் பிணைந்து செயற்படுகின்றன. உடல் நலத்துடன் உளநலமும் சீராக அமையுமாயின் நிச்சயமாக எம்மால் நூற்றாண்டுகளுக்கு மேலாக வாழ முடியும். மனநிலை பாதிக்கப்படாது இருக்க வேண்டு மாயிருந்தால் ஒருவர் தனது நிலையை உணர்ந்து அமைதி பேணி வாழ்க் கையை சுமுகமாக அமைத்தல் அவசியமாகும். கோபம், பயம், பதற்றம், மனநெருக்கீடு என்பன எமது மனத்தை நிலைகுலைய வைக்கிறது. உடலில் உள்ள எல்லா உறுப்புக்களையும் மூளை, இருதயம் உட்பட அனைத்தையும் இயக்குவது எமது மனமேயாகும். நல்ல உடலில் நல்ல உள்ள இருக்கும் என்கிறார்கள் உணர்தல், சிந்தித்தல், அறிதல் முதலான வைகளே மனதின் இயல்பு நிலை களென குறிப்பிட லாம். ஐம்புலன் களினால் ஏற்படும் உணர்வுகள் நரம்புகள் மூலம் மூளைக்கு எடுத்துச் செல்லப்படு கின்றன. கண் மூலம் பார்க்கிறோம், வாய் மூலம் பேசுகிறோம், மூக்கின் மூலம் சுவாசிக்கின்றோம், செவி மூலம் கேட்கிறோம். மெய் மூலம் தொட்டு உணர்கிறோம். மூளைக்கு எடுத்துச் செல்லப்பட்ட ஐம்புலன்களின் உணர்வு கள் எண்ணங்களாக மாறிவிடுகின்றன. எண்ணங்களாக மாறிய எமது உணர்வுகள் அவை தொடர்பான அறிவுடையவர்களாக எம்மை ஆக்கு கின்றன.

இந்த உணர்வுகள், எண்ணங்கள், அறிவு முதலானவற்றின் தொகுப்பே எமது மனமாகும். சுற்றாடல் நிலை காரணமாக ஏராளமான சமூக அல்லது குடும்ப நோய் கள் பரவலாம். அல்லது விசேட சூழ் நிலையில் சிறுவர்களும் பாதிக்கப்படக் கூடும். பெற்றோரின் தரக்குறைவான சமூ கப் பங்களிப்பு, குடும்பச்சச்சரவுகள், பலாத் காரதாக்குதல்கள், பாலியல் துஷ்பிரயோகங் கள், சரீர துஷ்பிரயோகங்கள், கடமை உணர்வின்மை போன்றவற்றை இந்த மனநோய்களுக்கான காரணங்களாகக் குறிப்பிடலாம்.

கடந்த 30 ஆண்டுகளாக ஏற்பட்டிருந்த போர், வெடிக்குண்டுத் தாக்கம், பல அதி நவீன ஆயுதங்கள் எறிகணைகள், ஏவுக ணைகள், அணு ஆயுதங்கள், துப்பாக்கிச் சூடுகள், நவீன போர் விமானத் தாக்கு தல்கள், இயற்கை அழிவுகள், பொருள், வீடுகளின் அழிப்புக்கள், அகதிகளாக இடம் பெயர்ந்த சீரழிந்த வாழ்க்கை போன்றன பெரும் பாதிப்புக்களை ஏற்படுத்தியுள்ளன. பொதுமக்கள் மத்தியிலும் சிறுவர்கள் மத்தியிலும் துன்ப கரமான நிலைகளை அதிகரிக்கப் பண்ண அவை மனநோய்களை ஏற்படுத் தியுள்ளன. இரசாயன குண்டுகள், எறிகணை களைப் பாவித்ததன் மூலம் மக்கள் பலர் மற்றவர்களின் பிரசன்னத் துக்கு முன்னால் எரிந்து சாம்பலானதையும் கண்டுள்ளார்கள். இறந்த பல ஆயிரக் கணக்கான மக்களைப் பெரிய கிடங்கு களை வெட்டி புல்டோசர் மூலம் அதற்குள் இட்டு மூடியுள்ள சம்பவங்களும் உண்டு. கணவனை இழந்த விதவைகள், தாய், தகப்பனை இழந்த சிறுவர்கள், போன் றோரின் மனநலம் பாதிக்கப்பட்டு, இன்று பலர் பைத்தியம் பிடித்து அலைகிறார்கள். இன்னும் பலர் சிறைகளில் அடைத்து வைக்கப்பட்டு சித்திரவதைகளுக்குள் அகப்பட்டு, பாலியல் வன்முறைகளுக்குள் அகப்பட்டு சொல்லொணாத் துயர்களை அனுபவித்துக் கொண்டிருக்கிறார்கள். இந்த நாட்டில் ஏற்பட்டிருக்கும் இந்த நிலைக்கு யார் பொறுப்பு? இவர்களால் நியாயமான தரமுள்ள வாழ்க்கையை அனு பவிக்க முடியுமா? இதில் சம்மந் தப்பட்டவர்கள் பொறுப்புக் கூறுவார்களா? சர்வதேசமும் ஐ.நா. சபையும் இந்த விதமான மனித நேயத்துக்கு எதிரான செயற்பாடுகளை இல்லாதொழிக்குமா? கல்விச் சேவை யானது உணர்வு பூர்வமான அல்லது மன வளர்ச்சி சம்பந்தமான பாடத் திட்டங் களைக் கொண்டுள்ளதா?

இந்த குறிப்பிட்ட மனநிலை பாதிப்பும், அல்லது உடல் நிலை பாதிப்பும் சிறுவர் களின் கல்வி வளர்ச்சியையும் சமூக நற் பழக்கங்களையும் பாதிப்படையச் செய்கின் றன. நீண்டகால நோக்கில் இந்தப் பாதிப் பானது நேரகாலத்துடன் கவனிக்காப் விட்டால் அல்லது உதவி கொடுக்கா விட் டால் சிறுவர்களினதும் வளர்ந்த வர்களினதும் எதிர்காலம் பாதிப்படை வதற்கு காரணமாக விளங்கலாம். மனநோய் பரவுவது பற்றி ஏராளமான விஞ்ஞான தத்துவங்கள் உண்டு. வாழ்க்கை பூராகவும் மனநோயால் பாதிக்கப்படுதல், நோயின் இறுதி விளைவு, இது சம்பந்தமான தரவுகள், நீண்டகால மான சிகிச்சை முறைகள் இவற்றில் இருந்து பல படிப்பினை களைக் காணமுடியும்.

உலகம் முழுவதும் இந்த விதமான நோய் ஏற்படத்தான் செய்கிறது. சுகாதார சேவையும், கல்விச் சேவையும் தற்போது அதிகரித்து வரும் குடிசன பெருக்கத்துக்கு ஏற்றவாறு தகுந்த சேவைகளை அளிக்கக் கூடியதாக செயற்றிட்டங்கள் தயாரிக்கப்படல் வேண்டும். வடக்கு , கிழக்கு மாகாணத் தைப் பொறுத்தவரை அனைவரும் ஏதாவது ஒரு விதத்தில் மனநோயால் பாதிக்கப்பட்டுள்ளார்கள். இங்குள்ள வைத்தியசாலை சேவைகள் மிகவும் குறைவு. தரமான வைத்தியர்களுக்குத் தட்டுப்பாடு நிலவுகிறது. ஆகையால் இதற்கு ஒரு தேசிய நிரந்தர விழிப்பு ணர்வுத் திட்டம் மிகவும் அவசியமா கும். அதன் மூலம் இந்த மனநோயை இனம்கண்டு அதை நிவர்த்தி செய் வதற்கு உள்ள முக்கியமான தடைக ளைக் கண்டு பிடிப்பதன் மூலம் முன் னேற்பாடான மாற்று வழிமுறைகள் கிடைக்கக் கூடும். நாம் எல்லோரும் மற்றவரைத் தாங்கும் சுமைதாங்கி களாக மாறினால் நாட்டைக் காப்பாற்ற முடியும்.

# அன்பாலே அரவணைப்போம்...

ச.டினோஜ்
இணை மருத்துவ விஞ்ஞானங்கள்
யாழ்.பல்கலைக்கழகம்.

இன்று உலக உளநல தினமாகும். உளநலம் பற்றியதான விழிப்புணர்வை பொதுமக்களிடையே ஏற்படுத்தவும், உளநோய்களைத் தடுப்பது, தடுப்பு நடவடிக்கைகள் மற்றும் சிகிச்சை முறைகளை ஊக்குவிப்பது என்பன இத்தினத்தின் நோக்கங்களாகும்.

உளநோயானது மற்றைய நோய்களைப் போல் சமூகத்தில் காணப்படுகின்ற சாதாரண நோயாகும்.

பதகளிப்பு நெருக்கீட்டிற்கு பிற்பட்ட நோய், மனோபாவக் கோளாறு, உளப்பிளவைப் போன்ற பல நோய்கள் உளநோயினுள் அடங்குகின்றன.

உளநோய்களும் நீரிழிவு, உயர்குருதியமுக்கம் போன்ற நோய்களைப் போல உயிர் இரசாயன கூறுகளின் ஒழுங்கீனம், பரம்பரைக் காரணிகள் போன்ற பல காரணி களினால் ஏற்படுகின்றன. அத்துடன் உடல் உள நெருக்கீடுகள், பெற்றோரின் வளர்ப்பு முறை, வீட்டு வன்முறைகள், சிறுவர் துஷ்பிரயோகம் மற்றும் பாலியல் துஷ்பிரயோகம் போன்ற சமூகம் சார்ந்த தவறுகளும் உளநோய்களைத் தோற்றுவிப்பதில் பங்களிக்கின்றன. ஆனால் சமூகத்தின் பார்வையில் உளநோயாளர்கள் மீதான கவனிப்பு கேள்விக்குரியதாகவே இருக்கின்றது.

ஒருவர் உளநோயாளியாக இருந்தால், அவரை சமூகத்தில் ஏற்றுக்கொள்ளத் தயங்குகின்றோம். சேர்ந்து இருப்பதற்கோ உதவி செய்வதற்கோ பின்வாங்குகின்றோம். இத்தகைய செயற்பாடுகள் அவர்களுடைய நோய் நிலைமையினை நீடிக்கச் செய்கின்றன.

உளநோயால் பாதிக்கப்பட்ட பெரும்பாலானோர் மிக மென்மையானவர்கள். இவர்கள் அன்பும் ஆதரவும் தேவைப்படும் நிலையில் உள்ளவர்களாகையால் சாதாரண மனிதர்களை விட இலகுவாக கலந்துறவாடக் கூடியவர் கள். சில உளநோயாளர்களே சில சமயங்களில் மூர்க்கத் தனமாக செயற்படுகின்றார்கள். உண்மையில், இவர்கள் ஆபத்தானவர்கள் அல்லர். இவர்களின் நோய் நிலைமை காரணமாகவே இவ்வாறு நடந்து கொள்கின்றார்கள். அனேகமான சந்தர்ப்பங்களில் இந்நிலையைத் தூண்டி விடும் வகையில் சிலரின் நடவடிக்கைகள் இருப்பது கவலைக்குரிய விடயமாகும்.

மருத்துவத்துறையில் ஏற்பட்டுவரும் முன்னேற்றம் காரணமாக நவீன மருந்துகளின் பாவனை, உளநோயின் தீவிரத்தைக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவந்துள்ளதால் மூர்க்கத்தனமாக செயற்படும் நோயாளிகள் மிக அரிதாகவே உள்ளனர்.

தீவிர உளநோய் நிலைமைகளில் சில நோயாளிகளுக்கு மாயப்புலனுணர்வு (Hallucination) ஏற்படுவதை உணரலாம். அதாவது ஒரு இடத்தில் இல்லாத உருவங்கள் (மனிதர்கள், தெய்வசிலை, கொடூர உருவங்கள்) அவர்களின் கண்களுக்கு புலப்படுவது போலவோ, அல்லது ஒலிகள் (தெரிந்தவர்களின் குரல்,இரைச்சல்) அற்ற வேளையில் அவ்வொலிகள் அவர்களின் காதுகளில் கேட்பது போலவோ உணரலாம். இதனால் தமக்குள் கதைத்தல், தமக்குள் சிரித்தல் போன்று வித்தியாசமான முறையில் நடந்து கொள்ளக்கூடும். ஆனால் நாம் இவற்றை விளங்கிக் கொள்ளாமல் அவர்களுடன் சண்டையிட்டு கேலி செய்கின்றோம். அவ்வேளையில் அவர்களுடன் மனம் விட்டு கதைப்பதனால் அவர்களை மாயப்புலனு ணர்வுகளினால் துன்புறுவதில் இருந்து ஓரளவுக்கேனும் திசைதிருப்பமுடியும்.


பெரும்பாலான உளநோய்களை மருந்துகள் குணப்படுத்துகின்றன. ஆனால் நோய் குறைவடையும் பொழுது மருந்தினை எடுப்பதை தவிர்ப்பதனால் மீண்டும் நோய் நிலைமை தீவிரமடைகின்றது. எனவே குடும்பத் தினரும் சமூகத்தினரும் இதில் கவனம் செலுத்தி நோயாளி தொடர்ந்து மருந்து எடுப்பதற்கும், சிகிச்சையைத் தொடர்வதற்கும் உதவி செய்யவேண்டும்.

நீண்ட காலமாக கவனிக்கப்படாத சில நோயாளிக ளுக்கு மருந்துகள் மாத்திரமின்றி வேறுபல சிகிச்சை முறைகளும் பூரணகுணமடைவதற்கு தேவைப்படுகின் றன. இதனால் வைத்தியசாலை, விடுதிகள், உளநோயா ளர்களுக்கான புனர்வாழ்வு நிலையங்கள் (உதாரணமாக குடில்) போன்றவற்றில் பல துறைசார்ந்த குழுவினரால் நோயாளிகள் பராமரிக்கப்பட்டு வருகின்றனர். இங்கு இவர்களுக்கு தமது நாளாந்த கடமைகளைச் செய்ய, தாமாகவே மருந்துகளை எடுக்க, தொழில் முயற்சிகளில் ஈடுபட பயிற்றுவிக்கப்பட்டு வருகின்றனர்.இவ்வாறு நோயாளிகள் பலரின் நீண்டகால முயற்சிகளினால் குணப் படுத்தப்பட்டு புதிய மனிதர்களாக சமூகத்திடம் கைய ளிக்கின்றனர். ஆனால் பல சந்தர்ப்பங்களில் குடும்பத்தினரும் சமூகத்தினரும் அவர்களை ஏற்க மறுப்பதாலும், சமூக சம்பிரதாய விழாக்களில் இருந்து புறந் தள்ளுவதாலும், சமூகத்தில் இருந்து ஒதுக்குவதாலும் மீண்டும் அவர்கள் நோயாளிகளாக மாற்றிவிடப்படு கின்றார்கள். இது மோசமான நிலைமையாகும்.

எனவே குடும்பத்தினரும் சமூகத்தினரும் அவர்களோடு அன்பாகப் பழகி, அவர்களுக்கு சமூகத்தில் இடம்கொடுத்து சக மனிதர்களாக ஏற்றுக்கொள்ளவேண்டும்.

மேலும் சமூகத்துக்காக சேவை செய்பவர்கள் இவர்களின் புனர்வாழ்வு நிலையங்களை அபிவிருத்தி செய்ய உதவுவதோடு, அவர்களுக்க தொழில் வாய்ப்புக் களை வழங்குவதற்கும் முன் வந்தால், மேலும் பல நோயாளிகளைக் குணமடையச் செய்து ஆரோக்கியமான தமிழ் சமுதாயத்தை கட்டியெழுப்ப முடியும்.

**ஒருவர் உளநோயாளியாக இருந்தால், அவரை சமூகத்தில் ஏற்றுக்கொள்ளத் தயங்குகின்றோம். சேர்ந்து இருப்பதற்கோ உதவி செய்வதற்கோ பின்வாங்குகின்றோம். இத்தகைய செயற்பாடுகள் அவர்களுடைய நோய் நிலைமையினை நீடிக்க செய்கின்றன.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நிதானமே பிரதானம்

மந்தைகளுக்குச் சொந்தக்காரன் ஒருவன் தன் இரண்டு ஆடுகளை மேய்த்துச் சென்றான். ஓரிடத்தில் அடர்த்தியான அதேசமயம் செழிப்பான புல்வெளி இருந்தது. அந்த இடத்தில் தன் இரண்டு ஆடுகளையும் அவன் மேய விட்டான். அவனுடைய இரண்டு ஆடுகளில் ஒன்று நிதானப் புத்தியுடையது. மற்றொன்று பேராசையும், நிதானமில்லாக் குணத்தையும் கொண்டது. செழிப்பான புல்வெளியைக் கண்ட அந்தப் பேராசைக் குணம் கொண்ட ஆடு புல்வெளி அனைத்தையும் மேய்ந்துவிடுவதைப் போல் தன் நிதானமற்ற போக்கைக் காட்டத் தொடங்கியது.

ஓரிடத்தில் நிலைத்து நிற்காமல் அங்கொன்றும்... இங்கொன்றுமாக புற்களைக் கடித்துக் கொண்டே அது அலைந்தது. மனிதரும் பேராசையில் ஓரிடத்தில் நிலைத்து நின்று தொழில் செய்யாமல் மாறிக் கொண்டே இருப்பார்கள். ஓர் இடத்திலும் அவர்கள் வெற்றியினைக் காணாமல் மனம் அலை பாய்ந்தபடி வேறு இடங்களுக்குச் செல்வார்கள். எந்த இடத்திலும் அவர்கள் மனம் நிலைத்து நிற்காது. இந்தத் தொழில் செய்வதைவிட அந்தத் தொழிலில் அதிக பணத்தைக் குவித்து விடலாம் என்று கணக்குப் போடுவார்கள்.

அந்தத் தொழிலில் இறங்கியதும் வேறு தொழிலுக்குத் தாவுவார்கள். இப்படி நிலையற்ற புத்தியுடன் அலைந்து கொண்டிருப்பவர்கள் உருப்படியாக எதையும் செய்து முடிக்கமாட்டார்கள் அல்லவா....? அதேபோல் பேராசைக் குணம் படைத்த அந்த ஆடு ஓர் இடத்தில் நின்று மேயாமல் தானே எல்லாப் புற்களையும் மேய்ந்து விட வேண்டும் என்கிற ஆத்திர உணர்வுடன் ஓடிக்கொண்டே இருந்தது.

ஆனால், மற்றொரு ஆடான பொறுமைக்குணம் படைத்த ஆடு அந்தச் செழிப்பான புல்வெளியைப் பார்த்தும்கூட பதற்றம் ஏதும் கொள்ளவில்லை. ஒரே இடத்திலிருந்து கொண்டு பொறுமையாக மேய்ந்து கொண்டிருந்தது. ஒரு குறிப்பிட்ட காலம் கடந்ததும் ஆட்டுக்குச் சொந்தக்காரன் அவற்றைத் தன் வீட்டுக்கு கொண்டு சென்றான். அந்த நேரத்துக்குள் பொறுமையாக மேய்ந்து கொண்டிருந்த ஆடு தன் வயிறு நிறையும் அளவுக்கு மேய்ந்து பசி தீர்ந்து சென்று கொண்டிருந்தது.

ஆனால், பேராசைக் குணம் கொண்ட ஆடு எல்லாவற்றையும் மேய்ந்து விட வேண்டும் என்கிற அவசர புத்தியில் இங்கொன்றும், அங்கொன்றுமாகப் புற்களைக் கடித்துக் கொண்டே இருந்ததால் அதன் பசி தீரவில்லை. பட்டினியுடன் அது நிதானமில்லாமல் சென்று கொண்டிருந்தது. இந்த இரு ஆடுகளின் நிலைமைதான் இப்போது வையகத்தில் வாழும் மனிதர்களின் நிலையாக உள்ளது.

நிதானமும், விவேகமும் கொண்ட மனிதர்கள் தங்களுக்குக் கிடைத்திருக்கும் வாய்ப்பை மிகச் சரியாகப் பயன்படுத்திக் கொண்டு வாழ்க்கைப் பாதையில் அமைதியான பயணத்தினைத் தொடர்ந்து கொண்டிருக்கிறார்கள். வாய்ப்பு என்பது ஒவ்வொரு வீட்டுக் கதவையும் தட்டிக் கொண்டேதான் இருக்கிறது. ஏனெனில், இப்போது நடந்து கொண்டிருப்பது கடவுளின் இராஜ்ஜியம் தான். அவருடைய இராஜ்ஜியத்தில் ஏழை, பணக்காரன், படித்தவன், பாமரன், உயர்ந்தவன், தாழ்ந்தவன் என்கிற வேறுபாடுகள் எதுவும் கிடையாது.

எல்லோருக்கும் ஒவ்வொரு திறமையைக் கொடுத்தே அவர் இந்த வையகத்துக்கு அனுப்புகிறார். கோடிக்கணக்கில் ஒருவரிடம் செல்வம் குவிந்திருக்கும். ஆனால் ஒருவேளை உணவு கூட அவருடைய விருப்பத்திற்குச் சாப்பிட முடியாது. அந்த அளவுக்கு நோய்கள் அவருடைய உடலில் குடி கொண்டிருக்கும். சாதாரணமான ஒருவன் எந்த உணவையும் சாப்பிடக்கூடிய நிலையில் உடல் ஆரோக்கியத்துடன் இருப்பான். ஒருவனுக்கு செல்வச் செழிப்பை வழங்குகிற இறைவன் மற்றொருவனுக்கு அதைத் தராவிட்டாலும், உடல்நலம் என்கிற ஆசீர்வாதத்தை அளிக்கிறார்.

அதேபோல் ஒவ்வொரு மனிதர்களுக்கும் இருக்கும் குறையை வேறு ஒன்றின் மூலம் அவர் சமப்படுத்தி விடுகிறார். வேறுபாடுகளே இல்லாமல் போனால் இந்த உலகம் சூனியம் ஆகிவிடும். இயக்கத்துக்கு வேலை இருக்காது. இயக்கம் இல்லாத உலகம் இருந்ததும் ஒன்றுதான். இல்லாமல் போனாலும் ஒன்றுதான்.



ஆகவே மனிதர்களிடம் காணப்படும் வேறுபாடுகள் இறைவனின் வரப்பிரசாதம் என்றே கொள்ள வேண்டும்.

**பரமஹம்ஸ ஸ்ரீபரத்வாஜ் ஸ்வாமிகள்**

# சூழலை வளமாக்க மரங்களை வழங்கிய வடமராட்சி நல்லொழுக்க சம்மேளனம்



(கடந்த வாரத் தொடர்ச்சி..)

**கர்ணன்**

பல இடங்களிலும் பலவழிகளிலும் நல்லொழுக்க சம்மேளனத்தால் விழிப்புணர்வு நிகழ்வுகள் நடத்தப்பட்டன. அதில் ஒரு நிகழ்வான கொடிவாரத்தின் மூலம் சேகரிக்கப்பட்ட 6 ஆயிரம் ரூபா கரவெட்டி விக்கினேஸ்வராக் கல்லூரியில் கல்வி பயிலும் மிகவும் வறிய மாணவர்களுக்கு கற்றலுக்கான உபகரணங்கள் வழங்கப்பயன்படுத்தப்பட்டது.

மதுப்பாவனை, புகைப்பிடித்தல், போதைப்பொருள் பாவனைத் தடுப்பு விழிப்புணர்வுத் திட்டத்தின் கீழ் கிராமங்கள், பாடசாலை மட்டங்களில் விழிப்புணர்வு நாடகங்கள் விழிப்புணர்வுக் கருத்தரங்குகள் சர்வதேச நல்லொழுக்க தின நிகழ்வாக 2008 ஆம் ஆண்டு ஒக்ரோபர் 3 இல் கொடிவாரம், இளைஞர், யுவதிகளுக்கான விழிப்புணர்வுப் பயிற்சி வகுப்பு என்பன நடத்தப்பட்டன.

இந்தத் திட்டத்தின் செயற்பாடாக பருத்தித்துறை, கரவெட்டி ஆகிய பிரதேச செயலர் பிரிவுகளில் தலா ஒவ்வொரு கிராமத்திலும், பாடசாலையிலும் விழிப்புணர்வு நாடகங்களும், கருத்தரங்குகளும் நடத்தப்பட்டன. விழிப்புணர்வு நாடகத்தினால் 976 பயனாளிகளும், விழிப்புணர்வுக் கருத்தரங்கில் 476 பயனாளிகளும் பயனடைந்தார்கள். கொடிவாரம் கரவெட்டிப் பிரதேச செயலர் பிரிவில் தலா 3 கிராமங்களிலும் 3 பாடசாலைகளிலும், பருத்தித்துறை பிரதேச செயலர் பிரிவில் 2 கிராமங்களிலும், 3 பாடசாலைகளிலும், நடத்தப்பட்டு 610 பயனாளிகள் பயன் பெற்றார்கள். 2008 ஆம் ஆண்டு ஒக்டோபர் இல் நடத்தப்பட்ட நல்லொழுக்க தினத்தின் மூலம் யாழ்.மாவட்டத்தில் 600 பயனாளிகள் பயனடைந்தார்கள். இளைஞர், யுவதிகளுக்கான பயிற்சி மூலம் பருத்தித்துறை, கரவெட்டி பிரதேச செயலர் பிரிவுகளிலிருந்து 177 பயனாளிகள் பயன் பெற்றார்கள்.

நல்லொழுக்க நிறுவனத்தினால் 2006 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்ட அந்திய காலத் திட்டத்தில் 155 அங்கத்தவர்கள் அங்கம் வகிக்கின்றார்கள். இதில் ஒரு அங்கத்தவர் இணைய வேண்டுமானால் வருடாந்தம் 100 ரூபா சந்தா செலுத்த வேண்டும். இதன் பிரதிபலனாக இணைந்த அங்கத்தவரது குடும்பத்தில் யாராவது இறப்பின் இழப்பீட்டுத் தொகையாக 5 ஆயிரம் ரூபா வழங்கப்படும். இந்த நிதியாண்டில் (2008) சதாவதானி கதிரைவேற்பிள்ளை சிக்கன கடனுதவு கூட்டுறவுச் சங்கத்தின் அங்கத்தவர் பசுபதி சபாபதிப் பிள்ளையின் இழப்பீட்டிற்காக 5 ஆயிரம் ரூபா இழப்பீட்டுத் தொகையாக வழங்கப்பட்டது.

> **2008 ஆம் ஆண்டில் சூழல், சுற்றாடல், பாதுகாப்புச் திட்டத்தின் கீழ் பயன்தரு மரங்கள், நிழல்தரு மரங்கள் என்பன, அங்கத்துவ கிராமங்களிடையே சூழல் வளத்தையும், வருமானத்தையும் உருவாக்கிக் கொள்ளும் நோக்கில் வடமராட்சி நல்லொழுக்க நிறுவனத்தினால் வழங்கப்பட்டன .**

2008 ஆம் ஆண்டில் சூழல், சுற்றாடல், பாதுகாப்புச் திட்டத்தின் கீழ் பயன்தரு மரங்கள், நிழல்தரு மரங்கள் அங்கத்துவ கிராமங்களிடையே சூழல் வளத்தையும், வருமானத்தையும் உருவாக்கிக் கொள்ளும் நோக்கில் வடமராட்சி நல்லொழுக்க நிறுவனத்தினால் வழங்கப்பட்டது.

கரவெட்டிப் பிரதேச செயலாளர் பிரிவில் 10 கிராமங்களுக்கு 232 பயன்தரு மரங்களும், 20 நிழல்தரு மரங்களும் பருத்தித்துறை பிரதேச செயலாளர் பிரிவில் 14 கிராமங்களுக்கு 346 பயன்தரு மரங்களும், 28 நிழல்தரு மரங்களும் இத்திட்டத்தின் கீழ் வழங்கப்பட்டன.

இவ்வாண்டில்(2008) பிரத்தியேக செயற்பாடாக நிஷா இடர் அபிவிருத்தி உதவிகள், பங்குடைமை நடவடிக்கைகள், பாலர் கல்வி என்பன பிரத்தியேக செயற்பாடுகளாக அமைந்தன. இவ்வாண்டில் ஏற்பட்ட 'நிஷா' மழை, புயல் , இடர் அழிவு காரணமாக அகதிகளாக இடம்பெயர்ந்து பொது இடங்களில் தங்கியிருந்த மக்களுக்கு உணவு வழங்குவதற்கென பருத்தித்துறை பிரசே செயலகத்துக்கு 10 ஆயிரம் ரூபா நன்கொடையாக வழங்கப்பட்டது.

இந்த நிறுவனம் இங்குள்ள மகளிர் தையல் நிலையத்துடன் இணைந்து வடமராட்சி நல்லொழுக்க நிறுவன மகளிர் தையல் நிலையம் என்ற பெயரில் 5 இலட்சம் ரூபாவை முதலீடாக வழங்கி தானும் ஒரு பங்காளராக இணைந்தது. இந்த நிதியாண்டில் 12 பாலர் பாடசாலை ஆசிரியர்களுக்கு ஊக்குவிப்புத் தொகையாக தலா 3 ஆயிரம் ரூபா வீதம் 36 ஆயிரம் ரூபாவை நிறுவனம் ஒதுக்கீடு செய்து வழங்கியது.

போரூட் திட்டத்தின் கீழ் இவ்வாண்டில் 4 இலட்சத்து 45 ஆயிரம் ரூபாவும், மது பாவனையைத் தடுத்தல் விழிப்புணர்வுச் செயற்பாடுகளுக்கென 2 இலட்சத்து 97 ஆயிரத்து 500 ரூபாவும், மர நடுகைக்கென 92 ஆயிரத்து 500 ரூபாவும் வாழ்வாதாரக் கடன் திட்டங்களுக்கென 12 இலட்சத்து 50 ஆயிரம் ரூபாவும், நிறுவனத்துக்கு கட்டடம் அமைக்கவென 20 இலட்சம் ரூபாவும், நிர்வாகச் செலவுகளுக்கென 4 இலட்சத்து 20 ஆயிரம் ரூபாவும் மொத்தமாக 45 இலட்சத்து 5 ஆயிரம் ரூபா நிதி நல்லொழுக்க நிறுவனத்திற்கு வழங்கப்பட்டது. இதனைத் தவிர இந் நிதியாண்டில் போரூட் நிறுவனம் வடமராட்சி நல்லொழுக்க நிறுவனத்திற்கு ஒரு லட்சத்து 59 ஆயிரத்து 960 ரூபா பெறுமதியான தளபாடங்களையும் அன்பளிப்பாக வழங்கியது.

இந்த நிதியாண்டில் நிறுவனத்திற்குத் திரண்ட நிதியாக ஒருகோடியே 17 இலட்சத்து 64 ஆயிரத்து 268 ரூபா 40 சதமும், அங்கத்தவர் சேமிப்பாக 69 இலட்சத்து 27 ஆயிரத்து 822 ரூபாவும், காணிக்கொள்வனவு ஒதுக்கத்திற்காக 3 இலட்சம் ரூபாவும், பணிக்கொடை ஒதுக்கமாக ஒரு இலட்சத்து 22 ஆயிரத்து 375 ரூபாவும் , கடன் பாதுகாப்பு ஒதுக்கமாக 97 ஆயிரத்து 320 ரூபாவும் இருந்து வந்தது.

இந்த நிறுவனம் எதிர்கால சவாலாக நாட்டின் ஸ்திரத் தன்மையற்ற நிலையினால் கடன் மீளளிப்பு குறைந்தமை, அங்கத்துவ கிராம அமைப்புக்களின் பயனுதவித் தன்மை போதாமை, அங்கத்தவர்களின் முழுமையான தேவைகளைப் பூர்த்தி செய்ய முடியாமை, அங்கத்தவர்களுக்கான விழிப்புணர்வுப் பயிற்சி போதாமை என்பவற்றை எதிர்நோக்கியிருந்தது.

2009 ஆம் ஆண்டு நிதி ஆண்டில் நிறுவனத் தலைவராக சதாவதானி கதிரைவேற்பிள்ளை சனசமூக நிலையத்தைச் சேர்ந்த நா.கண்ணதாசனும், உபதலைவியாக வல்லிபுரம் மாதர் கிராம அபிவிருத்திச் சங்கத்தைச் சேர்ந்த திருமதி க.சியாமலாவும், செயலாளராக கெருடாவில் மத்தி அம்பிகை சிக்கன கடனுதவி கூட்டுறவுச் சங்கத்தைச் சேர்ந்த மு.ரவீந்திரனும், உப செயலாளராக அல்வாய் இளங்கோ சனசமூக நிலையத்தைச் சேர்ந்த கு.மகாலிங்கமும் பொருளாளராக சதாவதானி சிக்கன கூட்டுறவுச் சங்கத்தைச் சேர்ந்த கு.பிரபாகரும், நிர்வாக சபையினராகத் தெரிவு செய்யப்பட்டு நிறுவனத்தை வழி நடத்தினர்.

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கொள்கையில் என்றும் மாறாத ஒரே கட்சி கூட்டமைப்பே

## இலட்சியத்தைக் கைவிட மாட்டோம் என்கிறார் செல்வப்பிரகாஷ்

அம்பாறை,ஒக்.10

எந்த நிலையிலும் கொள்கையில் இருந்து மாறாத கட்சி தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு. இந்தக்கட்சி மாற்றுத் தரப்பினரின் பசப்பு வார்த்தைகளுக்கும், பட்டம் - பதவிகளுக்கும், அற்ப சொற்ப சலுகைகளுக்கும் துணை போகாது.

- இவ்வாறு கிழக்கு மாகாண சபைத் தேர்தலில் அம்பாறை மாவட்டத்தில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு சார்பில் போட்டியிட்ட வேட்பாளர் கதிர்காமத்தம்பி செல்வப்பிரகாஷ் தெரிவித்தார். கிழக்கு மாகாணசபைத் தேர்தலில் தனக்கு வாக்களித்த மக்களுக்கு நன்றி தெரிவிக்கும் பொருட்டு அவரது இல்லத்தில் இடம்பெற்ற மக்கள் சந்திப்பில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித் தார்.

அவர் அங்கு மேலும் தெரிவித்ததாவது:-

காலம் பல கடந்தாலும் தன் கொள்கையில் நின்று எந்த நிலையிலும் மாறாத கட்சியாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு உள்ளது. அந்த வகையில் கடந்த மாகாண சபைத் தேர்தல் மூலம் அந்தக் கட்சியில் இணைந்து பணியாற்ற கிடைத்த மையையிட்டு பெருமிதம் அடைகின்றேன்.

நடைபெற்று முடிந்த மாகாணசபைத் தேர்தலானது தமிழ் பேசும் சிறுபான்மை மக்களின் இருப்பையும் பாதுகாப்பையும் உறுதிப்படுத்திய ஒரு தேர்தலாகும். அதுமட்டுமன்றி சர்வதேச சமூகத்தின் முன் தமிழ் மக்களின் பலத்தை நிரூபித் துக்காட்டுவதற்குக் கிடைத்த அரியவாய்ப்பாகும்.

இதனை உணர்ந்து தமிழ் மக்கள் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கு வாக்களித்துள்ளனர்.

ஏதோ எதிர்பார்த்த பேரினவாதத்தின் முகங்களில் கரியைப் பூசியுள்ளனர்.

நான் அம்பாறை மாவட்டத்தில் கூட்டமைப்பின் விருப்பு வாக்குகளின் அடிப்படையில் மூன்றாம் இடத்துக்கு வந்துள்ளேன்.

எனினும், அம்பாறை மாவட்டத்தில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கு மாகாண சபைப் பிரதிநிதித்துவம் இரண்டே கிடைத்தது. இதனால் மூன்றாம் நிலையில் இருக்கும் நான் மாகாணசபை உறுப்பினராகும் தகுதியை இழந்துவிட்டேன்.

எனினும், நான் தமிழ்த் தேசியத்திற்காக அயராது உழைப்பேன். தமிழரின் இலட்சியத்தில் உறுதியாக நிற்பேன்.- என்றார். (ச)

## மின்னல் தாக்கம் பதுளையில் அதிகம்

பதுளை,ஒக்.10

பதுளை மாவட்டத்தில் அதிக மின்னல் தாக்குதல் பதிவாகியுள்ளது என்று இடர் முகாமைத்துவ மத்திய நிலையம் தெரிவித்துள்ளது.

ரிதிமாலியத்த பகுதியில் நேற்றுமுன்தினம் திங்கட்கிழமை மாலை மின்னல் தாக்கி மூன்று குழந்தைகள் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

பதுளை மாவட்டத்தில் மின்னல் தாக்கத்தால் இரண்டு வெளிநாட்டவர்கள் உள்ளிட்ட மூவர் ஏற்கனவே உயிரிழந்துள்ளனர் என்றும் பதுளை மாவட்ட இடர் முகாமைத்துவ மத்திய நிலைய உதவிப் பணிப்பாளர் எம். எல். உதயகுமார தெரிவித்தார். (ச)



மட்டக்களப்பு மாவட்டத்தின் காத்தான்குடி கடற்கரையை நவீன வசதிகளுடன் அபிவிருத்தி செய்வது குறித்து ஆராயும் விசேட கலந்துரையாடல் நேற்றுமுன்தினம் திங்கட்கிழமை நடைபெற்றது. இந்தநிகழ்வில் சிறுவர் அபிருத்தி மகளிர் விவகார பிரதி அமைச்சர் எம்.எல்.ஏ.எம்.ஹிஸ்புல்லாஹ், மாவட்ட அரச அதிபர் திருமதி பி.எஸ்.எம்.சாள்ஸ், மாவட்ட இராணுவ கட்டளைத்தளபதி பிரிகேடியர் சுகத் திலகரட்ண உட்படப் பலர் கலந்து கொண்டனர்.

## தாய், மகன் இருவர் மீதும் இனந்தெரியாதோர் தாக்குதல்

### நித்திரை வேளையில் சம்பவம், மகன் சாவு

மொனராகலை,ஒக்.10

மொனராகலை, ரம்புக்கனை பகுதி வீடொன்றில் நித்திரையில் இருந்த தாய் மற்றும் மகன் மீது இனந்தெரியாத நபர்கள் நேற்றுமுன்தினம் திங்கட்கிழமை பொல்லால் அடித்துத் தாக்குதல் நடத்தியுள்ளனர்.

இந்தச் சம்பவத்தில் படுகாயமடைந்த தாய் மற்றும் மகன் ஆகியோர் மொனராகலை வைத்தியசாலையில் சிகிச்சைக்கு அனுமதிக்கப்பட்டனர்.

இதில் மகன் சிகிச்சை பயனின்றி உயிரிழந்துள்ளார்.

தாய் தொடர்ந்தும் சிறிபுர வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகிறார்.

தாக்குதல் நடத்தியவர்கள் மற்றும் தாக்குதல் நடத்தக் காரணம் என்ன என்பது குறித்து இதுவரை தெரியவில்லை என்று பொலிஸார் தெரிவித்தனர்.

இந்தச் சம்பவம் குறித்து மொனராகலை பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ச)

## மேல் மாகாணத்தில் ஆசிரியர் நியமனம்

கொழும்பு,ஒக்.10

மேல் மாகாணப் பாடசாலைகளில் நிலவும் ஆசிரியர் வெற்றிடங்களை நிரப்புவதற்காக மேலும் சில பட்டதாரிகள் ஆசிரியர் சேவையில் இணைத்துக்கொள்ளப் பட்டுள்ளனர்.

கடந்த வருடம் நடைபெற்ற ஆசிரியர் சேவைப் போட்டிப் பரீட்சையில் சித்தியடைந்த 120 பேர் ஆசிரியர் சேவையில் இணைத்துக் கொள்ளப்பட்டனர் என்று மேல் மாகாண கல்வி அமைச்சின் செயலாளர் ஜயந்தி விஜேதுங்க தெரிவித்தார்.

இவர்களுக்கான நியமனங்கள் எதிர்வரும் டிசெம்பர் மாதம் வழங்கப்படவுள்ளன என்று அவர் மேலும் கூறினார். (ச)

## மலசல கூடங்களுக்கு புதிய மாபிள்கள் பதிப்பு

மட்டக்களப்பு,ஒக்.10

மட்டக்களப்பு போதனா வைத்தியசாலையின் விடுதிகளுக்குரிய மலசல கூடங்களுக்கு ஏற்கெனவே பதிக்கப்பட்டிருந்த அரபு எழுத்துக்களை உடைய மாபிள்கள் அகற்றப்பட்டு அதற்குப் பதிலாக வேறு மாபிள்கள் பதிக்கப்பட்டுவிட்டன என்று மட்டக்களப்பு மாவட்ட முஸ்லிம் வர்த் தகர் நலன்புரி அமைப்பின் தலைவர் கே.எம்.எம்.கலீல் தெரிவித்தார்.

சில மாதங்களுக்கு முன்னர் மட்டக்களப்பு போதனா வைத்தியசாலையின் விடுதிகளுக்குரிய மலசல கூடங்களுக்கு அரபு எழுத்துக்களை உடைய மாபிள்கள் பதிக்கப்பட்டிருந்தமை குறித்து வைத்தியசாலை நிர்வாகத்துக்கும் வைத்தியசாலை அபிவிருத்திக்குழுவின் கவனத்துக்கும் பொதுமக்கள் கொண்டுவந்திருந்தனர்.

இதனையடுத்தே இந்த மாபிள்கள் அகற்றப்பட்டு அவற்றுக்குப் பதிலாக புதிய மாபிள் கள் பதிக்கப்பட்டுள்ளன என்று அவர் கூறினார். (ச)

## பிடியாணை பிறப்பிக்கப்பட்ட 82 பேர் கைது

அம்பாறை,ஒக்.10

அம்பாறை, மத்திய முகாம் பொலிஸ் பிரிவுக் குட்பட்ட பகுதிகளில் பிடியாணை பிறப்பிக்கப்பட்ட 82 பேர் இரண்டரை மாதங்களில் கைதுசெய்யப்பட்டு நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்தப்பட்டனர் என்று மத்திய முகாம் பொலிஸார் தெரிவித்தனர்.

பல்வேறு குற்றச்செயல்களில் ஈடுபட்டவர்கள் கைது செய்யப்பட்டு நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்தப்பட்டு பின்னர், பிணையில் வெளிவந்ததும் நீதிமன்றத்துக்குச் சமுகமளிக்காமல் தலைமறைவாகிய 90 பேரை கைதுசெய்யுமாறு நீதிமன்றம் பிடியாணை பிறப்பித்திருந்தது.

இதனையடுத்து பொலிஸாரின் விசேட குழு, தலைமறைவாகியவர்களைக் தேடிப்பிடித்து கைதுசெய்யும் நடவடிக்கையை கடந்த ஜூலை மாதம் 15ஆம் திகதி தொடக்கம் நேற்று முன்தினம் திங்கட்கிழமைவரை மேற் கொண்டது.

இதன்போது 82 பேர் கைதுசெய்யப்பட்டனர் என்று பொலிஸார் கூறினர். (ச)

## புதிய தொழில் நுட்பத்துடன் இறப்பர் பால் எடுக்கும் பயிற்சி

இரத்தினபுரி,ஒக்.10

புதிய தொழில்நுட்ப நுணுக்கங்களைக் கடைப்பிடித்து அதிகளவு விளைச்சலைத் தரக்கூடிய முறையில் இறப்பர் பால் வெட்டுவதற்கு தொழிலாளர்களுக்குப் பயிற்சி வழங்கப்பட்டுள்ளது என்று ஸ்ரீ லங்கா இறப்பர் அறிவுறுத்தும் சேவைத் திணைக்களம் தெரிவித்துள்ளது.

புதிய பால்வெட்டும் கத்தி ஒன்றையும் ஸ்ரீ லங்கா இறப்பர் அறிவுறுத்தல் சேவைத் திணைக்களம் அறிமுகப்படுத்தியுள்ளது.

இரத்தினபுரி, கிலிமலே, இந்துருவ ஆகிய பகுதிகளிலே பால் வெட்டும் தொழிலாளர்களுக்கு பயிற்சி அளிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ச)

## மன்சூரின் ஆதரவாளர்கள் சிக்கினர் விபத்தில்

திருகோணமலை,ஒக்.10

கிழக்கு மாகாண சுகாதார அமைச்சர் எம்.ஐ.எம்.மன்சூர் நேற்று செவ்வாய்க்கிழமை தனது கடமையைப் பொறுப்பேற்றுக் கொண்ட நிகழ்வில் கலந்து கொள்வதற்காக சம்மாந்துறையில் இருந்து வருகைதந்த அவரது ஆதரவாளர்கள் பயணித்த வாகனம் விபத்துக்கு உள்ளாகியுள்ளது.

இந்த விபத்தில் காயங்களுக்கு உள்ளாகிய ஆதரவாளர்கள் மூதூர் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இதேவேளை அமைச்சர் மன்சூர் நேற்றுமுன்தினமே திருகோணமலைக்கு வருகைதந்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (ச)

## மீண்டும் 'பாதை சேவை' ஆரம்பம்



மட்டக்களப்பு,ஒக்.10

கடந்த ஒருமாத காலமாக இடைநிறுத்தப்பட்டிருந்த மண்முனைத்துறை- கொக்கட்டிச்சோலை நீர்வழிப் 'பாதை சேவை' மீண்டும் நேற்றுமுன்தினம் திங்கட்கிழமை முதல் ஆரம்பிக்கப் பட்டுள்ளது.

நெடுஞ்சாலைகள் அமைச்சின் அனுரசரணையுடன் வீதி அபிவிருத்தித் திணைக்களத்தால் இலவசமாக நடத்தப்பட்டுவரும் இந்தப் பாதைச் சேவையினால் தினமும் ஆயிரக்கணக்கான பயணிகள் நன்மை அடைந்து வந் தனர்.

ஒரு 'பாதை' பழுதடைந்தமையால் மக்கள் பெரும் அசௌகரியங்களுக்கு உள்ளாகியிருந்தனர். இதனால் பிரதி அமைச்சர் விநாயகமூர்த்தி முரளிதரன், வீதி அபிவிருத்தித் திணைக்களத்திடம் விடுத்த வேண்டு கோளையடுத்து 'பாதை' மீண்டும் திருத்தியமைக்கப்பட்டு சேவையில் ஈடுபடுத்தப்பட்டு வந்தமை குறிப்பிடத்தக்கது. (ச)

## ஹற்றன் ஹைலன்ஸ்; 34 மாணவர்கள் சித்தி

கண்டி,ஒக்.10

இந்த ஆண்டு நடைபெற்ற தரம் 5 ஆம் ஆண்டு புலமைப் பரிசில் பரீட்சையில் ஹற்றன் ஹைலன்ஸ் கல்லூரியில் இருந்து தோற்றியவர்களில் 34 மாணவர்கள் சித்தியடைந்துள்ளனர். 52 மாணவர்கள் 100 புள்ளிகளுக்கு மேல் பெற்றுள்ளனர்.

இந்தப் பாடசாலையில் இருந்து சித்தியடைந்த மாணவர்களில் பி.சாயி பிரசாத் 192 புள்ளிகளுடன் நுவரெலியா மாவட்டத்தில் முதலாவது நிலையையும், தேசிய மட்டத்தில் 2 ஆவது நிலையையும் பெற்றுள்ளார்.

எஸ்.வென்ஷ்கர் 185 புள்ளிகளுடன் நுவரெலியா மாவட்டத்தில் 3 ஆவது நிலையையும், கே.பூஜித்தா 182 புள்ளிகளுடன் 7 ஆவது நிலையையும்,பி.மதுஷ்கர் 175 புள்ளிகளுடன் 10 ஆவது நிலையை யும்,கே.சாரூகேஸ் 174 புள்ளிகளுடன் 11 ஆவது நிலையையும் பெற்றுள்ளனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தருவது வித்தியா

## இன்றைய நாள் உங்களுக்கு எப்படி?

**மேடம்:** உங்களைப் பற்றி அறியாதவரிடம் சொந்தவிடயம் பேசுவதால் கூடுதல் மனக்குழப்பம் வரலாம். கவனம் தேவை. தொழில், வியாபாரத்தில் நிலுவைப் பணி நிறைவேற்றுவதால் வளர்ச்சி நிலை ஏற்படும். அளவான பணவரவு கிடைக்கும்.

**இடபம்:** உங்கள் வாழ்வில் தெய்வ அனுக்கிரகத்தால் முக்கிய காரியம் ஒன்று நிறைவேறும். நண்பர், உறவினர் மகிழ்ந்து பாராட்டுவர். தொழில், வியாபாரம் வளர்ச்சி பெற அதிக பணிபுரிவீர்கள். இயன்றளவில் அறப்பணி செய்வீர்கள்.

**மிதுனம்:** உங்களிடம் நன்றி மறந்த சிலரை நினைத்து மனம் வருந்தநேரலாம். இருப்பினும், அடுத்தவர் நலனில் தேவையான அக்கறை கொள்வீர்கள். தொழில் வியாபாரத்தில் உருவாகும் குளறுபடியை கவனத்துடன் சரி செய்வீர்கள். பணவரவு முக்கிய தேவைக்குப் பயன்படும்.

**கடகம்:** நீங்கள் செயல்களை எளிதாக நிறைவேற்றுவீர்கள். குடும்ப உறுப்பினர் கூடுதல் அன்பு பாசத்துடன் நடந்து கொள்வர். தொழில், வியாபார வளர்ச்சி இலக்கு திட்டமிட்டபடி பூர்த்தியாகும். பணவரவும், நன்மையும் அதிகரிக்கும்.

**சிங்கம்:** உங்கள் உறவினர் ஒருவரின் கூடுதல் பாசம் வியப்பைத்தரலாம். குடும்ப எதிர்கால நலனில் அக்கறை கொள்வீர்கள். தொழில், வியாபார நடைமுறையில் புதிய மாற்றம் கொண்டுவருவீர்கள். பணவரவு அதிகரிப்பதில் இருந்த தாமதம் விலகும்.

**கன்னி:** உங்கள் மனதில் சிலகாலம் இருந்த குழப்பம் சரியாகும். நண்பருடன் ஆன்மிகம் தொடர்பான உரையாடலில் கலந்து கொள்வீர்கள். தொழில், வியாபாரம் வளர்ச்சி பெற அனுகூலமான காரணி பலம் பெறும். சராசரி பணவரவுடன் நிலுவைப் பணமும் வசூலாகும்.

**நாளை**

புரட்டாதி - 25 வியாழக்கிழமை 11.10.2012
திதி: ஏகாதசி மு.இ 11.31 வரை
நட்சத்திரம்: ஆயிலியம் மு.ப 11.53 வரை
சுபநேரம்: 07.32 - 09.02 வரை
ராகுகாலம்: 01.32 - 03.02 வரை

**துலாம்:** உங்களைச் சுற்றி நடக்கிற விடயங்களை உணர்ந்து பேசுவீர்கள். சுமுகமான வாழ்வுமுறை உருவாகும். தொழில், வியாபார வளர்ச்சியில் புதிய பரிமாணம் ஏற்படும். உத்தியோகத்தர் சிறப்பாகப் பணிபுரிந்து நிர்வாகத்திடம் நற்பெயர் பெறுவர்.

**விருச்சிகம்:** உங்களின் பணி சிறக்க தேவையான சுறுசுறுப்புடன் செயற்படுவது அவசியம். சக தொழில் சார்ந்தவரிடம் தேவையற்ற விவாதத்தைத் தவிர்க்க வேண்டும். தொழில், வியாபாரத்தில் உருவாகிற குளறுபடியை மாற்று உபாயத்தினால் சரி செய்வீர்கள். சராசரி பணவரவு கிடைக்கும்.

**தனுசு:** நிறைவேற்ற வேண்டிய செயல் தாமதமாவதால் மனதில் சஞ்சலம் உருவாகும். உங்கள் நலனில் அக்கறை உள்ளவர் தேவையான உதவி வழங்குவர். தொழில், வியாபார வளர்ச்சிக்காக அதிக நேரம் பணபுரிவீர்கள். முக்கிய செலவுக்கு சேமிப்பு பணத்தைச் செலவு செய்வீர்கள்.

**மகரம்:** உங்கள் நண்பருக்கு வாழ்வில் முன்னேற நல்ல ஆலோசனை வழங்குவீர்கள். தொழில் வளர்ச்சிபெற உற்சாகமுடன் பணிபுரிவீர்கள். பணப்பரிவர்த்தனை திருப்திகரமாகும். குடும்பத் தேவை பெரிதும் நிறைவேறும்.

**கும்பம்:** உங்களை கடந்த காலத்தில் அவமதித்துப் பேசிய சிலர் உங்கள் நல்ல குணநலன் புரிந்து அன்பு பாராட்டுவர். தொழில், வியாபார வளர்ச்சிப்பணிகளில் முன்னேற்றம் ஏற்படும். உடல்நல ஆரோக்கியம் பலம்பெறும். நிலுவைக் பணக்கடனில் ஒரு பகுதியைச் செலுத்துவீர்கள்.

**மீனம்:** சிலரது பேச்சு உங்கள் மனதை சங்கடப்படுத்தும். நிதானம், பெருந்தன்மை குணத்தைப் பின்பற்றுவது நல்லது. அதிக உழைப்பால் தொழில், வியாபார வளர்ச்சி நிலை சீராகும். சராசரி பணவரவு கிடைக்கும்.

## சுடோக்கு
### எண் விளையாட்டு

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | | 7 | 9 | 6 | 5 | 3 | 4 |
| | 7 | | 2 | | 1 | 9 | | 6 |
| 4 | | | | | | 7 | | |
| | | 5 | | | 4 | | | |
| 3 | 9 | | 5 | | 7 | | 2 | 8 |
| | | | 9 | | | | | |
| | | 2 | | | | | | 1 |
| 7 | | 6 | 1 | | 2 | | 4 | |
| 9 | 4 | 1 | 8 | 7 | 3 | | | |


### சுடோக்கின் நேற்றைய விடை

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 5 | 9 | 6 | 7 | 4 | 2 | 1 | 3 | 8 |
| 3 | 4 | 7 | 8 | 9 | 1 | 5 | 2 | 6 |
| 1 | 2 | 8 | 6 | 5 | 3 | 9 | 7 | 4 |
| 8 | 6 | 9 | 1 | 2 | 5 | 3 | 4 | 7 |
| 2 | 3 | 5 | 4 | 7 | 8 | 6 | 1 | 9 |
| 4 | 7 | 1 | 1 | 9 | 6 | 2 | 8 | 5 |
| 9 | 1 | 4 | 2 | 6 | 7 | 8 | 5 | 3 |
| 7 | 5 | 2 | 3 | 8 | 9 | 4 | 6 | 1 |
| 6 | 8 | 3 | 5 | 1 | 4 | 7 | 9 | 2 |

சுடோக்கு ஒரு எண் விளையாட்டு. தர்க்க ரீதியான ஒழுங்குபடுத்தல்தான் இதன் அடிப்படை. 1–9 வரையான எண்களை ஒழுங்குபடுத்தி ஒரே கோலத்தை ஏற்படுத்த வேண்டும். இந்தப் பெட்டி 9 நிரல்களையும் 9 நிரைகளையும் கொண்டது. 3X3ஆக உள்ளேயும் 3 நிரல்களையும் 3 நிரைகளையும் கொண்டிருக்கிறது. (உள்ளே இருப்பவற்றை பெட்டிகள், கட்டங்கள், பகுதிகள், உபசதுரங்கள் என்றும் அழைக்கிறார்கள்). இந்த ஒவ்வொரு நிரையிலும் நிரலிலும் 1–9 வரையான எண்கள், இரண்டு தடவைகள் (மீண்டும் மீண்டும்) வராமல் நிரப்பப்பட வேண்டும். அவ்வாறு நிரப்பப்படுகையில் உள்பெட்டிகளுக்குள்ளும் அவ்வாறே 1–9 இலக்கங்கள் இரட்டைப் படாமல் வரவேண்டும். சில கட்டங்கள் ஏற்கனவே நிரப்பப்பட்டிருக்கும் தர்க்க ரீதியில் ஏனையவற்றை நிரப்ப வேண்டியதே வேலை. சுடோக்கு என்பது ஜப்பானியச் சொல். அதன் பொருள் 'தனி எண்' என்பதாகும். 1986 இல் ஜப்பானிய நிறுவனமான 'நிகோலி' இதனை அறிமுகப்படுத்தி வெற்றிகரமாக பரவலாக்கியது. 2005இல் இது உலக அளவில் பிரபல்யமானது.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



மேன்முறையீட்டு நீதிமன்ற பதில் தலைவராக சிசிர ஜயவிலால் த அபூருவ் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ முன்னிலையில் நேற்றுமுன்தினம் சத்தியப் பிரமாணம் செய்து கொண்டார். அருகில் ஜனாதிபதியின் செயலாளர் லலித் வீரதுங்க காணப்படுகிறார்.

# கைத்தொழில் துறையை பாதுகாப்பதற்கு அரசு தயார்

## ஜனாதிபதி மஹிந்த தெரிவிப்பு

கொழும்பு,ஒக்.10

தேசிய கைத்தொழில் துறையையும் வர்த்தகத் துறையையும் பாதுகாப் பதற்குத் தேவையான சகல நடவடிக்கைகளையும் மேற்கொள்ள அரசு தயாராகவுள்ளது என்று 2013 ஆம் ஆண்டுக் கான வரவு - செலவுத் திட்ட தயாரிப்புக்கு நிர்மாணத்துறையினரின் ஆலோசனைகளைப் பெற்றுக் கொள்ளும் கலந்துரையாடல் நேற்று முன்தினம் திங்கட்கிழமை அலரி மாளிகையில் நடைபெற்றது. இந்தக் கலந்துரையாடலில் உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

நிர்மாணத்துறையில் எதிர்கொள்ள நேரிடும் பிரச்சினைகள் குறித்து நிர்மாணத் துறையினர் ஜனாதிபதியின் கவனத்துக்குக் கொண்டு வந்தனர். அதற்குத் தீர்வைப் பெற்றுக் கொள்ளும் வகையிலான யோசனைகளையும், 2013 வரவு - செலவுத் திட்டத்துக்காக அவர்கள் முன்வைத்தனர்.

மூலப் பொருள்கள் தட்டுப்பாடு, வெளிநாட்டு நிறுவனங்களுடன் போட்டியுடன் செயற்படும்போது எதிர் கொள்ள நேரும் சவால்கள் குறித்து நிர்மாணத்துறையினர் ஜனாதிபதியின் கவனத்துக்குக் கொண்டு வந்தனர். நிர்மாணத்துறைகளில் இளைஞர்கள் இணைவது குறைந்து வருவதாகவும் அவர்கள் குறிப்பிட்டனர்.

இதற்குப் பதிலளித்த ஜனாதிபதி, தொழிலின் கௌரவத்தைப் பேணும் வகையில் இளையோருக்கான சீருடை, சம்பளம், பயிற்சிகள் வழங்கப்பட வேண்டும் என்று தெரிவித்தார். (ச)

# மாலினி மீண்டும் எம்.பியாக பதவியேற்பு



கொழும்பு,ஒக்.க10

பிரபல நடிகையான மாலினி பொன் சேகா மீண்டும் நாடாளுமன்ற உறுப்பினராக நேற்று செவ்வாய்க் கிழமை பதவிப் பிரமாணம் செய்துகொண்டுள்ளார்.

கலைத்துறைக்கு ஆற்றிய சேவையைப் போற்றும் நோக்கில் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவால், மாலினி பொன் சேகாவுக்கு தேசியப் பட்டியல் மூலம் நாடாளுமன்ற உறுப்புரிமை வழங்கப்பட்டிருந்தது.

எனினும், அண்மையில் நடைபெற்று முடிந்த மாகாண சபைத் தேர்தலில் முதல மைச்சர் பதவிகளுக்கு ஏற்பட்ட முரண்பாடுகளைத் தொடர்ந்து மாலினி பொன் சேகா தனது பதவியை இராஜினாமா செய் திருந்தார்.

இந்த இராஜினாமாவை நாடாளுமன்றச் செயலாளரும், தேர்தல் ஆணை யாளரும் ஏற்றுக்கொண்ட போதிலும், ஜனாதிபதி ஏற்றுக் கொள்ள வில்லை.

அதைத் தொடர்ந்து மாலினி பொன்சேகா மீண்டும் நேற்று நாடாளுமன்ற உறுப்பினராகச் சத்தியப்பிரமாணம் செய்து கொண்டமை குறிப்பிடத்தக் கது. (ச)

# நாட்டின் சட்டம் ஒழுங்கு நிலை முழு உலகுக்கும் அம்பலம்

## வெட்கம் என்று சாடுசிறது ஐ.தே.க.

கொழும்பு,ஒக்.10

நாட்டின் சட்டம் ஒழுங்கு நிலைமை முழு உலகுக்கும் அம்பலமாகியுள்ளது. இது வெட்கக்கேடானது என்று ஐக்கிய தேசியக் கட்சியின் ஊடகப் பேச்சாளர் கயந்த கருணாதிலக்க குற்றம்சாட்டியுள்ளார்.

இதுகுறித்து அவர் மேலும் தெரிவித்ததாவது:-

நீதிச் சேவைகள் ஆணைக் குழுவின் செயலாளர் மீது நடத்தப்பட்ட தாக்குதல் மூலம் நாட்டின் சட்ட ஒழுங்கு உலகுக்கு வெளிச்சமாகியுள்ளது.

தாக்குதல் நடத்தியவர்களை உடனடியாகக் கைது செய்து நீதியின் முன் நிறுத்த நடவடிக்கை எடுக்க வேண்டும். வெள்ளை வான் கலாசாரம், இனந்தெரியாத நபர்களினால் தாக்குதல்கள், கடத்தல்கள், அடக்குமுறைகள் உள்ளிட்ட பல்வேறு சம்பவங்கள் தொடர்ச்சியாகப் பதிவாகி வருகின்றன.



**தாக்குதல் நடத்தியவர்களை உடனடியாகக் கைது செய்து நீதியின் முன் நிறுத்த நடவ டிக்கை எடுக்க வேண்டும்.**

இவ்வாறான சம்பவங்களினால் நாட்டின் நன்மதிப்புக்குக் குந்தகம் ஏற்படும். இதனைத் தவிர்க்க முடியாது.

எதிர்க்கட்சியினர் நாட்டின் நன்மதிப்பைக் களங்கப்படுத்துவதாக அரசு குற்றம் சுமத்திய போதிலும், இவ்வாறான சம்பவங்கள் மூலமே நாட்டுக்கு அவப்பெயர் ஏற்படுகிறது.

ஸ்ரீலங்கன் எயர்லைன் நிறுவனத்தின் தலைவரது வீட்டில் திருடிய நபர்களை பொலிஸார் எவ்வாறு அவசரமாகக் கைது செய்தார்களோ அதேபோன்று நீதிச் சேவைகள் ஆணைக் குழுவின் செயலாளரது தாக்குதல் சம்பவத்துடன் தொடர்புடையவர்களையும் விரைந்து கைது செய்ய நடவடிக்கை எடுக்க வேண்டும்.- என்றார். (ச)

# இளைஞருக்கு தலைமைத்துவ பயிற்சி வழங்க வேண்டும் என்கிறார் கோத்தபாய



கொழும்பு,ஒக்.10

இளைஞர், யுவதிகளுக்கு கட்டாயம் தலைமைத்துவப் பயிற்சி வழங்கப்பட வேண்டும் என்று பாதுகாப்புச் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ தெரிவித்தார்.

தரம் ஒன்றைச் சேர்ந்த அதிபர்களுக்கு கேணல் பட்டங்களை வழங்கும் நிகழ் வில் கலந்துகொண்ட போது அவர் இவ்வாறு தெரிவித் தார்.

இளைய தலைமுறையினரின் தன்னம்பிக்கையைப் பலப்படுத்த தலைமைத்துவப் பயிற்சி முக்கியமானது என்று அவர் சுட்டிக்காட்டினார். இளம் சமூகத்தினர் தீர்மானங்களைச் சுயமாக எடுக்கக்கூடிய வகையில்பயிற்றப்பட வேண்டும்என்று அவர் வலியுறுத்தியுள்ளார்.

இதேவேளை, தன்னம்பிக்கை இழந்த காரணத்தினாலேயே நான்கு தடவைகள் உலகக் கிண்ண இறுதிப் போட்டியில் பங்கேற்ற இலங்கை அணியினரால் சம்பியன் பட்டத்தை வெல்ல முடியவில்லை என்று அவர் மேலும் தெரிவித்தார். (ச)

# மொழிப் பிரச்சினையா? சுழற்றுங்கள் 1956 ஐ

மொழிப் பிரச்சினைக்குத் தீர்வை வழங்குவதற்காக விசேட தொலைபேசி இலக்கம் ஒன்றை அறிமுகப் படுத்துவதற்கு அரச கரும மொழிகள் மற்றும் சமூக நல்லிணக்க அமைச்சு தீர்மானித்துள்ளது.

அரச நிறுவனங்களில் சேவைகளைப் பெற்றுக் கொள்ளச் செல்லும்போது எதிர்நோக்க நேரிடும் மொழிப் பிரச்சினை குறித்து இந்தத் தொலைபேசி இலக்கத்தின் ஊடாகத் தொடர்பு கொண்டு முறைப்பாடு செய்ய முடியும் என்று அமைச்சர் வாசுதேவ நாணயக்கார தெரிவித்தார்.

1956 என்ற உத்தேச தொலைபேசி இலக்கம் அடுத்த வாரம் அறிமுகப்படுத்தப்படவுள்ளது என்று அவர் கூறினார். ஏற்கனவே, சுற்றறிக்கை மூலம் அறிவிக்கப்பட்ட அரச கரும மொழிக் கொள்கையை நடைமுறைப்படுத்துவதற்காக பயிற்றுவிக்கப்பட்ட இரண்டு உத்தியோகத்தர்கள் வீதம் அனைத்து அரச நிறுவனங்களுக்கும் நியமிக்கப்பட்டுள்ளனர் என்று அவர் மேலும் தெரிவித்தார். (ச)

# பொலிஸ் திணைக்களத்துக்கு 18 இளம் குதிரைகள்

## ரூ.50 மில்லியனில் வாங்க முடிவு



கொழும்பு,ஒக்.10

பொலிஸ் திணைக்களத்தின் குதிரைப்படைப் பிரிவுக்கு 18 குதிரைகளைக் கொள்வனவு செய்ய குறித்த திணைக்களம் தீர்மானித்துள்ளது. இதற்காக 50 மில்லியன் ரூபா செலவிடப்படவுள்ளது. இதற்காக ஆஸ்திரேலியா, நியூஸிலாந்து மற்றும் ஐரோப்பிய நாடுகளிடம் கேள்விப்பத்திரங்கள் கோரப்பட்டுள்ளன.

கொள்வனவு செய்யப்படவுள்ள விசேட ரகத்தைச் சேர்ந்த குதிரைகளுக்காக தலா 2.7 மில்லியன் ரூபாவை ஒதுக்கீடு செய்வதற்கு பொலிஸ் திணைக்களம் தீர்மானித்துள்ளது.

தற்போது பொலிஸ் பிரிவில் 40 குதிரைகள் காணப்படுகின்ற போதிலும் அவை தீவிரமாகக் கடமை யாற்றும், வயதைக் கடந்துள்ளன. குதிரைகள் அதிகளவான மக்கள் [illegible] லைப்பதற்காக தேசிய சம்பிரதாயபூர்வ நிகழ்ச்சிகளின்போதும் பயன்படுத்தப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (ச)

# வன விலங்குகளுக்கு தண்ணீர் திட்டம்

**சரணாலயங்களை அண்மித்த பகுதிகளில் திட்டம் செயற்படுத்தப்படும்.**

கொழும்பு,ஒக்.10

வறட்சியால் பெரும் பாதிப்பை எதிர்நோக்கியுள்ள வன விலங்குகளுக்கு நீரை விநியோகிப்பதற்கான விசேட திட்டம் ஒன்றை ஆரம்பித்துள்ளதாக கமநல சேவைகள் மற்றும் வன ஜீவராசிகள் அமைச்சு தெரிவித்துள்ளது.

சரணாலயங்களை அண்மித்த பகுதிகளில் இந்தத் திட்டம் செயற்படுத்தப்பட்டுள் ளதாக பிரதி அமைச்சர் எஸ்.எம்.சந்திரசேன தெரிவித்தார்.

சரணாலயங்களில் உள்ள நீர் நிலைகளை இனங்கண்டு அவற்றை அகழ்வதன் மூலம் சுமார் இரண்டு வாரங்களுக்கு வன விலங்குகளுக்குத் தேவையான நீரைப் பெற்றுக் கொடுக்க முடியும் என்று அவர் கூறினார். (ச)

# ராணுவ அதிகாரி மீதான தாக்குதல்; விசாரணை அறிக்கை தளபதியிடம்

கொழும்பு,ஒக்.10

கொழும்பு ஹோட்டல் ஒன்றில் அண்மையில் தாக்குதலுக்கு இலக்கான இராணுவ அதிகாரி குறித்த விசாரணை அறிக்கை இராணுவத் தளபதியிடம் கையளிக்கப்பட்டுள்ளது.

குறித்த அறிக்கை நேற்று முன்தினம் இராணுவத் தளபதியிடம் கையளிக்கப் பட்டதாக இராணுவ ஊடகப் பேச்சாளர் பிரிகேடியர் ருவான் வணிகசூரிய தெரிவித்தார்.

அமைச்சர் மேர்வின் சில்வாவின் மகன் மாலக சில்வாவினால் குறித்த இராணுவ அதிகாரி தாக்கப்பட்டதாக கறுவாத்தோட்டம் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டது. பின்னர் மாலக சில்வா தன்னைத் தாக்கவில்லை. அதிர்ச்சியால் குறித்த சம்பவம் இடம் பெற்றதாக இராணுவ அதிகாரி நீதிமன்றில் கூறியிருந்தார்.

இந்தச் சம்பவம் குறித்து விசாரணை செய்ய இராணுவம் மூன்று பேர் கொண்ட குழுவை நியமித்தது.

குறித்த இராணுவ அதிகாரி இராணுவச் சட்டத்தை மீறி யுள்ளார் என்று இந்த விசாரணை மூலம் தெரிய வந்துள்ளதாகத் தெரிவிக்கப் படுகிறது. (ச)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாராட்டி வாழ்த்துகின்றோம்



யா/அல்லாரை அரசினர் தமிழ் வித்தியாலயத்தில் கடமையாற்றும் பிரதி அதிபரும் கணித ஆசிரியருமான திரு. செ.சிவபாதசுந்தரம் அவர்கள் நேற்று (09.10.2012), செவ்வாய்க்கிழமை மாண்புமிகு ஜனாதிபதி அவர்களிடம் சிறந்த ஆசிரியர் விருதான "பிரதீபா பிரபா"

விருதினைப் பெற்றதையிட்டு மனமகிழ்வுடன் வாழ்த்துவதோடு. மேலும் பல பட்டங்கள் பெறவும் வாழ்த்துகின்றோம்.

**அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள்.**
**யா/அல்லாரை அ.த.வித்தியாலயம்,**

(21554)(2.6)

# பாராட்டி வாழ்த்துகின்றோம்



யாழ். இந்து ஆரம்ப பாடசாலையின் சிரேஸ்ட ஆசிரியரும், உப அதிபருமாகிய

திருமதி
M.P.R. **கனகரத்தினம்**
SLTS- 1

அவர்கள் 2012.10.09. இல் அதிமேதகு ஜனாதிபதி அவர்களால் குரு பிரதீபா பிரபா விருது பெற்றமையையிட்டு பாராட்டி வாழ்த்துகின்றோம்.

**யாழ். இந்து ஆரம்பப்பாடசாலை–**
Best Wishes
அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள்,
பாடசாலை அபிவிருத்திச் சங்கம்,
பழைய மாணவர் சங்கம்.

(சி/4045)(6.7.8)

# பாராட்டி வாழ்த்துகின்றோம்



யா/சுண்டுக்குளி மகளிர் கல்லூரியில் கல்வி கற்கும் **செல்வி தர்மராசா தஹ்சாயி** அவர்கள் தரம் ஐந்து புலமைப் பரிசில் பரீட்சையில் 163 புள்ளிகள் பெற்று சித்தியடைந்ததையிட்டு அவரைப் பாராட்டி வாழ்துவதுடன் அவர் கல்வியில் மேன்மேலும் உயர்வடைய வாழ்த்துகின்றோம்.

வாழ்த்துவோர்:
அப்பா, அம்மா, அண்ணா, தம்பி, அம்மப்பா, அம்மம்மா.

(23934)(2-6.7)

# ALLIANCE FRANCAISE DE JAFFNA

**The Only Official French Language Centre in Jaffna**
*Learn French the French Way*

French Embassy ஆல் அங்கீகரிக்கப்பட்ட, சர்வதேச தரம் வாய்ந்த, யாழ்ப்பாணத்திலுள்ள ஒரே ஒரு பிரெஞ்சு மொழிக் கல்வி நிறுவனமாகிய Alliance Francaise de Jaffna ஊடாக பிரெஞ்சு மொழி வகுப்புகள் நடத் தப்படுகின்றன. France மற்றும் பிரெஞ்சு பேசப்படும் நாடுகளுக்கு செல்வோர் மற்றும் மொழி ஆர்வமுள்ள எவரும் கற்றுக்கொள்ளலாம்.

வகுப்புக்கள்: சனி, ஞாயிறுகளில்.

புதிய பிரிவுகள் மிக விரைவில் ஆரம்பிக்கப்படவுள்ளன.
61, Kachcheri - Nallur Road, Jaffna
Phone: 021 2228093
E-mail: alliance jaffna@yahoo. com
(ரக்கா வீதியும் கச்சேரி - நல்லூர் வீதியும் இணையும் சந்தியில் அமைந்துள்ள மாடி கட்டடம்)

(23900) (2-6-7)


# அந்தியேட்டி வீட்டுக்கிருத்திய அழைப்பு



அமரர்
## சின்னத்தம்பி செல்லத்துரை(சாத்திரியார்)

கடந்த 13.09.2012 வியாழக்கிழமையன்று சிவபதமடைந்த எமது குடும்பத் தலைவர் அவர்களின் அந்தியேட்டி கிரியைகள் நாளை (11.10.2012) வியாழக்கிழமை கீரிமலை புனித தீர்த்தக்கரையிலும், வீட்டுக் கிருத்திய கிரியைகள் 13.10.2012 சனிக்கிழமை முற்பகல் 11.30 மணியளவில் அன்னாரின் விசுவமடு இல்லத்திலும் நடைபெறும் என்பதையும் எமது அன்புத்தந்தையின் மறைவை பத்திரிகை மூலம் அறிந்து ஓடோடி வந்தும், தொலைபேசி,தந்திமூலம் எம் உள்ளக் கவலையில் பங்குகொண்ட அனைத்து அன்பர்களும் இந்த அழைப்பை தனிப்பட்ட அழைப்பாக ஏற்று அவரது ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் மதியபோசனத்திலும் கலந்துகொள்ளுமாறு இருகரம் கூப்பி அழைக் கின்றோம்.

**இல.45/2, விசுவமடு** **மனைவி,மக்கள்,மருமக்கள்**

(5-6-7)

# வீதியைத் திருத்த நடவடிக்கை எடுக்க மக்கள் வேண்டுகை

அளவெட்டி, ஒக்.10

மாகியப்பிட்டிச் சந்தியிலிருந்து சங்கானைச் சந்திவரை செல்லும் சங்கானை- அச்சுவேலி வீதி நீண்ட காலமாக திருத்தப்படாது குன்றும் குழியுமாகக் காணப்படுகிறது. இதனால் இந்த வீதியால் பயணிக்கும் பொதுமக்கள் பல சிரமங்களை எதிர்நோக்கி வருகின்றனர் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதனால் சங்கானை வைத்தியசாலை, பொதுச் சந்தை என்பனவற்றிற்குச் செல்லும் நோயாளிகள், பொது மக்கள் பெரிதும் பாதிக்கப்படுகின்றனர். மாரிகாலம் தொடங்க இருப்பதால் இந்த வீதி திருத்தப்படா விட்டால் பெரிய விபத்துக்களையும், போக்குவரத்துப் பிரச்சினைகளையும் எதிர்நோக்க வேண்டி வரும்.

எனவே சம்பந்தப்பட்ட அதிகாரிகள் இந்த வீதிமேல் அக்கறை செலுத்த மாட்டார்களா என மக்கள் விசனம் தெரிவிக்கின்றனர்.

(3-36)


# மணமகள் தேவை

கிரேக்க மற்றும் கஸ்மீர் பெற்றோருக்குப் பிறந்த அவுஸ்திரேலிய குடியுரிமை உடைய, நடுத்தர வயதுடைய, திருமணமாகாத ஆங்கில விரிவுரையாளர் தனக்கேற்ற துணைவியை எதிர்பார்க்கின்றார். இலங்கை, இந்திய கலாசார மற்றும் வரலாற்றில் ஆர்வமுடைய இவர் எதிர்பார்க்கும் துணைவி, இந்திய கலாசார இசையில் ஆர்வமுள்ளவராகவும், ஆங்கிலம் நன்றாகப் பேசக்கூடியவராகவும் இருத்தல் வேண்டும் என எதிர்பார்க்கின்றார். விரும்புபவர்கள் தொலைபேசி இல., மின்னஞ்சல் என்பவற்றுடன் விளம்பர இல. 4406 மே/பா, உதயன், யாழ்ப்பாணம். என்னும் முகவரிக்கு அனுப்பவும்.

(23636) (2-7)

# சுஜித் என்ரபிறைஸஸ்
## டச்சு வீதி, சாவகச்சேரி

எமது நிறுவனத்திற்கு பின்வரும் பதவிகளுக்கு உடனடியாக ஆள்கள் தேவை. தகைமையுள்ளவர்கள் நேரில் வரவும்.

**மேற்பார்வையாளர்:**
இலகு வாகன லைசென்ஸ் உள்ள சிங்களம் கதைக்கக் கூடியவர் மாத வருமானம் - ரூபா 35,000/= தொடக்கம் 40,000/= வரை

**விற்பனைப்பிரதிநிதி**
தமிழ் மொழியில் எழுத வாசிக்க தெரிந்தவர் மாத வருமானம் - ரூபா 40,000/= - 50,000/= வரை

**பணம் சேகரிப்பாளர்**
சிங்களம் தெரிந்திருக்கவேண்டும்.

**ஆவணங்களுடன் வரவும்**

**தொடர்பு : 021 2270586**

(சி/3395)(6.7.8)


# ஆறாம் ஆண்டு நினைவஞ்சலி



அமரர்
## மார்க்கண்டு மகேந்திரன்
(கிராமசேவையாளர்)

ஆறாண்டுகள் சென்றாலும்
ஆறுதில்லை எம்மனம்
ஓய்வதில்லை எம் கண்ணீர்
கனவில் வந்து கதைபேசும் - உங்கள் வதனம்
நினைவில் வாராதோ என்று ஏங்குகின்றது
உங்கள் மழலைகளோ எழுதிய- கவி வரிகள் என்
நெஞ்சை உருக்குதப்பா
அப்பா அப்பா என்று கூறிய-நாவு
இன்று ஏங்கித் தவிக்கின்றதாம்
கடவுளுக்கும் எம் மீது இரக்கமில்லை
விதி செய்த விளையாட்டால் - வாழ் விழுந்தோர்
எத்தனை ஜென்மம் எடுத்தாலும்
நீங்கள் தான் எம் குல விளக்கு
உங்கள் ஆத்ம சாந்திக்காக பிரார்த்திக்கின்றோம்.

(23924)(5.6.7)

யாழ்ப்பாணம். மனைவி,பிள்ளைகள்.


# வயது ஒரு தடையா!

65 வயதிற்குட்பட்ட ஆர்வமுள்ள வேலை வாய்ப்பை நாடி நிற்போருக்கு, அரச காப்புறுதிக் கூட்டுத்தாபனத்தில் காப்புறுதி ஆலோசகராகப் பணியாற்றி நல்ல வருமானத்தை ஈட்ட ஓர் அரிய வாய்ப்பு.

குறிப்பு: முழுநேரமாகவோ, பகுதி நேரமாகவோ பணியாற்றலாம்.

- 2 வார பயிற்சிக் காலமுடையது.
- பயிற்சி முடிவில் தொழில் தகைமை தொடர்பான அரச அங்கீகாரம் பெற்ற சான்றிதழ் வழங்கப்படும்.
- பணி நிலையங்கள் வடபகுதிக் கிளைகளில்.

அடிப்படைத் தகைமைகள்:

★ G.C.E(O/L) பரீட்சையில் கணிதம் உட்பட 6 பாடங்களில் சித்தி

★ 18- 65 வயதிற்குட்பட்டவர்களாக இருத்தல் வேண்டும்.

தொலைபேசி இலக்கம் உள்ளடங்கலாக சுயவிவரக் கோவையுடன் (BIO DATA) விண்ணப்பங்களை 20.10.2012 ஆம் திகதிக்கு முன்னர் கிடைக்கக் கூடியவாறு கீழ்வரும் முகவரிக்கு அனுப்பி வைக்கவும்.

**விளம்பர இல. 4404**
**C/O உதயன்,**
**361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.**

(23714)(5-6-7)


# 15 th year Remembrance



Born
28★02★1928

Died
10★10★1997

## The Rt.Rev.Dr.David Jeyaratnam Ambalavanar
(Second Bishop of The Jaffna, Diocese of the Chureh of S.India)

**"Where, O death is your Victory?**
**Where, O death is your Sting?"** - 1 Cor.15:55

Jaffna / Batticaloa.

Fondly remembered, by his family.

# மரண அறிவித்தல்
## சின்னக்குட்டி சின்னையா



யாழ்ப்பாணம், கொடிகாமம் மந்துவிலைப் பிறப்பிடமாகவும், வரணி இயற்றாலையை நிரந்தர வசிப்பிடமாகவும், 217, நாவலர் வீதி, பண்டாரிகுளத்தை தற்காலிக வசிப்பிடமாகவும் கொண்ட சின்னக்குட்டி சின்னையா நேற்று (09.10.2012) காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சின்னக்குட்டி - சின்னாச்சி தம்பதியரின் அன்புமகனும், காலஞ்சென்ற தெய்வானையின் அன்புக்கணவரும், காலஞ் சென்றவர்களான அம்மிணி, கிட்ணர் ஆகியோரின் அன்புச் சகோதரனும், காலஞ்சென்ற பரமேஸ்வரி மற்றும் சிவனேசலிங்கம் (ஜேர்மனி), சிவனேசன் (லண்டன்), ஜெகன் (ஆசிரியர், நெளுக்குளம் கலைமகள் மகா வித்தியாலயம்) ஆகியோரின் அன்புத்தந்தையும், தங்கவேல் (UNDP- வவுனியா), சுகந்தி (ஜேர்மனி), சர்மிளா (லண்டன்) ஆகியோரின் அன்புமாமனும், தயாபரன் (பிரான்ஸ்), தயாநிதி (வவுனியா தரணிக்குளம் கணேச வித்தியாலயம் ஆசிரியர்), தயாநந்தன் (கனடா), சுபாஜினி (சிங்கப்பூர்), மதுஸ்கா (லண்டன்), தருஸ்கா (லண்டன்), சஸ்வின் (லண்டன்), துளசிகா (ஜேர்மனி), சுதர்சிகா (ஜேர்மனி), சுவிர்தன் (ஜேர்மனி) ஆகியோரின் அன்புப்பேரனும், தஸ்னா, மதுபாசினி, பாதுசன் (சிங்கப்பூர்), சஸ்வியா (கனடா), மதீஸ் (கனடா) ஆகியோரின் அன்புப் பூட்டனும் ஆவார்.

அவரின் இறுதிக்கிரியைகள் மேற்படி முகவரியில் (11.10.2012) வியாழக்கிழமை இடம்பெற்று பூதவுடல் நல்லடக்கத்திற்காக தட்சிணாங்குளம் இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

(20920)(6.7.8) தகவல்: குடும்பத்தினர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




பெரும்பாலும் மேகக் கூட்டத் துடன் கூடிய காலநிலை நிலவும்.

# ஓமான் அரசின் புதிய காப்புறுதித் திட்டத்தால் 10, 000 இலங்கை பணிப் பெண்களுக்கு நன்மை

ஓமானில் பணிபுரியும் இலங்கை மற்றும் பங்களாதேஷ் பணிப் பெண்களுக்கு புதிய காப்புறுதித் திட்டம் ஒன்றை அறிமுகப்படுத்த ஓமான் அரசு நடவடிக்கை எடுத்துள்ளது. இதன் மூலம் 10 ஆயிரம் இலங்கைப் பணிப் பெண்கள் நன்மை அடையவுள்ளனர் என்று தெரிவிக்கப்படுகிறது.

இந்திய மற்றும் பிலிப்பைன்ஸ் பணிப்பெண்களுக்கு அறிமுகப்படுத்தப்பட்டுள்ள காப்புறுதித் திட்டம் போன்று இலங்கை, பங்களாதேஷ் பணிப் பெண்களுக்கும் அறிமுகப்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

ஓமானில் பணிபுரியும் எத்தியோப்பியா, தான்சானியா போன்ற ஆபிரிக்க நாடுகள் நேபாளம் போன்ற ஆசிய நாடுகளின் பணிப் பெண்களுக்கு இந்தக் காப்புறுதித் திட்டம் இதுவரை வழங்கப்படவில்லை. ஓமான் அரசின் இந்தத் திட்டத்தால் 10,000 இலங்கைப் பணிப்பெண்கள் நன்மை அடைவர் என இலங்கை வெளிநாட்டு வேலை வாய்ப்புப் பணியகம் தெரிவித்துள்ளது.

இந்தக்காப்புறுதித் திட்டத்தின் கீழ் இரண்டு வருடங்களுக்கு 20-40 ஓமான் ரியால் வழங்கப்படவுள்ளது. விபத்து மூலம் மரணம், விபத்தினால் பாதிப்பு, ஊனமுறல் போன்ற தருணங்களில் காப்புறுதி வழங்கப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது. (3)

# மூளாய் வைத்தியசாலையில் முதியோர் கௌரவிப்பு

சுழிபுரம், ஒக்.10

மூளாய் ஐக்கிய சங்க கூட்டுறவு வைத்தியசாலை பராமரிப்பில் தங்கிய முதியவர்களைக் கௌரவிக்கும் நிகழ்வு வைத்தியசாலையில் கடந்த ஞாயிற்றுக் கிழமை நடைபெற்றது.

வைத்தியசாலையில் தங்கியுள்ள முதியவர் பராமரிப்புக்களை மேலும் விஸ்தரிக்கவும் வேண்டிய தேவைகளை நிறைவேற்றிக் கொடுக்கவுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

வைத்தியசாலை வளாகத்தில் தங்கியுள்ள முதியவர்களின் தேவைகளை நிறைவு செய்து வரும் பணியாளர்களும் கௌரவிக்கப்பட்டனர். (3-28)

# ஐந்தாம் தர புலமைப் பரிசில் பரீட்சைப் பெறுபேறுகள்

யாழ்ப்பாணம், ஒக்.10

அண்மையில் வெளியான ஐந்தாம்தர புலமைப்பரிசில் பரீட்சைப்பெறுபேறுகள் வருமாறு:-

கிளிநொச்சி மத்திய ஆரம்ப வித்தியாலயம்

சந்திரகுமார் லக்ஷிகா- 177, பிறேமதாஸ் அமுதினி- 168, சந்திரமோகன் தேனுஜன்- 168, ஸ்ரீலிங்கம் பவீசன்- 160, தமிழ்ச்செல்வன் தனுயன்- 159, சிவராசா ஹோசாயினி- 159, பிரபாகரன் விதுசியா-157, சசிகரன் கேசிகா-155, வேணுகோபன் மதுசாகினி- 152, யோசப் நிக்சன்-151, தர்மராசா பிறைமதி-150, இராஜேந்திரம் சிந்துஜன்-148, லோகேஸ்வரன் சாருஜா-147, தனபாலன் தமிழினி- 146. (3-405)

# முன்னேற்ற மீளாய்வு கலந்துரையாடல்

தென்மராட்சி, ஒக்.10

யாழ்.கல்வி வலயப் பாடசாலை அதிபர்களுக்கான முன்னேற்ற மீளாய்வு தொடர்பான கலந்துரையாடல் நாளை 11 ஆம் திகதி வியாழக்கிழமை காலை 9 மணிக்கு யாழ்ப்பாணம் இந்து மகளிர் கல்லூரியில் நடைபெறவுள்ளது. சகல அதிபர்களையும் கலந்து கொள்ளுமாறு யாழ். வலயக் கல்விப் பணிப்பாளர் கேட்டுக் கொள்கின்றார். (3)

# வாசிப்பு மாதத்தை முன்னிட்டு போட்டி

வடமராட்சி, ஒக்.10

தேசிய வாசிப்பு மாதத்தை முன்னிட்டு பருத்தித்துறை பிரதேச சபை பொதுநூலகம், இந்தப் பிரதேசத்துக்குட்பட்ட பாடசாலை மாணவர்களிடையே கட்டுரை, சித்திரப் போட்டிகளை நடத்தவுள்ளது.

கட்டுரைப்போட்டியில் ''நூலக அபிவிருத்தி'' ''புத்தகங்கள் எமது அரிய நண்பர்கள்''. ''தொலைக்காட்சியினால் உருவாகும் இன்றைய சீர்கேடுகள்'', ''நூலகம் ஓர் அறிவுப் பொக்கிஷம்'' ஆகிய தலைப்புகளிலும், சித்திரப்போட்டியில் ''டெங்குப் பிரச்சினையைத் தீர்ப்போம்'', அறிவு கூடிய சமூகத்தைக் கட்டி எழுப்புவோம்'' ''நூலக செயற்பாட்டில் மக்கள்'', ''வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த புனித இடம் ஒன்றில் யாத்திரிகர்கள் வழிபாடு செய்தல்'' என்ற தலைப்பிலும் கட்டுரைகளையும் சித்திரங்களையும் பாடசாலை அதிபர்கள் ஊடாக பருத்தித்துறை பிரதேச சபை பொதுநூலகரிடம் சமர்ப்பிக்குமாறு கேட்கப்பட்டுள்ளனர்.

இந்தப் பிரதேசத்தில் உள்ள புலோலி மெ.மி.த.க. பாடசாலை, புற்றளை மகாவித்தியாலயம், தம்பசிட்டி மெ.மி பாடசாலை, மேலைப் புலோலி சைவப் பிரகாச வித்தியாலயம் ஆகிய பாடசாலை மாணவிகள் இந்தப் போட்டிகளில் பங்குபற்றலாம் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. (3-8)

# ஆசிரியர்களுக்கான குறைகேள் செயற்பாடு

தென்மராட்சி, ஒக்.10

தென்மராட்சிக் கல்வி வலயப் பாடசாலைகளில் கடமையாற்றும் ஆசிரியர்களுக்கான குறைகேள் செயற்பாடுகள் ஒக்ரோபர் மாதத்தில் பிரதி சனிக்கிழமைகளிலும் இடம்பெறவுள்ளன.

கல்வி அமைச்சில் கடந்த 22 ஆம் திகதி நடைபெற்ற கூட்டத்தில் கல்வி அமைச்சின் செயலாளரினால் விடுக்கப்பட்ட அறிவுறுத்தல்களுக்கமைய இந்தக் குறைகேள் செயற்பாடுகளுக்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

சனிக்கிழமைகளில் ஆசிரியர்கள் தமது குறைபாடுகளைத் தெரிவித்து அவற்றுக்கான தீர்வுகளைப் பெற்றுக் கொள்ளலாம் என்று வலயக் கல்விப் பணிப்பாளர் கு.பிரேமகாந்தன் அறிவித்துள்ளார். (3-9)

# வழிகாட்டல் கருத்தரங்கு

தென்மராட்சிக் கல்வி வலயப் பாடசாலைகளில் க.பொ.த சாதாரண தரப் பரீட்சைக்குத் தோற்றும் மாணவர்களுக்கான கணித பாட மாதிரி வினாத்தாள் வழிகாட்டல் கருத்தரங்கு நடைபெறவுள்ளது.

நாளை மறுதினம் 12 ஆம் திகதி வெள்ளிக்கிழமை நடைபெறும் இந்தக் கருத்தரங்குக்கான வினாத்தாள்களை நாளை வியாழக்கிழமை கோட்டக் கல்வி அலுவலகத்தில் பெற்றுக் கொள்ளுமாறு வலயக் கல்விப் பணிப்பாளர் கு.பிரேமகாந்தன் அறிவித்துள்ளார். (3-5)




பாராட்டி வாழ்த்துகின்றோம்

யா/வாதரவத்தை விக்னேஸ்வரா வித்தியாலயம் புத்தூரில் கல்வி பயிலும் செல்வன் கேசவரூபன் மதுமிலன் அவர்கள் தரம் ஐந்து புலமைப் பரிசில் பரீட்சையில் 171 புள்ளிகள் பெற்று சித்தியடைந்ததையிட்டு அவரைப் பாராட்டி வாழ்த்துவதுடன் கல்வியில் மேன்மேலும் உயர்வடைய வாழ்த்துகின்றோம். அத்துடன் மாணவனின் வெற்றிக்கு வழிகோலிய அதிபர், ஆசிரியர்கள் மற்றும் பிரத்தியேக ஆசிரியரான செல்வன் அசோகதாசன் சதீஸ் ஆகியோரையும் வாழ்த்துகின்றோம்.

வாழ்த்துவோர்:
கனடாவில் வசிக்கும் சித்தப்பா வண்ணன், சித்தி மேகா, பெரியம்மா லோசினி மற்றும் அம்மப்பா (ஐயா), அம்மம்மா.
(23934)(2-6,7)

ENGLISH TEACHING CENTRE
at
Karanthan Road, Neervely.
English for all From the Basic Level (ஆரம்பநிலையில் இருந்து முழுமையான கற்கைநெறி)
Weekend Classes from 9-12
Teacher
Mr.S.S. Navaratnam
Contact No.: 077 979 0955

ஆசிரியர் தின வாழ்த்து

முல்லை மாவட்டம் துணுக்காய் வலயத்திற்குட்பட்ட கற்சிலைமடு மகாவித்தியாலயம் பல சாதனைகளை புரிந்து 80 ஆவது அகவையில் புதுப்பொலிவுற்று நிற்கின்றது. வித்தியாலய மாணவர்கள் கல்வியிலும் விளையாட்டிலும் சிறந்த பெறுபேறுகளை பெற்று தேசிய மட்டம் வரை கொண்டு சென்ற கதாநாயகர்களாகிய அதிபர், ஆசிரிய, ஆசிரியைகள் அனைவருக்கும் ஆசிரியர் தினமான 10.10.2012 இன்று அவர்களை உளமார் வாழ்த்துவதுடன் மேலும் அவர்களது பணி தொடர வாழ்த்துகிறோம்.

மாணவர்கள், பெற்றோர்கள்
கற்சிலைமடு மகா வித்தியாலயம்.

IELTS A1 B1 B2
Knowledge Universe Sri Lanka
October/27th Exam in Jaffna Call: 0777302882
Visit: http://edu.kugroup.info/ielts
தனிப்பட்ட முறையில்,உங்கள் நேர வசதிக்கேற்ப கற்கக்கூடிய,அதிக அளவிலான சிறந்த பெறுபேறுகளை யாழ்மாவட்டத்தில் வழங்கிவரும் ஒரே நிறுவனம்.
K.U Education,No 75,Temple Road,Jaffna. IELTS Centre

அகம் நிறை வாழ்த்துக்கள்



நன் முதல்வர்க்கான அரசுத்தலைவரால் வழங்கப்பட்ட "பிரதிபா பிரபா" விருதினைப் பெற்றுக் கொண்ட எமது பாடசாலை முதல்வர் திரு.நா.அக்கினேஸ்வரன் (அதிபர் மு/நெத்தலியாறு தமிழ் வித்தியாலயம்) அவர்களை உளம் நிறைந்து வாழ்த்துகின்றோம்.
"பணிசெய்துயர்ந்தாய் பார் போற்ற வாழ்க"
Best Wishes
ஆசிரியர்கள்/ மாணவர்கள் பாடசாலை அபிவிருத்திச் சங்கத்தினர்
மு/நெத்தலியாறு தமிழ் வித்தியாலயம்.
(23943)(2-7,6)

பிறந்தநாளில் பாராட்டி வாழ்த்துகிறேன்






பா.தவபாலன் காண்டீபன் (MBA)
லண்டன் ஒக்ஸ் வோர்ட் பல்கலைக்கழகத்தில் கடந்த 29.09.2012 இல் நடைபெற்ற பட்டமளிப்பு விழாவில்
MASTER OF BUSINESS ADMINISTRATION
(IN INTERNATIONAL BUSINESS)
பட்டம் பெற்றதை இன்றைய பிறந்த நாளில் வாழ்த்துவதுடன் மேன்மேலும் பல உயர்பட்டங்கள் பெறவும் வாழ்த்துகிறேன். யாழ். இந்து ஆரம்ப பாடசாலை, யாழ் சென்.ஜோன்ஸ் கல்லூரியின் பழைய மாணவராகிய இவர் சட்டத்தரணி பா. தவபாலன்—விஜிந்தா தம்பதியரின் இரண்டாவது புத்திரர் ஆவார்.
Dr.பா.இதயராஜ் (மாமா)
(23938)(5-6-7)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பாராட்டி வாழ்த்துகின்றோம்



மு/புதுக்குடியிருப்பு மத்திய கல்லூரி ஆசிரியரான

**திரு. வேலாயுதம் அகிலன்**

(S.L.P.S.-3, SP-Tr-Tamil, B.A, Dip in -Ed, M.A in Tamil)

அவர்கள் இலங்கை அதிபர் சேவை வகுப்பு -3 பதவி உயர்வு பெற்ற மைக்காக அவரைப் பாராட்டுவதோடு மேலும் பல சிறப்புக்கள் பெற வாழ்த்துகின்றோம்.

மைத்துனர்-
சிவராசாகிருஷ்ணதரன் (ரயன்)
ஜெனுதரன், ஜெசீபன்

அட்ஷிகம்
அல்வாய் வடக்கு,
அல்வாய்

(சி/4043)(5-6-7)

## கைத்தொழில் முயற்சியாளருக்கு பொதியிடல் பயிற்சி

யாழ். மாவட்டத்தில் உள்ள சிறு வர்த்தக கைத்தொழில் முயற்சியாளர் 50 பேருக்கு கடந்த வெள்ளிக்கிழமை விசேட பொதியிடல் சம்பந்தமான பயிற்சி நடைபெற்றுள்ளது.

யாழ். மாவட்டத்தில் 15 பிரதேச செயலர் பிரிவில் இருந்து 40 கைத்தொழில் முயற்சியாளர்களும், மன்னார் மாவட்டத்தில் இருந்து 10 கைத்தொழில் முயற்சியாளர்கள் என 50 தொழில் முயற்சியாளர்கள் இந்த விசேட பொதியிடல் பயிற்சியை பெற்றுக் கொண்டனர்.

இந்த நிகழ்வில் பொதியிடல் துறையில் விசேட அனுபவமும்-நிபுணத்துவமும் பெற்றவர்களினால் கருத்துக்கள் பகிரப்பட்டன. இறுதியில் பொதியிடல் சாதனம் மூலம் அனைவருக்கும் பயிற்சி வழங்கப்பட்டது. இந்த நிகழ்வில் கலந்துகொண்ட யாழ். வர்த்தக தொழில்துறை மன்றத்தின் தலைவர் எந்திரி கே.பூர்ணச் சந்திரன் உரையாற்றும்போது:-

கைத்தொழில்துறை முயற்சியாளர்கள் ஊக்குவிக்கப்படுவதன் ஊடாக பிரதேசத்தின் அபிவிருத்தி எய்தப்படும். இதன் ஊடாக கைத்தொழில் துறை முயற்சியாளர்களின் உற்பத்தி தரம் மேம்படும். எனவே இன்றைய காலகட்டத்துக்குத் தேவையான தொழில்துறை பயிற்சியையும், பொதியிடல் பயிற்சியையும் வழங்குகின்றோம்- என்றார். (3-50)

## பாராட்டி வாழ்த்துகின்றோம்



வ/நெளுக்குளம் கலைமகள் மகாவித்தியாலயத்தின் ஆங்கில ஆசிரியை

**திருமதி குமுதினி சதீஸ்குமார்**

அவர்கள் நல்லாசிரியருக்கான ஜனாதிபதி விருதான 'பிரதீபா பிரபா' விருதினை 09.10.2012 அன்று பெற்றதை முன்னிட்டு பாராட்டி வாழ்த்துகின்றோம்.

பாடசாலைச் சமூகம்
வ/நெளுக்குளம் கலைமகள் மகா வித்தியாலயம்
நெளுக்குளம், வவுனியா.

(20922)(5-6-7)

## கொக்குவில் இந்து அதிபரை வாழ்த்தி வரவேற்றல்



Best Wishes

கொக்குவிலூர் சமூகத்தின் தனித்துவமான கல்வி மரபுகளையும் விழுமிய பாரம்பரியங்களையும் தன்னகத்தே கொண்டு அறிவுலகின் புகழ் பூத்த கல்லூரியாக கொக்குவில் இந்துக்கல்லூரி திகழ்கின்றது. இக் கல்லூரித்தாயின் வளர்ச்சியிலும், உயர்ச்சியிலும் உறுதுணையாக நின்ற முன்னாள் புகழ்பூத்த அதிபர்கள், ஆசிரியர்கள், மாணவர்கள், பழைய மாணவர்கள் போன்றோர்களின் அளப்பரிய சேவையினாலேயே முதன்மை பெற்று விளங்குகின்றது. அதிலும் குறிப்பாக எமது கல்லூரியின் புகழ் பூத்த அதிபர் அன்புக்கும் பெருமதிப்புக்குமுரிய

உயர்திரு. S. **ஹன்டி பேரின்பநாயகத்தின்**

தன்னலமற்ற சேவையினாலேயே இன்று எமது கல்லூரி தலைநிமிர்ந்து புகழ் பூத்த கல்லூரியாக மிளிர்கின்றது என்பது யாரும் மறுக்க முடியாத உண்மையாகும். இத்தகைய சிறப்பும் மதிப்பும் மிக்க புகழ்பூத்த கல்லூரியில் அதிபராக வருவது கிடைத்தற்கரிய பேறாகும். அந்த வகையில் இன்று (10.10.2012) தலைமையேற்கும் புதிய அதிபராக வருகை தரும் மதிப்பிற்குரிய அதிபர்

**திரு. வே. ஞானகாந்தன்**

அவர்களை வாழ்த்தி வரவேற்பதுடன் அவரது சேவை எமது புகழ் பூத்த கல்லூரியின் தனித்துவமான கலைமரபுகளையும், பாரம்பரியங்களையும் அடியொற்றி வழி நடத்தி செல்வதற்கு எல்லாம் வல்ல கிருபாக கர சிவசுப்பிரமணிய சுவாமிகள் பாதார விந்தங்களை சிரம் தாழ்த்தி வணங்கி பணிந்து மகிழ்கின்றோம்.

வரவேற்று வாழ்த்துவோர்கள்:
பழைய மாணவ சங்க தாய்ச்சங்கம் - கொக்குவில் இந்துக் கல்லூரி.
பழைய மாணவ சங்கம் - கொழும்பு.
பழைய மாணவசங்கம் - கனடா.
பழைய மாணவசங்கம் - ஐக்கிய ராச்சியம்
பழைய மாணவசங்கம் - அவுஸ்திரேலியா, சிட்னி.
பழைய மாணவசங்கம் - அவுஸ்திரேலியா, விக்ரோறியா.
பழைய மாணவ சங்கம் - ஜேர்மனி.
பழைய மாணவ சங்கம் - நோர்வே.

(23937)(6.7.8)


# அனைத்து பாட நெறிகளுக்கும் நேரடிக் கட்டணக்கழிவு

- Basic
- Office Application
- Desktop Publishing
- Graphic Designing
- Video Editing
- Animation
- 3 D Modeling
- Programming
- Accounting
- Web Design
- Web Engineering
- Hardware
- Networking

Post win மெகா
கம்ப்யூட்டர் ஸ்கொலர்ஷிப்

நீங்கள் தெரிவுசெய்யும் பாடநெறி எதுவாயினும் 50% நேரடிக் கட்டணக்கழிவு

TECHNO WORLD Studies (Pvt) Ltd

| | |
|---|---|
| 344, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம். 021-4921124 | கண்டிவீதி, சாவகச்சேரி 021-4922400 |
| கொடிகாமம் வீதி, நெல்லியடி 021-4925145 | பலாலி வீதி, திருநெல்வேலி 021-4922401 |
| திருநகர் வீதி, கிளிநொச்சி 021-4925112 | முள்ளியவளை, தண்ணீரூற்று 024-3243660 |

வவுனியாவில்

| | |
|---|---|
| 77, 1ம் குறுக்குத்தெரு 024 4925972 | 26/15, மன்னார் வீதி , நெளுக்குளம் 024 4921892 |
| 147, குள வீதி, குடியிருப்பு 024 4925973 | கூமாங்குளம் வீதி, பண்டாரிகுளம் 024 4927259 |
| 06, புகையிரதநிலை வீதி, கரப்பன்காடு024 4925974 | சாஸ்திரிகூழாங்குளம் 024 4924451 |
| 118, சிவன்கோவில் வீதி, தோணிக்கல் 024 4921893 | செட்டிகுளம் 024 4924975 |


## வீட்டுக்கிருத்திய அழைப்பு

பிறப்பு 14.04.1937 இறப்பு 11.09.2012




அமரர்
**அருளையா பூதத்தம்பி**

கடந்த 11.09.2012 அன்று இறைபதம் அடைந்த எமது குடும்பத் தலைவர் அமரர் அருளையா பூதத்தம்பி அவர்களின் வீட்டுக்கிருத்தியம் நாளை(11.10.2012)வியாழக்கிழமை மு.ப. 11 மணியளவில் அன்னாரின் மகனின் துணுக்காய் இல்லத்தில் நடைபெறும். அத்தருணம் தாங்களும் தங்கள் குடும்பசகிதம் வருகை தந்து அவரது ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதிய போசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு அழைக்கின்றோம்.

அம்மன் வீதி, துணுக்காய். குடும்பத்தினர்.

## மரண அறிவித்தல்

### முருகேசு சங்கரப்பிள்ளை



வடமராட்சி கிழக்கு, அம்பனை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட முருகேசு சங்கரப்பிள்ளை 07.10.2012 ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான திரு. திருமதி முருகேசு தம்பதியரின் அன்பு மகனும் காலஞ்சென்றவர்களான கணபதிப்பிள்ளை, தங்கம்மா, வேலும்மயிலும் மற்றும் இராசமணி, கந்தசாமி (ராஜன் எலக்றிக்கல்ஸ், பருத்தித்துறை), நகுலராசா (ராஜன் காட்வெயர் ஸ்ரோர், பருத்தித்துறை.), புஸ்பராணி (லண்டன்), நவரத்தினம்(சுவிஸ்) ஆகியோ ரின் பாசமிகு சகோதரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (10.10.2012) புதன்கிழமை மு.ப. 11 மணியளவில் குடத்தனை கிழக்கில் அமைந்துள்ள அன்னாரின் மருமகள் (திரு.திருமதி நவலீலாவதி விஜயரத்தினம்)அவர்களின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக அம்பன் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

வடமராட்சி கிழக்கு. (23947)(5-6-7)

தகவல்:
குடும்பத்தினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பிரபா, பொட்டுவை பணயம் வைத்ததே ஏனையோரைக் காக்கும் சர்வதேசத் திட்டம்

## இப்போது போட்டுடைக்கிறார் எரிக் சொல்ஹெய்ம்

"பிரபாகரனையும் பொட்டம்மானையும் இலங்கை அரசிடம் பிடித்துக்கொடுத்துவிட்டு ஏனையவர்களுக்குப் பொதுமன்னிப்பு வழங்குவது என்ற திட்டத்தையே சர்வதேசம் கொண்டிருந்தது. அதனால் புலிகள் அந்தத் திட்டத்தை நிராகரித்துவிட்டனர்" என்று நோர்வேயின் முன்னாள் அமைச்சரும், இலங்கையின் சமாதானப் பேச்சுக்களில் ஏற்பாட்டாளராக பணியாற்றியவருமான, எரிக் சொல்ஹெய்ம் தெரிவித்துள்ளார்.

லண்டனில் பி.பி.சி. தமிழோசை மற்றும் சிங்கள சேவைக்கு அளித்துள்ள செவ்வி ஒன்றிலேயே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார். அந்த செவ்வியில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளதாவது:-

**கேள்வி:** இலங்கை இராணுவத்துக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையிலான போரின் இறுதிக் கட்டத்தில் பெருமளவிலான பொதுமக்கள் கொல்லப்படக் கூடிய மனிதப் பேரவலம் நடக்காமல் தடுக்கும் நோக்கத்தில், அனைத்துலக நாடுகள் கூட்டாக எடுத்த முயற்சி, இந்த திட்டம் உருவான பின்னணி, அது ஏன் செயற்படாமல் கைவிடப்பட்டது?

**பதில்:** இலங்கையின் சமாதானத்துக்காக முயற்சி எடுத்த கொடை நாடுகளான ஜப்பான், அமெரிக்கா, ஐரோப்பிய ஒன்றியம் மற்றும் நோர்வே ஆகிய நாடுகள் இணைந்து 2009ஆம் ஆண்டு ஜனவரி மாதம் ஒரு யோசனையை முன்வைத்தன. ஐ.நாவும் இதன் பின்னணியில் இருந்தது.

அப்போது, போரின் முடிவு இலங்கை அரசுக்கு இராணுவ ரீதியிலான வெற்றியாக அமையும் என்பது எல்லோருக்கும் தெரிந்திருந்த நிலையில், பேரழிவை தடுக்கும் வகையில் போரை முறையாக முடிவுக்கு கொண்டு வரவேண்டும் என்ற யோசனையை நாங்கள் முன்வைத்தோம்.

விடுதலைப்புலிகளும் இலங்கை அரசும் ஒப்புக்கொண்ட பிறகு தான் அந்தத் திட்டத்தின் முழுமையான இறுதி வடிவமும் முடிவு செய்யப்பட்டிருக்கும்.

அதற்கு அடிப்படையாக நாங்கள் தெரிவித்த நடைமுறை யோசனை என்னவென்றால், சர்வதேச அமைப்பு, உதாரணமாக அமெரிக்கா, இந்தியா அல்லது வேறு ஒரு நாடு சிறிலங்காவின் வடக்கு - கிழக்குப் பகுதிக்கு ஒரு பெரிய கப்பலை அனுப்பி வைப்பது என்றும், அதில் ஐ.நா. அதிகாரிகளோ அல்லது மற்ற அனைத்துலக அமைப்பைச் சேர்ந்தவர்களோ இருந்து, போரின் இறுதியில் எஞ்சியிருந்த அனைத்து விடுதலைப்புலிகள் மற்றும் பொதுமக்கள் அனைவரையும் ஒருவர் விடாமல் கணக்கெடுத்து புகைப்படத்துடன் பதிவு செய்வது என்றும் தெரிவித்திருந்தோம்.

அவர்கள் அனைவரும் கொழும்பு கொண்டு செல்லப்பட்டு அவர்களிடமிருந்த ஆயுதங்களை ஒப்படைத்த பின்னர், விடுதலைப் புலிகள் அமைப்பின் தலைவர் பிரபாகரன் மற்றும் பொட்டு அம்மான் ஆகிய இருவர் தவிர்ந்த மற்ற அனைவருக்கும் பொதுமன்னிப்பு வழங்கப்படும் என்பதாகும்.

அப்படி நடந்திருந்தால், அனைத்துலக சமூகத்தின் முன்னிலையில் அனைத்துலக அமைப்புக்களால் பதிவு செய்யப்பட்டவர்களை இலங்கை அரசால் நினைத்த மாத்திரத்தில் கொல்ல முடிந்திருக்காது.

எங்களின் இந்த யோசனை மட்டும் ஏற்கப்பட்டிருந்தால், இறுதிக்கட்டத்தில்



கொல்லப்பட்ட விடுதலைப் புலிகள் உள்ளிட்ட ஆயிரக்கணக்கானோர் இன்று நம்மிடையே உயிருடன் இருந்திருப்பார்கள்.

எமது இந்தப் பேச்சுக்கள் 2009 ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் தொடக்கம் போரின் இறுதி வரை தொடர்ந்தது.

இதன் ஒரு கட்டமாக, ஏப்ரல் மாதம் இந்த திட்டத்தின் இறுதி வடிவத்தை முடிவு செய்வதற்காக விடுதலைப் புலிகள் அமைப்பின் அனைத்துலகத் தொடர்பாளராக இருந்த குமரன் பத்மநாதன் ஒஸ்லோவுக்கு வருவதாக திட்டமிடப்பட்டிருந்தது.

ஆனால் கடைசி நிமிடத்தில் பிரபாகரன் அவரைத் தடுத்து விட்டார். எங்களின் பாதுகாப்பு அதிகாரிகள் அவரை பத்திரமாக அழைத்து வருவதற்காக கோலாலம்பூருக்கே சென்றிருந்தனர்.

ஆனால் இந்தத் திட்டம் தங்களுக்கு ஏற்புடையதல்ல என்று எங்களுக்கு செய்தி சொல்லப்பட்டது. எங்களால் ஒன்றும் செய்யமுடியவில்லை.

**கேள்வி:** இந்தத் திட்டத்துக்கு இலங்கை அரசின் ஒப்புதல் இருந்ததா?

**பதில்:** அந்த நாள்களில் நான் இலங்கைக்குச் செல்லவில்லை.

ஆனால் ஒஸ்லோவில் இருக்கும் இலங்கைத் தூதரகம் மூலமாகவும், மற்ற தூதரகங்கள் மூலமாகவும் இலங்கை அரச தரப்புடன் எங்களுக்கு இருந்த தொடர்புகள் மூலமாகவும் இலங்கை அரசுடன் நாங்கள் பல பேச்சுக்களை நடத்தினோம்.

அவர்களுடன் பேசியதிலிருந்து முழுமையான இராணுவ வெற்றியை பெறுவதே இலங்கை அரசின் பெரும்பாலானவர்கள் விரும்புகிறார்கள் என்ற உணர்வையே நாங்கள் பெற்றோம்.

அதேசமயம், விடுதலைப் புலிகள் இந்த திட்டத்துக்கு ஒப்புதல் வழங்கியிருந்தால் இலங்கை அரசுக்கு அதற்கு சம்மதிப்பதைத் தவிர வேறு வழி இருந்திருக்காது என்றே எங்களுக்கு தோன்றியது.

**கேள்வி:** இந்தத் திட்டத்துக்கு இலங்கை அரசு ஒப்புக்கொண்டிருக்கும் என்று எதை வைத்து நீங்கள் நம்புகிறீர்கள்?

**பதில்:** அவர்களுக்கு இதில் விருப்பம் இருக்கிறதோ இல்லையோ, அவர்கள் இதை ஏற்றுக்கொண்டிருக்க வேண்டிய நிலைமையே இருந்தது.

காரணம் இந்தியாவும் அமெரிக்காவும் மற்றவர்களும் இதில் உறுதி காட்டியிருப்பார்கள், ஒட்டுமொத்த அனைத்துலக சமூகத்தினரும் இதில் ஒன்றாகவும் உறுதியாகவும் குரல் கொடுத்திருப்பார்கள்.

இலங்கை அரசுக்குத் தயக்கம் இருந்திருந்தாலும் அவர்களுக்கு வேறு வழி இருந்திருக்காது.

**கேள்வி:** அப்படியானால், இலங்கைப் போரின் இறுதிக் கட்டத்தில் பல்லாயிரக்கணக்கானவர்கள் கொல்லப்பட்டதற்கு முதன்மையான பொறுப்பு விடுதலைப் புலிகளின் தலைமையை சாரும் என்கிறீர்களா?

**பதில்:** போரின் இறுதி முடிவு என்னவாக இருக்கப் போகிறது என்பதை அனைவரும் உணர்ந்த நிலையிலும் போரை, ஒழுங்குபடுத்தப்பட்ட முறையில் முடிக்காமல் கடைசிவரை போராட வேண்டும் என்று பிரபாகரன் உள்ளிட்ட விடுதலைப்புலிகள் அமைப்பின் தலைமை முடிவெடுத்தது மிகப்பெரிய வரலாற்றுத் தவறு என்றே நான் நினைக்கிறேன்.

அதேசமயம், இதை காரணமாகக் காட்டி இலங்கை அரசு நடத்திய குறிவைத்த தாக்குதல்களை நியாயப்படுத்த முடியாது.

மக்கள் செறிவாக வாழும் பகுதிகள் என்று தெரிந்தே, இலங்கைஅரசு தாக்குதல்களை நடத்தியது என்பதற்கான பல சான்றுகள், அறிக்கைகள் வெளிவந்துள்ளன.

அதிலும் குறிப்பாக துப்பாக்கிச் சூடுகள் நடத்த முடியாத 'பாதுகாப்பு வலயம்' என்று அரசே ஒரு பகுதியை அறிவிப்பதும் அந்தப் பகுதிக்கு மக்கள் வந்த பிறகு அங்கே குறிவைத்து தாக்குதல் நடத்துவதுமாக அரசு செயற்பட்டிருக்கிறது என்பதற்கான வலுவான சான்றுகள் கிடைத்திருக்கின்றன.

**கேள்வி:** இந்தத் திட்டத்துக்கு இந்திய அரசின் ஒப்புதல் இருந்ததா?

**பதில்:** விடுதலைப்புலிகள் அமைப்பு தொடர்பாக இந்திய அரசிடம் கொஞ்சம் கூட அனுதாபம் இல்லை.

ராஜீவ்காந்தி கொலை உட்பட பல்வேறு காரணங்கள் இதற்குப் பின்னணியில் இருக்கின்றன.

அதேசமயம், இறுதிகட்டத்தில் ஆயிரக்கணக்கானவர்கள் கொல்லப்படக்கூடாது என்பது குறித்து அங்கே கரிசனை காணப்பட்டது.

**கேள்வி:** நீங்கள் இறுதியாக முன்வைத்த திட்டத்துக்கு இந்திய அரசின் ஒப்புதல் இருந்ததா இல்லையா?

**பதில்:** இலங்கைப் பிரச்சினையில் நான் ஈடுபட்டிருந்த 10 ஆண்டு காலங்களில் இந்தியாவுக்கு தெரிவிக்காமல் நான் எந்த திட்டத்தையும் முன்னெடுத்ததில்லை.

இந்த திட்டத்தை இந்தியா ஏற்றிருக்கும் என்பதிலும் இந்தத் திட்டத்தின் ஒரு பகுதியாக இந்திய அரசும் இருந்திருக்கும் என்பதிலும் எனக்கு எந்தவித சந்தேகமும் இல்லை.

**கேள்வி:** இப்படி ஒரு திட்டம் இருந்ததாக நீங்கள் இப்போது கூறும் கருத்துக்கள் உண்மையானவை என்பதற்கு என்ன ஆதாரம்?

**பதில்:** 2009ஆம் ஆண்டில் நடந்த இந்த விடயங்கள், கொழும்பில் இருக்கும் அமெரிக்கத் தூதரகத்தின் தகவல் பரிமாற்றங்கள் மற்றும் அது தொடர்பான மற்ற ராஜீய தகவல் பரிமாற்றங்கள் அனைத்தும் விக்கிலீக்ஸில் வெளியாகியிருக்கின்றன.

அவற்றில் இருக்கும் தகவல்களை நுணுகிப் பார்த்தால் இந்தக் கூற்றுக்கான ஆதாரங்கள் அதில் இருக்கின்றன என அவர் மேலும் தெரிவித்தார்.

# தமிழினப் படுகொலைகள் ஜேர்மன் மொழியில் வெளிவருகிறது!

கொழும்பு, ஒக்.10

வடகிழக்கு மனித உரிமை செயலகம் தொகுத்து வெளியிட்ட தமிழினப்படுகொலைகள் என்ற நூல் ஜேர்மன் மொழியில் வெளிவரவுள்ளது.

இந்த நூல் எதிர்வரும் 14 ஆம் திகதி பிறாங்பேட் நகரில் இடம்பெற உள்ள புத்தகக் கண்காட்சி விழாவில் வெளியிடப்பட உள்ளது.

கிளிநொச்சியை தலைமையகமாக கொண்டு இயங்கிய வடகிழக்கு மனித உரிமை செயலகத்தால் 1956- 2008 ஆம் ஆண்டுக்காலப்பகுதியில் இடம்பெற்ற தமிழின படுகொலை விவரங்கள் இந்நூலில் இடம்பெற்றுள்ளன. வடகிழக்கு மனித உரிமை செயலகத்தின் தலைவராக இருந்த வணபிதா மாரியம் சேவியர் கருணரட்ணம், முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர்களான ஜோசப் பரராசசிங்கம், அரியநாயகம் சந்திரநேரு, ஆகியோர் சிறிலங்கா படைகளால் சுட்டுக்கொல்லப்பட்டுள்ளன . ஏனைய உறுப்பினர்கள் அச்சுறுத்தல்களுக்கு மத்தியில் இலங்கைத்தீவிலும், வெளிநாடுகளிலும் வாழ்கின்றனர்.

ஏற்கனவே தமிழிலும் ஆங்கிலத்திலும் வெளியான தமிழினப் படுகொலை நூலை தழுவி ஜேர்மன் மொழியில் பேராசிரியர் பீற்றர் சால்ஸ் எழுதியுள்ளார். இதற்கு உறுதுணையாக ஏற்கனவே தமிழிலும் ஆங்கிலத்திலும் வெளியாவதற்கு உதவிய என். மாலதி அவர்கள் பேராசிரியர் பீற்றர் சால்ஸ் அவர்களுக்கு இந்த நூலை வெளியிட உதவியுள்ளார்.

ஏற்கனவே தமிழிலும் ஆங்கிலத்திலும் வெளியான தமிழினப் படுகொலை நூல் இந்தியாவில் அச்சுப்பதிப்புச் செய்து வெளியிடப்பட்டதால் இந்தியப் படைகளால் தாயகத்தில் மேற்கொள்ளப்பட்ட படுகொலைகள், மனித உரிமை மீறல்கள் இடம்பெறவில்லை. ஆனால் ஜேர்மன் மொழியில் வெளிவரும் இந்த நூலில் இந்திய படைகளால் மேற்கொள்ளப்பட்ட தமிழினப் படுகொலைகள் விவரமாக வெளியிடப்பட்டுள்ளது.

இந்தியாவிலிருந்து வெளியிடப்பட்ட தமிழினப் படுகொலைகள் நூலில் இலங்கை இந்திய இராணுவத்தினரால் பாதிக்கப்பட்டவர்களின் விவரங்கள் வெளியிடப்படவில்லை. எனினும் இவை அனைத்தும் ஜேர்மன் மொழியில் சேர்க்கப்பட்டுள்ளதாக வெளியீட்டாளர்கள் தெரிவித்துள்ளனர்.

இலங்கை இந்தியப் போர்க்குற்றவாளிகளை கூண்டில் நிறுத்துவதற்கு இந்த நூல் உதவும் என வெளியீட்டாளர்கள் நம்பிக்கை தெரிவித்துள்ளனர்.

# விஜயதசமி தின விசேட வகுப்புகள்

கிளிநொச்சி, ஒக். 10

விஜயதசமி தினத்தன்று விசேட வகுப்புகள் ஆரம்பமாகவுள்ளதாக முரசுமோட்டை முருகானந்தா கல்லூரி பிரதி அதிபர் அறிவித்துள்ளார்.

மிருதங்கம், ஓகன், பியானோ, நடனம், சங்கீதம் ஆகிய விசேட கவின்கலை வகுப்புக்கள் ஆரம்பிக்கப்படவுள்ளதால் பயிற்சிபெற விரும்பும் மாணவர்கள் அலுவலகத்தில் விண்ணப்பப் படிவங்களைப் பெற்றுப் பூரணப்படுத்தி ஒப்படைக்குமாறு அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

எதிர்வரும் 16ஆம் திகதி செவ்வாய்க்கிழமை நவராத்திரி விரதம் ஆரம்பமாக உள்ளதுடன் அதனை அடுத்துவரும் 9ஆம் நாளான 24ஆம் திகதி புதன்கிழமை விஜயதசமி கொண்டாடப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

(16)

# ஆஸ்திரேலியா நோக்கி சட்டவிரோத படகில் சென்ற 67 பேர் கடற்படையினரால் கைது!

கொழும்பு,ஒக்.10

ஆஸ்திரேலியா நோக்கிச் சட்டவிரோத படகுப் பயணத்தை மேற்கொண்ட மேலும் ஒரு தொகுதியினரை கடற்படையினர் நேற்று முன்தினம் கைது செய்துள்ளனர்.

சிலாபம் பிரதேசத்துக்கு அப்பால் உள்ள கடலில் வைத்தே இவர்கள் கைது செய்யப்பட்டுள்ளதாக கடற்படைத் தரப்பினர் குறிப்பிட்டுள்ளனர்.

கைது செய்யப்பட்டவர்களில் 45 தமிழர்களும் 22 சிங்களவர்களும் உள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. இவர்களில் 7 பெண்களும் 6 சிறார்களும் சென்றுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

ஆரம்ப விசாரணைகள் மூலம் இவர்கள், யாழ்ப்பாணம், வவுனியா, கிளிநொச்சி, சிலாபம், மட்டக்களப்பு, இங்கிரிய மற்றும் கொட்டாஞ்சேனை பிரதேசங்களைச் சேர்ந்தவர்கள் என தெரிய வந்துள்ளதாகப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

கைது செய்யப்பட்டவர்கள் முகத்துவாரம் மீன்பிடி இறங்குதுறைக்கு கொண்டுவரப்பட்டு, இரகசியப் பொலிஸாரிடம்; மேலதிக விசாரணைக்காக ஒப்படைக்கப்பட்டுள்ளனர்.

**கைது செய்யப்பட்டவர்களில் 45 தமிழர்களும் 22 சிங்களவர்களும் உள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கைத் தேசிய அணியில் ஹென்றிஸ் வீரன் ஞானேஸ்வரன்

## ஜப்பான் புறப்பட்டது உதைபந்து அணி



ஜப்பான் உதைபந்தாட்ட சம்மேளனம், இலங்கை உதைபந்தாட்ட சம்மேளனத்தின் ஏற்பாட்டில் 14 வயதுப் பிரிவிக்கு உட்பட்ட உதை பந்தாட்ட அணி ஜப்பானுக்குக் கடந்த சனிக்கிழமை புறப்பட்டுச் சென்றுள்ளது.

இந்த அணியில் இளவாலை புனித ஹென்றியரசர் கல்லூரி வீரன் ஏ.என். ஞானேஸ்வரன் இடம் பெற்றுள்ளார். ஜப்பான் சென்றுள்ள உதைபந்தாட்ட அணிக்கு உதவிப் பயிற்றுனராக யாழ். மாவட்ட பாடசாலைகள் உதை பந்தாட்டச் சங்கத்தின் இணைப்பாளர் மரியதாஸ் பேர்ட்டி பனிஸ்ரர் தெரிவுசெய்யப்பட்டுள்ளர்.

இலங்கை அணிக்கு கந்தானை டி.மஷனட் கல்லூரி மாணவன் எஸ்.ஆர். ஜி ரங்கு சில்வா தலைமை தாங்குகின்றார்.

வடக்கு, கிழக்கு வீரர்கள் உட்பட 22 பேர் இவ்வணியில் இடம்பெற்றுள்ளார்கள்.

7 ஆம் திகதி முதல் 20ஆம் திகதிவரை இந்தப் போட்டி ஜப்பானில் நடைபெறவுள்ள. இந்தச் சுற்றுப் போட்டியில் ஆப்கானிஸ்தான், பங்களாதேஸ், பூட்டான், இந்தியா, மாலைதீவு, நேபாளம், பாகிஸ்தான், இலங்கை ஆகிய 8 நாடுகள் பங்கு பற்றவுள்ளன.

(த-86-23)

## இன்றைய ஆட்டம்



பருத்தித்துறை உதைபந்தாட்ட லீக்கின் அனுசரணையுடன் ஆதிசக்தி விளையாட்டுக் கழகம் நடத்தும் உதைபந்தாட்டச் சுற்றுப்போட்டித் தொடரில் இன்று புதன்கிழமை இடம் பெறவுள்ளன.

இந்த அரையிறுதி ஆட்டங்களில் பங்குபற்றவுள்ள அணிகளின் விவரங்கள் வருமாறு-

**பி.ப.3.30 மணி**

வல்வை விளையாட்டுக்கழகம் எதிர் விளான் சென்.அன்ரனிஸ் விளையாட்டுக்கழகம் (த-23)

# இறுதியாட்டம் இன்று

பருத்தித்துறை உதைபந்தாட்ட லீக்கின் அனுமதியுடன் கொற்றாவத்தை சிவானந்தா விளையாட்டுக் கழகம்நடத்தும் உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டியின் இறுதியாட்டம் மின்ஒளியில் இன்று புதன் கிழமை கொற்றாவத்தை குகழக சிவானந்தா விளையாட்டு மைதானத்தில் இடம்பெற வுள்ளது.

7 மணியளவில் இடம் பெறவுள்ள மூன்றாமிடத்துக்கான ஆட்டத்தில் வதிரி பொம்மர்ஸ் விளையாட்டுக் கழகத்தை எதிர்த்துக் கலட்டி விளையாட்டுக் கழக அணி மோதவுள்ளது.

8 மணியளவில் இடம் பெறவுள்ள இறுதியாட்டத்தில் இளவாலை யங்ஹென்றிஸ் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து டைமன்ஸ் விளையாட்டுக் கழக அணி மோதவுள்ளது.

பிரதம விருந்தினர்களாக வடமாகாண விளையாட்டுத்துறைப் பணிப்பாளர் எஸ். அண்ணாத்துரை, சிறப்பு விருந்தினராக வடமாகாண உள்ளூராட்சி அமைச்சின் செயலாளர் ஆர்.வரதீஸ்வரன், பருத்தித்துறை பிரதேச செயலர், மருதங்கேணி பிரதேச செயலர் ரி.திருலிங்கநாதன், பருத்தித்துறை 521 படைப் பிரிவின் பொறுப்பதிகாரிபிரிகேடியர் விக்றேஸ் திஸநாயக்க ஆகியோர் கலந்துகொள்ளவுள்ளனர். (23)

# தீபஜோதி, மகாத்மா அணிகள் இறுதியாட்டங்களில் சம்பியன்

மாங்குளம்,ஒக்.10

தும்பளை விவேகானந்தா விளையாட்டுக் கழகத்தால் நடத்தப்பட்ட மென்பந்துக் கிரிக்கெட் சுற்றுப் போட்டியின் இறுதியாட்டத்தில் 5 பந்துப் பரிமாற்றங்களைக் கொண்ட மென்பந்து கிரிக்கெட் சுற்றுப்போட்டித் தொடரின் இறுதியாட்டத்தில் தீபஜோதி விளையாட்டுக் கழகமும், 15 பந்துப் பரிமாற்றங்களைக்கொண்ட மென்பந்துக் கிரிக்கெட் சுற்றுப்போட்டியின் இறுதிப் போட்டியில் மகாத்மா விளையாட்டுக் கழகம் ஆகிவை வெற்றிபெற்று சம்பியனாகின.

கடந்த ஞாயிற்றுக் கிழமை தும்பளை கண்ணகி அம்மன் ஆலயத்துக்கு அருகாமையில் உள்ள மைதானத்தில் இடம்பெற்ற இறுதியாட்டங்களில் வைத்திய கலாநிதி பரிமேலழகன், வே.விமலன், பரணிதரன் ஆகியோரின் ஞபாகார்த்த வெற்றிக் கிண்ணத்துக்காக இடம்பெற்ற 5 பரிமாற்றங்களைக்கொண்ட மென்பந்துக் கிரிக்கெட் சுற்றுப் போட்டியின் இறுதியாட்டத்தில் ஞானம்ஸ் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து தீப ஜோதி விளையாட்டுக் கழக அணி மோதிக்கொண்டது.

நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற ஞானம் விளையாட்டுக் கழகம் முதலில் துடுப்பெடுத்தாடத் தீர்மானித்தது.

ஞானம்ஸ் விளையாட்டுக் கழக அணி 5 பந்துப் பரிமாற்றங்கள் நிறைவில் சகல இலக்குகளையும் இழந்து 49 ஓட்டங்களை பெற்றன.

இதில் அனுசயந்தன் 12 ஓட்டங்களையும், சுகந்தன் 10 ஓட்டங்களையும், சேந்தன் 8 ஓட்டங்களையும் தமது அணி சார்பாகப் பெற்றுக் கொண்டனர்.

பந்துவீச்சில் தீபஜோதி விளையாட்டுக் கழக அணி சார்பில் சசி மூன்று ஓட்டங்களைக்கொடுத்து மூன்று இலக்குகளை வீழ்த்தினார்.

50 ஓட்டங்களைப் பெற்றால் வெற்றி என பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய தீபஜோதி விளையாட்டுக் கழக அணி 4.3 பந்துப் பரிமாற்றங்கள் நிறைவில் 2 இலக்குகளை இழந்து 53 ஓட்டங்களைப் பெற்றது.

இதில் பிரசாந் ஆட்டமிழக்காது 27 ஓட்டங்களையும், நிரோஜன் 11 ஓட்டங்களையும் தமது அணி சார்பாகப் பெற்றுக்கொண்டனர்.

பந்துவீச்சில் ஞானம் விளையாட்டுக் கழக அணி சார்பாக அனுசயன் 2 இலக்குகளை வீழ்த்தினார்.

இதில் ஆட்ட நாயகனாக திபஜோதி விளையாட்டுக் கழக அணி வீரன் பிரசாந்தனும், தொடர் ஆட்டநாயகனாக ஞானம்ஸ் விளையாட்டுக் கழக சுகந்தனும் தெரிவு செய்யப்பட்டனர்.

நிகழ்ச்சித் திட்ட உதவியாளர் பிரபாகரனின் மூன்றாவது ஞாபகார்த்த வெற்றிக் கிண்ணத்துக்காக இடம்பெற்ற 15 பந்துப் பரிமாற்றங்களைக் கொண்ட மென்பந்துக் கிரிக்கெட் சுற்றுப்போட்டித் தொடரின் இறுதியாட்டத்தில் நியூபவர் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து மகாத்மா விளையாட்டுக் கழக அணி மோதிக்கொண்டது.

முதலில் நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற நியூபவர் விளையாட்டுக் கழக அணியினர் துடுப்பெடுத்தாடத் தீர்மானித்தனர்.. அதற்கமைய முதலில் துடுப்பெடுத்தாடிய நியூபவர் விளையாட்டுக் கழக அணியினர் 15 பந்துப் பரிமாற்றங்கள் நிறைவில் 8 இலக்குகளை இழந்து 71 ஓட்டங்களைப் பெற்றனர்.

இதல் கிரிசாந் 15 ஓட்டங்களையும், காந்தரூபன் 19 ஓட்டங்களையும் தமது அணி சார்பாகப் பெற்றிருந்தனர்.

பந்துவீச்சில் மகாத்மா விளையாட்டுக் கழக அணி சார்பில் சுதன், உமாசாந்தன், டெஸ்ன ஆகியோர் தலா 2 இலக்குகளையும், சுகந்தன் ஒரு இலக்கினையும் வீழ்த்தினர்.

72 ஓட்டங்களை வெற்றியிலக்காகக்கொண்டு பதிலுக்கும் துடுப்பெடுத்தாடிய மகாத்மா விளையாட்டுக் கழக அணியினர் 12 பந்துப் பரிமாற்றங்கள் நிறைவில் 7 இலக்குகளை இழந்து வெற்றி இலக்கினை அடைந்தனர்.

இதில் தயாளன் 30 ஓட்டங்களையும், உமா சுதன் 10 ஓட்டங்களையும் தமது அணி சார்பாகப் பெற்றனர்.

பந்துவீச்சில் நியூபவர் அணி சார்பில் நிபந்தன் 3 இலக்குகளையும், காந்தரூபன், பிரகாஸ் ஆகியோர் 2 இலக்கினையும் வீழ்த்தினர்

ஆட்ட நாயகனாக மகாத்மா விளையாட்டுக் கழ அணி வீரன் தயாளனும் தொடர் அட்ட நாயகனாக நியூபவர் விளையாட்டுக் கழக அணி வீரன் காந்தரூபன் தெரிவு செய்யப் பட்டார்.

(த-422-23)



பாஷையூர் சென்.அன்ரனிஸ் விளையாட்டுக் கழகத்தின் அனுமதியுடன் [illegible] அணிகளுக்கிடையே நடத்திய 9 பேர் பங்குபற்றும் விலகல் முறையிலான [illegible] சுற்றுப் போட்டியில் இரண்டாம் இடத்தைப் பெற்றுக்கொண்ட வீனஸ் அணியினர். (த-23)

# தென்னியங்குளம் இளம் புயல் சம்பியன்

யாழ்ப்பாணம்,ஒக்.10

இலங்கை உதைபந்தாட்டச் சம்மேளனமும், விளையாட்டுத்துறை அமைச்சும் இணைந்து தேசிய உதைபந்தாட்ட அணிக்கான வீரர்களைத் தெரிவு செய்வதற்காக முதற்கட்ட போட்டிகளைச் பிரதேச செயலக பிரிவுகளுக்கு இடையே நடத்தி வருகின்றன.

இந்த வகையில் துணுக்காய் பிரதேச செயலர் பிரிவில் பதிவு செய்யப்பட்ட கழகங்களின் 21 வயதுப் பிரிவுக்குட்பட்ட அணிகளுக்கு இடையிலான உதைபந்தாட்டப் போட்டியின் இறுதியாட்டம் அண்மையில் துணுக்காய், யோகபுரம் மகாவித்தியாலய மைதானத்தில் இடம்பெற்றது.

இந்த இறுதியாட்டத்தில் தென்னியங்குளம் இளம்புயல் விளையாட்டுக்[illegible] அணியை எதிர்த்து கோட்டை கட்டியகுளம் தோழர்கள் விளையாட்டுக்கழக அணி மோதிக்கொண்டது.

இதில் தென்னியங்குளம் இளம் புயல் விளையாட்டுக் கழக அணி 3: 0 என்ற கணக்கில் கோட்டை கட்டிய தோழர்கள் அணியை வீழ்த்திச் சம்பியனாகியது.

(த-23)

# ஆதவன் வி.க. வெற்றி

புதியபாரதி விளையாட்டுக்கழகத்தினால் புதிதாக அமைக்கப்பட்ட மைதான திறப்பு விழாவை முன்னிட்டு நடத்தப்பட்ட ஆண்களுக்கான கிளித்தட்டுப் சுற்றுப் போட்டியின் இறுதியாட்டம் கடந்த ஞாயிற்றுக்கிழமை புதிய பாரதி விழையாட்டுக்கழக மைதானத்தில் இடம்பெற்றது இறுதியாட்டத்தில் இயக்கச்சி ஆதவன் விளையாட்டுக்கழ[illegible] அணியை எதிர்த்து பொன்னகர் கண்ணன் விளையாட்டு[illegible] கழக அணி மோதிக் கொண்டது.

இதில் இயக்கச்சி ஆதவன் விளையாட்டுக்கழக அணி 4:1 என்ற புள்ளி அடிப்படையில் பொன்னகர் கண்ணன் விளையாட்டுக்ழகத்தை வெற்றிகொண்டு சம்பியனானது. (23)

# இளவாலை சென். ஹென்றிஸ் கல்லூரி சம்பியன்

இலங்கை உதைபந்தாட்ட சம்மேளனம் பாடசாலைகளுக்கு இடையே நடத்திய 15 வயதுப் பிரிவு அணிகளுக்கு இடையிலான மாவட்ட மட்ட உதைபந்தாட்டத்தின் இறுதியாட்டம் கடந்த சனிக்கிழமை யாழ். துரையப்பா விளையாட்டரங்கில் இடம்பெற்றது.

இதில் இளவாலை சென்.ஹென்றிஸ் கல்லூரி அணியை எதிர்த்து சென்.ஜோன்ஸ கல்லூரி அணி மோதிக்கொண்டது.

இளவாலை சென்.ஹென்றிஸ் கல்லூரி அணி 2:0 என்ற கோல் கணக்கில் சென்.ஜோன்ஸ் கல்லூரி அணியை வெற்றி கொண்டு மாவட்டசம்பியனானது. (23)

# வென்றது ஸ்கைலப்

யாழ்ப்பாணம்,ஒக்.10

இலங்கை உதைபந்தாட்டச் சம்மேளனமும், விளையாட்டுத்துறை அமைச்சும் இணைந்து தேசிய உதைபந்தாட்ட அணிக்கான வீரர்களைத் தெரிவு செய்வதற்காக முதற்கட்ட போட்டிகளை பிரதேச செயலக பிரிவுகளுக்கு இடையே நடத்தி வருகின்றன.

இந்த வகையில் மாந்தை கிழக்கு பிரதேச செயலர் பிரிவில் பதிவு செய்யப்பட்ட கழகங்களின் 21 வயதுப் பிரிவுக்குட்பட்ட அணிகளுக்கு இடையிலான உதைபந்தாட்டப் போட்டியின் இறுதியாட்டம் அண்மையில் துணுக்காய், பண்டியன்குளம் இளங்கதிர் விளையாட்டுக் கழக மைதானத்தில் இடம்பெற்றது.

இந்த இறுதியாட்டத்தில் ஸ்கைலப் விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து இளங்கதிர் விளையாட்டுக்கழக அணி மோதிக்கொண்டது.

இதில் ஸ்கைலப் விளையாட்டுக் கழக அணி 3: 0 என்ற கணக்கில் இளங்கதிர் அணியை வீழ்த்திச் சம்பியனாகியது.

பிரதம விருந்தினராக மாந்தை கிழக்கு பிரதேச செயலர் குணபாலனும், சிறப்பு விருந்தினராக மாந்தை கிழக்கு உதவிப் பிரதேச செயலர் பிருந்தாபனும் கலந்து கொள்ளவுள்ளார்கள்.

(23)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கை ரசிகர்கள் தற்கொலை?

'ரி-20' உலகக் கிண்ணத் தொடரில் இலங்கை அணியின் தோல்வியை தாங்காத இரண்டு ரசிகர்கள் தற்கொலை செய்து கொண்டனர்.

நான்காவது 'ரி-20' உலகக் கிண்ணத் தொடரின் இறுதி ஆட்டத்தில் மேற்கிந்தியத்தீவுகள் அணி, இலங்கையை வீழ்த்தி, சம்பியன் பட்டம் வென்றது. இதையடுத்து இலங்கை ரசிகர்கள் அனைவரும் சோகத்தில் மூழ்கினர்.

இதில் உணர்ச்சிவசப்பட்ட இருவர் தற்கொலை செய்து கொண்டனர். இறுதி ஆட்டத்தை, காலி நகரில் அமைக்கப்பட்டிருந்த பெரிய திரையில் அஷான் லக்ஷித்தா (வயது-17), என்பவர் பார்த்துள்ளார். இதில், இலங்கை தோற்க, மிகுந்த சோகத்துடன் வீட்டுக்கு திரும்பிய இவர், நேற்று முன்தினம் காலை மாமரத்தில் தூக்கு மாட்டி தற்கொலை செய்து கொண்டார். இதே போல் ஹட்டன் நகரைச் சேர்ந்த மகேந்திரன் சுரேஷ் (வயது-21), என்பவரும் தோல்வியை தாங்கமுடியாமல் தனது படுக்கை அறையில் தூக்கில் தொங்கினார்.

**ராஜபக்ஷ காரணம்**

இறுதி ஆட்டத்துக்கு முன்னர் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ செய்தியாளர்களிடம் கூறுகையில், இலங்கை பங்கேற்ற இரு உலகக் கிண்ண இறுதி ஆட்டத்தை நேரில் சென்று பார்த்தேன். இரண்டிலும் தோல்வி அடைந்தது. இதனால், இந்த முறை மைதானத்துக்கு செல்வதா, வேண்டாமா என்ற குழப்பத்தில் உள்ளேன் - என்று தெரிவித்து விட்டு பின்னர் இறுதி ஆட்டத்தை காண நேரில் வந்தார். இவர் வந்த ராசியோ என்னவோ, இலங்கை அணி மீண்டும் தோற்றது. இது குறித்து 'டுவிட்டர்', 'பேஸ்புக்' போன்ற சமூக வலைதளங்களில் ரசிகர்கள் விமர்சித்துள்ளனர். ராஜபக்ஸவின் துரதிர்ஷ்டம் தான் இலங்கை அணி தோற்க காரணம் என்று பலரும் குறிப்பிட்டுள்ளனர்.

**இலங்கையின் கல்லறை மீது...**

இலங்கை அணியின் தோல்வியை கொழும்பு ஊடகங்கள் கடுமையாக விமர்சித்துள்ளன. ' இலங்கை அணியை வீழ்த்தி கல்லறை ஆக்கி விட்டு, அதன் மீது மேற்கிந்தியத்தீவுகள் அணியினர் கங்ணம் நடனம் ஆடினர்', 'தென் னாபிரிக்கா போல, இலங்கையும் பலம் வாய்ந்த அணியாக இருந்தாலும், உலகக் கிண்ண தொடர்களில் கிண்ணம் வெல்லாமல் இறுதியில் ஏமாற்றுகிறது,' என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

(5)

# உலக அணித் தலைவராக மஹேல



நடந்து முடிந்த சர்வதேசக் கிரிக்கெட் சபையின் உலக 'ரி-20' தொடரை அடுத்து அந்தத் தொடருக்கான அணி அறிவிக்கப்பட்டுள்ளது. இந்தத் தொடரின் ஆண்களுக்கான அணி என்று அறிவிக்கப்பட்டுள்ள இந்த அணியின் தலைவராக இலங்கை அணியின் மஹேல ஜெயவர்தன தெரிவுசெய்யப்பட்டுள்ளார்.

அறிவிக்கப்பட்டுள்ள அணியில் மஹேல ஜெயவர்தன தவிர, வேகப்பந்து வீச்சாளர் லசித் மலிங்கவும், சுழற்பந்து வீச்சாளர் அஜந்த மெண்டிஸும் இடம்பெற்றுள்ளனர். இந்தத் தொடரில் காட்டிய திறமைகளை அடிப்படையாகக் கொண்டே இந்த அணி தெரிவுசெய்யப்பட்டுள்ளது.

இலங்கை அணி இந்தத் தொடர் முழுவதும் சிறப்பான ஆட்டத்தை வெளிப்படுத்தியிருந்ததோடு இறுதி ஆட்டம் வரை சென்று இறுதி ஆட்டத்தில் மேற்கிந்தியத் தீவுகள் அணியிடம் தோல்வியடைந்திருந்தது. இலங்கை அணியிலிருந்து மாத்திரமே 3 வீரர்கள் இந்த அணிக்காகத் தெரிவு செய்யப்பட்டுள்ளதோடு, மேற்கிந்தியத் தீவுகள், ஆஸ்திரேலியாவிலிருந்து தலா 2 வீரர்களும் அணியில் சேர்க்கப்பட்டுள்ளனர். (5)

## அறிவிக்கப்பட்டுள்ள இந்தத் தொடரின் அணி

**கிறிஸ் கெய்ல்,**
**ஷேன் வொட்சன்,**
**விராத் ஹோக்லி, மஹேல ஜெயவர்தன, லுக் ரைட்,**
**பிரண்டன் மக்கலம்,**
**மார்லன் சாமுவேல்ஸ், லசித் மலிங்க,**
**மிற்சல் ஸ்ரார்க்,**
**சயிட் அஜ்மல்,**
**அஜந்த மெண்டிஸ்.**
**12 ஆவது வீரர்: சுரேஷ் ரெய்னா**

# இலங்கை தொடர்ந்தும் முதலிடம்

## வெளியிடப்பட்டுள்ள தரப்படுத்தல்கள்

இலங்கை (127 புள்ளிகள்)
மேற்கிந்தியத் தீவுகள் (121புள்ளிகள்)
இந்தியா (120 புள்ளிகள்)
இங்கிலாந்து (118 புள்ளிகள்)
தென்னாபிரிக்கா (117 புள்ளிகள்)
பாகிஸ்தான் (116 புள்ளிகள்)
ஆஸ்திரேலியா (108 புள்ளிகள்)
நியூசிலாந்து (97 புள்ளிகள்)
பங்களாதேஷ் (85 புள்ளிகள்)
அயர்லாந்து (82 புள்ளிகள்)
சிம்பாப்வே (44 புள்ளிகள்)

சர்வதேசக் கிரிக்கெட் சபையின் 'ரி-20' போட்டிகளுக்கான தரவரிசைப் பட்டியலை சர்வதேசக் கிரிக்கெட் சபை வெளியிட்டுள்ளது. வெளியிடப்பட்டுள்ள தரவரிசைப் பட்டியலில் முதலிடத்தில் இலங்கை அணி தொடர்ந்தும் காணப்படுகிறது.

சர்வதேசக் கிரிக்கெட் சபையின் உலக 'ரி-20' தொடரின் நடுவே முதலிடத்தைப் பெற்றுக்கொண்ட இலங்கை அணி, முதன் முறையாக ஒரு தொடரின் பின்னர் முதலிடத்தைப் பெற்றுக் கொண்டுள்ளது.

உலக 'ரி-20' தொடர் முழுவதும் சிறப்பான ஆட்டத்தை வெளிப்படுத்திய இலங்கை அணி ஏனைய அணிகளை விடத் தொடர்ச்சியான, தொடர்ந்த ஆட்டத்தை வெளிப்படுத்தியிருந்தது.

முதலிடத்தில் காணப்படும் இலங்கை அணி, இரண்டாமிடத்தைப் பிடித்துள்ள மேற்கிந்தியத் தீவுகள் அணியை விட 6 புள்ளிகள் அதிகமாகப் பெற்று முதலிடத்தில் தெரிவான நிலையில் காணப்படுகிறது.



# வெற்றியை விவரிக்க வார்த்தைகள் இல்லை

உலகக் கிண்ணத்தை வென்றதை வார்த்தைகளால் விவரிக்க முடியாது. இது என் கிரிக்கெட் வாழ்க்கையின் மிகச் சிறந்த தருணம், என்று மேற்கிந்தியத்தீவுகளின் அணித்தலைவர் டரன் சமி தெரிவித்தார்.

இலங்கையில் நடந்த நான்காவது 'ரி-20' உலகக் கிண்ணத் தொடரில், மேற்கிந்தியத்தீவுகள் அணி சம்பியன் பட்டம் வென்றது. 33 ஆண்டுகளுக்குப் பின்னர் உலகக் கிண்ணத்தை வென்றதால், மேற்கிந்தியத்தீவுகளில் வெற்றிக் கொண்டாட்டங்கள் களை கட்டுகின்றன.

**கெய்ல் வருகை**

அணியின் பயிற்சியாளர் கிப்சனுடன் ஏற்பட்ட தகராறு காரணமாக, மேற்கிந்தியத்தீவுகள் அணியில் இருந்து நட்சத்திர வீரர் கிறிஸ் கெய்ல் நீக்கப்பட்டார். சமி தலைமையிலான அணி அடுத்தடுத்த தொடர்களில் தோல்வியை சந்தித்தது. பின்னர், ஒரு வழியாக கெய்ல், மீண்டும் சேர்க்கப்பட்டார். இவரது வருகையால் மற்ற வீரர்களும் நம்பிக்கை பெற்றனர்.

வெற்றி குறித்து அணித்தலைவர் டரன் சமி கூறியதாவது:

'ரி-20' உலகக் கிண்ணத்தை வென்றது எனது கிரிக்கெட் வாழ்க்கையின் மறக்க முடியாத தருணம். வார்த்தைகளால் எப்படி விவரிப்பது என்றே தெரியவில்லை. இந்தக் கிண்ணம் கரீபிய மக்களுக்கானது. ஏனெனில், உலகம் முழுவதிலும் உள்ள மேற்கிந்தியத்தீவு மக்கள், எங்களது வெற்றியை விரும்பினர்.

தொடர்ந்து தோல்வியடைந்த போது, வர்ணனையாளர்கள் விமர்சித்தனர். இதற்காக கவலைப் படவில்லை. விமர்சனங்கள் எப்போதும் இருக்கத்தான் செய்யும். நான் சாதனைக்காக விளையாட மாட்டேன். கரீபிய மக்களுக்காகத்தான் எப்போதும் விளையாடுகிறேன். இலங்கைக்கு எதிரான இறுதி கடுமையாக இருக்கும் என்று எதிர்பார்த்தோம். இதில், முதல் 10 பந்துப் பரிமாற்றங்களில் 2 இலக்குகளுக்கு 32 ஓட்டங்கள் என்ற நிலையில் இருந்து மீண்டு வந்தோம்.

சாமுவேல்ஸ், பிராவோ, ராம்போல் என்று, அனைவரும் தங்கள் பணியை சரியாகச் செய்தனர். இதற்கு கடவுளுக்குத் தான் நன்றி சொல்ல வேண்டும். அவர் ஏதாவது அதிசயம் நிகழ்த்துவார் என்று, எப்போதும் எனக்கு நம்பிக்கை உண்டு. கடைசியில் அது நடந்து விட்டது. மேற்கிந்தியத்தீவுகளின் கிரிக்கெட்டுக்கு இனி சிறப்பான எதிர்காலம் தான் - என்றார்.

**வெற்றி தந்த சுழல்**

மேற்கிந்தியத்தீவுகள் அணிக்கு பலம் எப்போதுமே அதன் வேகப்பந்துவீச்சு தான். 1975, 1979 இல் உலகக் கிண்ணம் வென்ற போது மைக்கல் ஹோல்டிங், அன்டி ரோபர்ட்ஸ், ஜோயல் கார்னர் என்று, வேகப்பந்து வேதாளங்களாக இருந்தனர். அடுத்து மால்கம் மார்ஷல், வால்ஷ், அம்புரோஸ் என்று, இது தொடர்ந்தது. இப்போது அணியிலுள்ள எட்வர்ட்ஸ், ராம்போல் என்று யாரும் பெரிய பிரபலம் இல்லை. ஆனால், சுனில் நரைன், கிறிஸ் கெய்ல், பத்ரீ, சாமுவேல்ஸ் என்று, தற்போது சுழற்பந்து வீச்சில் ஆதிக்கம் செலுத்த, இதுவே 'ரி-20' உலகக் கிண்ண வெற்றிக்கும் காரணமாக அமைந்தது. (5)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# என்னை வெளியேற்றியதால் பாகிஸ்தான் வெளியேறியது

நான்காவது 'ரி-20' உலகக் கிண்ணத் தொடரின் அரையிறுதியில் பாகிஸ்தான் அணி, இலங்கையிடம் தோல்வியடைந்து இறுதிச் சுற்று வாய்ப்பை பறிகொடுத்தது.

இந்த ஆட்டத்தில் அனுபவ வீரர் அப்துல் ரஸாக்கை சேர்க்காதது குறித்து கடும் விமர்சனம் எழுந்தது. இது குறித்து பாகிஸ்தான் அணித்தலைவர் மொஹமட் ஹபீஸ் கூறுகையில், கூடுதலாக ஒரு பந்துவீச்சாளரை சேர்க்க அணி நிர்வாகம் முடிவு செய்ததால் தான் அப்துல் ரஸாக்கை நீக்கினோம் என்றார்.

இதனை மறுத்த ரஸாக் கூறுகையில், இலங்கைக்கெதிரான அரையிறுதியில் பங்கேற்க மனதளவில் தயாராக இருந்தேன். ஆனால், வாய்ப்பு மறுக்கப்பட்டதால் மிகுந்த ஏமாற்றம் அடைந்தேன். இதற்கு அணி நிர்வாகம் காரணம் அல்ல. அணித்தலைவர் மொஹமட் ஹபீசின் தன்னிச்சையான முடிவால் தான் நீக்கப்பட்டேன். இதனை அவர் ஒத்துக் கொள்ள வேண்டும். மற்றவர்கள் மீது பழி சுமத்தக் கூடாது. அரையிறுதி ஆட்டத்தை வெளியே இருந்து கவனித்தேன் என்றும் ஒருவேளை அதில் விளையாடியிருந்தால் எனது சிறப்பான பங்களிப்பை கொடுத்து வெற்றிக்கு உதவியிருப்பேன் எனவும் கூறியுள்ளார். (5)

# வேலியே பயிரை மேய்கின்றது

கிரிக்கெட் சூதாட்டத்தில் நடுவர்களும் ஈடுபட்ட அதிர்ச்சி செய்தி வெளியாகியுள்ளது. இதில் இலங்கை, பாகிஸ்தான், பங்களாதேஷை சேர்ந்த ஆறு நடுவர்கள் பிடிபட்டனர்.

கடந்த ஐ.பி.எல்., தொடரின் போது இந்தியாவின் ஸ்ரீவாஸ்தவ் உள்ளிட்ட ஐந்து வீரர்கள் உள்ளூர் தொடரிலும் 'பிக்சிங்கில்' ஈடுபட்டதை, இந்திய தொலைக் காட்சி அம்பலப்படுத்தியது . தற்போது, மீண்டும் தனது புலனாய்வு செய்தியில் நடுவர்களின் மோசமான செயற்பாட்டை வெளிக்கொண்டு வந்துள்ளது.

'ரி-20' உலகக் கிண்ணத் தொடரை முன்னிட்டு கடந்த ஜூலை, ஓகஸ்ட் மற்றும் செப்ரெம்பர் மாதத்தில் இந்த புலனாய்வு நடந்தது. இதில் பாகிஸ்தானின் நதீம் கவுரி, அனீஸ் சித்திக், பங்களாதேஷின் நாதிர் ஷா மற்றும் இலங்கையின் காமினி திஸநாயக, மவுரிஸ் வின்ஸ்டன், சாகரா கல்லாகே ஆகிய 6 நடுவர்கள் பிடிபட்டனர்.

இவர்கள் போட்டியின் போது ஆடுகளம், அணி குறித்த விவரம், வீரர்கள் ஆட்டமிழப்பு இல்லை என்றாலும் ஆட்டமிழப்புக் கொடுப்பது, ஆட்டமிழந்தால், ஆட்டமிழப்பு கொடுக்க மறுப்பது என்று, பல வேலைகளை பணத்துக்காக செய்ய முன்வந்துள்ளனர்.

அண்மையில் இந்தியா, பாகிஸ்தான் அணிகள் மோதிய 'ரி-20' உலகக் கிண்ண பயிற்சி ஆட்டத்தில், நடுவராக பங்கேற்ற சாகரா கல்லாகேயும் இதில் சிக்கினார். இவர், இதுவரை 4 ஒரு நாள், 2 டெஸ்ட் என்று, இந்தியா, பாகிஸ்தான், இலங்கை, நியூசிலந்து, பாகிஸ்தான் அணிகள் விளையாடிய போட்டிக்கு 4 ஆவது நடுவராக இருந்துள்ளார். பல்வேறு 'ரி-20' போட்டியிலும் நடுவராக இருந்தார்.

அண்மையில் முடிந்த இலங்கை பிறிமியர் லீக் 'ரி-20' தொடர் அரையிறுதி, இறுதியில் ரூ. 15 ஆயிரத்துக்காக 'பிக்சிங்கில்' ஈடுபட்டது தெரியவந்துள்ளது. 'ரி-20' உலகக் கிண்ணத் தொடரில் இந்தியா, பாகிஸ்தான் அணிகள் மோதிய பயிற்சி ஆட்டத்தில் 'பிக்சிங்' செய்துள்ளார்.

அதாவது ரூ. 50 ஆயிரம் பெற்றுக் கொண்டு, ஆடுகளம், நாணயச் சுழற்சி விவரம், வானிலை அறிக்கை, இரு அணியிலும் விளையாடும் 11 வீரர்கள் விவரத்தை, முன்னதாகவே அளித்துள்ளார். தவிர, போட்டியில் எவ்வித பிரச்சினை ஏற்பட்டாலும், மற்றவர்களை சரிக்கட்டி, விரும்பும் அணிக்கு சாதகமாக நடக்க ஒப்புக் கொண்டார்.

வீரர்களைப் போல நடுவர்களும், இப்படி பணத்துக்காக 'பிக்சிங்' செய்ய முன்வந்தது, வேலியே பயிரை மேய்ந்த கதையாகியுள்ளது. (5)


அனைத்து கணனிக்கற்கை நெறிகளுக்குமான
**October** மாதத்திற்குரிய பிரிவுகள் ஆரம்பம்

**COURSES...**

Certificate in Office Solution Development
Certificate in Multimedia
Certificate in Web Designing
Certificate in DeskTop Publishing
Certificate in Hardware Technology
Certificate in Java Programming
Diploma in Computerized Accounting
Diploma in Eng. Drawing & AutoCAD

இப் பிரிவுகளில் தங்களை இணைத்துக் கொள்ளும் மாணவர்கள் ஒரு கற்கை நெறிக்கான கட்டணத்துடன் இரு கற்கை நெறிகளை பயின்று கொள்ளும் அதேவேளை Kingston Flash Memory ஒன்றினையும் இலவசமாக பெற்றுக்கொள்ள முடியும்.இவ்வாய்ப்பு இப்பிரிவுகளுக்கு மட்டுமே.

ஆரம்பம்:
பிரிவு 1 : 12.10.2012
பிரிவு 11 :14.10.2012
காலை 10.00மணி

மேலதிக விபரங்களுக்கு :
021 4 922 741

INSTITUTE OF INFORMATICS STUDIES
இல 100, மணிக்கூட்டு வீதி , யாழ்ப்பாணம்
தொ.பே. 021 222 2831



*Vinoth Curtains*
யாழ். மண்ணில் அறிமுகமாகிறது

கேட்டின்ஸ் துறையில் நிபுணத்துவம் பெற்ற எம்மால் கேட்டின்ஸ், மெத்தைவிரிப்பு, றெயிலிங், போல்ஸ், குசன் கவர், வேற்றிக்கல் லைன்ஸ், வெனிசன் பிற்றிங், புளோர் காப்ற் வேலைகள் செய்து கொடுக்கப்படுகிறது.



தொடர்பு- மைக்கல்
0774906323,
0723995447
இல-50, நாவலர் வீதி,
(மனோகரா தியேட்டர் அருகில்)
யாழ்ப்பாணம்.
(23933)(9.14)



**கார் விற்பனைக்கு**

1 Sri மைனர் கார் மிகவும் நல்ல நிலையில் விற்பனைக்குண்டு.
தொடர்பு- 0776079352,
0773116079
(23957)(9.14)



**கணினி திருத்தம் Computer Repair**

உங்கள் கணினிகள் பழுதடைந்து விட்டனவா?
உடன் உங்களது வீடுகளுக்கே வந்து திருத்தி தருகிறோம்.
(23557)(9.14) அழையுங்கள்- 0779086737
GUNAA BEST PC 52, Hospital Road, Jaffna.



**Personal Assistant / Secretary to Managing Director**

Required for UK based Construction and development Company, Based in Jaffna town.

Must be able to converse in English and IT Literate.

**Salary 25000/= +**

Please Send your C.V to
citystarkb@gmail.com
(23964)(9.14)



**மணமகன் தேவை**

யாழ். இந்து கௌரவ குடும்பம் 1984 இல் பிறந்த, 8 இல் செவ்வாய் 50 பாவமுடைய, லண்டனில் வசிக்கும் பட்டப் படிப்பு முடித்து தொழில் புரியும் மணமகளுக்கு தகுந்த மணமகன் தேவை.
தொடர்பு:-
004747944944
mathusena@yahoo.com
(23606)(15-6)



**வீடு வாடகைக்கு**

அமைதியான சூழலில் சகல வசதிகளுடனும் கூடியதும் பல ஆண்டுகளாக அரச சார்பற்ற நிறுவனத்தின் பாவனையிலிருந்த வீடு, சுண்டுக்குளி மகளிர் கல்லூரிக்கு அண்மையில் உள்ள விசாலமான வீடு வாடகைக்குண்டு.
தொடர்பு- 0112580048 (Colombo)
0777122015 (Jaffna)
(23731)(6.9.14)



**பதவி வெற்றிடம்**

கிளிநொச்சி நகரப் பகுதியில் அமைந்துள்ள அச்சகம் ஒன்றில் பணியாற்ற பின்வரும் பதவிகளுக்கு ஆகக் குறைந்தது மூன்று வருட அனுபவம் உள்ளவர்களிடம் இருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

- கணினித் தட்டச்சாளர் (Type Setter)
- பக்க வடிவமைப்பாளர் (Page Maker)
- ஒப்பு நோக்குநர்கள்

< தகுதி, வேகம், ஒழுக்கங்கள் ஆகியன கருத்தில் கொள்ளப்படும்.
< கவர்ச்சிகரமான சம்பளம்

உங்கள் விண்ணப்பங்களை 15.10.2012 ஆம் திகதிக்கு முன்னர் அனுப்பவும்.
விளம்பர இல:4407, மே/பா உதயன்,
361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
(சி/4058)(9.14)



**அக மகிழ்ந்து வாழ்த்துகின்றோம்**




வ/நெளுக்குளம் கலைமகள் மகாவித்தியாலயத்தின் என்றும் மதிப்பு மிக்க எங்கள்
அதிபர்
**திரு.சு. அமிர்தலிங்கம்**
அவர்களுக்கு சிறந்த அதிபருக்கான "பிரதீபா பிரபா" விருது 09.10.2012 அன்று அதிமேதகு ஜனாதிபதி அவர்களால் வழங்கப்பட்டதை முன்னிட்டு மனதார பாராட்டி வாழ்த்துவதுடன் மேலும் பல விருதுகள் பெற வாழ்த்தி நிற்கின்றோம்.

வ/நெளுக்குளம் கலைமகள் மகா வித்தியாலயம்
நெளுக்குளம் வவுனியா.
(20921)(9.14)

பிரதி அதிபர், உப அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள், கல்விசாரா ஊழியர்கள் மற்றும் பாடசாலை அபிவிருத்தி சங்கம்.


இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 10.10.2012 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நல்ல
நண்பர்கள்
துயரத்தை
எளிதாக்குவார்கள்.
–சேப்பின்–

# புதன் பொய்கை A

உதயன் 10 ஒக்ரோபர் 2012 புதன்கிழமை பக்கங்கள்: நான்கு

■ மணி



"அறிவுபூர்வமாகச் சிந்திக்கத் தொடங்கி விட்ட மனிதன், தன் சக்திக்கு மீறிய இலட்சியத்தை அடைய, கணக்குப் போட்டுப் பார்த்தால், விடைகாண முடியாது, இயலாது, விட்டுவிடு என்பதாகத்தான் விடை இருக்கும். விடை தொடக்கத்திலேயே எதிர்மறையாக இருக்கும்போது சாதாரணமானவர்கள் சாதனை நிகழ்த்துவது எப்படி? விடை எதிர்மறையாக இருப்பதால் முயற்சியைக் கைவிட்டு விலகி விடுவார்கள். விலகி விடுபவர்கள் வெற்றி பெறுவதில்லை.

# நம்பிக்கை மீது நம்பிக்கை வைப்போம்

(கடந்தவாரத் தொடர்ச்சி....)

பாமரனுக்கும், அறியாமையில் இருப்பவனுக்கும் மனித உருவக் கடவுள் கொள்கை தொடக்கத்தில் தேவை. அவர்கள் தங்கள் அறிவை விலாசப்படுத்திக்கொள்ளும் போது அவர்களாகவே ஒரு தீர்மானத்துக்கு வருவார்கள். அது இறைவன்,

உருவாய் அருவாய் உளதாய் இலதாய்
மருவாய் மலராய் மணியாய் ஒளியாய்
கருவாய் உயிராய் கதியாய் விதியாய்

இருப்பதை இயல்பாகவே அறிந்து கொள்வார்கள்.

இந்த இறையாற்றல்
வானாகி, மண்ணாகி, வளியாகி, ஒளியாகி
ஊனாகி, உயிராகி, உண்மையுமாய்,
இன்மையுமாய்

இருக்கிறது என்று புரிந்து கொள்வார்கள்.

அறிவுபூர்வமாக அதாவது ஐம்புலன் வழியாக அறிந்து கொள்பவைகளை "நம்பிக்கை" எனும் பெயரால் அழைக்க வேண்டியது இல்லை. அவைகள் உண்மைகள், நிதர்சனங்கள்.

எந்தவொன்றை ஐம்புலன்களாலும் உணர்ந்தும், அறிந்தும் கொள்ள முடியுதோ அந்த ஒன்றை எதிர்பார்ப்பதும், நடக்கும் என்று நம்புவதும், கிடைக்கும் என்று எண்ணுவதும், இருக்கிறது என்று ஏற்றுக்கொள்வதும் தான் "நம்பிக்கை"

இதனை மூடநம்பிக்கை என்றும் அதனை முடக்கிப் போட வேண்டும் என்றும் முழங்குவது, மனித குலத்தை முன்னேற்றுவதற்குப் பதிலாக மனிதகுலத்தின் வளர்ச்சியையும், சாதனைகளையும் முடக்கிப் போடும் முட்டாள் தனமான முயற்சிகள். கிறிஸ்தவ வேதாகமத்தில் மாற்கு 11:23 வசனத்தில் நம்பிக்கை குறித்து இப்படிக் கூறப்பட்டிருப்பதைச் சற்றுச் சிந்தித்துப் பார்ப்போமா?

"நீங்கள் யாராக இருந்தாலும் எதிரிலுள்ள மலையைப் பார்த்து நீ பெயர்ந்து போய் சமுத்திரத்திலே தள்ளுண்டு போ என்று சொல்லித் தான் சொன்னபடியே நடக்கும் என்று தன் இதயத்தில் துளியும் சந்தேகப் படாமல்' விசுவாசித்தல் அவன் சொன்னபடியே ஆகும் என்று மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன்" என்று இயேசு சொல்வதாக இருக்கிறது.

அதனால்தான் உலக வழக்கில் பிரார்த்தனை, மலையையும் அசைக்கும் என்ற முதுமொழி வழக்கத்திலிருக்கிறது போலும்.

கடவுள் நம்பிக்கை சிறிதும் இல்லாத நாத்திகன் ஒருவன் ஒரு மலைவாசஸ்தலத்துக்குச் சுற்றுலா சென்றான். ஒரு மலைமுகட்டில் நின்று கொண்டு பள்ளத்தாக்கின் இயற்கைக் காட்சிகளைக் கண்டு இரசித்துக்கொண்டிருந்தபோது கால் இடறி மலைச்சரிவில் விழுந்து விடுகிறான். மாலை இருள் கவியும் நேரம்.

தன்னைக் காப்பாற்றிக்கொள்ள முயன்ற பொழுது ஒரு மரக்கிளை கையில் கிடைக்க பற்றித் தொங்கினான்.

மரண பயத்தில் அவன் கடவுளே! என்னைக் காப்பாற்றும்! நான் உம்மை ஏற்றுக்கொள்கிறேன். என்னைக் காப்பாற்றும் அற்புதத்தை நிகழ்த்திக் காட்டும் உம்மை நான் நம்புகிறேன். என்று பிரார்த்தனை செய்தான்.

கடவுள் நாத்திகனுடைய உணர்ச்சி பூர்வமான பிரார்த்தனைக்குச் செவிசாய்த்து என்மீது உனக்கு அசைக்க




முடியாத உறுதியான நம்பிக்கை உண்டென்றால் மரக்கிளையைப் பிடித்திருக்கும் பிடியை விட்டு விடு. நீ காப்பாற்றப்படுவாய் என்று சொல்லி மறைந்துவிட்டார்.

கையை விட்டுவிட்டுவிட்டால் கதி அதோகதிதான். இந்தக் கடவுளின் வார்த்தையை எப்படி நம்புவது? மனம் சஞ்சலத்தில் முடிவெடுக்க முடியாமல், கிளையை விடாமல் பிடித்துக்கொண்டே இருந்தான். இரவு முழுவதும் மரணபயத்தோடு அவஸ்தையைத் தாங்கிக் கொண்டு காத்திருந்தான்.

விடியத் தொடங்கியது கீழே பார்த்தான் நாத்திகன். தரையோ மரத்திலிருந்து பாதுகாப்பாக குதிக்கும் தூரத்திலிருந்தது. கைகளை விட்டுவிட்டு குதித்தான். சிறு அடி கூட படாமல் காப்பாற்றப் பட்டுவிட்டான்.

ஒன்றும் அறியாத, தெரியாத இரவு நேரத்தில் வலியோடு கிளையை விடாமல் பிடித்திருந்ததும் ஒரு அவநம்பிக்கை . கிளையை விட்டுவிட்டால் விழுந்து மரணமடைவோம் என்று நினைத்ததும் அவநம்பிக்கை.

கடவுளின் பேச்சைக் கேட்டு பிடியை விட்டிருந்தால் இரவு மரண அச்சமும் அவஸ்தையும் இன்றி வெகு அருகில் கீழே இருக்கும் தரையில் விழுந்து தங்கியிருக்க முடியும்.

இது கடவுள் நம்பிக்கையை வலியுறுத்துவதற்காக காட்டப்பட்ட காட்சி இல்லை. கடவுள் நம்பிக்கையைப் போல் ஏதோ ஒரு நம்பிக்கை உங்கள் உள்ளத்தில் இருக்கட்டும்.

"நம்பினார் கெடுவதில்லை,
இது நான்கு மறைதீர்ப்பு"

பாரதி

இது உளவியல் உண்மைதானே. உத்திதானே. உணர்ந்து பார்க்கலாமே.

நாகரிகம் அடையாத சமுதாயத்தில் உயிர்ப்பலியிடுதலையும், சடங்கு சம்பிரதாயங்களையும் பார்த்துப் பரிகசிக்கின்றோம். பகுத்தறிவுக்குப் பொருந்தாத செயல்கள் என்று விமர்சிக்கின்றோம்.

சற்று நாகரிகம் அடைந்தவர்கள் அந்த நிலையிலிருந்து வேறுபட்டு, மொட்டை போடுதல், வேல் குத்துதல், தீ மிதித்தல் என்று, காரியம் நிறைவேற கடைப் பிடிக்கின்றனர்.


இதனினும் மனித குலத்தின் மாண்புக்கும் உயர்வுக்கும் உலகம் முழுவதும் சில சடங்குகளும் சம்பிரதாயங்களும் நம்பிக்கையை வலுப்படுத்து வதற்காக உளவியல் உத்தியால் உருவாக்கப்பட்டிருக்கின்றன.

"நம்பினவருக்கு நடராஜன். நம்பாதவருக்கு எமதர்மராஜன்" என்று ஒரு வழக்குச் சொல்லும் வாழ்க்கையில் வழங்கப்படுகினன்றது.

நம்பிக்கை நலம் கூடுவதால் நடராஜாவைப் போல வெள்ளியம்பதியில் ஆனந்தக் கூத்தாட முடியும். நம்பிக்கையற்றவர்கள் தோல்வியுற்று எமதர்மராஜனின் காரிருள் நரகத்தில் இடர்பட நேரிடுகிறது. நம்பிக்கையின் மீது அவநம்பிக்கையும், அவநம்பிக்கையின் மீது நம்பிக்கையும் வைக்கும் அவலத்தை நீக்குவோம். நம்பிக்கையின் மீது நம்பிக்கை வைப்போம். .

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விவசாயிகளின் திறமைகளை வெளிப்படுத்தும் பூசணிக்காய்




பிரிட்டன் நாட்டின் தெற்கு கடற்கரைப் பகுதியில் அமைந்துள்ள நியூ ஹாம்ப்ஷெரியில் விவசாய விளைபொருள்களின் கண்காட்சி நடத்தப்பட்டு பரிசில்கள் வழங்கப்படுகிறது. இதில் பங்கேற்பதற்காக அங்குள்ள பென்னிங்டன் என்ற இடத்தைச் சேர்ந்த 2 விவசாயிகள் பூசணிச் செடிகளைப் பயிரிட்டு கடந்த 6 மாதமாக வளர்த்தனர். அதில் ஒரு பூசணிக்காய் தற்போது 3 அடி உயரம் வளர்ந்திருக்கிறது. எடை 500 கிலோவாக இருக்கிறது.


இந்தப் பூசணிக்காயை அடுத்த மாதம் நடைபெறும் கண்காட்சிக்கு எடுத்து செல்லப்போவதாகவும், அதற்குள் மேலும் எடை அதிகரிக்கும் என்றும் விவசாயிகள் இவான், ஸ்டுவர்ட் படான் ஆகியோர் கூறினர்.

# பயணிக்கும் விமானத்தில் இத்தனை வித்தியாசங்களா?





# இப்படியும் உடற்பயிற்சியா?




உக்ரைனைச் சேர்ந்த 7 வயதுச் சிறுவன் உடற்பயிற்சியின் ஒரு அங்கமாக விளங்கும் புஸ்-அப் - பினை சுமார் 4,000 தடவைகள் தொடர்ச்சியாக மேற்கொண்டு அசத்தியுள்ளார். இந்தச் சிறுவன் இத்தகைய உடற் பயிற்சியை நிறைவேற்ற 2 மணி 29 நிமிடங்கள் எடுத்துள்ளது குறிப்பிடத்தக்கது.

# புத்திசாலியான மிருகங்கள் எவை தெரியுமா?

மனிதர்கள், தான் மிகவும் புத்திசாலியானவர்கள் என்று நினைக்கின்றனர். ஆனால் உண்மையில் மனிதர்களை விடவும் புத்திசாலியான மிருகங்கள் உண்டு. எதற்காக வீட்டில் செல்லமாக விலங்குகளை வளர்க் கின்றோம்? நாம் அழைத்தால் எதனால் அவை உடனே வருகின்றன? இந்த புத்திசாலித்தனம் ஒவ்வொரு மிருகத்துக்கு ஏற்றவாறு மாறுபடும்.



**மனிதக்குரங்கு**

என்ன சொன்னாலும் விரைவில் புரிந்து கொண்டு, அதை சரியாக செய்யும் திறன் படைத்தது மனிதக்குரங்கு. சில சமயங்களில் இந்த மனிதக்குரங்குகளுடன் மனிதர்கள் போட்டி போட்டால், இவை மனிதர்களையே தோற்கடித்துவிடும். அந்த அளவு இதன் புத்தி கூர்மையுடன் உள்ளது.

**டொல்பின்**

டொல்பின் தனக்கு ஏற்படும் பிரச் சினைகளைத் தானாகவே எளிதில் சரிசெய்துவிடும் அளவு புத்தி சாலித்தனம் உள்ளது. ஆய்வில் புத்திசாலியான விலங்குகளில் நாம் பேசுவதை எளிதில் புரிந்து கொண்டு செயற்படுவதில் டொல் பின் மிகவும் சிறந்தது என்று கூறப்படுகிறது.







**பென்குயின்**

பென்குயினிடம் எதைச் சொன்னாலும் அதை அப்படியே திருப்பிச் சொல்லும் திறன் உள்ளது. இதனிடம் வேறு எதைச் சொல்லிக் கொடுத்தாலும், விரைவில் பழகிக் கொள்ளும் திறமையுடையது.

**எறும்பு**

எறும்பு எந்த ஒரு பிரச்சினை வந்தாலும், எளிதில் தப்பித்துக்கொள்ளும் புத்தி சாலித்தனமான திறனைக் கொண்டது.






**கிளி**

கிளிக்கு மனிதர்களைப் போலவே குரலும் உண்டு. மேலும் அவை நாம் பேசுவதைக் கூர்மையாகக் கவனித்து, பேசும் தன்மையும் கொண்டது. எதைச் சொல்லிக் கொடுத்தாலும், அதை நன்கு ஞாபகம் வைத்திருக்கும்.

**யானை**

யானையும் ஒரு வகையில் மனிதர்களைப் போல்தான். அதுவும் விலங்குகளில் மிகவும் சிறந்தது என்று சொல்லலாம். இதற்கும் மனிதர்களைப் போலவே உணர்ச்சிகளும் உள்ளன.



**நாய்**

நாய் மனிதர்களின் உணர்ச்சிகளைப் புரிந்து, அதற்கேற்ப நடக்கத் தெரிந்த சிறந்த புத்திசாலியான விலங்கு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வசீகர உளவாளிகள்

அழகினாலும், வசீகரத்தினாலும் ஒரு பெண் நினைத்தால் ஆணை எளிதில் வீழ்த்தலாம் எனும் ஆதாம் கால தந்திரம் தான் இது. எதிரியின் கோட்டைக்குள் இரகசியமாய் புகுவார்கள். அங்குள்ள உயர் அதிகாரியின் பார்வையில் படுவார்கள்.




உண்மையாகச் சொல்லுறியா? அவளா ? இருக்காதே, உளவாளிகளின் உண்மை முகம் வெளியே வந்ததும் பதட்டத்துடன் ஓடி வரும் முதல் கேள்வி பெரும்பாலும் இது தான். காரணம் உளவாளிகள் கெட்டிக்காரர்கள். ஒருத்தர் உளவு வேலை செய்கிறார் என்பதைக் கண்டுபிடிக்க வருடக் கணக்கில் மினைக்கெட வேண்டும்.

இந்தப் பூனையும் பால் குடிக்குமா என்ற விதத்தில் அப்பாவியாய் முகத்தை வைத்துக் கொண்டிருப்பார்கள். உளவு பார்க்கச் சென்ற இடத்தின் நம்பிக்கையைப் பெறும் வரை எல்லா தில்லாலங்கடி வேலைகளையும் மூட்டை கட்டி வைத்து விட்டு வெகு சாதாரணமாய் வலம் வருவார்கள். அவர்களுக்கும் மற்றவர்களுக்கும் இடையே எந்த வித்தியாசமும் தெரியாது.

அவர்களுடைய முதல் திட்டம் அவர்களைச் சுற்றி இருப்பவர்களுடைய நம்பிக்கையைப் பெறுவது தான். அந்த நம்பிக்கையைப் பெற சில வருடங்கள் ஆனால் கூட பொறுத்திருப்பார்கள். பொறுத்தார் உளவு பார்ப்பார் என்று புது மொழியே போடலாம் ! இவர்களைச் சாதாரணமாய் எடை போடக் கூடாது. கூர்மையான அறிவு, சுறுசுறுப்பு எல்லாம் இவர்களிடம் இருக்கும்.

இந்த உளவு வேலையில் பல பெண்கள் பட்டையைக் கிளப்பியிருக்கிறார்கள். குறிப்பாக உலகப் போர் காலத்தில் பெண் உளவாளிகளின் மோக வலையில் விழுந்து மோட்சம் போனவர்கள் பலர். ஒரு நாட்டுக்கு விசுவாசமாய் இருந்து கொண்டு, எதிரி நாட்டைக் கவிழ்ப்பது இவர்களுடைய வேலை.

அழகினாலும், வசீகரத்தினாலும் ஒரு பெண் நினைத்தால் ஆணை எளிதில் வீழ்த்தலாம் எனும் ஆதாம் கால தந்திரம் தான் இது. எதிரியின் கோட்டைக்குள் இரகசியமாய் புகுவார்கள். அங்குள்ள உயர் அதிகாரியின் பார்வையில் படுவார்கள். பின் கொஞ்சம் கொஞ்சமாய் அவரை நெருங்கி, அவர் அன்புக்குப் பாத்திரமாகி, தேவைப்பட்டால் திருமணம் செய்து கொண்டு குழந்தைகளையும் பெறுவார்கள்.

''இந்த நபரால் நமக்கு ஆபத்தே இல்லை. நம்பி சாவியைக் கொடுக்கலாம்'' எனும் அளவுக்கு நம்பிக்கை வந்ததும் சுயரூபம் காட்டுவார்கள். ஆளைப் போட்டுத் தள்ளுவதோ. தகவல்களை அப்படியே கப்பலேற்றுவதோ என இவர்களுடைய பங்களிப்பை நம்பித் தான் நாடே காத்திருக்கும். நம்பிக்கைத் துரோகம், முதுகில் குத்துவது, நம்ப வைத்துக் கழுத்தறுப்பது இப்படியெல்லாம் வர்ணிக்கலாம் இந்தப் பணியை !

மாடா ஹரி கேள்விப்பட்டிருக்கிறீர்களா? இவருடைய இயற்பெயர் மார்கரீதா கீர்துரிடா, நெதர்லாந்து நாட்டைச் சேர்ந்தவள். இவர் வசீகர வளைவுகளால் எவரையும் துவம்சம் செய்யும் அழகி. மேடைகளில் அரை குறையாய் ஆடிப் புகழ் பெற்றவர்.

ஆடைகளை அவிழ்த்து வெறும் ஆபரணங்களுடன் இவர் ஆடும் ஆட்டம் எல்லோரையும் கவரும். அழகிய பெண் என்றால் எந்த ஆணுடனும் எளிதில் நெருங்கலாம் எனும் ஹார்மோன் விதி இவருக்கும் உதவியது. உளவு வேலைகளில் இறங்கினார்.

முதலாம் உலகப் போர் நடந்து கொண்டிருந்த காலகட்டத்தில் இவருக்கு நிறைய ரசிகர்கள். போர்க் களத்தில் பலர் புரள, இவருடைய முத்தக் குளத்தில் சிலர் புரண்டனர். அந்த பட்டியலில் இராணுவத்தினர், அரசியல்வாதிகள், ஆட்சியாளர் எனப் பலரும் உண்டு. எல்லோரிடமும் பழகி விடயத்தைக் கறந்தார். அதை அப்படியே பிரான்ஸுக்கு அனுப்பினார்.

கடைசியில் 1917 பெப்ரவரி 13ம் நாள் பரிஸில் வைத்து இவர் கைது செய்யப்பட்டார். நான் பிரான்ஸ் உளவாளிதான் என மாடா சொன்னார். ஆனால் பிரான்ஸ் அதை மறுத்து இவர் ஜெர்மன் உளவாளி என பிளேட்டைத் திருப்பிப் போட்டது. ஜேர்மனிக்கு உளவு வேலை பார்த்ததாகவும், 50,000 படை வீரர்களின் சாவுக்குக் காரணமாய் இருந்ததாகவும் இவர் மீது குற்றம் சுமத்தப்பட்டது.

சுட்டும் விழிச் சுடர் கடைசியில் சுட்டுக் கொல்லப்பட்டார்.

எடித் கிராவெல் என்றொரு உளவாளி இருந்தார். ஜெர்மன் நாட்டைச் சேர்ந்த இவர் இங்கிலாந்துக்கு உளவு வேலை பார்த்ததாகச் சொல்லி கைதானார்.

அவர் பார்த்து வந்ததோ யாரும் சந்தேகப்பட முடியாத தாதி வேலை. உலக நாடுகளின் எதிர்ப்பையும் மீறி இவருக்கு 1915 அக்டோபர் 15ம் திகதி மரண தண்டனை விதிக்கப்பட்டது.


(தொடரும்)

## லஞ்சம் தலைவிரித்து ஆடுகிறது

இலங்கையில் மிகவும் மலிந்திருப்பது ஊழல் மட்டுமே. அந்த ஊழல் சிற்றூழியர் முதல் உயர் அதிகாரிகள் வரையில் எல்லோரிடமும் காணப்படுகின்றது. இந்த ஊழலுக்கும், மோசடிகளுக்கும் எமது யாழ். மாவட்டத்தை மட்டும் விதிவிலக்காகச் சொல்ல முடியாது.

இங்கு ஊழல் செய்பவர்கள், இலஞ்சம் வேண்டுபவர்களுக்கு வக்காலத்து வாங்குகின்றனர். யாழ்ப்பாணத்தின் முக்கியமான அரச இயந்திரமாக இருக்கும் செயலகத்திலேயே இந்த ஊழலும், லஞ்சமும் ஊடுருவியுள்ளன. கணக்கு வழக்குகளை பார்ப்பவர்களே காசுப் பெட்டியில் கை வைக்கும்போது, அவர்களுக்கு கீழே வேலை செய்பவர்கள் சும்மாவா இருப்பார்கள்.

ஒரு சிற்றூழியர் இலவச வேலைகளுக்கு பொதுமக்களிடம் லஞ்சம் வாங்குகின்றார். சம்பந்தப்பட்ட திணைக்கள அதிகாரிக்கு இது தெரிந்தும் பேசாமல் இருக்கின்றார். இந்த விடயம் வெளியில் பெரிய மட்டங்களுக்குச் சென்று, குறித்த சிற்றூழியர் இடமாற்றம் செய்யப்படுகின்றபோது, குறித்த அதிகாரி அந்த சிற்றூழியருக்காக வக்காலத்து வாங்குகின்றார். ''அவன் லஞ்சம் வாங்குகிறான் எண்டால் குடுக்கிறவைக்கு என்ன யோசனை?'' என்று தத்துவப் பேச்சு வேறு.




இருந்தும் குறித்த சிற்றூழியர் இடமாற்றப்பட்டு விட்டார். தற்போது சிற்றூழியருக்கு வக்காலத்து வாங்கிய அந்த திணைக்கள அதிகாரி வசமாக மாட்டிக் கொண்டுள்ளார். அரச வாகனத்தில் ஊரைச் சுற்றிக் கொண்டு, அதற்கு மேலாக அனுமதி எதுவுமில்லாமல் தனது போக்குவரத்துச் செலவுக்கும் அரச திறைசேரியிலிருந்து பணத்தைப் பெற்றுமிருக்கிறாராம்.

இப்போதுதான் விழித்துக் கொண்டார்கள். அதனைத் தோண்ட ஆரம்பித்ததில், அதனுடன் தொடர்புடைய வலையமைப்பே சிக்கியுள்ளது. அதில் பலர் 'வைட் கலர் ஜொப்பில்' இருப்பவர்கள். இதனால் இவர்கள் மீதான விசாரணையும் கிடப்பில் போடப்படும் என்கிறார்கள். இருந்தும் தில்லு முல்லு செய்தவர்கள் யார் என்பதை இப்போதாவது கண்டு பிடித்தார்களே?

-நக்கல் நரசிம்மன்.

## உதயனை விமர்சியுங்கள்

தமிழ் பேசும் மக்களது பிரச்சினைகளைத் துணிவாக வெளிக் கொணரும் பத்திரிகையாக உதயன் நீண்ட காலமாகத் திகழ்கிறான். நீண்ட காலமாக உதயனின் வாசகன் என்ற அடிப்படையில் அதனை நான் உணர்கிறேன். உதயனுக்கு எனது வாழ்த்துக்கள்.

ஆனால் ஏனோ தெரியவில்லை. பல மாதங்களாகவே செய்திகளில் எழுத்துப் பிழைகள் தொடர்ந்து வந்து கொண்டிருப்பதனையும் நான் பார்க்கின்றேன். ஒவ்வொரு நாள் பத்திரிகையிலும் பல பிழைகளைப் பார்க்கிறேன். ஏன் இந்தநிலை?

இதுவரை, எழுத்துப்பிழைகளுடன் வருவதனை எத்தனையோ பேர் இதே பக்கத்தில் விமர்சித்துள்ளனர். பிழைகளைத் திருத்தும்படி எத்தனையோ பேர் இதே பக்கத்தில் சுட்டிக்காட்டியுள்ளனர். கோரிக்கையாக வேறு விடுத்துள்ளனர். இன்னும் ஏன் திருத்தவில்லை?

ஒப்பு நோக்குவதற்கு ஒரு பகுதியினர் இங்கே இருக்கிறார்களா? அப்படி யாராவது இருந்தால் அவர்கள் என்ன நினைக்கிறார்கள்? பிழை வருவதற்கான காரணத்தைக் கூறுவார்களா?

ஆசிரியர் இந்த விடயத்தில் அக்கறை கொள்ளாதது ஏன்? பல மாதங்களாகத் தொடரும் எழுத்துப் பிழைகளை முதலில் நிறுத்துங்கள். அல்லது இந்தப் பக்கத்தை நிறுத்துங்கள். இன்னும் எவ்வளவு காலத்துக்கு எழுத்துப் பிழை தொடரப் போகிற [illegible] பொறுத்திருந்துதான் பார்ப்போமே!

என்.கருணாகரன்,சங்கானை

★ ★ ★

பாதிக்கப்பட்ட தமிழ் மக்களுக்காக குரல் கொடுக்கும் உதயனை பாராட்டாமல் இருக்க முடியாது. நாட்டு நிலைமைகளை ஒளிவு மறைவு இன்றி வெளிப்படுத்தும் விதம் உதயனுக்கு ஒரு தனியழகைக் கொடுக்கிறது. சிங்கள அரசு பக்கம் வால் பிடிப்பவர்களுக்கு உதயனைப் பிடிக்காது. தமிழ் மக்களின் நலன்களில் அக்கறை கொள்பவர்களுக்கு உதயனைப் பிடிக்கும்.

தமிழ் மக்களின் பிரச்சினைகளை முதன்மைப்படுத்தும் உதயன் தொடர்ந்தும் தளராது இந்தப் பணியைச் செய்ய வேண்டும். சிங்களப் பத்திரிகைகளில் படுமோசமான முறையில் அரசினைத் தாக்கிக் கட்டுரைகள், கேலிச் சித்திரங்கள் வெளிவருகின்றன. அந்தக் கட்டுரைகளில் சில மொழி பெயர்க்கப்பட்டு உதயனில் வெளிவருகின்றன. மேலும் வெளிவரவேண்டும்.

அடுத்ததாக கேலிச்சித்திரம் ஒரு பத்திரிகையின் வளர்ச்சியின் முதுகெலும்பு என்று முன்னாளில் சொல்லுவார்கள். அதனால்தான் இன்றுவரை கேலிச்சித்திரம் பத்திரிகைகளை அலங்கரிக்கிறது. உதயன் தனது பக்கத்தில் கேலிச்சித்திரத்தை ஒவ்வொரு நாளும் வெளியிடுமா? இது எனது தனிப்பட்ட விருப்பமல்ல பலருடையது. இனி வரும் காலத்தில் உதயன் இதைச் செய்வான் என்று நம்புகிறேன்.

பிரதாபன், வதிரி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தவறாக பொருள் கொள்ளப்படும் சில விடயங்கள்

இன்றைய சூழலில் சிலவிடயங்கள் தவறாகவே பொருள் கொள்ளப்படுகின்றன. நம்மில் பெரும்பாலானோர் அதை நம்பவும் செய்கிறோம். இந்தமாதிரியான நம்பிக்கையை அதிக அளவில் திரைப்படங்கள் தான் ஏற்படுத்துகின்றன. ஆனாலும் எது சரியானது என்பதை சரியாகத் தீர்மானிக்க வேண்டியது நாம் தான். அது பற்றிய ஒரு சிறப்பு பார்வை:

**தவறான தகவல்:** சிவப்புத் துணியைக் கண்டால் மாடு மிரளும்.

**உண்மை:** பல சினிமாக்களில் மாட்டை நடிக்க வைத்து, இது உண்மை என்று நிரூபித்து படம் எடுத்து இருக்கிறார்கள். அதாவது, மாடு யாரை முட்ட வேண்டுமோ அவரை சிவப்பு நிற ஆடையில் வர வைத்து, அதை பார்த்து மாடு மிரண்டு, அவரை முட்டுவதுபோல் படமாக்கி இருப்பார்கள்.

ஆனால், இது உண்மை அல்ல. சிவப்பு துணியைக் கண்டால் மாடு முட்டவே முட்டாது. அதை விசிறும்போதுதான் மாடு மிரளுகிறது. இதுதான் உண்மை.சிவப்புத் துணியை விசிறினால் மட்டுமல்ல, பச்சை, நீலம், மஞ்சள் என்று எந்த நிறத்தில் உள்ள துணியை விசிறினாலும் மாடு மிரளும்; முட்ட வரும். அதுவும், சம்பந்தப்பட்ட மாட்டின் முன்பு விசிறினால் தான் அது மிரளும். மற்றபடி, துணியின் நிறத்திற்கும், மாட்டிற்கும் சம்பந்தமே இல்லை. ஆனாலும், மற்ற நிறங்களைக் காட்டிலும் வெள்ளை நிறம் மாட்டுக்கு இன்னும் தெளிவாகத் தெரியும்.

பொதுவாக, நாம் வீட்டில் வளர்க்கும் மாடு, பூனை, நாய் உள்ளிட்ட விலங்குகளுக்கு எல்லாக் காட்சிகளும் கறுப்பு, வெள்ளை போல்தான் தெரியும். அதாவது, பிளாக் அன்ட் வைட் சினிமா போன்று! மற்ற நிறங்கள் மிருகங்களுக்கு தெரியாமல் போகக் காரணம், அவை இரவில் வேட்டையாடியதுதான் என்கிறார்கள் ஆய்வாளர்கள்.


அதேநேரம், மனித இனத்தின் முன்னோர்களான குரங்கு இனங்களுக்கு மட்டும் எல்லா நிறங்களும் நன்றாகத் தெரியும். பூச்சி இனங்களில் தேனீக்கள் நிறங்களை சரியாக அடையாளம் கண்டு கொள்கின்றன. தேனீக்கு மட்டும் எப்படி நிறம் தெரிகிறது என்பதை அறிய ஒரு சோதனையும் நடத்தினார்கள். விஞ்ஞானிகள்.

அந்த சோதனையின்படி, தேனீக்களுக்கு பிடித்தமான நீல நிற அட்டையில் தேனை தடவியும், சிவப்பு நிற அட்டையில் தேன் இல்லாமலும் வைத்து அவற்றை சோதனை செய்து பார்த்தார்கள். நீல நிற அட்டையில் தேன் வைத்தாலும், வைக்காவிட்டாலும் அவற்றை மொய்த்தன தேனீக்கள்.

ஆனால், சிவப்பு நிறத்தை அவை கண்டுகொள்ளவே இல்லை. அந்த நிறத்தை ஒரு மாதிரியான பழுப்பு நிறத்தில் தேனீ பார்ப்பதாக கண்டறிந்தனர் விஞ்ஞானிகள். நம் கண்ணுக்கு தெரியாத புற ஊதா நிறம்கூட தேனீக்கு நன்றாகத் தெரியும்.



**தவறான தகவல்:** நல்ல பாம்பை அடிக்கப்போய், அது சாகாமல் தப்பித்துவிட்டால், திரும்ப வந்து பழி வாங்கும்.



**உண்மை:** உண்மையைச் சொல்லப் போனால் பாம்பு இனங்களில் மிகவும் நல்லது, இந்த நல்ல பாம்புதான். மற்ற பாம்புகளை அடித்தாலோ, அடிக்க முயற்சித்தாலோ உடனே சீறி வந்து கடித்து விடும். ஆனால், நல்ல பாம்பு மட்டும்தான், என் அருகில் வராதே என்று படமெடுத்து எச்சரிக்கை காட்டும். தொடர்ந்து, தன்னைத் தாக்க வருபவரை நோக்கி ஓரிரு முறை சீறி பயமுறுத்தும். இந்த எச்சரிக்கைகளை எல்லாம் பொருட்படுத்தாமல் அதை தாக்கினால்தான் அது நம்மைத் தீண்டும். மற்றபடி, அது நம்மைப் பார்த்தாலே, உனக்கும், எனக்கும் சம்பந்தம் இல்லை என்று ஓட்டம் பிடிக்கவே பார்க்கும்.


சரி இனி விஷயத்துக்கு வருவோம். நல்ல பாம்பாக இருந்தாலும், எந்த பாம்பாக இருந்தாலும் மனிதனைப் பார்த்துவிட்டால் ஓடி ஒளிந்து, தன் உயிரைக் காப்பாற்றத்தான் முயற்சிக்கும். அதுமட்டுமின்றி, நாம் அடிக்கப்போய் பாம்பின் உடலில் சிறு காயம் ஏற்பட்டாலும் கூட, அதை எறும்பு போன்ற சிறு உயிரினங்கள் மொய்க்க ஆரம்பித்து விடும். அத்துடன், காயம் ஏற்பட்ட காரணத்தால் வேகமாக நகர முடியாமல் தவித்து உயிரையே விட்டுவிடும். அப்படி இருக்கும்போது, அது பழி வாங்க மீண்டும் வரும் என்பதெல்லாம் வெறும் கற்பனைக் கதையே!

மேலும், மகுடி ஊதினால் நல்ல பாம்பு படமெடுத்து ஆடும் என்பதை பல சினிமாக்களில் பார்த்திருக்கிறோம். இதுவும் தவறு. ஏனென்றால், எந்தப் பாம்புக்கும் காதே கிடையாது. அப்படி இருக்கும்போது எப்படி மகுடி சத்தத்திற்கு நல்ல பாம்பு மட்டும் ஆட முடிம்? அதற்கு காது என்பது 'வைபரேஷன்' (அதிர்வுகள்) தான். எதிரி ஓடி வருவதை நில அதிர்வு வழியாக உணரும் பாம்பு, சட்டென்று ஓட்டம் பிடிக்கிறது. இரை வருவதையும் அவ்வாறே உணரும் பாம்பு, சட்டென்று பதுங்கி அதை கௌவிக் கொள்கிறது.

அதுசரி மகுடி ஊதும்போது நல்ல பாம்பு ஆடுகிறதே அது எப்படி என்று கேட்கிறீர்களா? அதற்கு காது கேட்காது என்றாலும் பார்வை தெரியும் அல்லவா? நம் கையில் இருக்கும் மகுடியும் தெரியும் தானே? அந்த மகுடியை அங்கே இங்கே என்று ஆட்டும்போது, பாம்பும் பின்தொடர்ந்து தலையை அசைக்கிறது. அது, நமக்கு பாம்பு மகுடி இசைக்கு ஏற்ப ஆடுவது போன்று தெரிகிறது. அவ்வளவுதான். மகுடி மட்டுமல்ல, கையில் சிறு குச்சியை எடுத்து அதன் முன்பு ஆட்டினாலும், அதற்கு ஏற்ப நல்ல பாம்பு தலையை அசைந்து கொடுக்கும்.

# குழந்தையாய் இருங்கள்

■ இணையவன்



மனசே தாங்கவில்லை. இப்படிப்பட்ட **சின்னச்சி**ன்ன விடயங்கள் கூட அந்தக் குழந்தைகளை எப்படிப் பாதிக்கிறது. ஒரு வார்த்தையைக் கூட தாங்க முடியாத அளவு அவ்வளவு மெல்லியதா இவர்கள் உள்ளம்? பூ என்று சொல்வார்களே, அதைப்போன்றதா? எங்களின் சொல்லும் செயலும் உங்களை அவ்வளவாகவா பாதிக்கிறது? எங்களின் நடவடிக்கை உங்களை உட்சுருக்கி சுக்குநூறாக நொறுக்கி விடுகிறதா? என் போன்றோர் திருந்தாத வரையில் ஒட்டுமொத்த பெற்றோர்கள் சார்பாக உங்களிடம் மன்னிப்பு மட்டும் தான் கேட்கமுடிகிறது என்னால். ஆனால் இதை வாசிக்கும் ஒவ்வொரு நபரும் கண்டிப்பாகத் திருந்துவார்கள் என்று எனக்கு நம்பிக்கையிருக்கிறது.

எவர் குழந்தைகளின் சுதந்திரத்தைப்பற்றி யோசிக்கப்போகிறார்கள்?

மனதுக்கு துயரமாகத்தான் உள்ளது. ஆனால், இவ்வளவு பெரியவர்களாகிய நமக்கே சுதந்திரம் கிடைக்கவில்லை என்றபோது எவர் குழந்தைகளின் சுதந்திரத்தை யோசிக்கப்போகிறார்கள்?

இங்கு நான் ஒரு கேள்வி கேட்கிறேன். உங்களுக்கு தெரிந்து என்னென்ன சுதந்திரங்கள் உள்ளன? (பேச்சு சுதந்திரம், எழுத்து சுதந்திரம், கல்வி கற்க, எங்கும் சுதந்திரமாக போய்வர இப்படி கொஞ்சம் தெரியும். ஆனால் இதெல்லாம் இருந்தும் நம்மால் செய்ய முடிகிறதா?

உங்கள் ஆதங்கமா இது? சரி, சுதந்திரம் என்பதை இப்படியாகப் புரிந்துகொள்ள வேண்டும். குடைபிடித்துப் போவது சுதந்திரம் என்றால் அந்தக் குடையின் கம்பி அடுத்தவரது கண்ணைக் குத்தாதவரை என்பதாக அர்த்தம் கொள்ளவேண்டும். எல்லாச் சுதந்திரமும் அனுபவிக்க முடியாதவரை நம்மைத் தடுப்பது எது? என்பதை நாம் யோசிக்க வேண்டும். நமது கல்வி அவற்றைக் கற்றுக்கொடுக்க வேண்டும்.

விஞ்ஞானத்தைப் படித்தவர்கள் அந்தப் படிப்பின் தன்மையும் பயனும் உண்மைகளும் தெரிவதற்கு பதிலாக பாம்பு பால்குடிக்கும் என்று பற்றுக்கு பால்வார்ப்பது, போன்ற மூட நம்பிக்கைகளை வளர்ப்பதில் பெரும்பாலும் முன்னணியில் நிற்கும் அளவிற்குத் தான் கல்வி முறைகள் உள்ளன.

கல்வி என்பது தீயவற்றை எதிர்க்கும் சிந்தனையை வளர்த்தெடுக்கவும், மனிதம் வளர்க்கும், மனம் வளர்க்கும், உடல் வளர்க்கும், சுதந்திரமான, அடிமைத்தனம் அற்ற, மனித ஆளுமைகளை வளர்க்கிற கல்வியாக இருக்கவேண்டும்.

குழந்தைகளின் உரிமைகளைப் புரிந்து கொள்ளாதவரை நமக்கு நாமே பிரச்சினைகளை ஏற்படுத்திக் கொள்கிறோம் என்பது நிச்சயம். ஒவ்வொரு குழந்தைக் கல்வியாளர்களிடமும் கேட்டுப் பாருங்கள். தன்னிடம் படிக்கும் மாணவர்கள் மிக உயர்ந்த மதிப்பெண்களைப் பெற்று நல்ல நிலைக்கு வரவேண்டும் என்பதாகத்தான் அவர்களின் எண்ணம் இருக்கும். ஆனால் வெளிப்படுத்தும் விதம்தான் மாறுபடுகிறது. மாணவர்களைத் திருத்துவது என்பது அடித்து திருத்துவது, தண்டித்து திருத்துவது, பிற மாணவர்கள் மத்தியில் மனம் புண்படுகிறவரை திட்டித் திருத்துவது அல்ல.

அதன் விளைவு எதுவாக இருக்கும்? ஒரு மாணவன் எந்த நிலைக்கு வரவேண்டும் என்ற ஈடுபாட்டில் ஆசிரியர்கள் யோசித்தார்களோ அந்த நிலை மாறி அம்மாணவன் தன் ஆசிரியரை ஓர் எதிரியாகப் பாவிப்பான். வகுப்பில் சரியாகக் கவனிக்காத மாணவனை ஓர் ஆசிரியர் எல்லா மாணவர்கள் மத்தியிலும், சத்தம் போட்டு திட்டி வெளியே போ என்கிறார் என்று வைத்துக்கொள்வோம். அம்மாணவன் மிகச் சாதாரணமாக வகுப்பை விட்டு வெளியேறினால் ஆசிரியரின் நோக்கம் வீணாகிவிடும். மாறாக, அம்மாணவனைத் தனியாக அழைத்து நேரத்தின் முக்கியத்துவத்தையும், அவன் வீட்டில் எந்த அளவு கஷ்டப்பட்டு அவனைப் படிக்க வைக்கிறார்கள் என்பதையும், வகுப்பு நேரத்தில் கவனிப்பு எந்த அளவிற்கு பிரயோசனமானது என்பதையும் உணர்த்தினால் நிச்சயமாக சிறிதளவு பயன் இருக்கும். அம்மாணவனின் உள்ளத்தில் ஆசிரியரைப் பற்றிய மதிப்பும் மரியாதையும் எண்ணமும் உயரும். ஏனென்றால் நாம் சொல்லக்கூடிய கருத்துக்களைப் பிறர் ஏற்கவேண்டும் என்றால் கேட்பவர் மத்தியில் கருத்து சொல்பவர்களைப் பற்றிய மதிப்பீடு சிறந்த முறையில் இருக்கவேண்டும்.

சொன்னபடி கேட்காத பிள்ளையை என்ன செய்வது?

கொஞ்சநாளாக நானும் குழந்தைகளை அடிப்பதை நிறுத்தினேன்.

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





**அவுஸ்திரேலியாவுக்கு வீசா இல்லாமல் படகுமூலம் நீங்கள் பயணம் செய்தால் -**

- உங்களது விண்ணப்பம் அவுஸ்திரேலியாவில் பரிசீலிக்கப்படாது போகலாம்.
- எனவே, நீங்கள் நவுறு, பப்புவா நியூகினி போன்ற வேறொரு நாட்டிற்கு இடமாற்றம் செய்ய வேண்டிய நிலை ஏற்படலாம்.
- இலங்கையிலுள்ள உங்களது குடும்பத்தினருக்கு அனுப்பவென நவுறுவிலோ அல்லது பப்புவா நியூகினியிலோ நீங்கள் பணத்தைச் சம்பாதிக்க முடியாது.
- விசேட மனிதாபிமான திட்டத்தின் அடிப்படையில் உங்களது குடும்பத்தை உங்களுடன் இணைத்துக்கொள்ளவென உங்களால் விண்ணப்பிக்க முடியாது.

மேலதிகத் தகவல்களை www.youtube.com/user/notopeoplesmuggling என்ற முகவரியில் 'ஆட்கடத்தலுக்கு மறுப்பு' என்ற யூ டியூப் அலைவரிசை மூலம் பெற்றுக்கொள்ள முடியும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காளானின் மருத்துவ குணங்கள்



காளான் இரத்தத்தில் கலந்துள்ள அதிகப்படியான கொழுப்பைக் கரைத்து இரத்தத்தைச் சுத்தப்படுத்தும் தன்மை கொண்டது. இதனால் உயர் இரத்த அழுத்தம் மற்றும் இரத்த நாளங்களின் உட்பரப்பில் உண்டாகும் கொழுப்பு அடைப்பைத் தடுக்கிறது.

காளானிலுள்ள லென்ட்டைசின் (lentysine) எரிட்டிடைû ߠ| eritadenin) என்ற வேதிப் பொருள்கள் இரத்தத்தில் கலந்துள்ள ட்ரை கிளிசஸ்ரைடு பாஸ்போலிட் போன்றவற்றை வெகுவாகக் குறைக்கிறது.

இதில் எரிட்டினைன் கொழுப்புப் பொருள்களை எந்தவித பாதிப்பும் இல்லாமல் இரத்தத்திலிருந்து அதிகம் வெளியேற்றி பிற திசுக்களுக்கு அனுப்பி உடலைச் சமன் செய்கிறது. இவ்வாறு உடலில் தேவையில்லாமல் சேரும் கொழுப்பு கட்டுப்படுகிறது.

இதனால் இரத்தம் சுத்தமடைவதுடன் இதயம் பலப்பட்டு நன்கு சீராகச் செயற்படுகிறது. இதயத்தை பாதுகாப்பதில் காளானின் பங்கு அதிகம்.

பொதுவாக உயர் இரத்த அழுத்தம் ஏற்படும்போது உட்புறச் செல்களில் பொட்டாசியத்தின் அளவு குறையும். வெளிப்புறச் செல்களில் உள்ள சோடியம், உட்புறமுள்ள பொட்டாசியத்துக்கு சமமாக இருக்கும். இரத்த அழுத்தத்தின் போது வெளிப்புறத்தில் சோடியம் அதிகரிப்பதால் சமநிலை மாறி உற்புறத்தில் பொட்டாசியத்தின் அளவு குறைகிறது. இதனால் இதயத்தின் செயல்பாடு மாறிவிடுகிறது.

இத்தகைய நிலையைச் சரிசெய்ய பொட்டாசியத்தின் சத்து தேவை. அவை உணவுப் பொருள்களின் மூலம் கிடைப்பது சாலச் சிறந்தது. அந்த வகையில் பொட்டாசியம் சத்து அதிகம் உள்ள உணவு காளான் தான். 100 கிராம் காளானில் பொட்டாசியம் சத்து 44 மி.கி. உள்ளது. சோடியம் 9 மி.கி உள்ளது. எனவே இதயத்தைக் காக்க சிறந்த உணவாக காளான் உள்ளது.

மேலும் காளானில் தாமிரச் சத்து உள்ளதாகவும் கண்டறியப்பட்டுள்ளது. தாமிரச்சத்து இரத்த நாளங்களில் ஏற்படும் பாதிப்பை சீர்செய்யும்.

காளான் மூட்டு வாதம் உடையவர்களுக்குச் சிறந்த நிவாரணியாகும்.

மலட்டுத்தன்மை, பெண்களுக்கு உண்டாகும் கருப்பை நோய்கள் போன்றவற்றைக் குணப்படுத்துகிறது.

தினமும் காளான் சூப் அருந்துவதால் பெண்களுக்கு உண்டாகும் மார்பகப் புற்று நோய் தடுக்கப்படுவதாக காளான் பற்றிய சமீபத்திய ஆராய்ச்சியில் கண்டுபிடித்துள்ளனர்.

100 கிராம் காளானில் 35 சதவீதம் புரதச்சத்து உள்ளது. மேலும் உடல் வளர்ச்சிக்குத் தேவையான அமினோ அமிலங்கள் உள்ளதால், குழந்தை களின் உடல் வளர்ச்சிக்கு சிறந்த ஊட்டச்சத்தாக அமைகிறது.


யாழில் டென்மார்க் பிரண்டாபதி ஸ்ரீ அபிராமி அன்னையாரின்

## அருள் ஒளி தர்ஷன மாலை









பூத்தவளே புவனம் பதினான் கையும் பூத்தவண்ணம்
காத்தவளே பின் கரந்தவளே கறைக்கண்டனுக்கு
மூத்தவளே என்றும் மூவா முகுந்தற்கு இளையவளே
மாத்தவளே உன்னை அன்றி மற்று ஓர் தெய்வம் வந்திப்பதே?



**வரமருளிக் காத்தருளும் புவனேஸ்வரி அம்பாளாக அவதாரமெடுத்து டென்மார்க் - பிரண்டாபதியில் வீற்றிருந்து அருள் பாலித்துக் கொண்டிருக்கும் ஸ்ரீ அபிராமி அன்னையாரின் அருள் ஒளி தர்ஷன மாலை யாழில் இடம்பெற. ஸ்ரீ அபிராமி அம்பாளின் திருவருளும் ஸ்ரீ அபிராமி உபாசகி அம்மையாரின் ஆசிகளும் கைகூடியுள்ளன.**

நடமாடும் தெய்வமாகவும், அன்பான தாயாகவும், நல்வழிகாட்டும் குருவாகவும் விழங்கும் அபிராமி உபாசகித் தாயாரின் திருவடி பூஜையில் கலந்துகொள்ளும் பக்தர்கள் அனைவருக்கும் நல்எண்ணமும், உள்ளத்தல் சாந்தியும், வாழ்க்கையில் நம்பிக்கையும், நோய் நொடியற்ற சுபீட்சமான வாழ்வும், தெய்வத்தின் அருட்கடாட்சமும் நிறைவாக கிட்டும்.
அம்மாவிடம் அருள்வாக்கு கேடக விரும்பும் பக்தர்கள், அன்றைய தினம் நேரடியாகக் கேட்டுக் கொள்ளலாம்.

இடம் :
இளங்கலைஞர் மண்டபம்,
சட்டநாதர் வீதி, நல்லூர்
காலம் : 14-10-2012
ஞாயிற்றுக்கிழமை
பகல் 12.00 மணி

**திருவருள் நிகழ்வுகள்:**

- மங்கள வாத்தியக் கச்சேரிகள்
- தெய்வீக பஜனை நிகழ்வுகள்
- அவதார நிகழ்வுகளின் ஒளித்திரைக் காட்சி
- அன்னையாரின் திருவடிகளுக்குப் பாத பூஜை
- அன்னையாரின் திருக்கரங்களால் பூஜிக்கப்பெற்ற தேசிக்காய்.
- காவல் பொருட்கள். திருவருட் பிரசாதம் ஆகியன வழங்கப்படும்
- அன்னதான நிகழ்வும் இடம்பெறும்

அன்னையாரின் ஆலயத்தில் பூஜையில் வைத்துப் பூஜித்து தருவிக்கப்பட்ட காவல் தேசிக்காய், திருவுருவப் படம், அம்மையாரின் திருவுருவம் பொறிக்கப்பட்ட பென்ரன்கள், திறப்புக் கோர்வைகள், அம்பாளுக்கு அபிஷேகம் செய்யப்பட்ட யாகநீர் போன்ற அருட் பொருட்களை மண்டபத்தில் பெற்று அம்பாளின் திருவருளை பெற்றுய்யுமாறு வேண்டுகின்றோம்.

| | ஆலயத் தொடர்புக்கு: | யாழ் தொடர்புக்கு: |
|---|---|---|
| Tel: | 0045 97180192, 0045 40413431 | 077 699 3861, 077 982 5004 |
| Fax: | 0045 97184192 | |

www.abiramiamman.dk

www.nisaart.com


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாராட்டி வாழ்த்துகின்றோம்

**உடுவில் மகளிர் கல்லூரியில் 2012 ஆம் ஆண்டு நடைபெற்ற புலமைப்பரிட்சையில் 169 புள்ளிகளைப் பெற்று சித்தியடைந்த எமது அருமைச்செல்வி**



## பிரியங்கா

Best Wishes



**அவர்களைத் தொடர்ந்தும் பலகலைகளையும் கற்றும் சிறந்து கல்வித்திருமகளாக வரவேண்டுமென எல்லாம் வல்ல குல தெய்வங்களை அருளோடு நலமுடன் வாழ வாழ்த்துகின்றோம்.**

வாழ்த்துவோர்:
அன்பு அம்மா, அருமை அண்ணா (கௌதம்), அன்புள்ள அம்மம்மா, தாத்தா, சுமி அன்ரா, சிவாமாமா, அத்தை குடும்பத்தினர், பெரியப்பாமார், பெரியம்மாமார் குடும்பத்தினர், ஐயா - பாட்டி குடும்பத்தினர்.
சுதுமலை வடக்கு, மானிப்பாய். (சி/4038)(6.7.8)

# அகம்மிக மகிழ் வாழ்த்து

Best Wishes



எமது குடும்ப உறுப்பினர்
## திருமிகு சுப்பிரமணியம் சயந்தன்
அவர்கள் (பிரதி அதிபர் - மகாஜனக் கல்லூரி, மெய்யியல் விரிவுரையாளர் - புதிய உயர் கல்லூரி)
09.10.2012 அன்று மாண்புமிகு ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவால் நல்லாசிரியருக்குரிய விருதான "பிரதீபா பிரபா" விருது பெற்றமைக்காக வாழ்த்தி உவந்தளிக்கும் வாழ்த்து

ஆசிரியப் பணியை அறமெனக் கொண்டு
அளவையியலில் மொழித்திற னுணர்ந்து
அகமிகுநற் சேவையிலிரு தசாப்தம் கண்டு
மகாஜனாவும் புதியவுயர் கல்லூரியும் மகிழ்ந்திட
மாண்புமிகு நல்மாணாக்கர் பலரை உருவாக்கி
சேவையின் முதிர்வால் பிரதியதிப ராகிநின்று
அணியணியாக அன்பர்கள் வாழ்த்திட
கல்வித் தாயவள் அகம்மிக மகிழ்ந்திட
"பிரதீபா பிரபா" விருதுநீர் பெறுவதை - நாமும்
மனமுவந்து வாழ்த்துகின்றோம் வாழ்க நீடுவெனவே!

Best Wishes

வாழ்த்துவோர்: **குடும்பத்தினர்.**
(23898)(2.7.6)






# அகமகிழ்ந்து மனதாரப் பாராட்டி வாழ்த்துகின்றோம்

Best Wishes



இரண்டாயிரத்து பன்னிரண்டாம் ஆண்டு
ஜனாதிபதி அவர்களினால் வழங்கப்படும்
நல்லதிபர்களுக்கான "பிரதீபா
பிரபா" விருது எமது கல்லூரி அதிபர்
**திருமதி ஜெயந்தி தனபாலசிங்கம்**
அவர்களுக்குக் கிடைத்தமையையிட்டு நாம்
பெருமகிழ்வடைகின்றோம்.
அவர் மேன்மேலும் பல விருதுகள்
பெற்று கல்விச் சமூகத்தில் உயர்ந்திட
மனதார வாழ்த்தி நிற்கின்றோம்.

**ஆசிரியர், ஊழியர், நலன்புரி சங்கம்**
**கிளி/புனித திரேசா பெண்கள் கல்லூரி, கிளிநொச்சி.**
(சி/4012) (2-7)

# பாராட்டி வாழ்த்துகின்றோம்

Best Wishes

**கிளி/புனித திரேசா பெண்கள் கல்லூரி**
**உலக ஆசிரியர் தின விழா - 2012**



கிளி/புனித திரேசா பெண்கள் கல்லூரியின் 2012 ஆம் ஆண்டுக்கான உலக ஆசிரியர் தின விழாவானது 10.10.2012 இன்று புதன் கிழமை கல்லூரியில் வெகு விமரிசையாகக் கொண்டாடப்படுகின்றது. இந் நன்னாளில் இக் கல்லூரியின் முதல்வர், ஆசிரியப் பெருந்தகைகள் அனைவரையும் உளமார வாழ்த்துவதோடு, இவர்களது பணிவாழ்வு சிறக்க ஆசித்து நிற்கின்றோம்.

Best Wishes

வாழ்த்துவோர்:
பாடசாலை அபிவிருத்திச் சங்கம்,
பாடசாலை அபிவிருத்திக் குழு,
பெற்றோர்கள், பழைய மாணவர்கள், மாணவர்கள்.
(2-7-6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# அதிகரிக்கும் கடல் வெப்பத்தால் மீன்களின் எடையில் மாற்றம்

பருவநிலை மாற்றத்தாலும் கடல் வெப்பம் அதிகரிப்பதாலும் மீன்களின் உடல் எடை குறைந்து கொண்டே வருகிறது என்று ஆராய்ச்சியாளர்கள் தெரிவித்துள்ளனர். 50 ஆண்டுகளில் மீன்களின் அளவு 20 சதவீதம் வரை குறைந்துவிடும் என்று கூறியுள்ளனர். கடல் வெப்பம் தொடர்பாக கனடாவின் பிரிட்டிஷ் கொலம்பியா பல்கலையின் மீன்வள ஆய்வு மையம் அண்மையில் ஒரு ஆய்வு நடத்தியது. உலகம் முழுவதும் பருவநிலை மாற்றம் மற்றும் கடல் வெப்பம் அதிகரிப்பால் கடல் உயிரினங்களுக்கு ஏற்படும் பாதிப்புகள் பற்றி தீவிரமாக ஆராயப்பட்டது. கணினியின் உதவியுடன் 600 இற்கும் மேற்பட்ட கடல் மீன் வகைகளின் மாதிரிகள் உருவாக்கப்பட்டு ஆய்வு நடத்தப்பட்டது. இது குறித்து ஆய்வாளர்கள் தெரிவிக்கையில்:

சுற்றுச்சூழல் பாதிப்பு காரணமாக உலகம் முழு வதும் பருவ நிலையில் அதிக மாற்றங்கள் ஏற்படுகின்றன. கடல் வெப்பமும் கணிசமாக அதிகரித்துள்ளது. இதனால், மீன்களின் வாழ்க்கை முறை பாதிக்கப்படுவது தெரிந்ததே. கடல் வெப்பத்தால் மீன்களின் உடல் வளர்ச்சியும் பாதிக்கப் படுகிறது என்று தற்போது தெரியவந்துள்ளது.

மிகச்சிறிய அளவில் ஆரம்பித்த பல தொன் வரை பல்வேறு அளவுகளில் மீன்கள் இருக்கின்றன. கடல் வெப்பம் அதிகரிப்பால், மீன்களின் அதிகபட்ச வளர்ச் சியானது குறைந்துகொண்டே போகிறது. 2000 இல் இருந்ததைவிட மீன்களின் எடை 2050 இல் 14-20 சதவீதம் வரை குறையும் என்று தெரிகிறது என்றனர்.







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org